# சாந்தினி

## 1

## யார் அடித்தது?

அலுவலகத்தில் இருந்து அரை நாள் விடுமுறையோடு வெளியே வந்தாள், சாந்தினி.

உற்சாகத்தில் தரையில் கால் பாவவில்லை. வானத்தில் வெண்பஞ்சுப் பொதிகளிடையே நடைபோடுவது போல இருந்தது. தான் எவ்வளவு அதிருஷ்டசாலி என்று எண்ணி யெண்ணி உள்ளம் பூரித்தாள்.

இராதா, பின்னே? அன்று மாலையில் சங்கர் அவள் வீட்டுக்கு வருகிறானே.

சங்கர் யார் என்று சொல்லவில்லையே அவன்தான் சாந்தினியின் ''அவர்'' ஆகப் போகிறவன். ''கருணா புரா டக்ட்ஸ்'' என்ற கம்பெனியில் வேலை பார்க்கிறான். சாந்தி னியின் தந்தை சோமநாதனுக்கு மேல் அதிகாரி. ஆனும், பார்வைக்கு நன்றாகத்தான் இருந்தான்.

சில நாட்களுக்கு முன் ஒரு நாள் வழியோடு சென்ற அவனை வீட்டுக்கு அழைத்து வந்தார் சோமநாதன். மேல்

அதிகாரி ஆயிற்றே. கொஞ்சம் சோப்புப் போட எண்ணி னாரோ? சாந்தினியைக் காபி கொண்டு வரச் சொன்னார். சாந்தினியும் கவனமாகக் காபியைக் கலந்து கொண்டு போய் அவனிடம் கொடுத்தாள்.

அவனுக்கு காபியையும் பிடித்தது. காபி கொண்டு வந்த கன்னியையும் பிடித்துப் போயிற்று.

மறுநாளே சோமநாதனிடம் சொல்லி விட்டான் - சாந்தி னியைத் தானே மணந்து கொள்ளுவதாக. எந்தவிதமான வரதட்சிணையும் தேவை இல்லையாம்.

சோமநாதனுக்கு மிகவும் மகிழ்ச்சி. ஆடாமல் ஓடாமல் மாப்பிள்ளை கிடைத்தான் என்று, அதுவும் அவரைவிட மேல் மட்டத்து மாப்பிள்ளை. சாந்தினிக்கும் மகிழ்ச்சிதான். தந்தைக்குத் தொல்லை இல்லாமல் முடிந்தது அல்லவா? ''என்னிடம் பணம் இல்லையே. உன் திருமணத்தை எப்படி நடத்துவேன்'' என்று ஒரொரு நேரம் சோமநாதன் வருந்து வார். சாந்தினிக்கும் அப்போது மிகவும் வேதனையாக இருக்கும். இருவர் சம்பளமும் சேர்ந்து இப்போது தான் சற்று வசதியாக வாழ முடிகிறது. இதில் பணம் சேர்ப்பது எப்படி? தந்தையின் வேதனை தீர்வது எப்படி?

அந்தக் கவலைக்கெல்லாம் மருந்தாக இப்போது சங்கர் அவளை மணந்து கொள்ள முன் வந்தான். மனம் பூரிப்பதற் குக் கேட்பானேன்?

சங்கருக்கு ஐநூறு ரூபாய் சம்பளம். அவனது வருமானத் துக்கு எவ்வளவோ சீதனத்துடன் பெண் கிடைக்கக் கூடும். ஆனால், அவனோ இந்த ஏழைப் பெண்ணைத் தேர்ந்து எடுத்தான். அந்த நன்றியில் சாந்தினியின் இதயம் நிறைந்து இருந்தது.

அவ்வப்போது நாலெட்டில் அவன் சாந்தினியின் வீட் டுக்கு வருவது உண்டு. சோமநாதனும் அவனும் தனியே பேசுவார்கள். திருமண ஏற்பாடுகள் பற்றி என்பது சாந்தினி



யின் எண்ணம். திருமணமும் அதோ இதோ என்று அடுத்த மாதம் என்ற அளவுக்கு வந்து விட்டதே.

இன்று சங்கர், சோமநாதன், சாந்தினி மூவருமாகக் கடற்கரைக்குச் செல்வதாகத் திட்டம்.

அவர்கள் இருவரும் வருவதற்குள்ளாக சாந்தினி சிற் றுண்டிக்கு ஏதாவது செய்துவிட்டு அலங்காரம் செய்து கொண்டு இருக்க வேண்டும். அதற்காகத்தான் அரைநாள் விடுமுறை போட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பினாள்.

மணக்க மணக்க தேங்காய் பர்பியும், மசாலா பக்கோடா வும் தயாராயின. அலங்காரத்தையும் முடித்துக் கொண்டு சாந்தினி தயாராக நின்றபோர்து மணி ஐந்து பத்து.

ஆனால், சங்கரும் சோமநாதனும் வருவதற்குத்தான் மணி ஏழைத் தாண்டி விட்டது.

அவ்வளவு நேரம் கழித்து வந்த இருவர் முகமும் சரியாக இல்லை. பேயடித்தாற்போல அச்சமும் கவலையும் கப்பி இருந்தன.

சாந்தினி திகைப்புடன் இருவரையும் மாறிமாறிப் பார்த் தாள்.

## 2

## நீ மனம் வைத்தால்...

**சா**ந்தினியின் திகைப்பையோ குழப்பத்தையோ நீக்குவ தற்கு யாரும் முன்வரவில்லை. அவரவர் கன்னத்தில் கை கொடுத்து சிலைபோல் அமர்ந்து விட்டனர்.

சாந்தினி சற்றுப் பொறுத்துப் பார்த்தாள். பிறகு ''என்னப்பா ஒரு மாதிரி இருக்கிறீர்களே?'' என்று மெல்லக் கேட்டாள்.

''ஒரு மாதிரி என்று நகாசு செய்வானேன்? பேயடித்த மாதிரி இருக்கிறீர்களே என்று கேளேன். மாதிரி என்ன? பேய்தான் அடித்தே விட்டதே'' என்றான்; சங்கர்.

''அப்பா, எனக்குப் புரியவில்லையே?'' என்று மீண்டும் தந்தையிடம் கேட்டாள், மகள். அவளுக்கு இன்னமும் சங்கரிடம் சரளமாகப் பேசும் பழக்கம் வரவில்லை.

''எங்கள் இரண்டு பேருக்கும் ''பெப்பே'' சொல்லி வேலையைவிட்டு விரட்டி விட்டார், எங்கள் முதலாளி'' என்று வருத்தமும் வெறுப்புமாகச் சோமநாதன் சொன்னார்.

''அந்த அற்பப் பயலுக்கு என்ன மரியாதை! அந்த அகம்பாவி விரட்டி விட்டான் என்று சொல்லுங்கள்'' என்றான், சங்கர் கொதிப்புடன்.

அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்த சாந்தினி, திகைத்தாள். அவன் பார்வைக்கு அழகன் என்று எண்ணியிருந்தாளே, அந்த முகமா இது? களையிழந்து குரூரமாக...ச்சு அட வேலை போய்விட்டது என்றால் சும்மாவா? மாதம் அரை ஆயிரம் போயிற்றே. அந்தக் கவலையில் முகமே அருள் இழந்து தெரிகிறது. சாந்தினி மனதோடு சமாதானம் கூறிக் கொண்டாள்.

தந்தையின் பக்கம் திரும்பினாள். ''ஏன் அப்பா அவர் அப்படிச் செய்தார்? என்ன காரணம் சொல்லுகிறார்? எதற்காக?'' என்று விசாரித்தாள்.

என்ன சொல்லுவது என்று புரியாதவர் போல சோமநாதன் விழித்தார்.

சங்கர் குறுக்கிட்டுச் சொன்னான், ''ஒன்றும் இல்லை; சாந்தினி. அங்கே யாரோ மோசடி செய்து இருக்கிறான். எங்கள் தலையில் குற்றத்தைச் சுமத்தி பழி வாங்குகிறான் முதலாளி'' என்றான்.



சாந்தினிக்கு ஆத்திரம் பொங்கியது, ''அது எப்படி? நீதி நியாயம் ஒன்றும் இல்லையா? விசாரணை செய்வது இல்லையா? தான்தோன்றித்தனமாகவா நடப்பது? அந்த ஆளுக்கு அறிவு இல்லையா?'' என்று பொரிந்தாள்.

''பணக்கார வர்க்கம் அல்லவா? திமிர்! உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை அகந்தை'' என்றான் சங்கர்.

''நான் போய்க் கேட்கிறேன். எப்படி இந்த மாதிரிச் செய்யலாம் என்று. அநியாயமாக வேலையில் இருந்து நீக்கியதாக வழக்குப் போட்டால் நீங்கள் என்ன ஆவீர்கள் என்று மண்டையில் அறைந்தாற் போலக் கேட்கிறேன்'' என்றாள் சாந்தினி, துடிப்புடன்.

சோமநாதனும் சங்கரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சங்கர் தொண்டையைக் கனைத்தான். ''அதில்லை சாந்தினி. எடுத்தவன் நிரம்பவும் கெட்டிக்காரன். எப்படியோ எங்கள் கையெழுத்து மூலமாகவே திருட்டு நடக்கும்படி செய்து விட்டான். வழக்கு கிழக்கு என்று போனால், நாம் தான் மாட்டிக் கொள்ள நேரிடும்.''

''உங்கள் முதலாளியிடம் அதையெல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கக் கூடாதா, அப்பா?'' என்று தந்தையிடமே மீண்டும் வினவினாள் சாந்தினி.

''ம்ம்... எல்லாம் சொல்லிப் பார்த்தாயிற்று அம்மா'' என்றார் தந்தை சோர்வுடன்.

''என்ன சொன்னீர்கள்? மெய்யாகவே எனக்குத் தெரியாது அந்த ஆள் இப்படிச் செய்வான் என்று எண்ணவில்லை. நாங்களும் ஏமாந்து போனோம் என்று எடுத்து விளக்கிச் சொன்னீர்களா?'' என்று படபடப்போடு கேட்டாள் சாந்தினி.

''எல்லாம் சொன்னேன் சாந்தினி. அவன் காதில் வாங்கினால்தானே? உன்னையறியாமல் எப்படிப்போகும் என்று ஒரேயடியாகக் கத்துகிறான்.''

''அ...அவருக்கு...'' என்று சாந்தினி சங்கரைப் பார்த்தாள்.

''அவர் எனக்கு மேல் அதிகாரிதானே? இருவருக்கும் ஒரே முடிவுதான்.''

சற்று நேரம் சாந்தினிப் பேசாமல் யோசித்தாள். திடீர் என்று ஒன்று தோன்றியது. ''அப்பா வீட்டில் நிலைமை இப்படி என்று சொன்னீர்களா? புரிந்து கொள்ளும் தன்மை தான் இல்லை. உங்கள் முதலாளிக்கு மனிதத் தன்மை கூடாவா இராது?''

''அதையும் சொல்லி விட்டேன் சாந்தினி. கல்யாண நேரம் என்றபோதுகூட அவன் இரங்கவில்லையே. கருங்கல்லாக மனதை வைத்து இருக்கிறானே. ''மகளையும் அழைத்துப் போ. சிறையில் வைத்துத் திருமணம் செய்து கொடு என்கிறான் திமிர் பிடித்தவன்'' என்றார், சோமநாதன்.

சாந்தினி அதிர்ச்சி அடைந்தாள். இப்படிக்கூட ஒருவரால் சொல்ல முடியுமா? ஒரு மனிதனுடைய மனம் இப்படி இரும்பாக இருக்க முடியுமா? அப்படிப்பட்ட அரக்கனிடம் போய் மீண்டும் கெஞ்சுவார்களா? சே! அலட்சியமாக முகத்தைக் குலுக்கினாள்.

''போனால் போகிறது அப்பா. இந்த வேலை போனால் என்ன? உழைக்கத் துணிந்தால் வேலைக்கா பஞ்சம்? சம்பளம் கொஞ்சம் குறைந்தால் போகிறது. என் சம்பளம் வேறு இருக்கிறது. இப்படிப் பட்டினி கிடந்து விடவா போகிறோம் '' என்றாள்.

மாமன் ஆகப்போகிறவரும் மருமகன் ஆகப்போகிறவனும் மீண்டும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். சாந்தினியும் அதைக் கவனித்தாள். வயிற்றில் புளியைக் கரைத்தது. ''என்னப்பா? இன்னும் என்ன? எதையும் மறைக்காதீர்கள். எல்லாம் சொல்லி விடுங்கள்'' என்றாள், சற்று பயத்துடன்.



''அவன் வேலை நீக்கத்துடன் நிற்கவில்லை. அம்மா' திருட்டுப் போன பணத்தைக் கட்டாவிட்டால் எங்கள் இருவரையும் நாளைக்குப் போலீசில் ஒப்படைக்கப் போகிறானாம் '' என்றார், சோமநாதன் முகம் வெளுக்க.

''அப்பா போலீசிலா?'' என்ற அச்சத்துடன் கூவினாள் சாந்தினி. ''அப்பா! போன தொகை எவ்வளவு? எப்படியாவது கட்டிவிடலாம். சொல்லுங்கள், அப்பா'' என்றாள் பதட்டத்துடன்.

''முடியாதே, அம்மா.''

''ஏன் முடியாது? என் நகைகள் எல்லாவற்றையும் விற்று விடுங்கள்'' என்றாள் சாந்தினி.

சோமநாதன் தலையை அசைத்தார். ''அது போதாது அம்மா. உன் நகைகள் எல்லாம் சேர்த்து ஒரு நாலாயிரம் கூடத் தேறாது. அங்கே ஒன்பது ஆயிரம் ரூபாய் குறைகிறதே.''

சாந்தினி இடிந்து போனாள். ''ஒன்பது ஆயிரம்! எவ்வளவு பெரிய தொகை! இதற்கு எங்கே போவது? ஆனால்...''

''அவ்வளவையும் கட்டினால்கூட அவன் சும்மா விடுவான் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்றார் அவர் நம்பிக்கையற்று.

''அது இருக்கட்டும் அப்பா. அவ்வளவு பணம் போகு மட்டும் எப்படியப்பா கவனியாமல் இருந்தீர்கள்? அதுவும் இருவருமாக.

''என்னவோ, எங்கள் தலைவிதி. பணம் போயிற்று. நீ வேறு விசாரணை நடத்த வேண்டுமா? அங்கே பட்டது போதாதா?'' என்று ஆத்திரப்பட்டார், சோமநாதன்.

சாந்தினி வாயை மூடிக் கொண்டாள். காயம் பட்ட இடத்தில் உப்பைத் தடவுவது போல நடந்து கொண்டோமே என்று வெட்கினாள்.

சற்று நேரம் அமைதி நிலவியது.

சங்கர் அமைதியைக் குலைத்தான். ''கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்து இருந்தால், கம்பி எண்ணப் போக வேண்டியதுதான்.''

''எனக்கு ஒன்றும் ஓடவில்லை'' சோமநாதன் தலையைச் சொறிந்தார்.

சாந்தினி மெதுவாக, ''அப்பா, அந்தத் தொகைக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தால் என்ன?'' என்று தன் யோசனையைச் சொன்னாள்.

''முகத்துக்கு முன்னாலேயே கிழித்துப் போடுவான் அப்படியே அவன் ஒப்பினாலும் நம்மால் அடைக்க முடியுமா?'' என்றான் சங்கர்.

''எப்படியாவது அடைத்துத்தானே ஆக வேண்டும்? நம் கவனக் குறைவுக்கு தண்டனை என்று எண்ணிக் கொள்ள வேண்டியது தான்'' என்று தத்துவம் பேசினாள் சாந்தினி.

''அதற்காக அவ்வளவு கடனை ஏற்க முடியுமா?'' என்றான், சங்கர் தீர்மானமாக. அதோடு அவனும் அதை ஏற்கமாட்டான்.''

வேறு ஒன்றும் தோன்றவில்லையே. சாந்தினி சோர்வுடன் குனிந்தாள். நெற்றிப் பொட்டை விரல்களால் அமுக்கி விட்டாள். முகத்தில் வேதனையும் வருத்தமும் நிராசையும் நிழலாடின, ''மீள்வதற்கு வேறு வழியே இல்லையா, அப்பா?'' என்று வெகு ஏக்கத்துடன் கேட்டாள், தந்தையிடம்.

அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான், சங்கர். அவன் முகத்தில் ஓர் ஒளி தோன்றியது.

''ஒரு வழி இருக்கிறது'' என்றான், மெல்ல வாய் திறந்து.

''என்ன? என்ன வழி?'' சாந்தினி, சோமநாதன் இருவருமே ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தனர்.



''ஒரே ஒரு வழி இருக்கிறது. ஆனால் நீங்கள் இருவரும் பதட்டப்படாமல் கேட்க வேண்டும்'' என்றான் சங்கர்.

அவன் பார்வை சாந்தினியின் முகத்தை விட்டு அகலவில்லை.

''இதற்கு மேல் பதட்டம் வரக்கூடிய விஷயமே கிடையாது. சும்மா சொல்லுங்கள்'' என்றார் சோமநாதன்.

''சீக்கிரம் சொல்லுங்களேன். அது என்ன வழி?'' ஆவல் தாங்காமல் அவனிடம் நேராகக் கேட்டாள் சாந்தினி.

''சொல்லுகிறேன், சொல்லுகிறேன். ஏனென்றால் அந்த வழி உன்னிடம்தான் இருக்கிறது'' என்றான் சங்கர்.

சாந்தினி அவனையேப் பார்த்தாள்.

அவன் அவளைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே சொன்னான்.

''சாந்தினி, நீ மனம் வைத்தால்தான் நாங்கள் இருவரும் தப்ப முடியும்.''

# 3

## கடுவன் பூனை

**எ**ன்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள்,'' என்று கேட்டாள் சாந்தினி.

வழியைக் காட்டுமுன் சங்கர் சற்று பீடிகை போட்டான். ''உலகத்திலேயே சக்தி வாய்ந்த ஆயுதம் பெண்ணின் கண்ணீர் என்பார்கள்'' என்று தொடங்கினான்.

''மெய்யாகவா?'' என்று சந்தேகத்துடன் கேட்டு விட்டுத் தன் கண்ணீரைத் துடைத்தாள் சாந்தினி.

''கைகேயியின் கண்ணீர் ராமனைக் காட்டுக்கு அனுப்ப வில்லையா? பாஞ்சாலியின் கண்ணீர் பெரும் போரை ஏற்ப டுத்தவில்லையா?''

''புதிர் போடாமல் விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்று சோமநாதன் அவசரப்பட்டார்.

''சொல்லுகிறேன் கேளுங்கள். நாமும் எவ்வளவோ மன்றாடினோம். மிஸ்டர் செந்தில் மசியவே இல்லை. இப் போது சாந்தினி அவனிடம் சென்று கெஞ்சட்டும். பெண் என்றால் பேயும் இரங்குமாம். இந்தப் பேயன் இரங்காமலா போய் விடுவான்?'' என்றான் சங்கர்.

''நானா? நானா கெஞ்ச வேண்டும்?'' என்று குமம்பி னாள் சாந்தினி.

''நீயே தான். தேக்கு மரத்துக்கு அஞ்சாத கோடரி கதலித் தண்டுக்கு நாணுமாம். முயன்றால் நீ நிச்சயம் வெற்றி பெறுவாய்'' என்று நம்பிக்கையோடு சங்கர் கூறினான்.

''ஆனால் நான் எப்படி ஓர் அன்னிய ஆணிடம்...'' என்று சாந்தினி தயங்கினாள்.

''நாலு ஆண் பிள்ளைத் தடியன்களுடன் வேலை பார்க் கும் ஒரு பெண்ணின் பேச்சா இது?'' என்று கோபத்துடன் கேட்டான் சங்கர்.

''அங்கே நான் உண்டு என் வேலை உண்டு என்று இருக்கிறேன். எவரிடமும் பல்லைக் காட்டிக் கெஞ்சுவது பழக்கம் இல்லை'' என்றாள் சாந்தினி. அவன் குத்தலில் உண்டான சினத்துடன்.

''சரிசரி. விடு சாந்தினி. யோசித்துப் பார்த்தால் எனக்கும் கூட சங்கர் சார் சொல்வது சரி என்றே படுகிறது'' என்றார் சோமநாதன்.

சாந்தினி ஒரு மாதிரியான பெண். சற்று ஒதுங்கிப் போகும் குணம், மானரோஷம் நிரம்பவும் பார்ப்பாள்.



அவளைப் போய் முகம் அறியாத ஒருவரிடம் ''பிச்சை கேள்'' என்றால் என்ன செய்வாள்? அன்னியனிடம் சென்று கூனிக்கு றுகி, ''என் அப்பாவை விட்டுவிடு'' என்பதே அவமானம். போதாக் குறைக்கு ''இன்னொருவன் என் வருங்காலக் கணவன். அவனையும் மன்னித்து விடு'' என்று கேட்கச் சொல்லுகிறார்களே! எதிர்த்துச் சண்டை போடுவதானாலும் பரவாயில்லை.

சாந்தினி தன்னால் ஆனவரையில் மறுத்துப் பார்த்தாள்.

சங்கருக்குக் கோபம் வந்துவிட்டது. ''அழகுக்கும் அறி வுக்கும் தொடர்பு இராது என்பார்கள். உங்கள் பெண் நிரூபித்துக் காட்டுகிறாள்'' என்றான் குத்தலாக.

''என்னையும் அவரையும் சிறைக்குள் பார்த்தால் தான் உனக்கு நிம்மதி'' என்று எரிந்து விழுந்தார் சோமநாதன்.

அதற்குமேல் பேச இயலாமல் சாந்தினி அடங்கிப் போனாள்.

அவள் செந்திலிடம் தூது செல்லச் சம்மதித்து விட்டாள் என்றதும் சங்கர் புன்னகையே உருவாகிப் போனான்.

செந்திலிடம் எப்படி எப்படிப் பேசுவது என்று படிப்படி யாகச் சொல்லிக் கொடுத்தான்.

''சாந்தினி. மெய்யாகவே நாங்கள் தான் பணத்தைக் கையாடியதாக அவன் எண்ணிக் கொண்டு இருக்கிறான். நீ மறுத்துப் பேசினால் அவனுக்குச் சினம்தான் அதிகரிக்கும். சும்மா அவனை ஒட்டியே பேசு. முடிந்த அளவு பணிந்து நட. ''ஏதோ தெரியாமல் செய்து விட்டார்கள். இந்த ஒரு தடவை மன்னித்து விடுங்கள். இல்லாவிட்டால் என் எதிர் காலமே இருண்டு விடும்'' என்று அழு. ''என் காதலரைப் பிரிந்து என்னால் உயிரோடு இருக்க முடியாது என்று...''

''நான் ஒன்றும் உங்களை...'' என்று ரோஷத்துடன் குறுக்கிட்டாள், சாந்தினி.

''எடுத்தெறிந்து பேசாமல் அவர் சொல்லுவதைக் கேள். இன்றைக்கு உங்கள் திருமணம் முடிந்து இருந்தால் ''அவர் இல்லாமல் நான் இல்லை'' என்று பிதற்றிக் கொண்டுதானே இருப்பாய்'' என்று அளந்தார் சோமநாதன்.

''அதோடு அந்த செந்திலின் மனம் இளக வேண்டும் என்பது தான் முக்கியம். மற்றபடி மெய் பொய் ஒன்றும் இல்லை சாந்தினி'' என்றான், சங்கர், நயமாக.

சாந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள். அவளுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. ஆனால் அவளுடைய விருப்பத்தை யாரும் மதிக்கத் தயார் இல்லை என்பது புரிந்தது. மேலே என்ன பேசுவது? கடனே என்று கேட்டுக் கொண்டு இருந்தாள்.

ஒருவழியாக உருவேற்றி முடித்தான், சங்கர். ''எப்படியும் வெற்றி நமக்குத்தான், மாமா. சாந்தினி தன் அழகான விழிகளில் நீர்மல்க ஏறிட்டுப் பார்த்தால் போதும் — கருங்கல் கூடக் கனிந்துவிடும். இவன் சாதாரண மனிதன் தானே'' என்றான் உற்சாகமாக.

''ஏதோ விஷயம் ஒரு வழியாக ஓய்ந்தால் சரி'' என்றார் சோமநாதன் அலுப்புடன்.

சங்கரே மறுநாள் ''கருணா புராடக்ட்ஸ்'' கம்பெனிக்கு சாந்தினியை அழைத்துப் போனான். வழி எல்லாம் உபதேசம் தான். ''அவனை எதிர்த்துப் பேசாதே. இப்போது மன்னித்தால் போதும், என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார்'' என்று சொல்லு.

''என்ன வேண்டுமானாலும் என்றால் என்ன...'' சாந்தினி சங்கடப்பட்டாள்.

சங்கர் பொறுமை இழந்து படபடத்தான். ''சாந்தினி. நீ இந்தக் காலத்துப் பெண். பழம் பாடாவதி இல்லை, உனக்கு நான் கற்றுத்தரத் தேவையும் இல்லை. புத்தியோடு நடந்துகொள். வாய்ப்புக் கிடைத்தால் எங்களுக்கு மீண்டும் வேலையும் கேள். தொகையைத் தள்ளிவிடுமாறு கெஞ்சு.''



''எதற்கும் கடனாகக் கட்டுவதாக கேட்டுப் பார்க்கிறேன். முதலில் என் நகைகளை விற்றுக் கொஞ்சம் கட்டிவிடலாம். பிறகு...''

''அசட்டுத்தனமாக உளறுவதிலேயே குறியாக இருக்கிறாயே' சாந்தினி, அவ்வளவு பணத்தை நாம் எதற்காக இழக்க வேண்டும்? முடிந்த அளவு நட்டம் இல்லாமல் தப்புவதைப் பாராமல் இது என்ன விதண்டாவாதம் செய்கிறாய்? சொல்லுவதைக் கேட்கப் பழகு. அதோடு வேறு ஒருவர் தப்புக்கு நாம் பலியாக வேண்டுமா?''

''நீங்கள் கவனமாக இருந்திருந்தால் இப்படி நடந்து இராது அல்லவா? உங்கள் இருவரின் கவனக் குறைவுக்கு தண்டனை என்று ஏற்றுக் கொள்ளுவது...'' என்றாள் சாந்தினி.

''திரும்பவும் முட்டாள்தனமாகப் பேசுகிறாயே. அப்படியே கடனாகக் கட்ட வேண்டி வந்தால் எவ்வளவு கஷ்டப்பட வேண்டும் — அதை யோசித்துப் பார்த்தாயா? ஒரு சினிமா, நாடகம் என்று போக முடியுமா? நல்ல துணிமணி வாங்க முடியுமா? நாயும் தின்கிறது; நாமும் சாப்பிடுகிறோம் என்று வயிற்றை வெறும் சோற்றால் நிரப்பிக் கொண்டால் போதுமா?''

''நாய்க்கும் நமக்கும் வித்தியாசம் வேண்டும் என்று தானே நானும் சொல்லுகிறேன். அறியாதவனிடம் மானத்தை விட்டு மன்னித்து விடு என்று கெஞ்சுவதை விட பணத்தைக் கட்டுகிறேன் என்று கவுரமாகச் சொல்லலாமே'' என்று தர்க்கம் செய்தாள், சாந்தினி.

''திரும்பத் திரும்ப அந்தப் பாட்டையே பாடாதே. நான் சொல்வதைக் கவனி. அவனிடம் உன் சாமர்த்தியத்தைக் காட்டு. நீ கெட்டிக்காரியானால் காரியத்தை நான் சொல்வது போல முடித்துக்காட்டு, இந்தக் கையாடல் விஷயத்தை அவன் அடியோடு மறந்துவிடுமாறு செய்'' என்றான் சங்கர்.

என்ன சாமர்த்தியம். என்ன கெட்டிக்காரத்தனம்? சாந்தினிக்கு ஒன்றும் புரியவில்லை. மூளை குழம்பியது. நேற்று இந்நேரம் இருந்த உற்சாகம் என்ன? புள்ளிமானாய் மனம் துள்ளிக் குதித்தது என்ன? இலவம் பஞ்சிலும் லேசாக இதயம் பறந்தது என்ன? இன்று அதே இதயம் ஐம்பது கிலோ இரும்புக் குண்டுபோலக் கனப்பது தான் என்ன?

எவனோ ஒருவன் - அவனைப் பேயன் கருங்கல் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அவனிடம் சாந்தினி தன் மானத்தை விட்டு, ''அய்யா தருமம்'' என்று கெஞ்ச வேண்டுமாம்.

''உங்கள் பிள்ளை மாதிரி எண்ணி ஒரு காசு போடு சாமி'' என்கிறார்களே, அதுபோல உங்கள் மகளைப் போல எண்ணி என் வாழ்வைக் காப்பாற்றுங்கள்'' என்பதா?

''உன் வாழ்வைப் பற்றிய கவலை உன்னைப் பெற்ற அப்பனுக்கு இருந்திருக்க வேண்டும் என்று எடுத்தெறிந்து அவர் பேசிவிட்டால் என்ன செய்வது? நாலுபேர் முன்னால் அவமானம் செய்தால்; பிறகு அந்த இடத்திலேயே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டியதுதான். சாந்தினி நெஞ்சுக்குள்ளேயே குமுறி ஊமை அழுகையாய் அழுதாள்.

அருகில் சங்கர் மந்திரம் ஓதுவது போலச் சொல்லிக் கொண்டே இருந்தான். ''எது வேண்டுமானாலும் செய்யத் தயார் என்று சொல், சாந்தினி, எப்படியாவது இப்போது அவன் பிடியில் இருந்து நாம் மீண்டால் போதும். பிறகு சமாளித்துக் கொள்ளலாம். அங்கே போய் சும்மா விழித்துக் கொண்டு நிற்காதே. பிறகு நானும் உன் அப்பாவும் பத்து ஆண்டு காலம் கம்பி எண்ண வேண்டியதுதான்...''

சங்கர் சொல்லச் சொல்ல சாந்தினி இன்னமும் அதிகமாகக் குழம்பித் தவித்தாள்.

''அவன் காலில் விழு. கண்ணீர் விடு; கதறு... விம்மி விம்மி அழு... எதுவானாலும் சரி செய்கிறேன் என்று...''



சங்கரின் குரல் கனவுலகில் கேட்டது போலக் காதில் விழுந்தது.

ஆமாம். அவர் காலைப் பிடித்தாவது கெஞ்ச வேண்டியதுதான், தன்மானம், சுயகவுரவம் என்று பார்த்தால் அப்பா கதி அதோகதி ஆகிவிடும். அவர் சிறைக்குச் சென்றால் பிறகு சாந்தினியின் கதியும் அவ்வளவுதானே. அவள் பெரிதாக நினைக்கும் மானம் மரியாதையெல்லாம் அப்போதும் அழிந்துதானே போகும்? ''சிறைப் பறவை''யின் மகள் என்று மற்றவர் கூறும்போது தன்மானம் எங்கே தலை தூக்கும்?

ஆனால், அவளது கெஞ்சலுக்கும் கதறலுக்கும் பயன் இருக்க வேண்டுமே. அந்தச் செந்தில் செவி சாய்க்க வேண்டுமே. அவர் மறுத்து விட்டால்...?

சாந்தினியின் மனம் துடித்தது. நெஞ்சில் அச்சத்தைச் சுமந்தபடி செந்திலின் அலுவலகத்தை அடைந்தாள். அவனது அறைக்குள்.

காத்திருந்து அவனைக் காணச் சென்றாள்.

அவனைக் கண்ணால் கண்டதுமே கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த நம்பிக்கையும் அற்றுவிடக் கண்டாள்.

அந்த மனிதனின் கருகருத்த முகம் கருணை என்றால் கிலோ என்ன விலை என்று கேளாமல் கேட்டது.

இவனா பெண்ணின் கண்ணீரில் கரைகிறவன்.

# 4

## நீ ஓர் அழகான பெண்!

உணர்ச்சியற்ற பார்வையும் சற்றே நெரித்த புருவமும், இறுக மூடிய உதடுகளும், அழுத்தமான முகவாயும்... கடுவன் பூனையின் நினைவு தோன்றியது சாந்தினிக்கு.

அது மட்டும் அல்ல.

அவ்வளவு பெரிய நிறுவனத்தின் முதலாளி ஆயிற்றே. அவர் குறைந்தது, நடுத்தர வயதினராக இருப்பார் என்று சாந்தினி நினைத்திருந்தாள். ஆனால் இவர்... இவன்... இந்த மனிதன் ஓர் இளைஞன். ''உங்கள் மகளைப் போல எண்ணுங் கள்'' என்று இவனிடம் கேட்க முடியாது.

காலில் விழுந்து கெஞ்சினால்கூட எட்டி உதைத்து விட்டு மேலே செல்லக் கூடிய முரட்டுத்தனமும் பிடிவாத மும் அவன் முகத்தில் தெரிந்தன.

இவனிடம் என்னவென்று கேட்பது?

சாந்தினி மிரட்சியுடன் நிற்கும்போது ஒரு பெண் உச்சுக் கொட்டுவது கேட்டது. அதன் பிறகு தான் அந்த அறையில் இன்னொரு பெண்ணும் இருப்பது அவள் கவனத்தில் பதிந் தது.

கையில் இருந்த சிறு கண்ணாடியில் பார்த்துக் கொண்டு உதட்டுச் சாயத்தைச் சரிப்படுத்தினாள். அவள் கலைந்து விட்ட சாயத்தை மீண்டும் பூசிச் சீர் செய்கிறாளோ?

தன்னையும் அறியாமல் சாந்தினி செந்திலின் முகத்தைப் பார்த்தாள். அங்கே செந்நிறச் சாயம் ஏதும் இல்லை. ஆனால், அவன் மேசையில் இருந்த சிறு கைக்குட்டையில் சாயம்பட்டு இருந்தது.

கண்ணாடியை உள்ளே வைத்துக் கொண்டு அந்தப் பெண் எழுந்தாள். ''அப்போ நான் வருகிறேன். அத்தான், உங்களுக்குத்தான் வேலை வந்துவிட்டதே. இனி நின்றால் கோபம் வரும். போகவா?'' என்று உரிமையுடன் கொஞ்சிப் பேசினாள், அவள்.

''ம்ம்'' என்று ஒப்புதல் தந்தான் செந்தில்.

''நாளைக் கட்டாயம் வரவேண்டும்'' என்று கூறியபடி அவள் வெளியேறினாள்.



சாந்தினியின் பார்வை கைக்குட்டையிலேயே இருந்தது. செந்தில் ஒரு பென்சிலால் அந்தக் குட்டையை அருகில் இருந்த குப்பைக் கூடையினுள் தள்ளுவதைக் கண்டு திடுக் கிட்டாள்.

மறுகணம் அவனது கூரியநோக்கு தன்னைத் துளைப் பதை உணர்ந்தாள். நெஞ்சு படபடக்கத் தொடங்கியது.

''உட்கார்'' என்றான், அவன்.

கட்டளைக்குப் பணிகிறவள் போலச் சட்டென்று அமர்ந் தாள் சாந்தினி. பிறகுதான் அவன் தனக்கு மரியாதை தர வில்லை; ''உட்கார்'' என்று ஒருமையில் சொன்னான் என்பது மனதில் உறைத்தது.

அவன் பார்வை அவளுடைய விழிகளின் வழியாக உள்ளத்தை அலசுவதுபோலத் தோன்றியது. சட்டெனப் பார் வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''யார் நீ?''

சங்கரின் யோசனைப்படியே சாந்தினி தான் யார், எதற் காகப் பார்க்க வேண்டும் என்பதை எழுதி அனுப்பவில்லை. ''சோமநாதனின் பெண் என்றால் பாராமலே திருப்பி அனுப் பிவிடுவான். நீ சும்மாவே காத்து இருந்து பார்த்துவிட்டு வா'' என்று சங்கர் சொல்லியிருந்தான். நேரில் பார்த்தபின் சொல் லிக் கொள்ளலாம் என்றான்.

ஆனால், இப்போது நேரில் பார்த்தபோது ஏதும் சொல்ல வாய் வராமல் சாந்தினி திணறினாள்.

''நான் கேட்டது புரியவில்லை?''

அடுத்த கேள்வி சற்றுக் கடுமையான குரலில் எழுந்தது.

''நான்... நான்... சாந்தினி'' என்று திக்கினாள் அவள்.

அவனுடைய புருவங்கள் மேலேறின. கீழ் உதடு லேசாக நெளிந்தது. 'நம் பிரதமரின் பெயர் இந்திரா என்று எனக்கு நினைவு... சரிதானே...?'

அவன் பேச்சு புரியாமல் சாந்தினி விழித்தாள்.

அவன் தொடர்ந்தான். ''கவர்னர், முதலமைச்சர் யாரும் பெண்ணில்லை. ஒரு வேளை புதுமாதிரியாக உங்களை நியமித்து இருந்தால்... என் அறியாமைக்காக என்னை மன்னித்து அருள வேண்டும்'' என்றான் போலிப் பணிவுடன்.

சாந்தினியின் முகம் சிவந்தது. எவ்வளவு எகத்தாளம்! முதன் முறையாகப் பார்க்கும் ஒருத்தியிடமே இவ்வளவு என்றால், அப்பா பாவம். இந்த அரக்கனிடம் என்ன பாடுபட்டிருப்பார். சாந்தினி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''நான் சோமநாதனின் மகள். என் பெயர் சாந்தினி'' என்றாள் தெளிவாக.

''நினைத்தேன். எந்த சோமநாதன் என்று கேட்டு விடுவேன் என்று பயப்பட வேண்டாம். அவர் பெயர் இங்கே பிரசித்தம். ஜூடாஸ் - எட்டப்பன் போன்றவர்களைப் போல் '' என்றான் சற்று வெறுப்புடன். பிறகு கேட்டான். ''நீ வந்த விஷயம்...?''

''அது உங்களுக்கே தெரியும்'' சாந்தினியும் அவன் பாணியிலேயே சொல்லிப் பார்த்தாள்.

''மீண்டும் ஒருமுறை என்னை மன்னிக்க வேண்டும். எனக்கு சோதிடமும் தெரியாது. அடுத்தவர் மனதை அறியும் வித்தையும் நான் பயிலாத கலை'' என்றான் கிண்டலாக, பேச்சில் இகழ்ச்சி இழையோடியது. ''உம் விஷயத்தைச் சொல்'' என்றான் உடனே அதட்டலாக.

''வந்து... வந்து அவர்கள் இருவரையும் மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வந்தேன்'' என்று சிரமப்பட்டுச் சொன்னாள் சாந்தினி.

சும்மாவே அவமானப்பட்டுக் கொண்டு வந்தவள் இவன் பேசிய தோரணையில் அவளுக்குக் குரலே எழும்பவில்லை.



''இரண்டு பேர்...'' ஓகோ ஓகோ. சங்கருக்கும் சேர்த்து வந்த தூதா? ஆமாம் ஆமாம். இருக்காதா பின்னே. வருங்கால கணவன் அல்லவா? அக்கறை இருக்கத்தானே செய்யும். பாவம்தான். ஆனால், அவர்களை நான் எதற்காக மன்னிப்பது? என்னை ஏமாற்றியதற்கா? அல்லது என்னை இளிச்சவாயன் ஆக்க முயன்றதற்கா? ஏன் மன்னிக்க வேண்டும்?''

சொல் மழை, கல்மழையாகப் பொழிந்தது.

கல்லடிக்கும் கொடுமையான சொல்லடியில் சாந்தினி தடுமாறினாள்.

சங்கர் சொல்லித் தந்த பாடம். தான் நினைத்து வந்த சிந்தனையெல்லாம் மறந்தது. மெல்ல எழுந்தாள். கதவை நோக்கித் திரும்பினாள்.

''நில்'' என்று கட்டளையிட்டான் செந்தில்.

''இதை மட்டும் அவர்கள் இருவரிடமும் சொல். நான் எதை வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்ளுவேன். என்னை ஏமாற்றுகிறவர்களை மட்டும் தண்டிக்காமல் விடமாட்டேன் என்று சொல்'' என்று எழுந்தான்.

அறையில் காற்று புழுங்குவது போல் சன்னலை நோக்கி நடந்தான். ''திருட்டு நாய்கள் சே'' என்றான் போகிற போக்கில்.

''இல்லை'' என்றாள், சாந்தினி ஒற்றைச் சொல்லாக.

''என்ன இல்லை?'' அவன் கழுத்தை மட்டும் திருப்பிக் கேட்டான் ''எதை இல்லை என்று மறுக்கிறாய்?''

''அவர்கள் திருடர்கள் இல்லை என்றேன். அவர்களும் ஏமாந்துதான்... மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டே போனவள் அவனது ஆவேசத்தை எதிர்பார்க்கவில்லை. வெகு ஆத்திரத்துடன் அவன் குறுக்கிடவும், திகைப்புடன் பேச்சை நிறுத்தினாள்.

''திருடவில்லை? அவர்கள் திருடவில்லை? ஏமாந்தார்களா? அவர்களா? ஆகாகா! என்ன அற்புதமான கற்பனை! நாட்டில் உள்ள அத்தனை பேரையும் ஏய்க்கக் கூடிய எத்தர்கள். அவர்களா ஏமாந்தார்கள்? வேடிக்கை தான்,'' அவன் சிரிப்பு பேச்சைவிட ஆத்திரத்தைக் கொட்டியது.

சாந்தினி பேச்சிழந்து அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். கடுவன் பூனை கடுகிப் பாயும் ரத்தவெறி பிடித்த காட்டுப் புலியாக மாறி விட்டாற் போலத் தோன்றியது. இந்தப் புலி இப்போது யாரைக் கடித்துக் குதறப் போகிறது? அப்பாவையா? சங்கரையா? சாந்தினியையா? அல்லது மூவரையுமா? அவளின் அகன்ற விழிகளில் பீதி படர்ந்தது.

செந்திலின் முகம் சட்டென மாறியது. ''இதோ பார் உனக்கு அலுவலக வேலை முறைகள், நடவடிக்கைகள் பற்றிக் கொஞ்சமேனும் தெரியுமா?'' என்றான் சற்று தணிவாக.

''நான்கூட வேலை பார்க்கிறவள்தான்.''

''நல்லது. உடனே புரிந்து கொள்வாய். இங்கே வா'' என்று அவளை ஒரு சிறு மேஜை அருகே அழைத்துச் சென்றான். ஒரு நாற்காலியை காலால் நகர்த்தினான் ''உட்கார்'' என்றான்.

அருகே இருந்த ஒரு ''கோத்ரெஜ்'' பீரோவைத் திறந்தான். இரண்டு கணக்குப் புத்தகங்களை எடுத்தான்.

''இந்த இரண்டிலும் நான் சிவப்பு பென்சிலால் குறித்து இருப்பதைப் பார். பிறகு சொல் அவர்கள் திருடர்களா அல்லவா என்று.''

இரு புத்தகங்களையும் அவள் முகத்தில் விட்டு எறியாத குறையாக மேசை மீது வீசினான்.

பிறகு, எதுவுமே நடவாததைப் போல, தன் இடத்துக்குப் போய் அமர்ந்து, வேலைகளைப் பார்க்கத் தொடங்கி விட்டான்.



அந்த இரு கணக்கு நோட்டுகளையும் பார்க்கப் பார்க்க சாந்தினிக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. சங்கர் சொன்னது போல் மற்ற யாரும் அவர்களை ஏமாற்றும் வாய்ப்பே இல்லை. இந்த இருவருமே திட்டம் போட்டு ஒன்றுக்கு மூன்றாக விலை எழுதி ரசீதுகளைத் திருத்திப் பெருந்தொகைகளை அபகரித்து இருக்கிறார்கள்.

கடைசிக் குறிப்பையும் பார்த்து முடித்தபின் இருகரங்களாலும் கண்களையும் அழுத்தித் தேய்த்து விட்டாள்.

''என்ன? இப்போது என்ன சொல்லுகிறாய்?'' செந்திலின் ஏளனக் குரல் செவியில் மோதியது.

''எனக்கு... எனக்கு ஒரு தம்ளர் தண்ணீர் வேண்டும்'' என்றாள் பலவீனமான குரலில்.

மறுநிமிடம் அவள் முன்னே ஒரு தம்ளர் ஐஸ்வாட்டர் வந்துநின்றது. அதன் குளிர்ச்சியை உணராதவள்போல மடமடவென்று குடித்து முடித்தாள் சாந்தினி. நெஞ்சின் நெருப்பை வயிற்று நீர் அணைக்க முடியுமா?

''இன்னமும் அவர்களுக்கு வக்காலத்து வாங்கிப் பேசப் போகிறாயா?''

வேறே வழி? தப்பு செய்தாலும் அவர் தந்தை ஆயிற்றே. கண்ணைக் குத்திய விரல் ஆயிற்றே என்று கைக்காயத்துக்கு மருந்திடாமல் இருக்க முடியுமா?

''ஆமாம்'' என்பது போலத் தலையசைத்தாள்.

செந்திலின் பார்வை ஒடுங்கியது. ''நீ மன்றாடவாம் உனக்கு அவர் தந்தை. இன்னொருவன் வருங்கால க...ண...வ...ன். ஆனால், எனக்கு என்ன வந்தது? நான் ஏன் அவர்களை விட்டுவிட வேண்டும்?''

''இல்லாவிட்டால்.... இல்லாவிட்டால் நான் அனாதை யாகிப் போவேன்'' என்றாள் சாந்தினி துயரத்துடன்.

''உன்னைப் பற்றி உன்னைப் பெற்றவருக்கும் உனக்கு உற்றவருக்கும் இல்லாத கவலை எனக்கு ஏன் இருக்க வேண்டும்? என் வழி என்ன என்று அவர்களைப் போய்க் கேள்'' என்றான் செந்தில் அலட்சியமாக.

இதோ வரப் போகிறேன் என்பது போல் சாந்தினியின் நீல விழிகளில் நீர் துருத்தியது. இவ்வளவு அவமானப்பட்டும் கடைசியில் தோல்விதானா? என்ன சொன்னாலும் மாறப் போவது இல்லையா?

சங்கர் திரும்பத் திரும்பச் சொன்னானே. ''டேப் ரிக்கார்டர்'' போலச் சொன்னான். ''இப்போது நீங்கள் கருணை காட்டினால் அதற்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்'' என்றாள் உணர்ச்சியற்று.

அவன் ''விருட்''டென நிமிர்ந்தான், ''என்ன சொன்னாய்? திரும்பச் சொல்'' என்றான் கூரிய விழிகளை அவள் முகத்தில் நாட்டி.

அவள் கிளிப்பிள்ளைப்போல மீண்டும் சொன்னாள்.

முதலில் செந்தில் ஓகோ என்று சிரித்தான். பிறகு மெல்ல அவள் அருகில் வந்தான். பாண்ட் பாக்கெட்டில் கைகளை விட்டுக் கொண்டு அவளைக் குனிந்து பார்த்தான். திமிரான பார்வை அவள் உடல் எங்கும் மேய்ந்தது. சாந்தனிக்கு அவன் முகத்தில் அறையலாமா என்றுகூடத் தோன்றியது.

உதடுகள் இகழ்ச்சியாக வளைய அவன் கேட்டான். 'நீ ஓர் அழகான பெண் என்பது உனக்குத் தெரியுமா?''

# 5

## இரு நிபந்தனைகள்!

செந்திலின் பார்வையும் அடுத்து வந்த கேள்வியும் இரண்டின் பொருளும் சாந்தினிக்கு நன்றாகவே விளங்கிற்று. அதைப் போலவே தன் வாய்மொழியின் உட்பொருளும்கூட அவளுக்குப் புரிந்தது.

புரிந்து கொண்டதும் முகம் பனிபோல் வெளுத்தது. உடனேயே ரத்தமாகிச் சிவந்தது!

சங்கர் திரும்பத் திரும்பச் சொன்னானே. இந்தக் கருத்தில்தான் சொன்னானா என்று தோன்றியது. அதுதான் அவனது திட்டம் என்றால்... சே... எவ்வளவு மோசமானவன், அவன். ஒருவனின் சபலத்தில், அதுவும் பெண் சபலத்தில் அவளை மணக்கப் போகிறவனே பலன் அடைய நினைப்பது என்றால், நம்பக்கூட முடியவில்லையே.

எண்ணிப் பார்க்கும் போதே சாந்தினிக்கு முத்து முத்தாக வியர்த்தது. முடிக் கால்கள் சிலிர்த்து எழுந்து நின்றன.

''இருக்காது. அப்படி இருக்காது'' என்று மனத்திற்குள் பலமுறை சொல்லிக் கொண்டாள்.

இதெல்லாம் எதிரில் நிற்பவனின் எண்ணமும் விளக்கமும் தான். கெட்டவனுக்கு நல்ல எண்ணம் தோன்றாது.

இவன் சாதாரண வார்த்தைகளில் கூட விபரீதமான கருத்துக்களைக் கற்பிக்கிறான். ''பசு'' என்றால் இவன் ''மாடு'' என்று பொருள் கூறுகிறான். ஆத்திரத்துடன் அவனைப் பார்த்தாள்.

''உங்களைப் பெரிய மனிதர் என்று நம்பி வந்தேன்'' என்றாள், கோபத்துடன்.

''நம்ப முடியவில்லையே'' என்று ஆச்சரியப்பட்டபடி தன் இருக்கைக்கு சென்றான், செந்தில்.

''எதை?'' என்று அவள் விழித்தாள்.

''என்னைப் பெரிய மனிதனாக எண்ணி வந்ததாகச் சொன்னாயே — அதை, என்னைப் பற்றி சோமநாதனோ அல்லது சங்கரோதான் உனக்குச் சொல்லியிருக்க வேண்டும். இருவருமே நல்லபடியாகச் சொல்லியிருக்க மாட்டார்களே. வேறு யாரிடம் என்னைப் பற்றி விசாரித்தாய்?'' என்று சாவதானமாகத் தகவல் கேட்டான்.

''யாரிடமும் கேட்கவில்லை'' என்று வெடித்தாள் சாந்தினி.

''ஓ, சுயமாகவே என்னை நல்லவன் என்று எண்ணி விட்டாயா? ச்சுச்சு... தப்பு பண்ணிவிட்டாயே, இனியேனும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்'' என்று பரிதாபத்துடன் பேசினான் செந்தில்.

''இப்போது அதுவா முக்கிய விஷயம்?'' ஆத்திரத்துடன் வினவினாள் சாந்தினி.

''இல்லையா? நான் நல்லவனா கெட்டவனா என்பது எனக்கு முக்கியம் இல்லையா? என்னம்மா இப்படிக் கேட்கிறாய்?'' கண்களாலேயே அவளைக் கிண்டல் செய்து சிரித்தான், அவன்.

அவன் ஏன் சிரிக்கமாட்டான்? நகைப்புக்கு இடமாகத் தானே அவள் வந்து நிற்கிறாள். அவன் முதலாளி, அவளோ தப்பு செய்தவரின் மகள். அவன் எள்ளி நகையாட கேட்கவா வேண்டும், ''இப்படி செய்து விட்டீர்களே அப்பா ஏன் செய்கிறீர்கள்?'' என்று உதடுகள் அவளையும் அறியாமல் முணுமுணுத்தன.

அவனுக்குப் பாம்புச் செவி போலும். ''சும்மா என்றால் இந்த அளவுக்கு அவர்களுக்குத் துணிச்சல் இருந்திராது. என் அப்பாவுக்குத் திடீர் என்று உடம்பு, சரியில்லாமல் போனது;



நான் பயிற்சியை இடையில் நிறுத்திவிட்டு வந்து அலுவலகப் பொறுப்பு ஏற்றது. அப்பாவா? அலுவலகமா? தொழிற்சாலையா? என்று நான் குழம்பியது எல்லாம் அவர்களுக்கு வாய்ப்பாகிப் போயிற்று. இப்போது வந்தவன் இவனுக்கு என்ன தெரியும் என்ற தைரியம் வேறு. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்று தொடங்கியிருக்கிறார்கள். என்னை மயைடன் என்று நினைத்தார்கள் போலும், மடராஸ்கல்கள்'' என்றான் அவன் மீண்டும் கோபம் மிக.

''அப்பா இவ்வளவு பணம் ஏன் எடுத்தாரோ — அது தான் தெரியவில்லை'' என்றாள் சாந்தினி வேதனையுடன்.

அவன் கடகடவென்று சிரித்தான். ''ஏன்? அங்கே கிண்டியில் குதிரை வாலில் பணம் காய்த்துத் தொங்குகிறதாம். அதைப் பறித்து வரத்தான். ஜாக்பாட்டெல்லாம் அடிக்கப் போகிறதாமே' என்றான், எகத்தாளமாக.

சாந்தினி நின்ற இடத்தில் இரண்டு பெரிய சொட்டுக் கண்ணீர் பொட்டென்று விழுந்து உடைந்து சிதறியது. அதற்கு வாயற்று, பின்னே திரும்பினாள்.

''பொறு'' என்றான் செந்தில். ஆழ்ந்த சிந்தனையில் சில விநாடிகள் அவன் கண்மணிகள் சுருங்கின. பிறகு, ''இங்கே வா'' என்று சாந்தினியைப் பார்த்தான்.

''நீ என்ன சொன்னாய்? என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார் என்று தானே?''

சாந்தினி முகம் சிவக்க ஏதோ சொல்ல வாயெடுத்தாள். செந்தில் கையமர்த்தி அவளை நிறுத்தினான்.

''முதலில் நான் சொல்லி முடித்து விடுகிறேன். பிறகு நீ பேசலாம். சங்கரையும் சோமநாதனையும் நான் நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடுகிறேன். ஆனால்...?''

''ஆனால்...?'' சாந்தினி மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

''அதற்கு இரண்டு நிபந்தனைகள் விதிக்கப் போகி றேன்...''

அவனை இடைமறித்து. ''அவர்கள் எது வேண்டுமானா லும் செய்வார்கள்'' என்று ஆவலுடன் கூறினாள்.

''நிபந்தனை அவர்களுக்கு அல்ல. நீதான் அவற்றை நிறைவேற்ற வேண்டும். செய்யத் தயாரா?''

''என்ன நிபந்தனைகள்?'' என்று எச்சரிக்கையுடன் சாந் தினி கேட்டாள்.

''ஒன்று, நீ ஆறு மாதங்கள் நான் இடும் வேலைகளைச் செய்ய வேண்டும். அடுத்தது அந்த ஆறு மாதங்களும் நீ சங்கருடனோ சோமநாதனுடனோ எந்த வகையிலும் தொடர்பு கொள்ளக் கூடாது'' என்றான், அவன், கண்டிப் பான குரலில்.

சாந்தினி வேகமாக யோசித்தாள்.

முதலாவது எளிதுதான். அவன் இடும் வேலை என்றால் அலுவலக வேலையாகத்தானே இருக்கும்? எவ்வளவு நிறை யக் கொடுத்தாலும் பாடுபட்டு முடித்து விடலாம். ஆனால், இரண்டாவது...? அப்பாவைப் பார்க்கக் கூடாது என்றால் எங்கே இருப்பது?

''முதல் நிபந்தனையைத் தடையின்றிச் செய்கிறேன்'' என்றாள் வெள்ளை மனதுடன். ''ஆனால் இரண்டாவதுதான் '' என இழுத்தாள்.

''இரண்டாவது கொஞ்சம் சிரமம்தான். கண்ணான காத லனைக் காண முடியாது அல்லவா? பரிதாபம்தான்'' என் றான் செந்தில் கிண்டலாக.

''காதலனாக இருந்தால் உங்களுக்கு என்ன? அதோடு அவரைப் பார்ப்பதும் பாராமல் இருப்பதும் என் சொந்த விஷயம்'' என்று வெடித்தாள் சாந்தினி.



''என்ன செய்வது, பெண்ணே? இப்போது அதை என் விஷயமாகவும், நான் ஆக்கிக் கொண்டேனே' என்றான் புன்னகையோடு. உடனேயே சிரிப்பு மறைய, ''அதோடு முதல் நிபந்தனையையும் எளிதாக எண்ணிவிடாதே. நான் ஏவும் வேலை என்றால் அது எந்த வேலையாகவும் இருக்க லாம். எந்தத் தருணத்திலும் ஏவப்படலாம்'' என்றான் பயமு றுத்துவது போல.

''அப்படியென்றால்...'' சாந்தியின் மெல்லிதழ்கள் முணுமுணுத்தன. உங்கள் பேச்சு புரியவில்லை'' என்று அவனை நிமிர்ந்துப் பார்த்தாள்.

செந்தில் ஸ்டைலாகத் தோளைக் குலுக்கினான். ''நான் கூறுவதைக் கூறியாயிற்று; உனக்குத் தோன்றிய வகையில் புரிந்துகொள். அல்லது உன்னை இங்கே அனுப்பினார்களே உலக மகா புத்திசாலிகள் — அவர்களுக்குத் தெரிந்த வகை யில் புரிந்துகொள். எப்படிப் புரிந்து கொண்டாலும் முடிவு கூறவேண்டியது நீதான்'' என்று முடித்துவிட்டான். பிறகு மேசை மீது இருந்த பைலை எடுத்துக் கொண்டு வேலையில் ஆழ்ந்தான்.

சற்றுநேரம் சாந்தினி அசைவற்று நின்றாள். அவன் அவளைக் கவனிப்பதாக இல்லை.

''நான் நாளை வந்து என் முடிவைச் சொல்லுகிறேன்'' என்றாள் சாந்தினி.

''இல்லை நாளை வரை அவகாசம் இல்லை. சங்கருக் கும் சோமநாதனுக்கும் நான் கொடுத்த கெடு இன்று மாலை யோடு முடிந்து விடுகிறது' என்று வேலையைத் தொடர்ந்த படி சொன்னான், செந்தில்.

''அப்படியானால் எப்போது தெரிவிப்பது?'' என்று கேட்டாள், சாந்தினி.

அவன் மணிக்கட்டைத் திருப்பிக் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். ''என் கெடு ஆறு மணியோடு முடிகிறது.

அதற்குள் உன் முடிவு எனக்குத் தெரிந்தாக வேண்டும். நான் ஒரு முகவரி தருகிறேன். உனக்குச் சம்மதமானால் அந்த வீட்டுக்கு வா. வரும்போதே உனக்குத் தேவையானதையெல்லாம் எடுத்து வந்துவிடு. அப்படி நீ வரவில்லை என்றால், என் நிபந்தனைகளை நீ ஒத்துக்கொள்ளவில்லை; விளைவுகளைச் சந்திக்கத் தயார் என்று நான் தீர்மானித்துக் கொள்கிறேன்.''

''வீட்டுக்கா? உங்கள் வீட்டுக்கா வரவேண்டும்'' என்று வாயைப் பிளந்தாள் சாந்தினி.

''ஏன்? நான் தரும் வேலைகளை அலுவலக நேரத்தில் முடிக்க முடியாது.''

''நான் அதிக நேரம் இருந்து செய்கிறேன்'' என்றாள், சாந்தினி, ''உங்கள் வீட்டில் நான் இருந்தால் நன்றாயிராது'' என்றாள், பிள்ளைபோல.

''வெளியே நீ இருந்தால் எனக்கு வசதிப்படாது என்கிறேனே. இரவு ஒன்பது மணிக்கும் எனக்கு பிசினஸ் ஐடியா வரும்; அந்த நேரத்தில் உன்னை நான் எங்கே தேடுவது? கைவசம்? நீ தயாராக இருந்தால் எனக்கு வசதி. நீ என்ன சொல்கிறாய்?'' என்று சீண்டினான், அவன்.

அவன் தன்னைப் பார்த்து உள்ளூரச் சிரிப்பது போல சாந்தினிக்குத் தோன்றியது. ''உங்கள் வீட்டில்... அங்கே யார் யார் இருப்பார்கள்?'' என்று யோசனையோடு கேட்டாள்.

''அங்கே நான் நிச்சயமாக இருப்பேன், அது போதாதா உனக்கு?'' என்று கண் சிட்டினான் செந்தில்.

முகம் சூடேற ''நான்... நான்'' என்று சாந்தினி தடுமாறினாள்.

''எது வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பவள்!'' குத்தினான் செந்தில்.

சாந்தினிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. ஆனால் யாரை நோவது? அவன் கையில் அத்தனை பேரின் குடுமியும் சிக்கியிருக்கையில் அவன் ஏன் கொக்கரிக்க மாட்டான்? உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு அசையாமல் நின்றாள் சாந்தினி.



''இன்னொன்று மறந்து விட்டேனே. உன் தகப்பனாரும் சங்கரும், தாங்கள் செய்த குற்றங்களை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்கு மூலங்களும் கைப்பட எழுதித் தந்து இருக்கிறார்கள். அதையும் நினைவு வைத்துக் கொள்... இப்போது நீ போகலாம்... ஆறு மணிக்குப் பிந்திவிட வேண்டாம்'' என்று அவளை அனுப்பினான் செந்தில்.

அவன் அறையில் இருந்து வெளியேறிய சாந்தினிக்கு உலகமே தட்டாமாலை சுற்றுவது போல இருந்தது.

# 6

## தூண்டிலை விழுங்கிய மீன்!

ஒருவாறு சமாளித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

அங்கு சங்கரும் தந்தையும் ஆவலுடன் காத்து இருக்கக் கண்டாள்.

அவ்வளவுதான் விம்மி வெடித்துக் கொண்டு வந்தது, ஆத்திரமும் அழுகையுமாகச் சீறினாள். ''என்னை எது வேண்டுமானாலும் செய்வதாகச் சொல்லச் சொன்னீர்களே? ஏன் சொன்னீர்கள்? என்ன நினைத்துச் சொன்னீர்கள்?'' என்று சங்கரிடம் பாய்ந்தாள். மரியாதை, நன்றி எதுவும் நினைவு இல்லை.

''என்ன நினைத்தா? வீடுகூட்ட வேண்டுமானாலும் ''தயார்'' என்றுதான். உன்னைப் பெற்றவருக்காக இது செய்ய மாட்டாயா!'' என்றான், சங்கர்.

காற்றுப் போன பலூனாக பொத்தென்று உட்கார்ந்தாள், சாந்தினி. அவன் சொல்லுவதும் சரியாகத்தானே இருக்கிறது? செந்தில் தான் கருத்தைத் திரித்துச் சொல்லி இருக்கிறான். திரிசமன்காரன் அவன் தொலைகிறான். தந்தையிடம் திரும்பினாள்.

''அது போகட்டும். நீங்கள் ஏன் பணம் எடுத்தீர்கள்? திருட்டு வேலை எல்லாம் ஏன் செய்கிறீர்கள்? அதற்கும் மேலாக என்னிடம் ஏன் பொய் சொன்னீர்கள்?'' ஆத்திரத்துடன் படபடத்தாள்.

''பெற்ற தகப்பனாரிடம் எவ்வளவு மரியாதை?'' என்று ஆச்சரியம் காட்டினான், சங்கர்.

சோமநாதனுக்கு வாலை முறுக்கி விட்டதுபோல் ஆயிற்று. ''என்ன நினைத்துக் கொண்டு என்னிடமே கேள்வி கேட்கிறாய்? ஊம்...'' என்று ஓர் அதட்டல் போட்டார்.

சாந்தினி விழித்தாள். தப்பும் செய்துவிட்டு அதட்ட வேறு வந்துவிட்டாரே.

''அங்கே என்ன ஆயிற்று என்று சொல்லாமல் இங்கே வந்து பத்ரகாளி வேடம் போடுகிறாயே. மாமாவுக்கு அது தான் கோபம் வருகிறது. முதலில் விஷயம் காயா பழமா என்று சொல்'' என்றான், சங்கர் நயமாக.

''இரண்டு இழவும் இல்லை'' என்றாள் சாந்தினி. தன் விதியை நொந்தபடி பிறகு ஒரு வழியாகச் செந்தில் சொன்னதைக் கூறி முடித்தாள்.

இப்போது அவர்கள் இருவரும் திகைத்தனர்.

''உண்டு. இல்லை'' என்று சொல்வான் என்று நினைத்தார்களே தவிர, அவன் நிபந்தனைகள் விதிக்கக் கூடும் என்று இருவருமே எதிர்பார்க்கவில்லை.

சோமநாதனுக்கு முன்பே நம்பிக்கை இல்லை. சங்கர் சொல்லுகிறானே என்பதால் மகளை அனுப்பி வைத்திருந்தார்.



சங்கர் வேறு விதமாக நினைத்திருந்தான். செந்தில் இளவயதினன்; வெளிநாடு சுற்றி வந்தவன், அங்கே எத்தனையோ கண்டு மனம் பேதலித்தவனாகத்தான் இருப்பான். இப்போதுகூட அலுவலகத்துக்கே ஒரு பெண் வந்து போவது இல்லையா? அவனுடைய சபலத்தைத் தூண்டிவிட்டுக் காரியத்தை சாதிக்க வேண்டும் என்று எண்ணினான். தூண்டிலில் புழுவைப் போட்டு மீனைப் பிடிப்பது இல்லையா? இப்போது ஆசைகாட்டி நிலைமையை சமாளித்து விட்டால், பிறகு கத்தரித்துக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்தான்.

ஆனால் செந்தில் தூண்டிலையே கொண்டு செல்லும் சுறாமீன் என்று அவன் கண்டானா? இப்போது விழித்தான்.

இருவரும் பேச்சு முடிந்து நின்ற தருணத்தில் சாந்தினி மீண்டும் கேட்டாள்.

''இப்போதாவது சொல்லுங்கள் அப்பா; அவ்வளவு பணம் ஏன் எடுத்தீர்கள்? அதை என்ன செய்தீர்கள்?'' என்றாள் கண்ணீரோடு.

''சோமநாதன் இளகிவிட்டார். ''அதாம்மா வந்து... பார். உன் திருமணத்துக்கு, மற்ற செலவுகளுக்கு என்று கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. அதேசமயம் குதிரை பந்தயத்துக்கு நல்ல 'டிப்ஸ்' வேறு கிடைத்தது. சரி கொஞ்சம் ஆபீஸ் பணத்தை எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம்! பந்தயத்தில் வெற்றி கிடைத்ததும் திரும்பப் போட்டு விடலாம் என்று நினைத்தோம். பார்த்தால், இன்னொரு கழுதை மூக்கை நீட்டி வெற்றியைத் தட்டிக் கொண்டு போய்விட்டது. அடுத்த வாரம் அதை விட நல்ல ''டிப்ஸ்'' கிடைத்தது. அதுவும் அப்படியே போச்சு. ஜாக்பாட்டுக்கு நூறு டிக்கெட் வாங்கினேன். அதுவும் போச்சு, போட்ட பணத்தை எடுத்து விட நானும் மாப்பிள்ளைத் தம்பியும் எவ்வளவு முயன்றோம் தெரியுமா? குதிரை வேடம் போட்ட கழுதைகள் — அத்தனையும் காலை ஒரேயடியாக வாரிவிட்டன! அலுவலகத்தில் மேலும் மேலும் பணம் எடுக்கும்படி ஆயிற்றே தவிர,

ஒரு காசு திரும்ப வைக்க முடியவில்லை. எடுத்த பணத்துக்குச் சரியாக ரசீது, கணக்கு அதில் இதில் கொஞ்சம் தில்லுமுல்லு செய்யும்படியாக ஆயிற்று. அந்த குதிரை மூஞ்சிக் கழுதைகள் செய்த மோசத்துக்கு என்னை என்ன பண்ணச் சொல்லுகிறாய்?'' என்று நியாயம் பேசினார் சோமநாதன்.

''சொல்லுகிறேன், சட்டியும் பானையும் சேர்த்துப் பண்ணச் சொல்கிறேன்; பிறகு இரண்டையும் சேர்த்து என் தலையில் போட்டு உடைக்கச் சொல்லுகிறேன்'' என்று ஆத்திரமும் வேதனையும் தாளாமல் முனகினாள் சாந்தினி.

அவளுக்கு அழுகை, அவமானம், ஆத்திரம் எல்லாமே பொங்கி எழுந்தன. பொங்குவதையெல்லாம் எங்கே கொட்டுவது? அழகான ஏழடுக்கு மாளிகையாகக் கற்பனை செய்து வைத்த வாழ்வு, அத்தனை அடுக்கையும் சீட்டுக்கட்டு மாளிகைபோல ஒரே வீச்சில் கலைத்து விட்டார்களே, இதற்கு மேல் நியாயம் வேறு பேசியாகிறது.

''நீங்கள்கூட இப்படி நடக்கலாமா, அப்பா? குதிரைப் பந்தயம் ஒரு சூதாட்டம் என்று தெரியாதா?'' என்று வேதனையோடு தந்தையிடம் கேட்டாள்.

''உன் கல்யாணத்தைக் கொஞ்சம் கௌரவமாக நடத்த நினைத்தேன், சாந்தனியம்மா'' என்று அசடு வழிய சமாதானம் சொன்னார், சோமநாதன்.

''பொல்லாத கவுரவம்! அந்த லெட்ஜர்களை என் முகத்தில் எறியாத குறையாக அவர் என் முன்னால் விசிறி அடித்தாரே; அப்போது - அதைப் படித்தபோது எல்லாம் எனக்கு எவ்வளவு அவமானமாக இருந்தது தெரியுமா?'' என்று விக்கி அழுதாள், சாந்தினி. ''போதாத குறையாக என்னிடம் பொய் வேறு சொன்னீர்களே. அந்த செந்தில் உங்களை எத்தன், திருடன் என்றெல்லாம் சொன்ன போது நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போல இருந்ததே அப்பா'' என்று மேலும் அழுதாள்.



''அவன் ஒருத்தன் முன்னால் பட்ட அவமானத்தையே பெரிதாக எண்ணிப் எண்ணிப் பேசுகிறாளே. நாளைக்கு ஊரில் உள்ள அத்தனை பேர் முன்னிலையிலும் நாங்கள் அவமானப்பட நேருமே. அதைப்பற்றி சிந்திக்க வேண்டாமா!'' என்றான் சங்கர்.

சாந்தினி அவனை வெறுப்புடன் பார்த்தாள். இந்த மனிதன்தான் இத்தனைக்கும் காரணம். அப்பாவுக்கு இலகு வழியில் பணம் தேட என்றுமே ஆசைதான். ஆனால், நாலைந்து ரூபாய்க்கு லாட்டரி சீட்டு வாங்குவதோடு அந்த முயற்சி நின்றுவிடும். இவன் — இவன் தான் அப்பாவுக்கு இத்தகைய தீய வழிகளையெல்லாம் கற்றுக் கொடுத்து இருக்கிறான். இருந்திருந்து இந்த ஆளையா நான் மணக்க வேண்டும்?

அவள் பார்வையையோ எண்ணங்களையோ கவனியாமல் சங்கர் சோமநாதனிடம் பேசினான்.

''பழங் கணக்குப் பார்ப்பதில் பயன் இல்லை மாமா. இனி மேலே ஆகவேண்டியதைப் பார்க்க வேண்டும்.

''மேலே செய்வதற்கு என்ன இருக்கிறது? விலங்கு மாட்டிக் கொண்டு நடுத்தெருவில் நடக்க வேண்டியதுதான். அப்படி ஓர் அவமானத்தை என்னால் தாங்க முடியுமா? அதற்கு முன்னால் தூக்கு மாட்டிக் கொண்டு தொங்க வேண்டியதுதான்'' என்றார் சோமநாதன் விரக்தியாக.

''அய்யோ, அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அப்பா'' என்று கதறினாள், சாந்தினி.

''அப்படியானால் நீ செந்திலின் நிபந்தனைகளை ஒப்புக் கொள்வதுதான் மீந்திருக்கும் ஒரே வழி'' என்றான் சங்கர், தீர்மானமாக.

தன் காதுகளையே நம்பமாட்டாமல் சாந்தினி அவனை வெறித்துப் பார்த்தாள்.

சோமநாதன்கூட சங்கரின் பேச்சைக் கேட்டுத் திகைத்துப் போனார். ''சேச்சே, சங்கர், நீங்கள் என்ன பேச்சு பேசுகிறீர்

கள், அந்த நிபந்தனைகளை மானம் உள்ளவர்கள் ஒப்ப முடியுமா? அப்படிப் பெண்ணை விற்றாவது நான் உயிரோடு இருக்க வேண்டுமா?'' என்றார்.

''நான் விற்கச் சொல்லவில்லையே'' என்றான், சங்கர் பதறாமல்.

''பின்னே? செந்திலின் நிபந்தனைகளை நன்கு கவனித்தீர்களா? முழுக்க முழுக்க அவன் வீட்டில் அவனின் ஆதினத்தில் நம் தொடர்பே இல்லாமல் கைதி போல சாந்தினி இருக்க வேண்டும் என்கிறான். இதற்கு என்ன பொருள்? சங்கர் சார், நான் கொஞ்சம் மோசடிக் காரனாக இருக்கலாம். ஆனால் இந்த அளவுக்கு இழிந்தவன் அல்ல'' என்றார் அவர் கோபமாக.

''நான் இழிந்தவன் என்று சொல்லாமல் சொல்லிக் காட்டி விட்டீர்கள். பரவாயில்லை. சாந்தினிக்காகப் பொறுத்துக் கொள்கிறேன். மாமா, நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் கொஞ்சம் பொறுமையாக நான் சொல்வதை கவனியுங்கள். தூக்கு மாட்டுவேன், சாவேன் என்கிறீர்களே? அப்படி நீங்களும் செத்து, நானும் சிறைக்குப் போய்விட்டால் பிறகு சாந்தினியின் கதி என்ன? இவ்வளவு அழகான ஓர் இளம் பெண்.... தன்னந்தனியாக... இன்றைய உலகத்தில் வாழ முடியுமா?''

சோமநாதன் திகைப்புடன் மகளைப் பார்த்தார்? கண்கள் முத்துமாலை தொடுக்க, பொற்பதுமையாக அவள் நின்றாள். பாதுகாப்பு இல்லாவிட்டால் இந்த அழகு என்ன ஆகும்?

சங்கர் தொடர்ந்தான்; ''மானம், அவமானம் என்று பேசுகிறீர்கள். செத்துவிட்டால் மட்டும் மானம் கற்சிலையாக நிலைத்துவிடுமா? வேலை செய்த இடத்தில் பணம் கையாடியதும், மாட்டிக் கொண்டதும் ஜெயிலுக்கு பயந்து தூக்கு மாட்டிக் கொண்டான் என்றுதானே ஊரார் சொல்வார்கள். அப்போது உங்கள் மானம் அந்த வானத்தில் பறக்காமல் உங்களோடு ஒட்டிக் கொண்டு உறவாடுமா?''



''நீங்கள் என்னதான் செய்யச் சொல்லுகிறீர்கள்!'' என்று சுதி இறங்கிப் போய் கேட்டார், சோமநாதன்.

''அதைத்தான் மாமா, சற்று உணர்ச்சிவசப்படாமல் கேளுங்கள் என்கிறேன். எப்படியோ மாமா, துணி முள்ளில் சிக்கிக் கொண்டுவிட்டது. துணி கிழியாமல் எடுத்தாக வேண்டும்.''

''அதுதான் எப்படி என்று கேட்கிறேன்.''

''அந்த செந்திலின் நிபந்தனையில் உள் மர்மம் இருக்கிறது மாமா. நம்மை சும்மா பயமுறுத்துவதுதான் அவனது நோக்கம்.''

''எப்படி நம்புவது?'' என்று சந்தேகப்பட்டார், அவனது நோக்கம்.

சங்கர் அடித்துப் பேசினான். ''எனக்குத் தெரியும் மாமா. அவனுக்கு இங்கே ஒருத்தி இருக்கிறாள். நம் அலுவலகத்துக்குக் கூட வருவாளே. அவள் அவனை லேசில் விடமாட்டாள். அவளை மீறி அவன் வால் ஆட்டவும் மாட்டான்... ''நாம் இதற்கு எப்படியும் சம்மதிக்க மாட்டோம் — அதை சாக்கிட்டுப் போலீசில் ஒப்படைத்து விடலாம்'' என்று நினைத்து இருக்கிறான், மற்றபடி சாந்தினிக்கு எந்த ஆபத்தும் இல்லை.''

தந்தை போட்டத் தூக்குக் குண்டில் இவ்வளவு நேரம் அதிர்ந்து நின்றாள் சாந்தினி. ஆனாலும், ''அதற்கு நிபந்தனை விதிப்பானேன்? சும்மாவே முடியாது போ என்று கூறி இருக்கலாமே'' என்றாள்.

சங்கர் அதற்கும் பதில் வைத்திருந்தான். ''அங்கே தான் நான் சொன்ன பெண்ணின் கண்ணீர் வேலை செய்து இருக்கிறது. உன் முகத்துக்கு நேராக மறுக்க அவனால் முடியவில்லை. சும்மா பூச்சாண்டி காட்டிப் பார்க்கிறான்.

''அப்படியும் இருக்குமோ?'' உரக்கவே யோசித்தார் சோமநாதன்.

''அப்படித்தான், மாமா'' திட்டவட்டமாக உறுதியாக அறுதியிட்டுக் கூறினான், சங்கர்.

சோமநாதன் அவன் பக்கம் சாய்ந்தார்.

சாந்தினி அனாதையாக நின்றாள்.

# 7

## புலிக்குகையில் புள்ளிமான்!

சங்கருடைய சக்கர வட்டமான பேச்சில் தந்தை தயங்கினார். அதைக் கண்ட சாந்தினி எதிர்த்துப் பேசினாள்.

''நீங்கள் கூறுவது சரியில்லை. செந்தில் கண்ணீருக்கு இளகுகிறவராகத் தெரியவில்லை'' என்றாள்.

''அப்படி நீ நினைக்கிறாய்! மனிதரை எடைபோடும் அளவுக்கு உனக்கு அனுபவம் போதாது சாந்தினி'' என்று அவளை அடக்கினான் சங்கர்.

பிறகு சோமநாதன் பக்கம் திரும்பினான். ''வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும் மாமா. அவன் நமக்குப் பூச்சாண்டி காட்ட ஒரு திட்டம் போட்டான். நாம் அதை வைத்தே அவனை மடக்குவோம். இப்போது சாந்தினியை அங்கே அனுப்பினோம் என்று வையுங்கள். அவன் என்ன செய்வான்? அவள் காதலி போடுகிற போடில் திணறித் திண்டாடிப் போகமாட்டானா? பிறகு தானாகவே இவளைத் திருப்பி அனுப்பி விடுவான். அவனது நிபந்தனையை ஏற்றுக் கொள்கிறோம் என்பதால் அவன் நம் மீது நடவடிக்கை எடுக்கவும் மாட்டான். நியாயமான காரணம் காட்டாமல் வாக்கு மாறுகிறவன் அவன் அல்ல. அவனது கவனம் அங்கே இருக்கும்போது நாம் இங்கே இரகசியமாக வேறு வேலை



செய்வோம். கொஞ்சம் பணம் தயார் செய்து செந்திலின் ஆபீஸ் பையனை வசப்படுத்துவோம். அவன் மூலம் நம் மைக் குற்றவாளிகள் ஆக்கும் தடயங்களை அகற்றிவிடு வோம்.''

''இவ்வளவு சாமர்த்தியசாலிகள் ஒப்புதல் கடிதங்கள் ஏன் எழுதிக் கொடுக்க வேண்டும்?'' என்று எரிச்சலுடன் குறுக்கே பேசினாள் சாந்தினி.

''எழுதாவிட்டால் அந்த இடத்திலேயே போலீசை வரவ மைக்கப் போவதாக அவர் ஒரு நிலையாக நின்றார் அம்மா, வேறு வழி யோசிக்கக்கூட நேரம் இல்லை'' என்றார் சோமநாதன்.

''தடயங்களைக் கொண்டு வந்துவிட்டால் நாமாகவே சாந்தினியை அழைத்து வந்துவிடலாம்'' என்று விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தான் சங்கர்.

''அதை இப்போதே செய்தால் என்ன? சாந்தினியை அனுப்பத் தேவை இல்லையே'' என்றார், தந்தை.

''மாமா, சாந்தினியைப் பற்றிய பொறுப்பு எனக்கும் இருக்கிறது, என்பதை மறந்து பேசுகிறீர்களே. பணம் ஏற் பாடு செய்ய ஆபீஸ் பையனை நம் வசப்படுத்த எல்லாவற் றுக்கும் அவகாசம் வேண்டாமா? அவன் கெடு ஆறு மணிக்கு முடிந்து விடுகிறதே. அதனால்தான் இப்போதைக்கு அவனது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவாவது சாந்தினியை அனுப்ப வேண்டும் என்கிறேன்.''

''மாப்பிள்ளை செல்லுவதும் சரியாகத்தான் தெரிகிறது'' என்றார் சோமநாதன்.

சாந்தினிக்கு தூக்கி வாரிப்போட்டது, அப்பா, சங்கர் பக்கம் ஒரேயடியாகச் சாய்ந்து விட்டாரே.

''என்னப்பா, நீங்களும் இப்படிப் பேசுகிறீர்களே! இவர் சொல்வது எல்லாம் வெறும் ஊகம் தானே? ஊகம் தப்பாகிப் போனால் என் கதி என்ன? ஒரு நாளா இரண்டு நாளா?

ஆறுமாதம், அப்பா, அவ்வளவு நாள் என்னால் சமாளிக்க முடியுமா? வேறு ஆதரவு ஒன்றும் இல்லாமல் அவர் வீட்டில் நான் கைதி போல இருக்க வேண்டும், அப்பா. அப்போது எனக்கு ஏதேனும் நேர்ந்தால்... அப்பா பிறகு என்னப்பா செய்ய முடியும்? யோசிக்காமல் ''ஆமாம்'' போடுகிறீர்களே '' என்று படபடத்தாள். பேசுமுன் கண்ணீர் சரம் சரமாய் கண்களில் இறங்கியது.

''அதற்குள் கண்ணீர் விடுகிறாயே உன் மான அவமானம் எனது அல்லவா? பாதுகாப்பு இல்லாமல் உன்னை அங்கே விட்டுவிடுவேனா? இதோ பார்த்தாயா?'' என்று சங்கர் ''பாண்ட்'' பைக்குள் கையை விட்டு ஒரு சாவி வளையத்தை எடுத்தான். சாவிகளோடு அதில் மடக்குக் கத்தியும் இருந்தது. அதைத் தனியே கழற்றி எடுத்தான். கத்தியை விரித்துக் காட்டினான். பளபளவென்று ஒரு விரல் நீளத்தில் கத்தி மிகவும் கூர்மையாக இருந்தது.

''தனியாக வசிப்பதால் எப்போதும் இதை வைத்திருப் பேன். என் உடமைகளுக்குப் பாதுகாப்பாக வைத்திருந்தேன். இனி உன் பாதுகாப்புக்கு பயன்படட்டும். இதை வைத்துக் கொள். இரவு பகல் என்று இல்லை. கணமும் இணை பிரியாமல் கையோடு வைத்துக் கொள். எப்போதேனும் அந்தப் பயல் அத்துமீற முயன்றால், பயன்படுத்து. அவன் உடல் பால்பழத்தில் வளர்ந்து பஞ்சு மெத்தையில் உருண்டு அதைவிட மிருதுவாக இருக்கும். கத்தியைக் கண்டாலே வலிக்கும்.

மேலே அணிந்திருந்த சட்டைக்கும் மீறிக் கொண்டு தெரிந்த செந்திலின் வலுமிக்க தசைகள் சாந்தினிக்கு நினைவு, வந்தன. அவன் மேனியா பஞ்சினும் மென்மை என்றான் இவன்!

''இந்தா'' என்று கத்தியை நீட்டினான் சங்கர்.

சாந்தினி மரமாக நின்றாள்.



''வாங்கிக் கொள் சாந்தினியம்மா'' என்றார் சோமநா தன். எப்படியும் அனுப்பி விடுவார்கள் போல இருக்கிறதே என்று சாந்தினி கலங்கினாள். அப்பா நான் நல்லபடியாகவே திரும்பி வந்தாலும் என்னை யார் நம்புவார்கள்? ஆனானப் பட்ட சீதாதேவியைக்கூட சந்தேகத்தோடு பார்த்தார்களே. காட்டுக்கு விரட்டினார்களே என் கதி என்ன ஆகும்?''

''நீ என்னை மறந்து பேசுகிறாயே சாந்தினி, நான் அனுப்புகிறேன்; நானே தப்பாக நினைப்பேனா? அப்படியே ஏதாவது தவறு நடந்தாலும் நான் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டேன் நம்பு'' என்றான் சங்கர் மிகவும் பெருந் தன்மையுள்ளவன் போல.

''தவறு நடந்துவிட்டால் பிறகு நான் உயிரோடு இருப் பேன் என்று நினைத்தீர்களா?'' என்று சீறினாள் சாந்தினி.

''நான்தான் நடக்காது என்கிறேனே. இன்னமும் நீ தயங்கலாமா? அப்பா கயிற்றில் தொங்கினால் உன்னால் தாளமுடியுமா'' என்று சங்கர் உருக்கமாகக் கேட்டான்.

சாந்தினியால் அதற்கு மேல் மறுக்க முடியவில்லை.

அவள் மறுத்தால் அவள் தந்தை சிறை செல்வது நிச்சயம். அதில் இருந்து மீள வேறு வழியே இல்லைதான். ஆனால், அவளுக்கு செந்திலிடம் ஏதோ ஓர் அச்சம் பிறந்திருந் தது. அவன் எப்படிப்பட்டவனோ? ஏற்கனவே அவன் அறை யில் ஒரு பெண்ணை சாந்தினி பார்த்தாளே. அவன் பெண் பித்து உடையவனாக இருந்தால், என்ன செய்வது தன்னந்தனி யாக அவனிடம் மாட்டிக் கொள்வது விவேகம் இல்லையே.

மறுத்தாலும் தொல்லை. ஒப்புக் கொள்ளவும் பயம். இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள். பிறகு ''சங்க டங்கள் எதிர்ப்படும்போது சமாளிக்கும் வழியைப் பார்க்க லாம். இப்போதைக்கு அப்பா மீள இதுதான் வழி'' என்று தேறினாள்.

மடமடவென்று சாந்தினிக்குத் தேவையான பொருட்கள் எல்லாம் பெட்டியினுள் அடக்கம் ஆயின.

வாடகைக் கார் வந்தது.

கிளம்பும்போது மீண்டும் அழுதாள் சாந்தினி.

அவளைப் பார்த்து சோமநாதனும் கண்கலங்கினார்.

சங்கர் பொறுமை இழந்தான். ''அடடா, மீண்டும் பார்க்கப் போவதே இல்லை போலக் கலங்குகிறீர்களே அப்படித் தொல்லையென்றால் வந்துவிட்டுப் போகிறாள்'' என்று சிடுசிடுத்தான்.

வாடகைக் காரில் சங்கரும் கூடவே வந்தான். வழியெல் லாம் அறிவுரைதான். ''அவன் குத்தலாகப் பேசினால், பொறுத்துக் கொள். சரளமாகப் பழகு. ஒரு வேளை அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் லெட்ஜர்கள் எல்லாவற்றையும் அவன் வீட்டிற்கே கொண்டு வந்திருக்கலாம். வாய்ப்புக் கிடைத்தால் அவற்றைக் கைப்பற்றிக் கொள்.''

''திருடு'' என்று சொல்லாமல் சொல்கிறானாக்கும் சாந் தினி முகம் சுழித்தாள்.

''அதற்கு வேறு வழி செய்வதாகச் சொன்னீர்களே'' என்றாள், சற்று வெறுப்புடன். ''எனக்கு இதெல்லாம் வராது. நீங்களே...''

''அதற்கெல்லாம் பணம் வேண்டுமே. உன் நகைகளை விற்று அதன் பிறகு பார்க்க வேண்டும். அதற்கு முன் நீயும் முயற்சி செய். உன்னால் முடிந்தால் செலவு மிச்சம். இதோ பார் சாந்தினி, நீ இந்தக் காலத்துப் பெண், உனக்குக் கற்றுத் தர வேண்டியது இல்லை...''

''இந்தக் காலத்துப் பெண்'' கற்றுத் தர வேண்டாம்'' என்று அடிக்கடி சொல்லுகிறீர்களே. அதற்கு என்ன அர்த்தம்? நான் என்னவெல்லாம் தான் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்கிறீர்கள்?'' என்று எரிச்சலுடன் கேட்டாள் சாந்தினி.

இந்த நேரடிக் கேள்வியில் சங்கர் ஒரு வினாடி தடுமாறிப் போனான். அவளை யோசனையோடு பார்த்தான். கெஞ்



சியோ மிஞ்சியோ காரியத்தைச் சாதிக்கச் சொல்லுகிறேன் அவ்வளவுதான்'' என்றான்.

''அவ்வளவுதானே, கொஞ்சவும் சொல்லவில்லையே'' என்றாள் அவள், கசப்பும் வெறுப்புமாக.

சங்கர் அவளுக்கு பதில் சொல்லவில்லை. டிரைவரி டம் நிறுத்தும்படி கூறினான். கார் நின்றதும் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான், கையை நீட்டிக் காண்பித்தான்''. அதோ அந்த வீடு இங்கிருந்து ஆறாவது வலது பக்கம், பச்சை நிறம் அடித்து இருக்கிறது அல்லவா, அதுதான். சாமர்த்திய மாக நடந்து கொள்.''

வினாடிக்குள் சாந்தினிக்கு நெஞ்சு பதைத்து விட்டது. ''வேண்டாம், நானும் திரும்பி விடுகிறேன்'' என்று கெஞ்சி னாள்.

சங்கர், காரின் கதவை அறைந்து சாத்தினான். ''விடிய விடிய ராமாயணம் கேட்டு விட்டு சீதைக்கு ராமன் சித்தப்பா என்ற கதையாக முடிக்கிறாயா? பைத்தியக் காரத்தனமாக உளறாதே, சொல்லித் தந்தபடி நடந்து கொள்'' என்றான் அதட்டலாக.

சாந்தினி பதிலே கூறாமல் பேசாமல் இருந்தாள்.

சங்கருடைய புருவம் நெரிந்தது. ''அம்மா வீம்பு பிடித்து உள்ளதையும் கெடுத்து விடாதே'' என்றான் கடுமையான குரலில்.

சாந்தினி அதற்கும் பதில் கூறவில்லை.

காரைவிடச் சொல்லிவிட்டு ஏதோ கோபத்துடன் முணு முணுத்தபடி சங்கர் நடக்கலானான்.

சங்கர் குறிப்பிட்ட வீட்டை அடைந்து, கார் நின்றது.

கார் நிற்கவும், ஒருபெண் கேட்டைத் திறந்தாள்.

உள்ளே சென்றதும், ஓர் ஆள் கார் கதவைத் திறந்து விட்டான்.

மீட்டரைப் பார்க்க சாந்தினி எண்ணும் போதே அந்த ஆள் டிரைவரிடம் பணத்தைக் கொடுத்தான்.

அவளது சாமான்களை எடுத்துக் கொண்டு, ''வாங்கம்மா'' என்று அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

சாந்தினியின் வியப்பை அவன் கண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

எதிரில் இன்னொருவன் வந்தான். ''நீங்கள் வந்ததும் அய்யா மேலே அழைத்து வரச் சொன்னார்'' என்று கூட்டிச் சென்றான்.

ஆங்காங்கே வேலையாட்கள் நிற்பதைக் கண்டதும், சாந்தினிக்குக் கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று. வெள்ளத் தோடு செல்லும்போது ஒரு கட்டையைக் கண்டாலும் பெருந் துணைதானே?

அவளை அழைத்துச் சென்ற பணியாள் மாடி ஏறிச் சென்று ஓர் அறையின் கதவைத் தட்டினான். பிறகு கதவைத் திறந்து ''போங்கம்மா'' என்றான்.

அவள் தயக்கத்துடன் உள்ளே அடியெடுத்து வைத்ததும் மீண்டும் கதவைச் சாத்திக் கொண்டு போய்விட்டான்.

''துணிந்து புலிக் குகைக்குள் புள்ளிமான் நுழைந்து இருப்பதாகத் தெரிகிறது. புலியின் வணக்கங்கள். வருக! புள்ளிமானே வருக!'' என்று செந்திலின் கேலிக்குரல் மிக அருகில் கேட்டது.

கதவு அருகிலேயே காத்து நின்றானோ?

நெஞ்சு படபடக்க மருண்ட விழிகளால் சாந்தினி அவனை நிமிர்ந்து நோக்கினாள்!

# 8

## கதவைத் தட்டிய கை!

கதவைத் திறந்து கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட வேண்டும் போல சாந்தினியின் நெஞ்சு துடிதுடித்தது. எங்கே ஓடுவது? மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு அசையாமல் நின்றாள். திடீர் என்று ஒன்று மனதில் நெருடியது.

''நான் கட்டாயம் வருவேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினாள். தன்னை நிரம்பவும் மலிவாக நினைத்துக் கொண்டானோ என்று இருந்தது, அவளுக்கு.

நீ வருவாய் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும், உன்னைப் பற்றி சரியாக தெரியாவிட்டாலும் சங்கர் — சோமநாதனைப் பற்றி நன்றாக அறிந்து வைத்து இருக்கிறேனே'' என்றான், கர்வத்துடன் அவன்.

''உண்மைதானே. அதிலும் சங்கரைப் பற்றி மட்டும் தெரிந்தால் கூடப் போதுமே'' என்று மனதினுள் கசந்தாள், சாந்தினி.

''நிற்பானேன்? வா, உட்கார்ந்து பேசலாம்'' என்று அங்கே கிடந்த, பெரிய சோபாவை நோக்கி செந்தில் நடந்தான்.

அவன் அருகிலேயே அவள் அமர்வாள் என்று எதிர் பார்ப்பவன் போல் இடம்விட்டு ஒரு புறமாக அதில் அமர்ந்தான்.

கால்மேல் காலைப் போட்டுக் கொண்டு கைகளை விரித்து சோபா மீது வைத்துக் கொண்டு அவளைப் பார்த்தான். புருவங்களை உயர்த்தினான்.

''ஏன்? நின்று கொண்டே இருக்கப் போகிறாயா? பகீரதன் போல ஏதாவது தவமா?'' என்றான், கிண்டலாக.

''நான் ஒன்று சொல்ல வேண்டும்'' என்றாள் சாந்தினி. மெல்லிய, ஆனால், தெளிவான குரலில்.

உட்கார்ந்து கொண்டு சொல்லலாம்.

''இல்லை, நான் முதலில் சொல்லி விடுகிறேன். நான் உங்களை கவுரமானவர், மனிதத்தன்மை உள்ளவர் என்று எண்ணித்தான் இங்கே வந்து இருக்கிறேன்'' என்றாள், தரையைப் பார்த்தபடி.

''அச்சச்சோ. மீண்டும் உன் எண்ணம் தப்பாகிப் போயிற்றே. ஆமாம், யார் என்னைப் பற்றி இப்படித் தப்பும் தவறுமாக உன்னிடம் சொன்னது?'' என்று விசாரித்தான், அவன்.

சாந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டாள். இவன் என்ன இப்படிப் பேசுகிறானே...?

''நீங்கள் என்னை கவுரவமாக நடத்துவீர்கள் என்று நம்பித்தான் வந்தேன்'' என்றாள் அழாக்குறையாக.

''அய்யோ பாவம்'' என்று செந்தில், பரிதாபப்பட்டான்? ''உன் நம்பிக்கையும் பொய்த்துப் போயிற்று அல்லவா, ச்சுச்சு. ஆமாம் பெண்ணே, என்னை மோசம் செய்தவனுடைய மகள் நீ. உன்னை நான் ஏன் கவுரவமாக நடத்த வேண்டும்?'' என்று கேள்வி போட்டான்.

''ஒருவர் தவறு செய்தால் எல்லோரும் செய்ய வேண்டுமா? பதிலுக்குப் பதில் என்று செய்து கொண்டே இருந்தால் முடிவு ஏது? ஒருவர் பொறுக்கக் கூடாதா?''

''முதலில் ஒரு திருத்தம். இங்கு நடந்தது அறியாமல் செய்த தவறு அல்ல. தெரியாது செய்த தவறு அல்ல, தெரிந்தே செய்த தப்பு — குற்றம், இனி உன் கேள்விக்கு வருவோம். அதையே, இப்படி மாற்றிப் பார். ஒருவன்



வேண்டும் என்று தப்பு செய்கிறான். அவனை ஒன்றும் செய்யாமல் சும்மா விடுவதா? அப்படி விட்டுவிட்டால் மீண்டும் மீண்டும் தப்பு செய்யும் தூண்டுதல் அவனுக்கு உண்டாகாதா? அதைத் தடுப்பதற்காகவாவது அவனுக்கு ஒரு தண்டனை கொடுக்க வேண்டாமா?''

சோபாவில் வசதியாகச் சாய்ந்து கொண்டு அவன் ஆணித்தரமாகக் கேட்டு வைத்தான்.

''ஆனால், அவர் செய்த தப்புக்கு அவருடைய பிள்ளைகள் என்ன செய்வார்கள்? பிள்ளைகளைத் தண்டிப்பது, பழி வாங்குவது எல்லாம் எப்படி நியாயம் ஆகும்?''

மேலே பேச முடியாமல் சாந்தினியின் இதழ்கள் துடித்தன. மூக்கு விரிந்தது. கண் ஓரம் கரித்தது. இந்த அகம்பாவம் பிடித்தவன் முன்னால் அழுகை வேறு வந்து அவமானப்படுத்துமா?

''மாதா பிதா பாவம் மக்களுக்கு என்று நீ கேட்டது இல்லையா? பெற்றவர்கள் சொத்து சேர்த்தால் மட்டும் அனுபவிக்க பிள்ளைகள் ஓடி வருவது இல்லையா? அதைப் போலத் தப்பு செய்தால் தண்டனையும் அவர் பெற்ற மக்களுக்குத்தான்'' என்று தீர்ப்புச் சொல்லிவிட்டு, ''பேச்சு முடிந்தது'' என்பதுபோல் எழுந்தான் செந்தில்.

அதற்கு மேல் சாந்தினியால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை. மறுபுறம் திரும்பினாள். கைகளில் முகத்தைப் புதைத்த வண்ணம் ஓசையின்றி விசும்பினாள்.

அவளுடைய தோல் விரிவதையும் உடல் விம்மலில் குலுங்குவதையும் செந்தில் சற்று நேரம் பேசாமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

பிறகு கேட்டான், ''நீ மதியம் சாப்பிட்டாயா?''

''இல்லை'' என்பது சாந்தினிக்கு இப்போதுதான் நினைவு வந்தது. அவள் மட்டுமா? அப்பாகூடப் பசியாற வில்லையே. சிலையாக நின்றாள்.

''பசியைப் போல ஒருவனின் தைரியத்தை அழிக்கும் சக்தி வேறு ஒன்றுமே இல்லை. கண்ணைத் துடைத்துக் கொண்டு வா. நாம் இருவரும் சேர்ந்து உணவு அருந்தலாம்'' என்று அவளை அழைத்தான்.

''விருப்பம் இல்லை'' என்பது போலத் தலையை அசைத்தாள், அவள்.

''சொல்லுகிற வேலையைச் செய்வதாக ஒப்பி இருக்கிறாயே. இப்போது நான் சொல்லுகிற வேலை இதுதான். சொன்னபடி செய். வா'' என்றான். செந்தில், சற்றே அதட்டலாக.

அதற்குமேல் சாந்தினி மறுக்கவில்லை. கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துவிட்டு அவனைப் பின் தொடர்ந்தாள்.

இருவரும் சாப்பாட்டு அறையை அடைந்தனர். அந்த அறையும்கூட அவளைப் பயமுறுத்துவது போல் பளபளத்தது. மேசை மீதிருந்த தட்டில் பரிமாறி இருந்த உணவைக் கண்ட பிறகு சாந்தினிக்குப் பசி தெரிந்தது. கொஞ்சம் கொரித்தாள். ஏதோ தோன்றவும் நிமிர்ந்தாள்.

செந்திலின் பார்வை அவள் மீதே பதிந்து இருப்பதையும், அவன் விழிகள் பளபளப்பதையும் கண்டாள். அதன் பிறகு உணவு செல்லவில்லை. கையை உதறிக் கொண்டு எழுந்தாள்.

கை கழுவிக் கொண்டு வரும்போது செந்தில் சொன்னான்: ''மிகவும் சோர்ந்து போய் இருக்கிறாய். போய்ப் படுத்துக் கொள். மாடியில் மூன்றாவது அறை உனக்கு... நீயே போய்க் கொள்வாயா?... அல்லது... வழிகாட்ட வரட்டுமா?'' என்றான் நமுட்டுச் சிரிப்போடு.

''இல்லை இல்லை, நீங்கள் சிரமப்பட வேண்டாம். நானே போய்க் கொள்ளுவேன்'' என்று அவசரமாக மறுத்தாள், சாந்தினி.



அவன் வாய்விட்டுச் சிரிக்கலானான். அவனது சிரிப்பே தன்னைத் துரத்துவதுபோல வேகமாக நடந்தாள், சாந்தினி.

''கொஞ்சம் நில். ''குட் நைட்'' சொல்லாமல் ஓடுகிறாயே'' என்றான் செந்தில் சிரிப்புடன்.

''குட்நைட்'' என்று முணுமுணுத்தாள் சாந்தினி. பிறகு தப்பித்தேன் பிழைத்தேன் என்று ஓடித் தனக்குத் தரப்பட்டு இருந்த அறையை அடைந்தாள்.

கதவைச் சாத்தி உட்புறமாகத் தாழிட்டாள். ''அம்மாடி'' என்று பெருமூச்சு விட்டாள். கத்தியைத் தலையணைக்கு அடியில் வைத்தாள். வழக்கம்போல ''இறைவணக்கம்'' கூறிவிட்டுப் படுக்கையில் சாய்ந்தாள்.

உடலும் மனமும்; இதுவரை அறியாவண்ணம் களைத்திருந்தன. நுரை ரப்பர் மெத்தையிட்ட படுக்கை, அன்னையின் மடிபோல அவளைத் தாலாட்டியது. ஆயினும் தூக்கம் எங்கோ நழுவி ஓடியது.

ஏனோ தெரியவில்லை. செந்தில் சும்மாதான் தன்னை மிரட்டுகிறான் என்று அவளுக்குத் தோன்றியது. அவன் பாம்பு அல்ல. வெறும் பழுதுதான்? அவளுக்கு இருந்த நிலையில் அவனைப் புலியாக எண்ணிவிட்டாள் என்றும் நினைத்தாள்.

ஆனால், அவளது நினைப்பைப் பொய்ப்பிப்பது போலக் கதவைத் தட்டும் ஒலி கேட்டது.

ஒருகணம் கட்டிலோடு உறைந்தவள் போலச் சாந்தினி அசையாமல் கிடந்தாள்.

அவன் விடுவதாகத் தெரியவில்லை. கதவு அழுத்தமாகத் தட்டப்பட்டது. கூடவே, ''கதவைத் திற'' என்ற அதிகாரக் குரலும் கேட்டது.

சாந்தினி மெல்ல எழுந்தாள். கத்தியைப் பிரித்துக் கையில் மறைவாக வைத்துக் கொண்டாள். கதவைத் திறந்தாள்.

வெளியே செந்தில் நின்றான். ''உன் தண்ணீர் கூஜாவை உள்ளே வைக்க மறுந்துவிட்டான் — மடையன்'' என்று உரைத்தான். ''இந்தா'' என்று நீர்க்குடுவையை நீட்டினான்.

சாந்தினி கதவைவிட்டு விலகாமலே அதை இடக்கையால் வாங்கினாள். அருகில் இருந்த ''டீப்பாய்'' மேல் வைத்துவிட்டு ''நன்றி'' என்று கதவை மூட முயன்றாள்.

அதற்கு இடம் கொடாமல் அவன் கதவுக்கும் அதன் நிலைக்கும் இடையே வந்தான். ''என்ன விரட்டுகிறாயே'' என்று கேலி செய்தபடி உள்ளேயே வந்தான். ''அட, அந்தக் கையில் என்ன?'' என்று வியப்புடன் கேட்டான்.

கையை நன்றாகப் பின்னே மறைத்தபடி சாந்தினி பின்னே நகர்ந்தாள். இல்லை... நகர முயன்றாள். அதற்குள் செந்திலின் கரம் மின்னலைப் போல நீண்டு அவள் கையைப் பற்றியது. பற்றிய கரத்தை முன்னே இழுத்துப் பார்த்துவிட்டு ''ஓகோ'' என்று அட்டகாசமாகச் சிரித்தான் அவன்.

''பலே. பெரிய துணையுடன் தான் வந்து இருக்கிறாய். அம்மாடியோவ்! எனக்கு மிகவும் பயமாக இருக்கிறதே'' என்று மேலும் எள்ளி நகையாடினான்.

சாந்தினி அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''நானே உனக்குத் துணையாக இருக்கப் போகிறேன். அப்படி இருக்க இதெல்லாம் எதற்கு?'' என்று அவன் வினவினான்.

வினாடிக்குள் வெகுலாவகமாக அவள் கையில் இருந்த கத்தியைப் பறித்தான். பறித்த கையாலேயே அதை மடக்கிப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

சாந்தினி பீதியுடன் கையைப் பார்த்தாள். அவன் கைப்பிடி நெருப்பாய் எரிந்தது. கையை உதறி விடுதலை பெற முயன்றாள். அவளது முயற்சியைக் கவனிக்காதவன் போல



அவன் நிதானமாகக் கேட்டான். ''நீ என்ன எதிர்பார்த்து இங்கே வந்தாய்?''

பாம்புகளில் ஒருவகை உண்டாம். தன் இரையைக் கண்டால் கண்ணாலேயே கட்டுப்படுத்தி விடுமாம். வசியத்துக்குக் கட்டுப்பட்டு அந்தச் சிறு பிராணி செயல் இழந்து நிற்குமாம், பாம்பு அதை வெகு நிதானமாக விழுங்கி வைக்குமாம்.

செந்திலின் கண்களில் இருந்து தன் விழிகளைப் பெயர்க்க முடியாமல் நின்றபோது சாந்தினிக்கு இந்த நினைவு வந்தது, ''எந்த வேலையானாலும் செய்யலாம் என்றுதான் வந்தேன்'' என்றாள் கனவில் பேசுவது போல.

''எந்த வேலையும் என்றால்? எனக்குப் பொருள் விளங்கவில்லை.''

''சாந்தினிக்கு கொஞ்சம் உணர்ச்சி வந்தது, ''வீடு கூட்டும் வேலையானாலும் செய்யத் தயார் என்று அர்த்தம்'' என்றாள்.

''சேச்சேச்சே'' விறைத்து நின்ற அவள் விரல்களை மெல்லப் பிரித்தான், செந்தில். உள்ளங்கையை மென்மையாக வருடினான்! மிருதுவான மலர்க்கரம். இந்த மென் கரத்தால் துடைப்பதையும் கத்தியையுமா தொடுவது? இந்த பூ விரல்களால் என் கன்னத்தில் வருடினால்...''

அவன் ரசனையோடு சொல்லிக் கொண்டு இருந்த போதே சாந்தினி தன் மறுகையை உயர்த்தி அவனைப் பளீர் என அறைந்து விட்டாள்.

அறை விழுந்த மறுகணம் அவன் உடல் நாண் அறுந்த வில்லாய் நிமிர்ந்தது.

கண்களில் மின்னலின் ஒளி வீசியது.

''ஏய்'' என்ற உறுமலுடன் அவளுடைய இரு கரங்களையும் பிடித்துப் பின்புறமாக வளைத்தான்.

திமிற முடியாமல் துடித்தவளை அவனுடைய மறுகரம் அசைய முடியாமல் நெருங்கியது.

''என்னையா... நீ அடித்தாய்? உன்னை... உன்னை'' என்று ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டு அவளை வளைத்தான்.

# 9

# குறுக்கே வந்த குமரி!

மிகுந்த சினத்துடன் செந்தில் சாந்தினியைக் குனிந்து பார்த்தான். பீதியுடன் மிரண்ட விழிகளைப் பார்த்தான், அச்சத்தால் துடித்த இதழ்களைப் பார்த்தான். பயத்துடன் நடுங்கிய உடலைப் பார்த்தான்.

என்ன நினைத்தானோ? சட்டென அவளைத் தன் இரும்பு பிடியில் இருந்து விடுவித்தான். பையில் இருந்த கத்தியை எடுத்துப் படுக்கையில் வீசினான். ''படுத்துத் தூங்கு'' என்றதுடன் அந்த அறையில் இருந்து மடமட வென்று வெளியேறிவிட்டான்.

மறுநாள் வழக்கம் போலவே சாந்தினி வைகறைப் போதில் விழித்துக் கொண்டாள். மூடிய விழிகளைத் திறவா மல் பத்துத்தரம் ''முருகன் துணை'' சொல்லிவிட்டு எழுந் தாள். சிலகணம் திகைத்த பிறகுதான் இடம் பொருள் புரிந்தது. அவளுக்கு நேற்று அவ்வளவு நடந்தபின் அடித்துப் போட்டதுபோல் தூங்கி இருக்கிறேனே என்று தன்னையே வியந்தாள். கூடவே தந்தையின் நினைவு வந்து, ''பாவம் அவர் கொஞ்ச நேரமாவது உறங்கினாரோ என்னவோ'' என்று பரிதாபப்பட்டாள். சற்றுநேரம் அதே நினைவில் தோய்த்தாள் பிறகு ஒரு பெருமூச்சுடன் எழுந்தாள்.



அந்த அறையோடு இணைந்து குளியல் அறையும் இருந்தது. பல் தேய்த்துக் குளித்து முடித்தாள். தட்டில் ஒரு கோப்பை காபி வந்தது குடித்தாள். ''இனி என்ன?'' என்று எண்ணமிட்டபடி அமர்ந்தாள்.

''அம்மா'' என்று யாரோ பணிவுடன் அழைத்த குரல் கேட்டது. கதவைத் திறந்துப் பார்த்தாள். முன்தினம் இவ ளைச் செந்திலின் அறைக்கு அழைத்துச் சென்றவன்.

''உங்களுக்கு டெலிபோன் வந்து இருக்கிறது'' என்றான் மரியாதையுடன்.

சாந்தினி திணறிப் போனாள். அவளுக்கு அங்கே டெலி போன் செய்வது யாராக இருக்கக் கூடும்?

அப்பா அல்லது சங்கர்தான்.

இவர்கள் தொடர்பே ஆறுமாதம் கூடாது என்று செந்தில் கண்டிப்பாகக் கூறியிருந்தானே. இப்போது என்ன சொல் வான்? எப்படியும் அவன் முன்பு தானே பேசவேண்டி இருக்கும். கீழே அவனது அலுவலக அறையில்தானே டெலி போன் இருந்தது.

''இப்படி வாருங்கள் அம்மா'' என்று அவன் முன்னே நடந்தான். ஒன்றும் தோன்றாமல் சாந்தினி அவனைப் பின் தொடர்ந்தாள். செந்திலுடைய அறைக்குள் செல்லாமல் வேறு ஓர் அறைக்குள் அவன் சென்றான். ''பேசுங்கள் அம்மா'' என்று அங்கேயும் இருந்த டெலிபோனைக் காட்டி விட்டு வெளியேறினான்.

கொஞ்சம் நிம்மதியுடன் சாந்தினி போனை எடுத்தாள். சங்கர்தான் பேசினான். அவன் பேச்சில் சாந்தினி அவசரமா கக் குறுக்கிட்டாள். ''சங்கர் நீங்கள் ஏன் போன் செய்கிறீர்கள்? எந்த வகையிலும் தொடர்பு கொள்வது இல்லை என்று ஒப்புக் கொண்டுவிட்டு இப்படிச் செய்யலாமா? செந்திலுக் குத் தெரிந்தால் என்ன ஆகும்? வைத்து விடுங்கள்.''

''அவனுக்குத் தெரியாது. ஒரு தோழி பேசுவதாகக் குரலை மாற்றிப் பேசி இருக்கிறேன். அந்த மடையனும் நம்பிவிட்டான். நேற்று...''

நீங்கள் பேசுவது சரியில்லை சங்கர். ஒன்றை ஒப்புக் கொண்டு விட்டு முதுக்குப் பின்னால் மாறு செய்யலாமா? நம் தப்புக்குத் தண்டனை இது என்று...''

''தண்டனை மண்ணாங்கட்டி. நிபந்தனையில் அவன் சொல்லும் வேலையைச் செய்வதாக ஒப்புக் கொண்டாயே அதன்படி அவன் படுக்கைக்கு வரச் சொன்னால் அதையும் செய்வாயா?'' என்று கோபத்துடன் சங்கர் கேட்டான்.

எவ்வளவு பச்சையாக அசிங்கமாகப் பேசுகிறான்? சாந்தினிக்கு ஆத்திரத்திலும் அவமானத்திலுமாகக் கண்ணீர் துளித்தது. ''அப்படி நடப்பதைவிட உயிரை...'' என்று சொல்லிக் கொண்டு இருந்தபோதே போன் தொடர்பு விட்டுப் போயிற்று. நல்லதாக போயிற்று என்று ரிசீவரைத் தாங்கியில் வைத்தாள் சாந்தினி.

சற்று நேரத்தில் செந்தில் அவளை அழைத்தான். ''சீக்கிரம் சாப்பிட வா. காலை உணவுக்குப் பின் நாம் வெளியூருக்குப் போகிறோம்'' என்றான்.

வெளியூரா? இதில் என்ன சூழ்ச்சி இருக்குமோ? ''வெளியூருக்கு நான் வரமாட்டேன்'' என்று மறுத்தாள்.

''நீயாக வராவிட்டால் உன்னைத் தூக்கி டிக்கியில் போட்டுப் பூட்டிக் கொண்டு போகிறேன் அவ்வளவு தான்'' என்றான் வெகு சாதாரணமாக.

சாந்தினி திடுக்கிட்டு, அவனைப் பார்த்தாள், இப்படிப் பேசுகிறவனிடம் என்ன சொல்லுவது; அவன் நினைத்ததே நடக்க வேண்டுமா? பிடித்தால் குரங்குப் பிடியா? அப்படித் தான் தெரிகிறது. அவனுடைய உதடுகளும் முகவாயும் அவன் பெரும் பிடிவாதக்காரன் என்றுதான் கூறுகின்றன.



''ச்சு என்ன செய்வது? இருபத்தி ஆறு ஆண்டாக நினைத்ததை நடத்தியே பழகிவிட்டேன். இனியா மாறப் போகிறேன்'' என்று வருந்துகிறவன் போல உரைத்தான் செந்தில்.

சாந்தினிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் மனதில் எண்ணியதை அவன் எப்படி அறிந்தான்? ஏதாவது மந்திரம் தந்திரம் தெரியுமா, அவனுக்கு?

''நான் கிளம்புவதற்கு தயார் ஆகிறேன்'' என்று கூறி விட்டு அவசரமாக நகர்ந்தான்.

அவளைக் கேலி செய்வது போல் அவனது சிரிப்பொலி கேட்டது.

வெயில் ஏறுமுன்பே இருவரும் காரில் ஏறினர். செந்தில் தான் காரை ஓட்டினான். முதலில் அவனது நிறுவனத்துக்குச் சென்றான். அவளைக் காரில் காத்திருக்க வைத்துவிட்டு உள்ளே போனான். சற்று நேரத்தில் ஒரு சிறு பெட்டியுடன் திரும்பினான். மீண்டும் காரைச் செலுத்தலானான்.

நகரின் சந்தடி மிகுந்த சாலைகளில் கார் வழுக்கிக் கொண்டு விரைந்தது.

''ம்... உன் பெயர் என்னவென்று சொன்னாய்?''

சாலையைப் பார்த்துக் கொண்டு இருந்த சாந்தினி வியப்புடன் திரும்பினாள். அதற்குள்ளாகவா மறந்து விட்டான்! ''சாந்தினி'' என்றாள், திகைப்புடன்.

''பெயர் நன்றாகத்தான் இருக்கிறது. அப்பா வைத்த பெயரா அல்லது அம்மா வைத்ததா'' என்று பேச்சுக்கு இழுத்தான்.

''அம்மாதான் எப்போதும் மனதில் சாந்தியுடன் இருக்க வேண்டும் என்று வைத்தார்கள். அப்பாவுக்கு ''னி'' விகுதி பிடிக்கும். அதனால் ''சாந்தினி'' ஆகிவிட்டேன்'' என்றாள், புன்னகையோடு, உடனேயே முகம் வாடியது. அப்பா இப்

போது என்ன செய்கிறார்? அம்மா இருந்து இருந்தால் இந்தத் தொல்லை எல்லாம் ஏற்படாமல் போயிருக்குமோ? அடுத்த நிமிடம் என்ன ஆபத்து வருமோ?'' என்று பயந்து கொண்டு, அந்தரத்தில் கட்டிய கயிற்றின் மீது நடப்பதுபோல வினாடி களை எண்ணி எண்ணிக் கழிக்க நேர்ந்திராதோ! சாந்தினியின் நெஞ்சைப் பிளந்து கொண்டு ஒரு பெருமூச்சு வெளியேறியது.

''என்ன அவ்வளவு பெரிய நெடுமூச்சு?'' என்று செந்தில் குரல் கொடுக்கவும் அதிர்ச்சியுடன் திரும்பினாள். அவன் அவளை கவனித்துக் கொண்டா இருக்கிறான்?

''ஏன் அவ்வளவு திடுக்கிட வேண்டும்?'' என்று அடுத்த கேள்வி பிறந்தது.

''இ... இல்லை... என்னை கவனித்துக் கொ... கொண்டா இருக்கிறீர்கள் என்று நினைத்தேன்'' எண்ணியதை ஒளியாமல் சொன்னாள், அவள்.

''பின்னே? அதற்காகத்தானே அலுவலகத்தைக் கூடப் போட்டு விட்டு உன்னுடன் வந்து இருக்கிறேன்'' என்று கண் சிமிட்டினான் செந்தில்.

நெஞ்சு படபடப்புத் தொடங்கிவிட்டது அவளுக்கு. இப்போது அவன் உண்மை பேசுகிறானா? அல்லது அவளை மிரட்டுகிறானா? 'ஆண்டவா முருகா, நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

''உன் பெயர் சாந்தினி என்றாயே...'' அவன் மீண்டும் பேச்சைத் தொடங்கினான்.

''ஆமாம்''

''அது என்ன ''னி'' என்று ஒரு கொடுக்கு எனக்கு அது பிடிக்கவில்லை. நான் உன்னை ''சாந்தி'' என்று தான் செல்லமாக சுருக்கமாக அழைக்கப் போகிறேன்'' என்றான் செந்தில் முகத்தில் முறுவலோடு.



''எனக்கு அது பிடிக்கவில்லை'' என்றாள் அவள்.

''எது? அந்த ''னி'' தானே''

''நீங்கள் செல்ல... சுருக்கமாக அழைப்பது.''

''அப்படி என்றால் நீட்டி முழக்கியே அழைக்கட்டுமா?''

''சரி''

''சரி சாந்திக்கண்ணு'' என்றான் அவன் குறும்பாக.

''இப்படி எல்லாம் கூப்பிடாதீர்கள். எனக்கு அது பிடிக் காது'' என்றாள் சாந்தினி கோபத்துடன்.

''பிடிக்கிறது. பிடிக்கவில்லை என்றெல்லாம் சொல்லக் கூடிய நிலையில் நீ இல்லையே சாந்திக் கண்ணு'' என்று போலியாகப் பரிவு காட்டினான் அவன்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனம் ஆனாள்.

அப்போது இன்னொரு கார் செந்திலின் காரை இடிப்பது போல வந்து நின்றது. அதன் உள்ளிருந்து ''அத்தான்'' என்று ஒரு குரல் கீச்சிட்டது.

லேசான புருவச் சுளிப்புடன் செந்தில் காரை நிறுத்தி னான்.

அந்தக் குரலுக்கு உடைய நங்கை தன் காரில் இருந்து இறங்கி வந்தாள். ரத்தச் சிவப்பு நிறத்தில் அவளது அரை ஆடை (தோளில் இருந்து தொடைவரை மட்டும் மறைந்த ஆடை) பளபளத்தது. அன்று அலுவலகத்தில் செந்திலோடு இருந்த பெண்!

''நீங்கள் இறங்கவில்லையா?'' என்று கேட்டபடி செந்தி லின் பக்கத்து சன்னல் வழியே தலையை நீட்டினாள், அவள். செண்டின் மணமும் பவுடரின் மணமும் குப்பென மூக்கைத் துளைத்தன.

செந்தில் மூக்கைச் சுருக்கி முகத்தைச் சுளுக்கினான். ''இதோ பார் நளினி, பவுடரோ செண்டையோ தேவையான

அளவு மட்டும் போடு, வேளைக்கு ஒரு டப்பா பவுடரையும் ஒரு பாட்டில் சென்டையும் காலி பண்ணித்தான் ஆகவேண்டும் என்பது இல்லை. அப்பா, என் மூக்கு தாங்கமாட்டேன் என்கிறது. பக்கத்தில் வரமுடியவில்லை' என்றான் தலையைச் சாந்தினியின் பக்கம் சரித்தபடி.

''நாளை பவுடரே போடாமல் வருகிறேன். நீங்கள் என் அருகிலேயே இருப்பீர்களா?'' என்று கொஞ்சினாள், அவள். சாந்தினியின் கண்கள் அகன்றன. என்ன தைரியமாகப் பேசுகிறாள்?

''நீயாவது பவுடர் போடாமல் இருப்பதாவது. உலகமே தலைகீழாகி விடாதா?'' என்றான் செந்தில் கேலியாக.

இதற்குள் பத்து முறையேனும் சாந்தினியை முறைத்து இருப்பாள் நளினி. ஆனாலும் அப்போது தான் கவனிப்பவள் போல ''ஹாய் இது யார் அத்தான்? புது சினேகிதமா?'' என்று கிண்டல் போல காரியமாய்க் கேட்டாள்.

''அதெல்லாம் இல்லை. புதிய காரியதரிசி. அன்று அலுவலகத்தில் பார்த்தாயே'' என்றான் செந்தில் சற்று கடுமையான குரலில்.

நளினியும் சற்று சினத்துடன் சாந்தினியை முறைத்தாள். ''வணக்கம் அம்மா'' என்றால் வாய் முத்து உதிர்ந்து விடுமா? மரியாதை தெரியவில்லையே அலட்சியமாக உதட்டை முறுக்கினாள். ''ஓ... கூலிக்கு மாரடிக்கிற கூட்டத்தில் ஒருத்தியா? பா...வம்'' என்றாள் ஏளனமாக.

செந்திலின் முகம் கடுத்தது. ''எனக்கு நேரம் ஆகிறது நான் தோட்டம் வரை போக வேண்டும்'' என்றான் மொட்டையாக.

''அத்தான் நாளை நீச்சலுக்கு வருகிறீர்களா? நாம் இருவரும் மட்டும் நீந்தி...''

''முடியாது தாயே உன்னைப் போல உட்கார்ந்து சாப்பிடும் கூட்டமா? நான் உழைத்தாக வேண்டுமே'' என்று அவன் தோளைக் குலுக்கினான்.



நளினியின் முகம் மாறியது. ''இந்தக் கூலிக்காரிக்காக என்னை மட்டம் தட்டுகிறாரே'' என்று நினைத்தாள். மனதை மறைத்து, ''உங்களுக்கு எல்லாம் கேலிதான் போங்கள்'' என்று சிணுங்கினாள்.

''போக வேண்டியது தான். எனக்கு இனியும் நிற்க நேரம் இல்லை'' என்று காரைக் கிளப்பினான் செந்தில்.

''நாளை மறுநாளாவது வரவேண்டும்'' என்று நளினி செல்லம் கொண்டாடியது காற்றோடு போயிற்று.

கார் சென்று கொண்டு இருந்தது.

''தோட்டம் எங்கே இருக்கிறது?'' என்று மெல்லக் கேட்டாள், சாந்தினி.

''உனக்கு அது எதற்கு?'' என்று கடுமையான குரலில் திருப்பிக் கேட்டான் அவன்.

''பின்னே... அவர்களிடம் சொன்னீர்களே...''

''வேறு எப்படிச் சொல்லச் சொல்கிறாய்?'' என்றான் அவன் பழையபடியே.

சாந்தினி வாயடைத்துப் போனாள். செந்திலும் மேலே பேச முயற்சி செய்யவில்லை.

ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்குப்பின் கார் ஒரு சோலையின் உள்ளே புகுந்தது.

பல்வேறு கனி மரங்களின் சூழலில் அமைந்திருந்த ஓர் அழகிய வீட்டின் முன் நின்றது. சுற்றிலும் பார்த்த சாந்தினியின் கண்கள் மலர்ந்தன.

''உனக்குப் பிடிக்கிறதா?'' என்று கேட்டுக் கொண்டே இறங்கினான் அவன்.

''எவ்வளவு அழகான இடம்!'' என்றபடி அவளும் இறங்கினாள்.

''பரவாயில்லை. உனக்குப் பிடித்திருப்பது நல்லது. ஏன் என்றால் இங்கேதான் நாம் கொஞ்சநாள் குடித்தனம் நடத்தப் போறோம்'' என்றான் அவன் சாவதானமாக.

சாந்தினிக்கு தூக்கி வாரிப் போட்டது.

குடித்தனமா?

# 10

## கடுவன் பூனையா? கன்றுக் குட்டியா?

''சடன் பிரேக்'' போட்டது போல சாந்தினி நிற்கக் கண்டதும், செந்திலின் புருவங்கள் மேலேறின.

''என்ன நின்றுவிட்டாய், வா உள்ளே போகலாம்; உன் வீட்டைப் பார்க்க வேண்டாமா?'' என்றான் கண்களில் குறுஞ்சிரிப்புடன்.

''ஊகும், நான் வரமாட்டேன்'' என்று, பூச்சாண்டி என்றதும் அஞ்சும் சிறுபிள்ளை போல மறுத்தாள் சாந்தினி.

''இப்போது முரண்டுகிறாயே. இவ்வளவு தூரம் வந்த பிறகு'' என்றான் செந்தில்.

''இவ்வளவு தூரம் ஏன்?''

''என்ன செய்வது? அங்கே நீ கத்தி கித்தி கூச்சல் போட்டால் ஊர் கூடிவிடுமே இங்கே பார் எவ்வளவு இனிமையான தனிமை'' என்றான் உதட்டிலும் சிரிப்புப் பரவ.

''வரும்போது நீங்கள் இப்படிச் சொல்லவில்லையே'' என்றாள் சாந்தினி.

''எப்படிச் சொல்லவில்லை?'' என்று சீண்டினான் அவன்.



பதிலிறுக்காமல் அவனை ஆத்திரத்துடன் அவள் முறைத்தாள். அவன் சிரித்தான்.

''சரி, சாந்தி உள்ளே வராமல் வேறு என்ன செய்வதாக உத்தேசம். இங்கேயே சத்தியாகிரகமா? அல்லது வந்த வழியே — சுமார் அறுபது மைல்தான் இருக்கும் திரும்ப ஓடுவதாக முடிவா?'' என்று கிண்டலாக வினவினான்.

சாந்தினி திரும்பிப் பார்த்தாள். அடேயம்மா? எங்கே ஓடுவது? நடக்கிற காரியமா?

அவன் குரல் தொடர்ந்து ஒலித்தது.

''அப்படியே ஓடினால்தான் நான் விட்டு விடுவேனா? எவ்வளவு சிரமப்பட்டு உன்னைக் கொண்டு வந்து இருக்கிறேன். இப்போது கைநழுவ விடுவேனா?... என் நிபந்தனை நினைவு இருக்கிறதா சாந்திக் கண்ணே? நான் சொல்கிற வேலையைச் செய்ய வேண்டும். என் படுக்கைக்கு வரச் சொன்னால் கூட வரவேண்டும்''

சாந்தினிக்கு மூளையில் ஏதோ பொறி தட்டியது. ஆனால், அவன் சொல்லில் உண்டான நடுக்கம் அதை மறைத்தது. கைகால்கள் மெய்யாகவே உதறின.

அவன் பழுதை அல்ல, பாம்பேதான், முதலில் இருந்தே திட்டம் போட்டு வேலை செய்து இருக்கிறான். அவனேதான் சொன்னானே. தன்னை ஏமாற்றினால் பழிவாங்காமல் விட மாட்டேன் என்றானே, அப்பா, சங்கர் இருவரையும் சேர்ந்து பழிவாங்க, ஒரு குண்டில் இரண்டு பறவைகளை வீழ்த்த ஏற்பாடு செய்திருக்கிறான் அவர்களிடம் பணம் இல்லை. எனவே இந்த வழியில் அடிக்கிறான்.

அவன் கூறுவதும் மெய்தான் — அந்த வீடு சென்னையில் ஊருக்குள் இருந்தது. இரவு நடந்ததில் இருந்து அவள் மசியமாட்டாள் என்று கண்டிருப்பான். அங்கே விட்டுவிட்டு இங்கே இந்த நடுக்காட்டுக்குள் அழைத்து வந்திருக்கிறான். சுற்றிச் சுற்றி வெறும் மரமும் செடியும் தானே தெரிகிறது.

சற்றுமுன் அழகு என்று நினைத்தாளே - பாம்பைப் போல அழகு என்று எண்ணியிருக்க வேண்டும் - அல்லது செந்திலைப் போல என்று கற்பனை செய்திருக்க வேண்டும். ''காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடுமா?'' என்று நினைத்தாள்.

சாந்தினி நம்பிக்கை இழந்து தொய்ந்தாள். கால்கள் அல்லித் தண்டாய் துவண்டன. கண்கள் இருட்டிக் கொண்டு வந்த அந்த நேரத்தில் அவள் காதுகளில் அமுதம் பாய்ந்தது.

''கார் நின்ற சத்தம் கேட்டதே'' என்று ஓர் இனிய பெண் குரல் கேட்டது.

சிரமத்துடன் கண்களைத் திறந்து சத்தம் வந்த திக்கில் நோக்கினாள்.

நாற்பதில் இருந்து ஐம்பதுக்குள் இருக்கக் கூடிய வயது பொன்னிற முகம், மங்களமான தோற்றம். பாசமே உருவெடுத்த பார்வை. அவளைக் காப்பாற்றுவதற்காகக் கடவுளே பெண் உருக்கொண்டு வந்து விட்டாரோ!

''அம்மா, என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கூவியபடி பறந்து சென்று அவள் காலடியில் விழுந்தாள் சாந்தினி.

திகைப்புடன் அந்த அம்மாள் செந்திலைப் பார்த்தார். அவன் எதையோ ஆமோதிப்பதுபோலத் தலையசைத்தான். காலடியில் கிடந்த சாந்தினி இரண்டையுமே காணவில்லை.

''எழுந்திரம்மா. ஏன் என்ன ஆயிற்று? உனக்கு என்ன பயம்? என்னிடம் வந்துவிட்டாயே இனியும் பயப்படலாமா?'' என்று அந்த அம்மாள் அவளை அணைத்துத் தூக்கினார்.

மழையில் நனைந்த புறாபோல அவரை ஒட்டிக் கொண்டு சாந்தினி நின்றாள்.

''கையெல்லாம் சில்லிட்டுப் போயிற்றே என்னடா சொல்லி மிரட்டினாய்?'' என்று சாந்தினியின் கைகளை அன்போடு வருடினார் அந்தப் பெண்மணி.



''அடா'' வா? செந்திலையா? சாந்தினி ஆச்சரியமே உருவானாள்.

அவனும் அந்த ''அடா''வை இயல்பாக ஏற்றுக் கொண்டு பேசுகிறானே! பயந்தது போல பாவனை காட்டி, ''அய்யய்யோ அம்மா அநியாயமாய்ச் சொல்லுகிறீர்களே. நான் அவளை ஒன்றுமே சொல்லவில்லை'' என்றான்.

அம்மாவா? அப்படியானால் செந்தில் மீண்டும் சும்மா தான் அவளை மிரள வைத்திருக்கிறானா, பெண்டாள எண்ணம் கொண்டவன் பெற்றவர் இருக்கும் இடத்துக்கா அழைத்து வருவான்? இப்படியெல்லாம் ஏன் தான் மிரட்ட வேண்டுமோ என்று அவளுக்கு எரிச்சல் வந்தது.

''பின் ஏன் பயப்பட்டாளாம்?'' என்று மடக்கினார், தாய்.

செந்தில் சாந்தினியை ஓரக்கண்ணால் பார்த்தான். ''நீங்கள் வேண்டுமானால் அவளையே கேட்டுப் பாருங்களேன்'' என்றான், சிரிப்பை அடக்கிக் கொண்டு.

''என்னம்மா சொன்னான்? நீதான் சொல்லேன்'' என்றார் அன்னையும்.

அவனுடைய வெட்கம் கெட்ட பேச்சை அதை அவள் புரிந்து கொண்ட கண்ணறாவியை அவள் வாயால் எப்படிச் சொல்லுவாள்? செந்திலை நோக்கி சாந்தினி ஆத்திரத்துடன் விழித்துப் பார்த்தாள்.

''ஒன்றும் இல்லை அம்மா,'' என்றாள், மென்மையாக.

செந்தில் சத்தமாய் சிரித்தான். ''பாருங்கள் அம்மா அவளே சொல்லி விட்டாள் ஒன்றுமே இல்லை, என்று.''

''போடா. நீ ஏதோ சொல்லி...''

''அட என்னம்மா நீங்கள். எங்களுக்குள் ஆயிரம் இருக்கும். அதை எல்லாம் நீங்கள் கிண்டலாமா?'' என்று சாந்தினியைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அவள் முகம் சிவந்தது. ''அதெல்லாம் இல்லை அம்மா'' என்று மறுத்தாள்.

''எதெல்லாம் இல்லை?'' என்று அவன் புன்னகையுடன் கேட்டான்.

''அந்த ஆயிரம் கியிரம் எல்லாம் ஒன்றும் இல்லை என்றேன்'' என்று சாந்தினி முடிக்குமுன் ''அப்படியானால் அம்மா கேட்டதற்கு உண்டான பதிலைச் சொல்வது தானே''; என்று சவால் விட்டான், அவன்.

இப்போது சாந்தினி மீண்டும் பேச்சிழந்து அவனை முறைத்தாள். அவன் அசைந்தால் அல்லவா? கடைசியில் அவள்தான் தலையைத் திருப்பிக் கொள்ள வேண்டியது ஆயிற்று.

''நீ வாம்மா சாந்தினி. நாம் உள்ளே போகலாம். இந்தப் பயலிடம் வாய் கொடுத்தால் மீளுவது ஏது?'' என்று அழைத்தார் செந்திலின் அன்னை சிவகாமி.

''தாராளமாகப் போங்கள். ஆனால் ஒன்று அவளை ''சாந்தி'' என்று அழையுங்கள். அந்த ''னி'' எனக்குப் பிடிக்கவில்லை; அன்னியமாக காட்டுகிறது'' என்றான் செந்தில்.

''நான்'' என்று தொடங்கினாள் சாந்தினி.

அவளைக் கவனியாதவன் போலச் செந்தில் தாயிடம் பேசினான். ''அப்பா எங்கே அம்மா? மாடியில் தானா?''

''ஆமப்பா. அங்கேதானே அவருக்குப் பிடிக்கும்'' என்றார் சிவகாமி.

முதல் நாள் சந்திப்பில் தந்தையின் சுகவீனம் பற்றி செந்தில் சொன்னது சாந்தினிக்கு நினைவு வந்தது. ''இப்போது நலமாக இருக்கிறாரா, அம்மா?'' என்று பரிவுடன் விசாரித்தாள்.

''இப்போது எவ்வளவோ தேவலை. அவர் உடல் நலம் இல்லாதது உனக்குத் தெரியுமா?... ஓ என்ன கேட்கிறேன் பார். அதுதான் செந்தில் சொல்லியிருப்பானே'' என்றபடி முன்னே நடந்தார் சிவகாமி.



''சொன்னேனே அம்மா அந்த ஆயிரத்தில் ஒரு விஷயமாகச் சொன்னேன்'' என்று சிரித்துவிட்டு ''நான் அப்பாவிடம் போகிறேன்'' என்றான். அவர்களை முந்திகொண்டு மாடிக்கு ஓடிவிட்டான்.

அவன் இரண்டு படிக்கு ஒரு காலாகத் தாவிச் சிறு பிள்ளை போல ஏறுவதை பார்த்து சாந்தினி வியந்தாள். சென்னையின் கடுவன் பூனை இங்கே கன்றுக் குட்டி போலத் துள்ளுகிறதே!

சற்று நேரத்தில் இளநீர் வந்தது. செவ்விளநீர்க் காயில் கண்வெட்டி ''ஸ்ட்ரா'' போட்டு வேலையாள் சாந்தினியிடம் நீட்டினான்.

''நம் பண்ணைக்காய். மிகவும் சுவையாக இருக்கும் குடி'' என்றார் சிவகாமி.

சாந்தினி இளநீரை உறிஞ்சியபடி ரசனையுடன் சுற்றிலும் பார்த்தாள். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ஒரே பசுமை. ''பச்சைப்பசேல் என்று கண்ணுக்கும் குளிர்ச்சியாக இருக்கிறது'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''வீட்டின் பெயர்கூடப்- பசுஞ்சோலைதான்'' என்று சிவகாமி முறுவலித்தார்.

இரண்டு பச்சைக்கிளிகள் ''பசுஞ்சோலை''க்கு ''மாட்ச்'' ஆகப்பறந்தன.

''அப்பப்பா, என்ன ஓரவஞ்சனை இன்றைக்கு வந்தவளுக்கு அவ்வளவு உபசாரமா? நான் - அருமருந்தன்ன புத்திரன், தவப்புதல்வன் இந்த வீட்டுப்பிள்ளை வந்து இருக்கிறேன். குடிக்க ஒருவாய் தண்ணீர் தருவார் இல்லை. இவளுக்கு இளநீரா?'' என்று குறைபட்டபடி செந்தில் வந்தான்.

''வீட்டுப் பிள்ளைக்கு உபசாரமா? வேண்டுமானால் வெட்டிக்குடி'' என்றார் சிவகாமி.

சாந்தினி புன்னகை செய்தாள்.

''என்ன சிரிக்கிறாய்? எனக்கு வெட்டத் தெரியாது என்றா? இதோ பார் என்று ஓர் இளநீர்க்காயை அரிவாளால் வெட்டினான். அதன் கண்களில் வாய் பதித்து லாவகமாக ஒரு சொட்டுக்கூட சிந்தாமல் குடித்தான்.

சாந்தினியின் விழிகள் அகன்றன.

''மெள்ள, மெள்ள, கண்கள் தெறித்து விழுந்துவிடப் போகின்றன'' என்று அவன் சிரித்தான். வரிசைப் பல் தெரிய அழகிய சிரிப்பு.

சாந்தினி மேலும் வாயைப் பிளந்தாள். கடுவன் பூனை கூட இவ்வளவு அழகாகச் சிரிக்குமா? கார்கால மேகத்திர ளின் இடையே மின்னல்கொடி ஓடுவது போல் என்ன கவர்ச்சி!

அவன் சிரிப்பு மேலும் தொடரவே வெட்கம் உண்டா யிற்று. கன்னம் சிவக்கத் தலைகுனிந்தாள்.

''உனக்கு இன்னும் வேண்டுமா?''

''ஊகூம்' என்று மறுத்தாள் சாந்தினி, ''இதுவே வயிறு டொம்'' என்றாகிவிட்டது.

''சரி கிளம்பு'' என்றான் அவன்.

சாந்தினிக்கு ''திக்''கென்றது. ''எங்கே?'' என்றாள் தயக் கத்துடன். இந்த இடத்தைவிட்டு நகரவே அவளுக்குப் பிடிக்க வில்லை.

வேலை பார்க்க. காரியதரிசி என்றால் சும்மா இளநீர் குடித்துக் கொண்டு இருப்பது என்று நினைத்தாயா?'' என்று செந்தில் கிண்டல் செய்தான்.

''ஒரு மணிக்குள் வந்து விடுங்கள், அப்பா பசி தாங்க மாட்டார்'' என்றார் சிவகாமி.



சாந்தினி விழித்தாள். இப்போதே மணி பதினொன்றரை இருக்கும். சென்னை போய் வேலை செய்துவிட்டு ஒரு மணிக்குள் எப்படித் திரும்புவது?

செந்திலின் முகத்தில் சிரிப்பு படர்ந்தது. ''வா'' என்று அவளை அழைத்துக் கொண்டு முன்னே நடந்தான்.

சாந்தினி ஏறிக் கொண்டதும் செந்தில் காரைச் செலுத்தி னான்.

ஒரு வட்டம் அடித்துவிட்டு வந்த வழியே கொஞ்சம் சென்று ஒரு கிளை வழியில் முன்னேறியது, கார்.

கடைசியாகத் தோப்பின் இன்னொரு பகுதியில் உள்ள ஒரு சிறு வீட்டின் முன் நின்றது.

முன்புறமாக இரு பக்கங்களிலும் மயில் மாணிக்கமும் அதேபோல் இன்னொன்றும் வீட்டின் மீது படர்ந்து இருந் தன. இரத்தினங்களைப் பூத்துச் சொரிந்தன. இடையே முல் லைப் பூக்கள் நல்ல வைரங்களாக ஒளிவீசின. செல்லும் வழியில் ''கமான்'' வளைவில் கொடியோடிய குண்டுமல்லி சிறு பந்துகளாக மணத்தது. யாரோ மிகுந்த ரசனையுடன் பல்வேறு கொடிகளாலேயே அந்த வீட்டை அலங்கரித்து வைத்திருந்தனர்.

''கொடி வீடு'' என்றான் செந்தில், பொருத்தமான பெயர். ''சென்னைக்கு என்று நீ நினைத்தாய் அல்லவா?'' என்று சிரித்தபடி அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

முதல் அறை அலுவலக அறை போல இருந்தது. அங்கே சென்றதும் கையோடு கொண்டு வந்த தோல் பையைப் பிரித்தான். உள்ளே இருந்து இரண்டு கடிதங்களை எடுத்து விரித்தான். சோமநாதனுடைய கையெழுத்து. சாந்தினி நெஞ்சு படபடக்க, ''இது...'' என்று தொடங்கினாள்.

''குற்றம் செய்த இருவரின் ஒப்புதல் வாக்குமூலம்?'' என்றான் செந்தில். கடிதங்களை வெகு கவனத்துடன் மடித் தான். பையினுள் இருந்த இரண்டு லெட்ஜர்களோடு சேர்த்து

வைத்தான். இரும்பு பீரோ கதவைத் திறந்து உள்ளே வைத்துப் பூட்டினான்.

சாவி வளையத்தை ஒரு விரலில் சுழற்றியபடி ஓரக் கண்ணால் சாந்தினியைப் பார்த்தான்.

ஏறக்குறைய அதே நேரத்தில் சங்கர் கூண்டுப் புலி போல அறையின் நீளத்தை அளந்து கொண்டு இருந்தான்.

அந்தப்பாவி செந்தில் என்னென்ன பேசிவிட்டான்.

''சாந்தினியையும் இழந்து கட்டம் போட்ட சட்டையும் போடப் போகிறாயா?'' என்றானே.

சாந்தினியை இழப்பதா?

அவன் நெஞ்சு கொதித்தது.

# 11

## நீச்சல் குளம்!

செந்தில் தன்னை கவனிப்பதை சாந்தினி அறியவில்லை. அவள் தலைகுனிந்தபடி அசையாமல் வீற்றிருந்தாள்.

''செந்திலின் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு அவள் இங்கே வந்தது எதற்காக?''

தந்தை கேவலப்படாமல் தவிர்ப்பதற்காக அல்லவா? அந்தத் தந்தையையும் அவருடைய மனம் ஒப்பிய மாப்பிள்ளையையும் அடியோடு மறந்துவிட்டாளே! அவளது மதி மயங்க ஒரு கனிச் சோலையும் ஒரு செவ்விள நீரும் போதும் போல இருக்கிறது, சே... சாந்தினி தன்னை எண்ணியே கசந்தாள்.



''என்ன சாந்தி?'' என்று அருகில் வந்தான் செந்தில்.

''நான் செய்ய வேண்டிய வேலையைத் தருகிறீர்களா?'' என்று குரல் கம்மக் கேட்டாள், சாந்தினி.

அங்கே இருந்த சில கணக்குப் புத்தகங்களைச் செந்தில் புரட்டிப் பார்த்தான். பண்ணை சம்பந்தமான சில கடிதங்களை ''டிக்டேட்'' செய்தான். கவரில் போட்டு அங்கேயே ஒரு தட்டில் வைக்கச் சொன்னான். பிறகு கைகளை நீட்டி உயர்த்தி சோம்பல் முறித்தான்.

''சாந்தி. உனக்கு நீச்சல் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியாது'' என்றாள் சாந்தி சுருக்கமாக. அவளுக்கு இன்னமும் மனம் சரியாகவில்லை.

''இங்கே வா'' என்று அவளை அழைத்துச் சென்றான்.

அங்கே ஒரு மிகப்பெரிய கிணறு பம்பு செட்டோடு இருந்தது. அருகில் குளம் போல பெரிய தொட்டி இருந்தது. அதில் தண்ணீரும் இருந்தது.

''இது தொட்டியா குளமா?'' என்று சாந்தினி விசாரித்தாள்.

''தொட்டிதான். நீந்திக் குளிக்கவும் வசதியாக இருக்கட்டும் என்று அப்பா பெரிதாகக் கட்டினார். இதன் தண்ணீர்தான் நம் பண்ணைக்குப் பாய்கிறது. ''வா, உனக்கு நீந்தக் கற்றுத் தருகிறேன்'' என்று அழைத்தான், செந்தில்.

''ஊகூம் வேண்டாம்'' என்று அவசரமாக மறுத்தாள் சாந்தினி.

செந்திலின் புன்னகை மறைந்தது. ''ஏன்?'' என்றான் அவளையேப் பார்த்து.

சாந்தினி பதில் சொல்லாமல் நின்றாள். அன்னியன் முன்னே உடலில் துணி ஒட்ட எப்படிக் குளிப்பது.

''ஏன் என்று கேட்டேன்'' என்றான் அவன் சற்று அதட்டலாக.

அதற்கும் சாந்தினியிடம் பதில் இல்லை.

செந்தில் பொறுமை இழந்தான், ''என்ன சொன்னாலும் உனக்கு சந்தேகம்தானா? இன்று நீ விரும்பினாலும் விரும்பா விட்டாலும் குளிக்கப் போகிறாய் பார்'' என்று அவள் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துப் போனான்.

''இல்லை... விடுங்கள். மாற்றுத் துணிகூட இல்லாமல் எப்படிக் குளிப்பது?'' என்று கையை விடுவிக்க முயன்றாள் சாந்தினி.

செந்தில் சட்டென அவளை விட்டான். ''அட! நான் நினைக்கவே இல்லை பார். என்னைப் போல நினைத்து விட்டேன். இங்கே வந்தால் சும்மா சட்டையைக் கழற்றி விட்டுத் தண்ணீரில் விழுந்து விடுவேன்...'' கையைத் திருப்பி மணி பார்த்தான். ''இன்னும் அரைமணி நேரம் இருக்கிறது'' அவளையும் தண்ணீரையும் மாறி மாறி இருமனமாய்ப் பார்த்தான்.

''நீங்கள் வேண்டுமானால் குளியுங்கள். நான் இப்ப டியே நீர் ஓடும் பாதை வழியே நடந்துவிட்டு வருகிறேன்'' என்றாள் சாந்தினி.

''சரி'' என்று அவன் சட்டை, பனியனைக் கழற்றினான்.

சாந்தினி கால்வாய் வழியே நடந்தாள்.

சாந்தினி திரும்பி வந்தபோது அவன் கரை ஏறிநின்றான்.

கட்டான உடலில் நீர்த்துளிகள் பளபளத்தன.

கட்டாயமாகப் பார்வையைத் திருப்பிக் கொண்டு நின் றாள். ''இவனைப் போய் சங்கர் பஞ்சுமேனி அது இது என்றானே!''

இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள்.

செந்தில் திடீர் என்று வாய்விட்டுச் சிரித்தான். ''என்ன?'' என்பது போல் சாந்தினி அவனைப் பார்த்தாள்.



''ஒன்றும் இல்லை, சங்கரைப் பற்றி நினைத்தேன். சிரிப்பு வந்துவிட்டது'' என்று லேசாக அவளைப் பார்த்தான் செந்தில்.

சாந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் பேசாமல் இருந்தாள். பிறகு, ''உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' என்றாள்.

''சொல்லுவதைச் சீக்கிரம் சொல். விரைவில் வீடு வந்துவிடும்'' என்று காரின் வேகத்தை வெகுவாகக் குறைத் தான் அவன்.

''இல்லை.. வந்து... காலையில் அந்த வீட்டில் — அதுதான் சென்னையில் — இருக்கும் போது சங்கர் எனக்கு போன் செய்தார். அப்போது சொல்ல பயமாக இருந்தது. இப்போது பார்த்தால் உங்களுக்குத் தெரியுமோ என்று தோன் றுகிறது'' என்றாள் தயங்கித் தயங்கி.

செந்தில் லேசாகச் சிரித்தான். ''என் பாதுகாப்பில் நீ இருக்கும் போது எனக்குத் தெரியாமல் உன்னை ஒருவன் அணுக முடியும் என்று நினைத்தாயா? அது டெலிபோன் மூலமாக என்றாலும் கூட முடியுமா?... ம்?''

''அப்படியானால்...?''

''நீங்கள் இருவரும் பேசியது முழுவதையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். சங்கர் எப்படியும் உன்னி டம் தொடர்பு கொள்ள முயல்வான் என்று எனக்குத் தெரி யும். உனக்கு போன் வந்தால் எனக்கு ''இணைப்பு'' கொடுத் துவிட்டு பிறகு உனக்குத் தருமாறு சொல்லியிருந்தேன். அதுமட்டும் அல்ல. சங்கர் மட்டமாகப் பேசத் தொடங்கிய தும் தொடர்பைத் துண்டித்ததும் நான்தான்.

''ஒட்டுக் கேட்டீர்களாக்கும்'' என்று ஒரு மாதிரிக் கேட்டாள் சாந்தினி.

''ஓகோ என்னிடம் குற்றம் காண முயல்கிறாயா? நீ ஒன்று சொன்னாய், இப்போது நான் ஒன்று கேட்கட்டுமா?

என்னிடம் என் நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டு பிறகு அவன் மீறலாம். அது சரியாக்கும். அதைத் தடுக்க நான் முயற்சி செய்தால் அது தவறோ, இது எந்த நியாயத்தில் சேர்த்தி!'' என்று பதில் கேட்டான் செந்தில்.

இதற்கு பதில் சொல்ல சாந்தினிக்குத் தெரியவில்லை. இவனிடம் வாய் கொடுக்காமல் இருப்பது மிகவும் உத்தமம் என்று தோன்றியது, என்ன பேசினாலும் கடைசி வார்த்தை அவனுடையதாகவே முடிகிறது.

கூடவே இன்னொரு கேள்வியும் பிறந்தது. அதையும் கேட்டுவிட்டு வாயை மூடிக்கொள்ள முடிவு செய்தாள்.

''உங்கள் அம்மாவுக்கு என் பெயர் எப்படித் தெரியும். அதோடு அவர்கள் நம்மை எதிர்பார்த்து இருப்பது போலத் தோன்றியதே. அது எப்படி?'' என்று வினவினாள்.

செந்தில் கடகடவென்று நகைத்தான்.

சாந்தினி முகம் சுளித்தாள். ''இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது'' என்றாள் எரிச்சலுடன்.

''ஒன்றும் இல்லை சாந்தி, இப்போதுதான் பேசிக் கொண்டு இருந்தோம். அதை மறந்து இப்படிக் கேட்கிறாயே என்று நினைத்தேன். சிரிப்பு வந்துவிட்டது, அவ்வளவேதான் '' என்றான் செந்தில் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

''என்ன பேசினோம்?'' என்று யோசித்தாள் அவள்.

''டெலிபோன் என்ற ஒரு கருவி உலகத்தில் உண்டு தெரியுமா? அதன் மூலம் இந்த கோளத்தின் இந்தக் கோடியில் இருந்து அந்தக் கோடியில் உள்ளவர்களோடு பேச முடியும், அது தெரியுமா? குறைந்தது சென்னையில் இருந்து அறுபதே மைல் தூரத்தில் உள்ள இந்தப் பண்ணையில் உள்ள அம்மாவிடம் மேலும் பேச முடியும். அதாவது தெரியுமா?'' என்று மீண்டும் சிரிக்கலானான், செந்தில்.



சாந்தினிக்கு முகத்தில் அசடு வழிந்தது. என்ன செய்வது? இவ்வளவு சின்ன விஷயத்தை மறந்து அவனிடம் கேட்டதே முட்டாள்தனம்தான். ஆனாலும் அதற்காக அவன் இப்படிச் சிரிக்க வேண்டுமா? அவளுக்கு எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்க மாட்டேன் என்கிறானே.

''சென்னையில் கிடுகிடுப்பதற்கும் சேர்த்து இங்கே சிரிப்பீர்கள் போலத் தெரிகிறது'' என்று ஒரு போடு போட்டாள்.

ஏற்கனவே கார் ஆமை வேகத்தில் ஓடிக் கொண்டு இருந்தது. அதை இப்போது நிறுத்தினான். ''சாந்தி இப்படி என்னைப் பார்! சற்று முன் என்னிடம் பயமாக இருந்தது என்றாயே, மெய்யாகவோ இன்னமும் உனக்கு என்னிடம் பயமா? யோசித்துச் சொல்'' என்றான்.

சாந்தினி விழிகள் அகல அவனைப் பார்த்தாள். அவனிடம் இப்போது அச்சம் இருக்கிறதா? அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் ஒரே ஒருநாள் முன்னே சென்றால்... முந்தைய நாள் அவனை நினைத்து நேரில் பார்த்து, அவன் பேச்சைக் கேட்டு அடைந்த பீதி! அம்மா! அதைச் சொல்ல வார்த்தைகள் ஏது? சென்னையில் அவன் சிரிப்புகூட அச்சம் தந்ததே. ஆனால், இந்த மாதிரி கலப்படம் இல்லாத மகிழ்ச்சியுடன் அவன் அங்கே சிரிக்கவும் இல்லை. எப்போதும் ஏளனமாக எகத்தாளமாகத்தான் நகைத்தான். எள்ளி நகையாடினான். அதை நினைத்தால் இப்போதுகூட உள்ளூர நடுங்குகிறது.

குழப்பத்துடன் ''எனக்குத் தெரியாது'' என்று பதில் உரைத்தாள் அவனுக்கு.

''பரவாயில்லை'' என்று மீண்டும் காரை எடுத்தான். அவன் முகத்தில் ஏதோ ஏமாற்றம் தெரிந்தது.

''நானும் ஒன்று கேட்க வேண்டும்'' என்றாள் சாந்தினி.

''என்ன சதுரங்க ஆட்டமா?''

சாந்தினிக்குப் புரியவில்லை.

''சதுரங்கத்தில் தான் ஒருவர் காய் நகர்த்தியதும் அடுத்தவர், பிறகு முதலாமவர் என்று மாற்றம் வரும். இப்போது நாம் முறை வைத்து ஒருவர் ஒன்று கேட்டதும் ஒன்று சொல்வதும் அதுபோலத்தானே இருக்கிறது'' என்றான் அவன்.

''ஓ! நான் இதை மட்டும் கேட்டு விடுகிறேன். நிபந்தனையை ஒப்புக் கொண்டு ஏமாற்றுவதா என்கிறீர்களே நிபந்தனை எனக்குத்தானே. நான்தானே அப்பா - சங்கருடன் தொடர்பு கொள்ளக் - கூடாது. அவர்களாகப் பேசியதில் என்ன...''

செந்தில் சட்டென அவள் கையைத் தொட்டான். கையை உதறியபடி ''தொடாதீர்கள்'' என்றாள், சாந்தினி கோபத்துடன். ''நான் எங்கே தொட்டேன்? நீதானே என்னைத் தொட்டாய்'' என்றான் செந்தில்.

''நான் எங்கே...'' என்று சினத்துடன் தொடங்கிய சாந்தினி இடையில் நிறுத்தினாள். ''புரிந்துவிட்டது இரண்டும் ஒன்றுதான் என்கிறீர்கள். அவர்களாக பேச முயன்றாலும் நான் பதில் சொன்னால் அது தொடர்பு கொள்வதுதான் என்கிறீர்கள். அதுதானே'' வினவினாள்.

''ஓ! கண்டுபிடித்து விட்டாயே. உலகமகா புத்திசாலி என்றால் அதுநீதான்'' என்று கேலியாக சிரிக்கத் தொடங்கினான்.

அதற்குள் காரும் பண்ணை வீட்டை அடைந்தது.

அவசர அவசரமாக இறங்கி உள்ளே ஓடத் தொடங்கினாள் சாந்தினி, உடனேயே நின்றாள்.

''என்ன'' என்றபடி இறங்கி வந்தான்.

''உங்கள் அப்பா... அவரும் இப்போது கீழே இருப்பார் அல்லவா?'' என்று தயக்கத்துடன் நின்றாள்.

# 12

## நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்!

**சா**ந்தினி இதுவரை செந்திலின் தந்தையைப் பார்த்தது இல்லை. அவர் எப்படிப்பட்டவரோ? செந்திலின் கடுவன் பூனைத்தனம் அப்பா வழி வந்த வாரிசோ என்னவோ?

''ஓகோகோ! அப்பாவிடம் பயமா? சும்மா வா. அவர் உன்னைத் தின்றுவிட மாட்டார்'' என்று செந்தில் அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

சில மாதமாக உடல் நலம் இல்லாமல் இருப்பவர். அதனால் தொளதொள உடையோடு தாடி மீசையுடன் இளைத்து மெலிந்து ''ஹ...'' வென்று இருப்பார். செந்திலின் தந்தை என்று சாந்தினி தன் மனசில் உருவகப்படுத்தி இருந்தாள்.

ஆனால், கச்சிதமான உடையில் வழுவழு என்ற முகத்தில் லேசாக முனைவளைந்த மீசையுடன் செந்திலின் உயரத்தில் அவர் கம்பீரமாக நின்றார். அதைக் கண்டு சாந்தினி ஒரேயடியாக வியந்து நின்றாள்.

அவர் கையில் இருந்த கைத்தடிகூட ''ஸ்டைலுக்கு'' என்றுதான் தோன்றியது. உடலின் லேசான மெலிவும் கண்களின் சோர்வும்தான் அவரது பலவீனத்தின் அறிகுறியாக இருந்தன.

''ஓ செல்வி சாந்தினியா! அம்மாவும் பிள்ளையும் சொன்னது மெய்தான். கண்ணைத் தட்டி விழிக்கக் கூட முடியவில்லையே. அடடா! சிவகாமி. இவ்வளவு அழகான பெண்கள்கூட உண்டு என்று முப்பது ஆண்டுக்கு முன்

என்னிடம் யாரும் சொல்லாமல் போய்விட்டார்களே ஊ...ம்'' என்று போலியாகப் பெருமூச்சு விட்டு வருத்தம் காட்டினார்.

சாந்தினி வெட்கத்துடன் சிவகாமியின் பின்னே ஒளிந்தாள்.

''அப்பா அப்பா. ஜாக்கிரதை, அவளை நானாக்கும் அழைத்து வந்திருக்கிறேன்'' என்று செந்தில் சிரித்துக் கொண்டே எச்சரித்தான்.

''அட போடாபோ. நீ சின்னப்பயல் எனக்கு இணையாவாயா? நீ என்னம்மா சொல்லுகிறாய்?'' என்று சாந்தினியை வம்புக்கு இழுத்தார், கருணாகரன்.

''சரி சரி சாப்பிட வாருங்கள், அவள் சும்மாவே மிரண்டு கிடக்கிறாள். நீங்கள் வேறு கலாட்டா பண்ணாதீர்கள்'' என்று மணியைப் பார்த்துக் கொண்டு பசியாற அழைத்தார், சிவகாமி. கணவனின் உணவு நேரம் தவறி விடக்கூடாதே என்ற கவலை அவருக்கு.

ஆண்கள் இருவரும் முன்னே உண்பார்கள் என சாந்தினி எண்ணியிருந்தாள். ஆனால் சாப்பாட்டு மேசை மீது நான்கு இலைகளில் உணவு பரிமாறி இருந்தது. நடுவில் பாத்திரங்களில் உணவு வகைகள் வைக்கப்பட்டு இருந்தன.

ஒருபுறமாக இருந்த இரு நாற்காலிகளில் கருணாகரனும் சிவகாமியும் அமர்ந்தனர். எதிரில் செந்திலின் அருகே உள்ள இருக்கையில் சாந்தினி உட்காரும்படியாக ஆயிற்று.

சாந்தினி தயங்கித் தயங்கி அமர்வதை செந்தில் கவனித்தான். ரகசியச் சிரிப்பில் அவன் கண்கள் குறுகுறுத்தன.

அன்றைய உணவு சாந்தினிக்கு மிகவும் இனியதாகத் தோன்றியது.

சிவகாமியைத் தந்தை — மகன் இருவருமே கேலி செய்தனர். ஆனால், அதிகம் அன்பு — அளவற்ற அன்பு



தெரிந்தது. சிவகாமியும் அதை ரசித்து பதில் கூறுவதும் சிரிப்பதுமாக இருந்தார்.

தானும் உணவு அருந்தியபடி கணவனுக்கும் குறிப்பறிந்து சிவகாமி பரிமாறினார். அது பார்ப்பதற்கு மிக அருமையாக இருந்தது.

அவளது ரசனையில் செந்தில் அடிக்கடி குறுக்கிட்டான். இதை எடு. அதை வை என்று சாந்தினியை அதிகாரம் செய்தான். முறைத்தபோது அவன் சொல்லுவதையும் சாந்தினி செய்துதான் ஆகவேண்டி இருந்தது. ஒரு தடவை அவள் எரிச்சலுடன் விழித்தபோது அவன் அவள் புறம் குனிந்து சொன்னான். ''அம்மாவைப் பார்த்தபடி'' என்றான் தணிவாக. சாந்தினி முன்னே பார்த்தாள்.

கருணாகரன் இலையில் பொரித்த முட்டை குறைவாக இருந்தது. அவர் கேட்குமுன்னே சிவகாமி முட்டையை அவருக்கு வைத்துக் கொண்டு இருந்தார்.

''போதும் போதும்'' என்று கருணாகரன் சொன்னார்! ''உன் அம்மாவுக்கு என்னை கிங்காங், தாராசிங் ஆக்கிவிட ஆசை. ஆனால், இனி தாராசிங் ஆகி என்ன பயன்? எந்த அழகி எனக்கு மாலையிடக் காத்து இருக்கிறாள்?'' என்றார் சோகமாக.

சிவகாமி புன்னகையோடு பதில் கொடுத்தார். ''எவளாவது காத்து நின்றாலும் நான் விட்டு விடுவேனா? கொடுக்கிற உதையில் பின்னங்கால் பிடரியில் இடிபட அவள் ஓடமாட்டாளா?'' என்றாள்.

''ஆகா! நீ காளிதேவி அவதாரம் என்று எனக்குத் தெரியாதா என்ன? உனக்குப் பயந்துதானே யமன்கூட என்னை நெருங்காமல் ஓடிவிடுகிறான்'' என்று கருணாகரன் நகைத்தார்.

''யமன்'' எனவும் சிவகாமியின் முகம் வாட்டமுற்றது?

''அதற்குள் தாமரை வாடுகிறதே. அந்தப் பயல் யமன் வந்தாலும் நான் உன்னை விட்டுப் போய் விடுவேனா. ''அப்பனே யமனே முப்பது ஆண்டுகளுக்கு முன்னே என் குடுமியைப் பிடித்த ஒருத்தி இருக்கிறாள். அவள் பாட்டுக்குச் சரியாக இதுவரை ஆடி வந்திருக்கிறேன். அவளிடம் ஒரு வார்த்தை கேட்டுவிடலாம் வா'' என்று உன்னிடம் அழைத்து வரமாட்டேனா? அவள் வந்து உன்னை ஒருமுறை பார்த்து விட்டால் போதாதா, பிறகு அவனது பிறவிக்கும் இந்த பக்கம் எட்டிப் பார்க்க தைரியம் வருமா?''

''ஆனாலும் நீங்கள் சுத்த மோசம். அப்பா என்னதான் அறைக்குள் ஆடினாலும் இப்படியா எங்கள் முன் புட்டு வைப்பது. எனக்கு அல்லவா வெட்....கமாக இருக்கிறது'' என்று வெட்கப்படுவதுபோல் சிரமப்பட்டு செந்தில் பாவனை செய்தான்.

அடக்க முடியாமல் சிரித்தாள். சாந்தினி வாயில் உண வோடு சிரிக்கவும் புரை ஏறிக்கொண்டது. ''இத்தருணம் விட்டால் இனி வாய்ப்பது அரிது'' ஒன்று அவள் தலையில் செந்தில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டினான்.

''அம்மா!'' என்று அசந்து போனாள் அவள்.

''என்னடா உன் பலத்தையெல்லாம் குழந்தையிடமா காட்டுவது? கண்ணெல்லாம் சிவந்து போயிற்றே'' என்று பரிந்தார் சிவகாமி.

''குழந்தையா? பல்லைப் பிடுங்கித் தொட்டிலில் போடுங்கள். லேசாக ஒரு தட்டு தட்டுவதற்குள் என்ன ஆகிவிடுவாள்'' என்றான் செந்தில்.

''லேசான தட்டா? வீட்டின் மேல்தளம் இடிந்து தலை மேல் விழுந்து விட்டதோ என்றல்லவா நான் பயந்து போனேன்'' என்றாள், சாந்தினி பதிலுக்கு.

கருணாகரன் அவுட்டுச் சிரிப்பு சிரித்தார். ''அப்படிச் சொல்லம்மா. தனக்கு மிஞ்சி யாருக்கும் பேசத் தெரியாது



என்று இந்தப் பயலுக்கு கர்வம். இப்போது என்னடா சொல்லுகிறாய்?'' என்று மகனுக்குச் சவால் விட்டார்.

''என்னத்தைச் சொல்லுவது? இவ்வளவு சொல்லு முன்பே இப்படி அழுகிறாள். இதற்கு மேல் ஏதேனும் சொல்லப் போனால் குற்றாலம் போல் கண்ணீர் அருவி கிளம்பி விடப் போகிறது'' என்றான், செந்தில் விடாமல்.

''ஊகூம் அதெல்லாம் இல்லை. இது புரை ஏறியதால் வந்த கண்ணீர். நான் ஒன்றும் அழவில்லை'' என்று ரோஷத்து டன் மறுத்தாள் சாந்தினி.

''ஊம். எதையாவது கூறி சமாளிக்க வேண்டும் அல் லவா? சொல்லிக் கொள். கண்ணீர் வெள்ளம் கரை புரண்டு வீட்டையே அடித்துச் செல்லாமல் இருக்க வேண்டுமே. அதனால் நானும் ஒப்புக் கொள்கிறேன்'' என்று அவன் அபிநயத்துடன் கூறவும், எல்லோரும் சிரித்தனர்.

சாந்தினி சிரிப்பை அடக்கிப் பார்த்தாள். முடியாமல் போகவே தானும் சேர்ந்து நகைக்கலானாள்.

ஒருவழியாக சிரித்து ஓய்ந்ததும் கருணாகரன் பெருமைப் பட்டார். ''எப்படியோ, என் பையன் வென்றுவிட்டான், பார்.''

''ஆமாம் உங்கள் பையன்தான். பத்து மாதம் வயிற்றில் சுமந்தது நீங்கள்தானே'' என்று கேலி செய்தார், சிவகாமி.

''நீ மட்டும் பத்துமாதம் சுமந்தாயாக்கும்?'' என்று ஒரு போடு போட்டார், கருணாகரன்.

சாந்தினி திடுக்கிட்டுத் திகைத்தாள். செந்தில் இவர்களு டைய சொந்தப் பிள்ளை இல்லையா? செந்திலைத் திரும்பிப் பார்த்தாள். அவன் புன்னகையுடன் காலிபிளவரை வாய்க் குள் அடைத்துக் கொண்டு இருந்தான்.

''பின்னே சுமக்கவில்லையாக்கும்?'' என்றார் சிவகாமி.

''ஏய் பொய் சொல்லாதே. செந்தில், உங்க அம்மா பெரிய அரிச்சந்திரினி என்பாயே! பார், பார் முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைக்கிறாள்.

செந்தில் தாயின் இலையை ஆராய்ந்துவிட்டு, ''இல் லையே, அப்பா'' என்றான் சாவதானமாக.

''அடப் போடா, மெய்யாகவே சிவகாமி உன்னை ஒன்பதே மாதம்தான் சுமந்தாள். அதற்குள் நீ பிறந்து விட் டாய். வேண்டுமானால் கேட்டுப் பார்'' தான் சொன்னதை நிரூபித்தார் அவர்.

''இது ஒன்று உங்களுக்கு...'' என்று மெல்லச் சிரித்தார் சிவகாமி.

சாந்தினி அப்பாடா என்று பெருமூச்சு விட்டாள். செந் தில் இந்த அருமையான மனிதர்களின் சொந்தப் பிள்ளை இல்லையோ என்று ஒருகணம் கலங்கிப் போனாள். ஏனோ தெரியவில்லை, செந்தில் உயர்ந்த தன்மை உள்ளவனாக இருக்க வேண்டும் என்று சாந்தினியின் மனம் விரும்பியது.

திடீர் என்று நினைவு வந்தவராக சிவகாமி கூறினார் ''நீ கொடி வீட்டுக்குச் சென்றிருந்த போது உனக்கு டிரங்கால் வந்தது'' என்றார், செந்திலிடம்.

''யார் பேசினார்கள்? அலுவலகத்தில் குறிப்பு வைத்து விட்டுத் தானே வந்தேன்'' என்றான் செந்தில் யோசனை யோடு.

''பெண் குரல். நீ இல்லை என்றதும் கோபத்தோடு வைத்து விட்டாளாம். நளினியாகத்தான் இருக்கும்'' என்றார், சிவகாமி நமட்டுச் சிரிப்போடு.

''வரும்போது கூடப் பார்த்தாளே. அதற்குள் போன் செய்ய வேண்டுமா?'' என சாந்தினி பொறாமைப்பட்டாள்.

# 13

## அவனை மறந்துவிடு!

**உ**ணவு முடிந்து எழவும் கருணாகரனுடைய முகம் லேசாக வாடியது. ''சரி அவ்வளவுதான். இனி சின்னப் பிள்ளைகள் பேசிக் கொண்டு இருங்கள். நான் ஓய்வு எடுக்க வேண்டும். வயதாகிவிட்டது அல்லவா?'' என்று மாடிப் படியில் ஏறலானார்.

செந்தில் அவசரமாக அவர் அருகில் சென்றான். அவர் புன்னகையோடு ''நான் ஏறிவிடுவேனடா'' என்று நிதான மாக ஏறிச் சென்று விட்டார்.

வேலையாளிடம் சொல்ல வேண்டியதை முடித்து விட்டு, சிவகாமியும் கூடத்துக்கு வந்தார்.

''அப்பா இப்போது எப்படி நடந்து கொள்கிறார், அம்மா?'' என்று வினவினான், மகன்.

''அப்படியேதான் ஓய்வு ஓய்வு என்றால் ஆத்திரம் வருகிறது. பிடிவாதமாகக் காலையில் தோட்டத்தில் சுற்றுகி றார். பிறகு ஒன்றும் முடிவது இல்லை. இன்று உன்னைக் கண்ட தெம்பில் இருக்கிறார். இல்லையானால் மதிய உணவு எல்லாம் மாடியில்தான்'' என்றார், தாயார், வேதனையுடன்.

''இருந்து இருந்து அப்பாவுக்கு இந்த நோய்... சே', என்று ஆத்திரத்துடன் முனகினான் செந்தில்.

''அதுதானே எல்லா வகையிலும் வேதனையாகிவிட் டது! ஒரு நிமிடம் ஓய்வு என்று உட்காருவாரா? அவரைப் போய் இனி முழுக்க ஒய்ந்திருக்க வேண்டும் என்றால் எப்படி? அவராலும் பொறுக்க முடியவில்லை. எனக்கும்

தாங்கவில்லை'' என்று விழிக்கடை நீரைச் சுண்டிவிட்டார் சிவகாமி.

இந்த அந்தரங்கப் பேச்சில் சாந்தினியால் கலந்து கொள்ளவும் முடியவில்லை. எழுந்து செல்வதும் சரியாகப் படவில்லை. அவள் முன்னிலையில் செந்தில் இந்தப் பேச்சை எடுக்க வேண்டுமா என்று ஆத்திரப்பட்டாள். சிவகாமியின் கண்ணீரைக் கண்டதும் அவளுக்கு அழுகையும் வந்தது.

சிவகாமியின் பார்வையிலும் அவள் முகம் பட்டது. உடனே புன்னகையை வரவழைத்துக் கொண்டாள். ''நம்மிலும் கேடு நாட்டிலே உண்டு. ஏதோ இந்த மட்டும் கைகாலை முடக்காமல் கடவுள் காப்பாற்றினாரே. அதற்கு நன்றி காட்ட வேண்டாமா? என்னடா? உம் இன்று இராதே. உன் அப்பாவுக்கு அது கொஞ்சமும் பிடிக்காது'' என்று மகனை லேசாக அதட்டினார்.

செந்திலின் முகமும் கொஞ்சம் தெளிவடைந்தது. அவனைப் பார்க்க சாந்தினிக்கு பரிதாபமாகவும் இருந்தது. சென்னையில் காட்டிய ''பெரிய மனிதத்தனம்'' அடியோடு மறைந்து ஆறுதல் தேடும் சிறுவன் போலத் தோன்றினான். ''அய்யோ பாவம்'' என்று அவள் எண்ணிக் கொண்டு இருந்தபோது கணக்குப் பிள்ளை போல ஒருவர் வந்தார். ''சின்னய்யா உங்களுக்கு சென்னையில் இருந்து டெலிபோன்'' என்றார்.

சிவகாமி வாய்விட்டுச் சிரித்தார். ''நளினியாகத் தான் இருக்கும். சென்று பார்'' என்று சொல்லிவிட்டு, சாந்தினியிடம் திரும்பினார். ''வா சாந்தினி, சற்று ஓய்வெடு, மாலையில் தோட்டம் சுற்றிப் பார்க்கலாம்'' என அழைத்தார்.

சாந்தினி குனிந்த தலை நிமிராமல் அவருடன் சென்றாள்.

ஒருகணம் தயங்கிவிட்டுச் செந்தில் முன்னறைக்குப் போனான்.



சாந்தினியைத் தன் அறையிலேயே படுத்துக் கொள்ளச் சொன்னார், சிவகாமி.

சாந்தினிக்கு நல்ல தூக்கம் வந்தது. இரண்டு நாட்களாக மனதை அலட்டிக் கொண்டதாலோ? ஆனால் ''நீங்கள்...'' என்று தயங்கினாள்.

''நானும்தான் மாலைச் சிற்றுண்டிக்கு எல்லாம் சமையல்காரியிடம் சொல்லிவிட்டேன்'' என்று தானும் ஒரு கட்டிலில் அமர்ந்தார்.

''மாலையில் கொடி வீட்டுக்கு போய் நீந்தலாம். நீ நீந்துவாய் அல்லவா?'' என்று விசாரித்தார், சிவகாமி.

''எனக்குத் தெரியாதே, அம்மா'' என்றாள் சாந்தினி. அவளது பொருளாதாரம் நீச்சல் குளம் போன்ற உல்லாசத்துக்கு இடம் கொடுத்ததில்லை.

''பரவாயில்லை. நான் கற்றுத் தருகிறேன். முன்பெல்லாம் ஞாயிற்றுக் கிழமைகளில் இங்கு வருவோம். செந்திலும் அவன் அப்பாவும் போட்டி போட்டுக் கொண்டு நீந்துவார்கள்'' என்றார் பெருமூச்சுடன்.

''ஏன் அம்மா, செந்... உங்கள்.. கணவருக்கு'' என்று தடுமாறியபடி சாந்தினி தொடங்கினாள்.

சிவகாமி புன்னகை செய்தார். ''செந்திலின் அப்பாவை ''மாமா'' என்று சொல் அவருக்குப் பிடிக்கும்.''

சற்று பொறுத்து சாந்தினி தொடர்ந்தாள். ''மாமாவுக்கு என்ன உடம்புக்கு?''

''அவன் சொல்லவில்லையா?''

சாந்தினி நிதானித்தாள். செந்தில் அவளைப் பற்றித் தாயிடம் என்ன சொன்னானோ தெரியவில்லை எல்லாம் சொல்லி இருக்கமாட்டான் என்ற அளவுக்கு ஊகித்தாள். தானாக எதையும் வெளிப்படுத்திக் கொண்டு அசடு வழியலாகாது என்று முடிவு செய்தாள். ''உடம்பு சரியில்லாமல் போயிற்று என்று மட்டும் சொன்னார்'' என்றாள்.

''ஆமாம் தொழிற்சாலை பற்றிய மேல்படிப்புக்காக செந்தில் ஜெர்மனிக்கு சென்றிருந்தான். இவர் வழக்கம் போல அலுவலகத்துக்குப் போனார். திடீர் என்று எனக்கு போன் வந்தது, ஏதோ ''ஸ்ட்ரோக் காம்'' கை கால் எதுவும் அசைக்க முடியவில்லை. ''சிவகாமி என்று வார்த்தைகூட தெளிவாக வரவில்லை. பிழைப்பார் என்ற நம்பிக்கையும் இல்லை. சரிதான். அக்கரைச் சீமையில் நம் பிள்ளை பெற்றவர்களை இழந்து அனாதை ஆகப் போகிறான் என்று எண்ணி விட்டேன். ''போன்'' போட்டு அவனை உடனே வரச் சொன்னோம். மகனைப் பார்த்ததுமே கொஞ்சம் தெளிந்து விட்டார் மெல்ல மெல்ல முன் கையசைத்து கால் அசைத்து, நடந்து இன்று இவ்வளவுக்கு வந்திருக்கிறார். எப்படியும் பழைய மாதிரி வாழ்க்கை இனிமேல் கூடாது என்று டாக்டர் சொல்லி விட்டார். ஓய்வு தான் உயிரை வளர்க்கும் என்றார். இவருக்கோ ஓய்ந்திருப்பது என்றாலே பிடிக்காது. சென்னையில் இருந்தால் எப்படியும் அலட்டிக் கொள்வார் என்றுதான் இங்கேயே வந்துவிட்டோம்'' என்று சிவகாமி முடித்தார்.

சாந்தினியின் சிந்தனை செந்திலைச் சுற்றிப் படர்ந்தது.

ஒருநாள் செந்தில் வெகு தீவிரமாகப் பயிற்சியில் ஈடுபட்டு இருக்கிறான். திடீர் என்று டெலிபோனில் அழைக்கிறார்கள். பூரண ஆரோக்கியத்துடன் வழியனுப்பிய அப்பா நம்பவே முடியாமல் திணறுகிறான். ஓடோடியும் வருகிறான். பெற்றவருக்குப் பேசக்கூட முடியவில்லை. ''அய்யோ'' என்று அழக்கூட முடியாமல் அலுவலக வேலைகள்...''

''ஏன் அம்மா, பிறகு செந்... அவர்தான் உங்கள் மகன் திரும்பவும் வெளிநாடு போகவில்லைபோல் இருக்கிறதே. பயிற்சி என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள்.

''பயிற்சி ஏற்கனவே முடியும் தருவாய்தான். அதோடு இங்கேயும் நிறைய வேலைகள். அவன் அப்பாவால்தான் ஒன்றுமே முடியவில்லையே குருவி தலையில் பனங்காயை வைத்ததுபோல படித்துக் கொண்டு இருந்த பிள்ளை அத்



தனை வேலைகளையும் பார்க்க வேண்டியது ஆயிற்று'' என்று நெகிழ்ச்சியுடன் கூறினார் தாய். ''பரவாயில்லை அவனும் எப்படியோ சமாளித்துக் கொண்டான்'' என்று திருப்தியும் காட்டினார்.

சாந்தினி மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தாள். தந்தையின் சுகவீனத்தால் மகன் கலங்கியிருந்த நேரம். தொழிற்சாலைப் பொறுப்பும் அவன்மீது விழுகிறது. அங்கே உதவுவதற்கு பதில் உபத்திரவம் செய்தார்களே. அனுபவம் இல்லாத சிறுபிள்ளை என்று ஏமாற்றினார்களே சங்கரும், சோமநாதனும் துன்பப்படும் ஒருவருக்கு உதவும் மனிதத்தன்மைகூட இல்லாமல் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்திருக்கிறார்களே. அவர்களிடம் செந்தில் சினம் கொண்டதில் தவறு என்ன? தண்டிப்பதில்தான் தப்பென்ன?

செந்திலிடம் இருந்து சாந்தினியின் நினைவு தந்தையிடம் ஓடியது. இப்போது அவர் என்ன செய்கிறாரோ? இன்றேனும் ஏதாவது சாப்பிட்டாரோ என்னவோ?

நினைவுகளின் ஊடே சாந்தினி கண்ணயர்ந்தாள். மாலையில் சிவகாமி எழுப்பிய பிறகுதான் விழித்தாள்.

மதியம் அலட்டிக் கொண்டதால் கருணாகரன் சோர்ந்திருந்தார். எனவே எல்லோரும் வீட்டிலேயே இருந்தனர்.

செந்தில் தந்தையுடன் மாடியில் ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

சிற்றுண்டி வகைகளையும் காப்பியையும் சிவகாமி எடுத்துக் கொடுக்க சாந்தினி மாடியில் கொண்டு வைத்தாள்.

''எதையும் மனதில் நிச்சயமாக உறுதிப்படுத்திக் கொள்'' என்று கருணாகரன் உரைப்பது காதில் விழுந்தது.

என்ன பேச்சோ, உள்ளே போகலாமோ கூடாதோ என்று சாந்தினி தயங்கி நின்றாள். கருணாகரன் அவளை புன்னகையுடன் பார்த்தார். ''நீ கொண்டு வாம்மா. எங்கள் பேச்சுக்காகப் பார்க்க வேண்டாம்'' என்றார். செந்தில் எங்கோ பார்த்தபடி

சும்மா இருந்தான். கையில் இருந்ததை மேசை மீது வைத்து விட்டு சாந்தினி மடமடவென்று கீழே இறங்கினாள்.

மீண்டும் அவள் மாடிக்குச் சென்றபோதும் கருணாகரன் தான் பேசிக் கொண்டு இருந்தார். ''நீ இந்தக் காலத்துப் பிள்ளை. ஏதோ சோதனை என்கிறாய். எதிலும் வரம்பு மீறாமல் இருந்தால் சரிதான்'' என்றார்.

''அப்பா, நான் உங்கள் பிள்ளை'' என்றான் செந்தில் அழுத்தமாக.

''அவள் தகப்பனார்...''

''அதற்கு அவள் என்ன செய்வாள்...''

மிகுதிப் பொருட்களுடன் சிவகாமியும் வந்து விட்டார். பொதுவாக ஏதேதோ பேசியபடி சிற்றுண்டி முடிந்தது.

''நீ எப்போது கிளம்ப வேண்டும்?'' என்று சிவகாமி செந்திலைக் கேட்டார்.

''வழக்கம்போல் தான். எட்டு மணிக்கு கிளம்பலாம் என்று இருக்கிறேன். இரண்டு சப்பாத்தி போதும். அம்மா நீங்கள் ஏதாவது நிறையச் செய்யாதீர்கள்', என்றான் செந்தில்.

சாந்தினி அசையாமல் இருந்தாள். அவளும் உடன் செல்ல வேண்டி இருக்குமோ? அந்த இடத்தை விட்டு நகரவே அவளுக்கு விருப்பம் இல்லை.

நல்ல வேளையாகக் கருணாகரன் குறுக்கிட்டார். ''சாந்தினியை இங்கே விட்டுவிட்டுப் போடா, வீட்டில் ஒரு சின்னப் பெண் வளைய வருவது மனதுக்கு மிகவும் நன்றாக இருக்கிறது. உன் அம்மாவுக்கும் உதவியாக இருப்பாள்.''

''அவளுக்கு இங்கே பிடிக்குமோ... பிடிக்காதோ'' என்று இழுத்தான், செந்தில்.

''பிடிக்கிறது. நிரம்பவும் பிடிக்கிறது'' என்று மிகவும் அவசரமாகச் சொன்னாள், சாந்தினி.



''மெய்யாகவா? இருக்காது. நீ சும்மா அப்பா அம்மாவுக்காகப் பேசுகிறாய்'' என்று சந்தேகத்துடன் கூறினான் செந்தில்.

''உண்மை மெய். முழு நிஜமாகச் சொல்லுகிறேன் எனக்கு இங்கே மிக மிக மிகப் பிடிக்கிறது'' என்று உரைத்தாள், சாந்தினி.

செந்திலின் முகத்தில் குறும்பு கூத்தாடியது. ''பின்னே? இன்று காலையில் யாரோ இந்த வீட்டுக்குள் வரமாட்டேன் என்றார்களே'' என்றான், குறும்பாக.

சாந்தினி முகம் சிவந்தாள், காலையில் முட்டாள்தனமாக நடந்து கொண்டதை நினைத்தாள். ஆனால், அவன் மட்டும் திரித்துப் பேசலாமா? இப்போது இந்தப் பெரியவர்கள் என்ன நினைப்பார்கள். விளக்கிச் சொல்வதும் முடிகிற காரியம் இல்லை.

கோபத்துடன் அவனை முறைத்துப் பார்த்தாள். கருணாகரன் தன்னைக் கவனிப்பதைக் கண்டாள். ''உங்கள் அப்பாவும் அம்மாவும் இவ்வளவு நல்லவர்கள் என்று முன்பு நீங்கள் சொல்லவில்லையே'' என்று சமாளித்தாள், ''எப்படி சமாளித்தேன் பார்!'' என்பது போல மீண்டும் ஒருமுறை அவனைப் பார்த்தாள். அவன் முகத்தில் புன்னகை துலங்கியது.

கிளம்புகையில் செந்தில் தனியே சாந்தினியிடம் வந்தான்.

''ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்தேன். சாந்தி, இங்கே நீ சங்கரை மறந்துவிடப் பழகவேண்டும்'' என்றான் கண்டிப்பான குரலில்.

''கட்டளையோ?'' என்றாள், சாந்தினி, தலையைச் சரித்துக் கொண்டு.

''அப்படித்தான் வைத்துக்கொள்'' என்றான் அவன்.

''நினைவைக் கூட உங்களால் கட்டுப்படுத்த முடியும் என்று நினைத்தீர்களா?'' என்றாள், சாந்தினி, ஏளனமாக.

''கட்டுப்படத்தான் பழகிக்கொள் என்கிறேன்'' என்றான் அவன், அழுத்தம் திருத்தமாக.

அதற்குமேல் நில்லாமல் இளம்பியும் போய் விட்டான்.

சாந்தினிக்கு பசுஞ் சோலையின் எழிலும் குன்றியது. இளம்பும் தறுவாயில் அவன் இப்படிப் பேச வேண்டுமா?

# 14

## கூடா நட்பு!

காலையில் எழுந்தது முதல் சோமநாதன் கன்னத்தில் கை வைத்தபடி அமர்ந்து இருந்தார்.

அருமை பெருமையாகப் பெற்ற மகளைக் காணோம்! அவள் இருக்கும் இடம் கூடத் தெரியவில்லை பெற்ற மனம் அடித்துக் கொண்டது.

''எல்லாம் சங்கரால் வந்த வினை'' என்று நினைத்துக் கொண்டார். ''அவனுடன் தொடர்பு கொண்டதே தவறு'' என்று நொந்து கொண்டார். ''கூடாத நட்பு கேடாய் முடியும் '' என்ற பாலர் பாடத்தை இப்பொழுது தான் உணர்ந்தார்.

''ஆனால், இப்பொழுது வருத்தப்பட்டு என்ன செய்ய? வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டது! ஒன்று மூழ்க வேண்டும். அல்லது கரையேற வேண்டும்.

சாந்தினி இல்லாவிட்டால், அந்த வெள்ளத்தில் மூழ்கிட சோமநாதன் அஞ்ச மாட்டார். சாந்தினிக்காக அவர் கரையேற வேண்டியிருந்தது. அதற்கும் அவர் சங்கரைத்தான் நம்ப வேண்டியிருந்தது. நாயர் பிடித்த புலிவால் போல சங்கரிடம் சிக்கிக் கொண்டார்.



அப்பொழுது சங்கர் வந்தான்.

''சாந்தினியைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?'' என்று சோமநாதன் ஆவலுடன் அவனிடம் கேட்டார்.

''இரண்டு பேரும் எங்கே போனார்கள் என்றே தெரிய வில்லை'' என்று அவன் கையை விரித்தான்.

''எனக்கு பயமாக இருக்கிறது'' என்று சோமநாதன் அச்சத்துடன் சொன்னார்.

''சாந்தினியை அவன் கடித்துத் தின்று விடவா போகி றான்? ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்?'' என்று அவன் சீறினான்.

அவனுக்கு என்ன, இந்த சாந்தினி இல்லாவிட்டால் இன்னொரு நந்தினி! இப்போதைய சிக்கலில் இருந்து மீளுவ தற்கு மட்டுமே அவனுக்குச் சாந்தினி தேவைப்பட்டாள். மீண்ட பிறகு சாந்தினி கிடைத்தால் லாபம். கிடைக்காவிட் டால் நட்டம் இல்லை! குதிரை வாலில் கட்டி எவ்வளவோ போயிருக்கிறது. அதை போல அவளும், போய்விட்டுப் போகிறாள்!

ஆனால், சோமநாதன் சாந்தினியைப் பெற்றவர். அவர் அப்படியிருக்க முடியுமா? சும்மாவே அவர் மகளைக் காணா மல் சோகத்துடன் இருந்தார். சங்கரும் சீறவே, சோர்ந்து போய்விட்டார்.

அவரது தயவும் இப்பொழுது சங்கருக்குத் தேவை. எனவே, ''நான் இருக்க நீங்கள் ஏன் வீணாகக் கவலைப்படுகி றீர்கள்? சாந்தினியைப் பற்றிய கவலை எனக்கு மட்டும் இல்லையா? சாந்தினி உங்களுக்கு மகள் என்றால், எனக்கு வருங்கால மனைவி அல்லவா?'' என்று அவள் மீது அக்கறை கொண்டவன் போலப் பேசினான்.

''இப்பொழுது கூட அவளைத் தேடித்தான் போகி றேன்'' என்றான்.

''அவள் இருக்கும் இடத்தை எப்படியாவது கண்டுபிடித்து விடுங்கள்'' என்று சோமநாதன் ஆவலாகச் சொன்னார்.

''சீதையைத் தேடிச் சென்ற அனுமார் போல நான் புறப்பட்டு விட்டேன்'' என்று சங்கர் பெருமை அடித்துக் கொண்டான்.

அனுமார் ராமரிடம் அடையாள மோதிரம் கேட்டது போல, அவன் சோமநாதனிடம் ''ஒரு நூறு ரூபாய் கொடுங்கள், டாக்சி செலவுக்கு வேண்டும்'' என்று கேட்டான்.

என்னிடம் பத்து ரூபாய்கூட இல்லை'' என்றார், அவர்.

''அனுமார் ஆகாயத்தில் பறந்து போனாராம் அதுபோல நான் பறக்க முடியுமா?'' என்றான், சங்கர். செந்தில் காரில் போவான். நானும் டாக்சியில் போனால் தானே அவனைப் பின் தொடர முடியும்?''

''அது சரிதான். ஆனால், என்னிடம் பணம் இல்லையே'' என்று சோமநாதன் சலிப்பாகச் சொன்னார்.

''சாந்தினியின் நகைகள்...'' என்று சங்கர் எங்கோ பார்த்துக் கொண்டு மெல்ல இழுத்தான்.

சோமநாதன் அதிர்ச்சி அடைந்தார். ''நகைகள்... நான் கொடுக்க மாட்டேன்'' என்று கூவினார்.

''சாந்தினி இல்லாமல் அந்த நகைகளை என்ன செய்யப் போகிறீர்கள்?''

சங்கர் ஆணித்தரமாகக் கேட்டான்.

அதில் நியாயம் இருப்பதாகச் சோமநாதனுக்குத் தோன்றியது.

நகையை எடுத்து வந்து சங்கர் கையில் கொடுத்தார்.

அவன் முகம் மலர்ந்தது.

சங்கருக்கும் சோமநாதனுக்கும் உறவு ஏற்பட்டது ஒரு தனிக்கதை.



சங்கருக்கு உற்றார் பெற்றோர் என்று நெருக்கமாக யாரும் இல்லை. எப்படியோ பெற்றவர்கள் சேர்த்து வைத்து விட்டுப் போயிருந்த பணத்தின் உதவியால் படித்தான். படித்த படிப்புக்கு வேலையும் கிடைத்தது. இருமுறை தகாத பழக்கத்தால் வேலையைப் போக்கிக் கொண்டான். பிறகு ''கருணா புராடக்ட்ஸ்'சில் வேலைக்குச் சேர்ந்தான்.

அப்பொழுது செந்தில் வெளிநாட்டுக்குப் போயிருந்தான். கருணாகரன் மனிதத் தன்மையில் நம்பிக்கை உள்ளவர். சங்கரைச் சந்தேகிக்காமல் பொறுப்பான பதவியைக் கொடுத்தார். அப்போதே அவனுக்கு கை ஊறியது. பிறகு அவர் நோயில் விழவும், அனுபவம் அற்ற செந்தில் அலுவலகப் பொறுப்பை ஏற்கவும் ஊறல் எடுத்த கை நீளவும் தொடங்கி விட்டது.

ஆனால், அதற்கு ஒரு தடையும் இருந்தது. அவர் தான் சோமநாதன். அவர் அங்கே தலைமை குமாஸ்தாவாக இருந்தார். சங்கர் உதவி மானேஜராக இருந்தாலும் தனது சுரண்டல் வேலைக்கு சோமநாதனையும் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டியிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அவன் சாந்தினியை சந்தித்தான். அவள் சோமநாதனின் மகள் என்பதையும் அறிந்தான். அவனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல இருந்தது! ஒரே கல்லில் இரண்டு கனிகளை அடித்து வீழ்த்த முற்பட்டான்.

சாந்தினி நல்ல அழகி. அவளை மனைவியாக்கிக் கொள்ள சங்கர் விரும்பினான்.

அதன் வாயிலாக சோமநாதன் அவனுக்கு மாமனார் ஆகிவிடுவார். அந்த உறவைக் கொண்டு அவரை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சங்கர் திட்டமிட்டான்.

ஆனால், இந்தத் திட்டத்தை மிகவும் இரகசியமாக வைத்துக் கொண்டான். ''உங்கள் மகளை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன்'' என்று மட்டுமே சோமநாதனிடம் சொன்னான். அவன் பசுத்தோல் போர்த்திய புலி என்பதை அறியாத அந்த அப்பாவித் தந்தையும் அதைக் கேட்டு பூரித்துப் போனார். ஆனால், உடனே சம்மதம் கொடுக்கத் தயங்கினார். ''உங்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளும் அளவுக்கு எனக்குத் தகுதியில்லை'' என்று சொற்களை விழுங்கினார். அவருக்கு மேல் அதிகாரியாகவும் அதிக டிப்டாப்பாகவும் அப்பொழுது சங்கர் விளங்கினான்.

''பணம்தானே வேண்டும்? நான் தருகிறேன்!'' என்றான் சங்கர். சாந்தினி எவ்வளவு அழகான பெண்! அவளை அப்படியே தங்கத்தாலும் வைரத்தாலும் இழைத்துவிட மாட்டேனா!'' என்று வாய்ப்பந்தல் போட்டான். ''சென்னை பட்டணமே அதிரும்படி திருமணத்தை நடத்திக் காட்டுகிறேன்'' என்று அறைகூவல் விடுத்தான். ''ஒரு ஜாக்பாட் அடித்தால் போதும் இந்த கருணா புராடக்ட்ஸ் போல நாமே ஒன்பது கம்பெனி தொடங்கலாம்'' என்று அலட்சியமாகச் சொன்னான்.

ஆசை மேலே ஆசை காட்டி, சோமநாதனையும் குதிரைப் பந்தயத்தில் இழுத்து விட்டான். குதிரை மீது பணம் கட்ட, கம்பெனியில் பணம் எடுத்தார்கள். சோமநாதன் பயந்தார். ''இப்பொழுது சனிக்கிழமை மாலை, பணத்தை எடுத்துப் போகிறோம். நாளை ஞாயிற்றுக் கிழமை. குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுகிறோம். ஒன்றுக்குப் பத்தாகப் பணம் வரும். திங்கட்கிழமை காலையில் வந்ததும் கம்பெனி பணத்தை வைத்து விடலாம். இடையில் யாரும் வந்து கணக்கு பார்க்கவோ பண இருப்புப் பார்க்கவோ மாட்டார்கள்'' என்று சங்கர் நயமாக பேசி, அவரது பயத்தைப் போக்கினான்.



ஒரு பொய் மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டும். ஒரு தவறை மறைக்க ஒன்பது தவறு செய்ய வேண்டும். தொடர்ந்து கம்பெனியில் பணம் எடுத்தார்கள். எடுத்த பணத்தை மீண்டும் வைக்க முடியவில்லை. ஆகவே, அதற்கு கள்ளக் கணக்கு எழுதினார்கள், பிறகு முன் கூட்டியே கள்ளக் கணக்கு எழுதி பணம் எடுத்தார்கள். எல்லாம் சாந்தினிக்கு தெரியாமலே நடந்தது.

இந்த நேரத்தில்தான், ''திடீர்'' என்று தந்தையின் உடல் நிலை மோசமாகி, செந்தில் சென்னைக்குத் திரும்பினான். திரும்பியதுமே கம்பெனி நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டான். அவனுக்கு கிரிமினல் மூளை. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க எவரேனும் முயன்று இருப்பார்களோ என்று சந்தேகப்பட்டான். கணக்கு நோட்டுக்களை ஊன்றிக் கவனித்தான். கணக்குகளில் தில்லுமுல்லு நடந்திருப்பதைக் கண்டு கொண்டான்.

பிறகு... அந்த மாதிரி ஆவேசத்தை சங்கர் அதுவரை யாரிடமும் கண்டது இல்லை. முன்னே வேலை செய்த இடங்களில் ''போய்த் தொலை'' என்று விரட்டினார்களே தவிர யாரும் செந்திலைப் போலப் பழிவாங்க துடித்தது இல்லை. அவனிடம் இருந்து தப்புவதற்காக சாந்தினியைப் பணயமாக வைக்க வேண்டியதாயிற்று.

இளைஞனான செந்திலை எழில் மோகினியான சாந்தினியைக் கொண்டு மயக்கி விடலாம் என்று சங்கர் நினைத்தான். ஆனால், இந்த விஷயத்தில் சாந்தினி மீது சங்கருக்குக் கோபந்தான் ஏற்பட்டது. ''ஒரோரு பெண்கள் இதில் பாதி அழகை வைத்துக் கொண்டு தளுக்கிலும் குலுக்கிலுமாக என்னென்ன காரியங்களைச் சாதித்து விடுகிறார்கள்! இவள் மக்குமாதிரி விழிக்கிறாள்; நடுங்குகிறாள்! சே, என்ன பெண் இவள்!'' என்று எண்ணினான்.

அவன் சாந்தினிக்காகக் கவலைப்படவில்லை. அவன் கவலையெல்லாம், அவள் ஒரேயடியாக முரண்டு பிடித்துக் காரியத்தைக் கெடுத்துவிடக் கூடாதே என்பது தான்.

நடுத்தெருவில் இருக்கும் ''டெலிபோன்'' பெட்டியைத் தேடி சங்கர் நடந்தான்.

''டெலிபோன்'' பண்ண மூன்று புதிய பத்துக்காக நாணயம் இருந்தால் போதும். ஆனால் சேட் கடையில் நகையை விற்ற பணம் அவன் பையில் கனத்துக் கொண்டு இருந்தது! இன்னும் ஒரு வாரத்துக்கு அவனுக்குப் பணக் கவலையில்லை.

ஆனால், அவனுக்கு ஒரே மனக்கவலை. ''சாந்தினி எங்கே போனாள்? என்ன ஆனாள்?'' இந்தக் கேள்வி அவனை அரித்துக் கொண்டு இருந்தது.

சாந்தினி மீது மட்டும் அவனுக்கு அவ்வளவு அக்கறையா? அது மட்டும் இல்லை! அவன் போன வேலை காயா? பழமா? அதுவும் அவனுக்குத் தெரிய வேண்டும்! அதற்காகத்தான் அவளை வலை போட்டு தேடிக் கொண்டிருக்கிறான்.

வழியில் டெலிபோன் பெட்டி எதிர்ப்பட்டது.

சங்கர் அதற்குள் நுழைந்தான்.

எண்களைச் சுழற்றினான்.

இணைப்புக் கிடைத்தது.

மூன்று பத்துக் காசுகளை உண்டியலில் போட்டு விட்டுப் பேசினான்.

''சாந்தினி இருக்கிறாளா?''

குரலை மாற்றிக் கொண்டு ஒரு பெண்ணைப் போலப் பேசினான்.''

''நீங்கள் யார் பேசுகிறீர்கள்?''

எதிர்முனையில் இருந்தும் பெண்ணின் குரலே கேட்டது.



''நான் சாந்தினியின் தோழி சாரதா பேசுகிறேன். அவளுடன் அவசரமாகப் பேச வேண்டும். கூப்பிடுகிறீர்களா?''

''அம்மாவும் அய்யாவும் மாடியில் தனியாகப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்!''

அதைக் கேட்டதும் சங்கர் ''டக்''கென்று வேகமாக ரிசிவரைக் கொக்கியில் மாட்டினான்.

அவன் முகம் கடுகடுத்தது.

அவனுக்கு சாந்தினியின் மீது காதல் இல்லை. ஆனால், அவளது அழகின் மீது அவனுக்குக் கவர்ச்சி இருந்தது. அந்த அழகை முகர்ந்து பார்க்கக் காத்துக் கொண்டு இருந்தான். ஆகவே செந்திலையும் அவளையும் இணைத்துப் பார்க்க அவனுக்குப் பொறுக்கவில்லை; பொறாமையாக இருந்தது.

சாந்தினி மீது அவனுக்குச் சந்தேகம் இல்லை. அவள் கண்ணகி பரம்பரை என்பது அவனுக்குத் தெரியும். அதோடு செந்திலுக்கு ஏற்கனவே நளினா இருக்கிறாள். ஆனாலும், அவன் பணக்கார இளைஞன், அழகிகளைப் பார்த்தால் விடுவானா? சாந்தினியையும் உல்லாச சல்லாபத்துக்கு அழைத்தால்...? அப்படி நினைக்கும் பொழுது சங்கருக்கு சங்கடமாகத்தான் இருந்தது. அவளின் மினுமினுப்பான மேனி மீது அவ்வளவு தூரம் அவன் மோகம் கொண்டு இருந்தான்.

டெலிபோன் பெட்டியில் இருந்து வெளியேறியதும், சங்கரின் முகம் சரியாகி விட்டது. அதற்குக் காரணம் செந்திலின் வீட்டில் சாந்தினி இருக்கிறாள் என்ற தகவல் கிடைத்து இருக்கிறதே?

எப்படியாவது அவளைச் சந்தித்து வேலை எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதை அறிய வேண்டும் என்ற வேகத்துடன், உடனே ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டு அமர்ந்தான்.

செந்திலின் கார் அப்பொழுதுதான் வெளியில் சென்றது.

சங்கர் கிழக்கிலிருந்து மேற்கே வந்து கொண்டு இருந் தான். செந்திலின் கார் கேட்டில் இருந்து மேற்கே திரும்பிச் சென்றது. எனவே, அவனை செந்தில் பார்த்திருக்க முடியாது.

ஆனால், காரில் செந்தில் இருப்பதை சங்கர் பார்த்தான். வேறு யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியானால் சாந்தினி? அவள் வீட்டுக்குள் இருக்கக் கூடும் என்று அவன் நினைத்தான்.

வாடகைக் காரில் இருந்து இறங்கி சங்கர் நின்றான். ''வீட்டுக்குள் வேறு யார் இருப்பார்கள்? நேரடியாக உள்ளே போய் விடலாமா? நாய் இருக்குமோ?'' என்று யோசித்தான்.

அப்பொழுது வீட்டுக்குள் இருந்த ஒரு வேலைக்காரி வெளியே வந்தாள்.

சங்கர் அவளிடம் ஓடினான்.

''அம்மா இருக்கிறார்களா?'' என்று கேட்டான்.

அவள் அவனை ஏற இறங்கப் பார்த்தாள். ''நீங்கள் யார்?''

''நான் சாந்தினிக்கு வேண்டியவன்''

''ஓ! அந்த அம்மாவைக் கேட்கிறீர்களா?''

''ஆமாம், சாந்தினி உள்ளேதானே இருக்கிறாள்?'' வேலைக்காரி வாயைத் திறக்கவில்லை.

''சொல்ல மாட்டாயா?''

''சாந்தினி அம்மாவைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்லக் கூடாது என்பது சின்னய்யாவின் கண்டிப்பான கட்டளை.''

ஓகோ என்ற சங்கர், ஒரு பச்சை நோட்டை எடுத்து அவள் முன்னே நீட்டினான்.

அவள் வாயெல்லாம் பல்! குழைந்துகொண்டே அதை வாங்கி, மடியில் செருகிக் கொண்டாள்.



''இப்பொழுது சொல்'' என்றான், சங்கர்.

''அம்மா வீட்டில் இல்லையே.''

அவள், இஞ்சி தின்ற குரங்கு போல, இளித்தாள்.

''எங்கே போயிருக்கிறார்கள்?''

''எனக்குத் தெரியாதே!''

''அதோடு ரூபாய் செரித்து விட்டது!''

சாந்தினி காரில்தான் போயிருப்பாளோ? நாம் தான் சரியாகப் பார்க்கவில்லையோ?'' என்று சங்கர் நினைத்தான்.

மீண்டும் வாடகைக் காரில் ஏறிக் கொண்டு, ''வேகமா கப் போப்பா'' என்று டிரைவரை விரட்டினான்.

சற்று நேரத்திலேயே செந்திலின் காரை அந்த டாக்சி பின் தொடர்ந்தது!

# 15

## வந்தது, கடுவன் பூனை!

வெகு விரைவிலேயே சாந்தினிக்கு பசுஞ்சோலை வாசம் பழகியும் பிடித்தும் போயிற்று. செந்திலுடைய பெற் றோர் அவளிடம் மிகுந்த பாசம் காட்டினர். அவளுக்கும் வழக்கமாக அன்னியர்களிடமும், அதுவும் பணக்காரர்களி டம் உண்டாகும் ஒதுக்கம் அவர்களிடம் உண்டாகவில்லை.

காலை உலாவச் செல்லும்போது யாரும் உடன் வருவது கருணாகரனுக்குப் பிடிக்காது. அவர் உலவி வந்ததும் காலைச் சிற்றுண்டி தொடங்கும். மற்றது எல்லாம் அவருக்கு மாடியில் தான். கருணாகரன் களைப்படையாத நாட்களில் மூவருமாகச் சீட்டு ஆடுவார்கள். ஒருநாள் கருணாகரன் தாயம் விளையா டக் கூட வந்தார்.

அவர் ஓய்வு எடுக்கும் வேளைகளில் சாந்தினியும் சிவகாமியும் அரட்டை அடித்தபடி ஏதாவது வேலையில் ஈடுபடுவார்கள்.

சிவகாமியின் பேச்சு பெரும்பாலும் செந்தில் பற்றியதாகவே இருக்கும். அவனது பாசம், பிடிவாதம், பரிவு எல்லாம் பற்றிக் கதை கதையாகக் கூறுவார். ''யாராவது தப்பாகக் குற்றம் சாட்டினால் அவனுக்கு ஆவேசமே வந்துவிடும். பொதுவாக அவனுக்கு பொறுமை சற்று குறைவுதான். ஆனால் எதையாவது தொடங்கினால் முடிக்கும்வரை ஓய மாட்டான். புரிந்துகொண்டு பழகினால் அவனது பரிவும், பாசமும் தெரியும்'' என்பார், அடிக்கடி.

செந்தில் பற்றியே அவர் பேசும்போது சாந்தினிக்கு ஒரு மாதிரி இருக்கும். இவ்வளவு நல்லவர்களிடம் அவளைக் கொண்டு சேர்த்தான். ஆனாலும், அவளது வாழ்க்கையை அமைக்க அவன் யார்? அதோடு அவள் தந்தை ஒரே மகளைப் பிரிந்து அவர் இப்போது என்ன பாடுபடுவார்? என்னதான் அவர் தப்பு செய்தபோதும் இவ்வளவு குரூரமாக தண்டிப்பது? பரிவு, பாசம் என்கிறாரே?

''என்னம்மா நீங்கள் எப்போதும் உங்கள் மகனைப் பற்றியே பேசுகிறீர்களே'' என்று கேட்டுவிட்டாள் ஒரு நாள்.

''என்னம்மா செய்வது? ஒரே மகன். பெற்றவர்களுக்கு வேறு உலகம் ஏது? வேறு பிள்ளைகள் இருந்தாலும் அவர்களைப் பறறிப் பேசலாம்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார், சிவகாமி.

''ஏன் இன்னொரு பிள்...'' என்று தொடங்கிவிட்டு இருகைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டாள், சாந்தினி. எவ்வளவு தூரத்துக்கு வாய் நீளத் தொடங்கிவிட்டது!

ஆனால், சிவகாமிக்கு அதில் ஒரு தப்பும் தெரியவில்லை போலும். தன் போக்கில் பதில் உரைத்தார். ''எங்களுக்கும் இன்னொரு பிள்ளைக்கு ஆசைதான் சாந்திம்மா. ஆனால்,



இவன் அவசரக்காரனாகப் பிறந்தான் அல்லவா? அதில் ஏதோ கோளாறாகிவிட்டதாம். டாக்டரம்மா வேறு பிள்ளை இல்லை என்று கூறிவிட்டார்கள். என்னவோ, என் தவம் பலித்தது. இவன் வளர்ந்தான், எங்கள் குலம் வளர இவன் தான் ஆதாரம்'' என்றார்.

''ஒரு திருமணத்தைச் செய்துவைத்தால் குலம் தானாக வளரத் தொடங்கி விடுகிறது?'' என்று வார்த்தைகள் நாக்கு நுனிவரை வந்து அடங்கின. சிவகாமி அம்மாளுக்குக் கூட அவை அதிகமாகப்பட்டு விடுமே.

அம்மா, அந்தச் செவ்வாழைப் பூ வந்துவிட்டது என்று முத்துப் பொன்னன் சொன்னானே. பார்த்து விட்டு வருவோமா?'' என்று பேச்சை மாற்றினாள்.

சிவகாமியும் சம்மதிக்கவே இருவரும் வாழையைப் பார்க்கச் சென்றனர்.

செழித்து வளர்ந்த வாழை. செவேர் என்று பெரிய பூ. நாணமுள்ள நங்கைபோல் நிலம் நோக்கி நின்றது. சாந்தினி சுற்றிச் சுற்றி வந்து ரசித்துப் பார்த்தாள்.

பிறகு இருவரும் மீண்டும் வீட்டுக்குள் வந்தார்கள்.

''அந்த வாழையைச் சுற்றிலும் எத்தனை கன்றுகள்! நீ கவனித்தாயா சாந்தி?'' என்று ஏதோ யோசனையாக வினவினார் சிவகாமி.

''ஆமாம் அம்மா ஏழு கன்றுகள்.''

''வாழையின் குலம் பெருகுகிறது. தாய் வாழையின் கீழே அடிவாழையாக அழியாமல் வளர்கிறது என் குலம்...? இந்தப் பையன் திருமணம் செய்து கொண்டு ஒரு பேரனைப் பெற்றுக் கொடுத்தால் என் கலி தீர்ந்து விடும். அவன் மனம் வைக்க வேண்டுமே'' என்றார் ஏக்கத்துடன்.

''ஏன் அம்மா மனம் வைக்கவில்லை?'' என்று ஆவலை அடக்க மாட்டாமல் சாந்தினி கேட்டாள்.

''என்னவோ அவனுக்குப் பிரியம் இல்லை. வெளிநாடு செல்லுமுன் கொஞ்சம் பணிந்து வந்தான், என் ஒன்றுவிட்ட அண்ணன் மகள் — அன்று டெலிபோன் செய்தாளே அந்த நளினியைத்தான் அவர் முடிவு செய்தார். எப்படியோ ஒரு மருமகள் வந்தால் சரி என்று இருந்தது, எனக்கும். ஒருநாள் அண்ணன் வந்தவர் அவன் காது கேட்கச் சொல்லிவிட்டார். கால்கட்டுப் போடாமல், வெளிநாடு போனால் செந்தில் கெட்டு விடுவான் என்று. அவ்வளவுதான் அவனுக்கு ஒரே ஆங்காரம் வந்துவிட்டது. ''கால் கட்டும் வேண்டாம்? கை கட்டும் வேண்டாம் ஒன்றும் இல்லாமல் வெளிநாடு போய் விட்டு, நல்லவனாகத் திரும்புகிறேனா இல்லையா பாருங் கள்'' என்று கத்திவிட்டுப் போய் விட்டான். இதற்குமேல் என்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொன்னால் உங்களுக் கும் என்மேல் நம்பிக்கை இல்லை என்றுதான் அர்த்தம் என்றான், எங்களிடம். மேலே நாங்கள் என்ன செய்வது? உன் மாமாவும் இதில் எல்லாம் வற்புறுத்தக் கூடாது என்று சொல்லிவிட்டார்'' என்று சிவகாமி பெருமூச்சு விட்டார்.

''நீங்கள் கவலைப்படாதீர்கள். எல்லாம் நல்லபடியாக முடியும் அம்மா'' என்று சாந்தினி ஆறுதலாகச் சொன்னாள்.

''என்ன சாந்தி மீண்டும் ''அம்மா அம்மா'' என்கிறாய்? மாமா நேற்று சொல்லவில்லை நீ என்னை ''அத்தை'' என்று அழைக்க வேண்டும் என்றாரே'' என்று சிவகாமி நினைவு படுத்தினார்.

சாந்தினியின் இதழ்களில் புன்னகை விரிந்தது. நேற்று கருணாகரன் ஒரே கேலி செய்துவிட்டார். ''என்னை மாமா என்கிறாய். அவளை அம்மா என்கிறாய். நாங்கள் ஒருவருக் கொருவர் அண்ணன் — தங்கையா?'' என்று கிண்டல் செய்தார். பிறகு ''அத்தை'' என்று சிவகாமியை அழைக்கச் சொன்னார். சாந்தினிக்கு மறந்து போய் பழைய ''அம்மா' 'வே வந்து கொண்டு இருந்தது.



''சரி அத்தை'' என்ற சாந்தினி, ''வெளிநாடு போய் வந்த பிறகு அவர் திருமணம் என்ன ஆயிற்று?'' என்று ஆவலோடு கதை கேட்டாள்.

''வந்த பிறகு இன்னொரு புராணம். அப்போதும் என் அண்ணன் தான். அவருக்கு சும்மாவே பேசத் தெரியாது. அவன் வந்ததும் வராததுமாக ''உன் அப்பா கண்ணை மூடுமுன் உன் கல்யாணம்?'' என்று தொடங்கினார். இவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டான். ''அப்பா கண்ணை இவர்களாகவே மூடிவிடுவார்கள். சே... இந்த கல்யாணம் என்கிற பேச்சு இனி யாரேனும் எடுத்தால் நான் பொல்லாதவன் ஆகிவிடுவேன் என்று ஒரேயடியாக முடித்து விட்டான்'' என்றார்.

''அதுவரை நல்லவராக இருந்தாராக்கும்?'' என்று சாந் தினி முணுமுணுத்தாள்.

''என்னம்மா சொல்கிறாய்?'' என்று வினவினார் சிவ காமி.

''அ...அது ஒன்றும் இல்லை அத்தை. உங்களுக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும் என்று நினைத்தேன்'' என்று சமாளித்தாள்.

''போகிறது கடவுள் இப்போதுதான் அவனுக்கு நல்ல புத்தியைத் தந்துவிட்டாரே'' என்று ஆறுதல் அடைந்தார்.

சாந்தினியின் நெஞ்சு படபடத்தது. நல்ல புத்தி வந்து விட்டதாம்மா. அப்படியானால் திருமணம் செய்து கொள்ளப் போகிறாரா? யாரை? அந்த நளினியையே தானா? மனதில் தோன்றிய அத்தனை கேள்விகளும் நாவில் வந்துவிடாமல் இருக்க உதடுகளை இறுக மூடி அவன் யாரை மணந்தால் அவளுக்கு என்னவாம்!

சனிக்கிழமை இரவு செந்தில் மீண்டும் அங்கே வந்தான். வந்தவுடன் நேரே தந்தையிடம் சென்றான்.

வழியில் நின்ற சாந்தினியிடம் ''சுகமா?'' என்ற ஒரே வார்த்தையுடன் அவன் சென்றது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

பிறகு எல்லோரும் பேசிக் கொண்டு இருந்தபோது செந்தில் சொன்னான். ''இன்று அலுவலகத்தில் ஒன்று நடந்தது. ஒரு நடுத்தர வயது மனிதர் என்னைப் பார்க்க வந்தார்'' என்று நிறுத்தினான்.

எல்லோரும் அவன் முகத்தைப் பார்த்தனர். சாந்தினிக்கு ஏனோ நெஞ்சு துடித்தது. எப்படியோ இது தன் விஷயம் என்று தோன்றியது.

ஓரக்கண்ணால் அவளைப் பார்த்துவிட்டு அவன் தொடர்ந்தான்.

''அவர் என்னிடம் என்ன கேட்டார் தெரியுமா? அவர் மகளைக் காணோமாம். எங்கே என்று தேடித் தர வேண்டுமாம். வேடிக்கையாக இல்லை? போலீசில் சொல்லுங்கள். அவர்கள் தேடிப்பிடித்துக் கொண்டு வருவார்கள். என்னைத் தொல்லை செய்யாதீர்கள் என்று விரட்டினேன்.''

சாந்தினிக்கு இப்போது புரிந்துவிட்டது, அவனைத் தேடிவந்த சோமநாதனை, செந்தில் அவமானப்படுத்தி அனுப்பியிருக்கிறான். அவள் கண்களில் நீர் ததும்பியது. உட்கார்ந்து இருந்த ரத்தினக் கம்பளத்தின் பூக்களை வருடியபடி அதைப் பார்ப்பது போலக் குனிந்து கொண்டாள்.

இரவு உணவின்பின் செந்தில் எழுந்து வாயிலுக்குப் போனான். ''அவனுக்குப் பழம் ஏதாவது வேண்டுமா என்று கேள்'' என்று சிவகாமி சாந்தினியை அனுப்பினார்.

''சரி'' என்று முன்பக்கம் போனாள் சாந்தினி.

அங்கே செந்தில் நிதானமாக முன்னும் பின்னும் நடந்து கொண்டு இருந்தான். கையில் சிகரெட்டின் தீக்கங்கு ஜொலித்தது.



''சிகரெட் பிடிப்பாரா?'' என்று சாந்தினி எண்ணிக் கொண்டாள். என்ன சொல்லி அழைப்பது என்று தெரியாமல் தொண்டையை கனைத்தாள்.

''என்ன?'' என்று திரும்பினான், செந்தில்.

''வந்து... அப்பா வந்தாரா?''

''ஆமாம், வந்தார் வந்தார் என் மனம் வேதனையால் துடிக்கிறது ''என் மகள் எங்கே என்று சொல்லுங்கள்'' என்று கதறினார்'' என்று இரக்கமற்றுச் சொன்னான், அவன்.

''தவித்திருப்பாரே. நீங்கள் சொல்லியிருக்கக் கூடாதா? அவருக்கு நிம்...''

ஆத்திரத்துடன் செந்தில் இடைமறித்தான். ''ஏன் சொல்ல வேண்டும்? அப்பா நோயில் கிடந்தபோது என்னை மோசம் செய்தாரே. வஞ்சகம் செய்தாரே. அதற்காகவா? அவர் நிம்மதி பெறவேண்டுமா? பின்னே நான் அவருக்கு அளித்து இருக்கும் தண்டனை என்ன ஆவது?''

''தண்டனையா?'' சாந்தினியின் நெஞ்சு வலிக்கும் போல அடித்துக் கொண்டது. அவன் ஊகித்தது சரிதானா?''

''பின்னே, என்னவென்று நினைத்தாய்? மகளைக் காணாமல் தவிக்கட்டும்! துடிக்கட்டும்; வேதனைப் படட்டும். ஆமாம், அப்பாவைப் பற்றி இவ்வளவு கேட்கிறாயே — அந்த இன்னொருவர் — அவன் தான் உன் ஆசைக் காதலன் — வருங்காலக் கணவன் — அவனைப் பற்றி ஒன்றும் தெரிய வேண்டாமா?'' என்றான் குரூரமாக.

சாந்தினி உதடுகளை இறுக மூடிக்கொண்டு நின்றாள். சென்னையில் முதலில் கண்ட அந்த செந்தில் அல்லவா வந்து இருக்கிறான்! இவனிடம் என்ன பேச முடியும்?

அவளது மவுனத்தைப் பொருட்படுத்தாமல் அவன மேலும் சொன்னான். ''நீ கேளாவிட்டாலும் என் மனது கேட்கிறதா? சொல்லி விடுகிறேன். எனது சென்னை வீட்டில்

நீ இல்லை என்பதைக் கண்டு கொண்டான். நீ எங்கே என்று வானத்தையும் பூமியையும் சேர்த்து அலசுகிறான்! இந்த ஒரு வாரத்தில் அந்த வீட்டுக்கு எத்தனைவித டெலிபோன் 'கால்' கள் தெரியுமா? மடையன். அவனுக்கு மட்டும்தானா குரலை மாற்றத் தெரியும்? ''நான் சாந்தினியின் தோழி சாரதா பேசுகிறேன்'' என்று குரலை மாற்றி அழகு காட்டினான். நானும் வேலைக்காரி போல் குரலை மாற்றி ''அம்மாவும் அய்யாவும் மாடியில் தனியாகப் பேசிக் கொண்டு இருக்கி றார்கள்'' என்றேன், அவனுக்கு எப்படி இருந்திருக்கும் ஆகா!'' ரசனையோடு கூறிச் சிரித்தான்.

சாந்தினி பிரமித்தாள். ஒருவரின் துன்பத்திலும் வேதனை யிலும் ஒருவர் இவ்வளவு மகிழ்ச்சி அடைய முடியுமா? என்ன குத்தல்! கிண்டல்! ஏளனம்? ஏகத்தாளம்! போனவாரம் இங்கே இருந்த செந்திலா இவன்? கற்பாரையின் கடினம் அவன் மனதில் எப்படி வந்தது? சாந்தினிக்கு மனதில் எதுவோ வேதனை செய்தது. நெடுமூச்சு ஒன்று நெஞ்சைப் பிளந்து சென்றது.

''என் பின்னோடு நாய் போல் அலைகிறான். இன்றுகூட வந்தான். நான் இந்தப் பக்கம் திரும்பியதும் போய்விட்டான். என் பெற்றோரிடம் உன்னை அனுப்பி இருப்பேன் என்று அவனால் நம்பமுடியவில்லை. அவ்வளவு கவுரமாக உன்னை நடத்துவேன் என்று எண்ணவில்லை போலும். மற்ற இடம் எல்லாம் தொடர்கிறான். டாக்ஸி தான். பணத்திற்கு உன் நகைகளை சோமநாதன் விற்று விட்டாராம். பாவம், கடைசிச் சொத்து'' என்றான் பழைய மாதிரியே.

எந்தக் கஷ்டம் வந்தாலும் அந்த நகைகளைச் சோமநா தன் பாதுகாத்து வந்தது அவளுக்கு நினைவு வந்தது.

''உன் திருமணத்திற்கு இருக்க வேண்டும் என்பார். அதையும் விற்றாரானால் எவ்வளவு வேதனைப்பட்டு இருக்க வேண்டும்? ''பாவம்'' என்று முணுமுணுத்தான்.

செந்தில் ஏளனமாக நகைத்தான்.

# 16

## மாங்காய் இனித்தது!

செந்தில் இருக்கும் மனோநிலையில் அவனிடம் பேசிப் பயன் இல்லை என்று சாந்தினி கண்டாள். மேலே பேச்சு இல்லாமல் திரும்பினாள். அதற்குள் வந்த வேலை நினைவு வந்தது.

''உங்களுக்கு ஏதாவது பழம் வேண்டுமா என்று அத்தை கேட்டுவரச் சொன்னார்'' என்றாள் மெல்ல.

''அத்தை?''

சாந்தினி நாக்கைக் கடித்துக் கொண்டாள். இதற்கு என்ன விளக்கம் தரப்போகிறானோ? ''உங்கள் அம்மா'' என்றாள் எழும்பாத குரலில்.

''அம்மா; ஒ... இந்த அம்மா!'' அவனுடைய முகச்சு ளிப்பு லேசாக நீங்கியது. ''நானே வந்து எடுத்துக் கொள்கி றேன் என்று சொல்'' என்றான் லேசான புன்னகையுடன்.

கொஞ்சம் இரக்கம் தெரிகிறதே! சாந்தினி மீண்டும் தயங்கி நின்றாள்.

''என்ன?'' என்று தணிவாகவே அவன் கேட்டான்.

அவளுக்கு மேலும் நம்பிக்கை உண்டாயிற்று. ''இல்லை வந்து... அப்பாவிடம் மட்டும் சொல்லலாமா? அவர் நிரம்ப வும் வேதனைப்பட்டு...''

கணத்தில் அவன் மாறினான். ''ஒன்பதினாயிரம் ரூபாய் எடுத்துக் குதிரை வாலில் கட்டியபோது ஆனந்தமாக இருந் தது அல்லவா? அனுபவம் இல்லாதவனை ஏமாற்றினோம் என்று எக்களிப்பாக இருந்தது அல்லவா?'' என்று சீறினான்.

சாந்தினி பேச்சிழந்து திரும்பினாள்.

''நில் சாந்தினி. நீ என்னிடம் ஒப்புக் கொண்ட நிபந்த னைகள் எல்லாம் நன்றாக நினைவு இருக்கட்டும் அவை கடுகளவு மீறப்பட்டதாகத் தெரிந்தாலும் நான், மிருகம் ஆகிவிடுவேன், ஜாக்கிரதை'' என்று கடுமையாக எச்சரித்தான்.

சாந்தினி தலைகுனிந்தபடி உள்ளே சென்றாள்.

அன்று இரவு அவளுடைய தலையணை கண்ணீரால் நனைந்தது. தந்தைக்காகவா? தனக்காகவா? அல்லது சங்கருக் காகவா? ஏன் கண்ணீர் சிந்தினாளோ, அவளுக்கே தெரிய வில்லை. ஆனால் செந்திலின் கடுமை நெஞ்சில் உறைத்தது என்பது மட்டும் உண்மை.

சிவகாமியின் பேச்சை வைத்து அவனைத் தன் மனதில் நல்லவனாக உருவகப்படுத்தி வைத்தாளே. அவன் வரவை (உண்மையை ஒப்புக்கொண்டால்) ஆவலோடு எதிர்பார்க்கக் கூடச் செய்தாளே...

சாந்தினி சட்டென எழுந்து உட்கார்ந்தாள்.

மனதுக்குக் கடிவாளம் இல்லை என்பது மெய்தான். சாந்தினி செந்திலை ஆவலோடு எதிர்பார்ப்பதா? அவளு டைய தந்தையின் விரோதி செந்திலையா? ஆறுமாதக் கைதி யாக அவளைப் பிடித்து வைத்திருக்கும் செந்திலையா? சீ முட்டாள்தனம் தான்!

இன்னமும் சும்மாவிட்டால் மனம் முழு முட்டாள் ஆகிவிடும் என்று நினைத்தாள் சாந்தினி. ''முருகா முருகா'' என்று இடைவிடாது சொல்லத் தொடங்கினாள். அப்படியே உறங்கியும் விட்டாள்.

மறுநாள் சாந்தினி சற்று தாமதமாக எழுந்தாள். காலைக் கடன்களை அவசரமாக முடித்துக் கொண்டு சிவகாமியிடம் சென்றாள்.



''வந்தாயா சாந்தியம்மா, இந்தா முதலில் காபியைக் குடி'' என்று கப்பைக் கொடுத்தார்.

அவள் குடித்ததும், ''தோட்டத்திற்குப் போய் வெண் டைப் பிஞ்சு பறித்து வாம்மா. ஒன்றுபோல் ஒரு விரல் நீளத்தில் பறி; அப்படியே வதக்கினால் செந்திலுக்குப் பிரியம் '' என்று பிளாஸ்டிக் கூடையை நீட்டினார்.

''அந்த ஆளுக்கு நான் பறிக்க மாட்டேன்'' என்று மறுக்க நினைத்தாள் சாந்தினி. பிறகு ''சிவகாமி அம்மா சொல்லுகி றாரே. அவரிடம் மறுத்துப் பேசுவதா?'' என்று கூடையை வாங்கிக் கொண்டு சென்றாள்.

வெகு கவனமாகப் பார்த்துப் பார்த்துப் பிஞ்சுகளைப் பறித்தாள்.

''அதிசயம்! அதிசயம்! ஆனாலும் இது உண்மை!'' என்ற வியப்புக்குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

செந்தில்தான் இயல்பான சிரிப்புடன் நின்றான்.

சாந்தினிக்கு நேற்றைய வேதனையும் கோபமும் நினை விலேயே நின்றன. முகத்தைத் திருப்பிக் கொண்டு தன் வேலையில் ஈடுபட்டாள்.

அவள் கவனியாதவன் போலத் தொடர்ந்தான். ''என்ன அதிசயம் தெரியுமா? வெண்டைப் பிஞ்சுகளே வெண்டைப் பிஞ்சுகளைப் பறிக்கின்றன'' என்றான்.

அவளுடைய விரல்களை வெண்டைப் பிஞ்சுகளுக்கு ஒப்பிடுகிறானாம்!

''யாரும் எனக்கு சோப்புப் போட வேண்டியது இல்லை '' என்று கடுகடுப்புடன் பதில் உரைத்தாள் சாந்தினி.

''மெய்தான், நீதான் குளித்து விட்டாய் போல் தெரிகிற தே'' என்று நகைத்தான் அவன்.

தோட்டம் எல்லாம் மென்மையும் கம்பீரமுமாகப் பர விய சிரிப்பு. நேற்றைய சிரிப்புக்கும் இன்றைய சிரிப்புக்கும் எவ்வளவு வித்தியாசம்! அவனை அண்ணாந்து பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்?'' என்று புன்னகையுடன் கேட்டான் அவன்.

''உங்களுக்கு ஞாயிற்றுக்கிழமைதான் ராசியோ என்று நினைத்தேன்'' என்றாள், சாந்தினி கிண்டலாக.

''அவன் கடகடவென்று சிரித்தான், பிறகு ''ஏது உனக்குக்கூட இதுபோல் பேச வருகிறதே! பரவாயில்லை தான். நேற்று எனக்கு நிரம்பவும் கோபம் தெரியுமா?'' என்ற தொடங்கினான்.

''என்னிடம்? நான் என்ன தப்பு செய்தேன்?''

''உன்னிடம் இல்லை சாந்தி, உன் அப்பாவிடம். பிறகு சங்கரிடம், நேற்று மதியம்தான் உன் அப்பா வந்தார்! நான் உன்னை இல்லாத சித்திரவதை எல்லாம் செய்வதுபோல் பேசினார். பிறகு வரும்போது சங்கர் மோப்பம் பிடித்துக் கொண்டு பின்னாலேயே வந்தான். இங்கே திரும்பியதும் தொடராமல் நின்று விட்டான். இங்கே அம்மாவிடம் உன்னை நான் அனுப்பியிருக்கக் கூடும் என்ற எண்ணமே இல்லை பார். மனிதனிடம் கெட்டதைத்தான் எதிர்பார்க்க வேண்டுமா? அப்படியானால் அந்தத் தரங்கெட்டவனிடம் உன்னை ஏன் அனுப்பினார்கள்? ஆண் பிள்ளைகள் செய்யும் காரியமா, இது? அதுதான் எனக்கு ஆத்திரம்'' என்றான்.

''அதற்கு நான் என்ன செய்வேன்?'' என்றாள் சாந்தினி மீண்டும்.

''அந்த சங்கரை நினைத்துப் பாவப்பட்டுக் கொண்டு நின்றாயே.''

சாந்தினி ஒன்றும் கூறாமல் நின்றாள். அவளுக்கு அப்பாவால் நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை சங்கர், ஆயினும் அவனைவிட அப்பாவை எண்ணித்தான் பரிதாபப்பட்டேன் என்று எப்படிக் கூறுவது?

''போன தடவை நான் சொல்லிட்டுப் போனது நினைவு இருக்கிறதா?''



அதற்கும் சாந்தினி விடையளிக்கவில்லை.

''எதற்கும் சும்மா நின்றால் எப்படி?''

செந்திலின் சுதி ஏறத் தொடங்கியது.

சாந்தினி கையில் இருந்த கூடையைப் பார்த்தாள். ''அய்யய்யோ, இன்னும் பறிக்க வேண்டுமே'' என்று வெண்டைப் பாத்தியில் குனிந்தாள்.

செந்தில் முதலில் புருவத்தைச் சுளித்தான். பிறகு வாய் விட்டுச் சிரித்தான், ''பேச்சை மாற்றுகிற முயற்சியா? நடக்கட்டும். ம்... யாருக்கு இப்படி விழுந்து விழுந்து பறிக்கிறாயாம்?'' என்றபடி தானும் ஒன்றிரண்டைப் பறித்துக் கூடையில் போட்டான்.

''உங்களுக்குத்தான், நிரம்பப் பிடிக்குமாமே. அத்தைதான் பறித்து வரச் சொன்னார்கள்'' என்றாள் சாந்தினி.

''ஆமாம், சின்ன வயதில் யாரோ சொன்னார்கள். வெண்டைக்காய் தின்றால் படிப்பு வரும் என்று. அன்று முதல் நிறையத் தின்னத் தொடங்கினேன். மெல்ல மெல்ல சுவையும் பிடித்துப் போயிற்று.''

அன்று மாலை செந்தில் சாந்தினியை மாந்தோப்பைப் பார்க்க அழைத்துச் சென்றான்.

பெரிய மரங்கள் நிறைந்த காய்கள், அதிலும் கொத்துக் கொத்தாக ருமானி கண்ணைக் கவர்ந்தது.

''கண்ணுக்கு அழகாக இருப்பதெல்லாம் சிறந்தவையாக இருப்பது இல்லை. ருமானியைவிட கரடுமுரடாக இருக்கிறது பார் இந்த மல்கோவா வெகு சுவையாக இருக்கும்'' என்று காட்டிவிட்டு ''சங்கரை மறந்துவிட வேண்டும் என்றேனே'' என்று பேச்சை எடுத்தான்.

''நீங்களே நினைவு படுத்துவீர்கள்போல் இருக்கிறதே'' என்றாள் சாந்தினி துடுக்காக...

''ஓ... ஏன் சாந்தி சங்கரை உன் அப்பாவா உனக்காகத் தேர்ந்தெடுத்தார்?'' என்று சுவையற்றுக் கேட்பது போலக் கேட்டான்.

''இல்...லை'' என்று இழுத்தாள் சாந்தினி.

சங்கராகத்தானே அவளை மணக்க முன்வந்தான்?

''காதலாக்கும். அது எந்தக் கத்தரிக்காயாக இருந்தாலும் சரிதான். நீ அவனை மறக்கத்தான் வேண்டும். இதோ பார் சாந்தி. அவன் உனக்கு ஏற்றவன் அல்ல. உன் மனம் கபடு இல்லாத பூமனம், அதில் வீற்றிருக்க அவனுக்கு தகுதி இல்லை'' கேலியில் தொடங்கி கண்டிப்பில் முடித்தான் அவன்.

அவன் என்ன அதைப் பற்றி பேசுவது? என்று சாந்தினி யின் நெஞ்சம் சினம் கொண்டது. ''வேறு யாருக்குத் தகுதி இருக்கிறது என்கிறீர்கள்? உங்களுக்கா?'' என்று கேட்டு விட்டாள்.

அகன்ற தோள்கள் மேலும் விரிய செந்தில் நிமிர்ந்தான். ''அதாவது... சங்கருக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லை என்கிறாய், ம்ம்...? இல்லை என்று...''

அவன் குரல்...?

சட்டென அவன் முகத்தைத் திரும்பிப் பார்த்தாள் சாந் தினி. உடனே திடுக்கிட்டாள். ''இல்லை இல்லை... அப்படி யெல்லாம் இல்லை. நான் அம்மாதிரிச் சொல்லவில்லை'' என்று அவசர அவசரமாக மறுத்தாள்.

''பின்னே?''

என்ன சொல்வது என்று சாந்தினிக்குத் தெரியவில்லை.

''பாடம் கற்றுக்கொள், சாந்தினி எதையேனும் பேசு முன் என்ன பேசுகிறோம் என்று இனியாவது யோசித்துப் பேசு'' என்றான் கண்டிப்புடன்.



ஓரக்கண்ணால் அவன் அறியாமல் அவனுடைய முகத்தை நோக்கினாள். நிமிடத்தில் மாறிவிட்டானே!

ஒரு மாமரத்தில் ஒன்றிரண்டாக காய்கள் அடியில் தொங் கின. ஒன்றைப் பறிக்கப் போனான் செந்தில். ''உனக்கு வேண்டுமா?'' என்றபடி.

''ஊகூம் வேண்டாம். எனக்கு மாங்காயே பிடிக்காது மற்றவர்கள் தின்னும்போது பார்த்தாலே என்னமோ பண் ணும்'' என்று தடுத்தாள் சாந்தினி.

அவன் சொன்னால் கேட்பவனா? ஒரு மாங்காயைப் பறித்தான். கைக்குட்டையால் துடைத்தான். அந்த மரக்கிளை யிலேயே ஓங்கி அடித்து உடைத்தான். ஒரு துண்டை வாயில் போட்டுக் கொண்டு ஒன்றை அவளிடம் நீட்டினான்.

''வேண்டாம் என்றேனே'' என்று வாங்காமல் நின்றாள் சாந்தினி.

''பரவாயில்லை..ஒரு சின்னத் துண்டுதானே தின்று பார். நான் சொல்கிறேன் அல்லவா?''

''நீங்கள் சொன்னால் நான் கேட்க வேண்டும்...''

''என்று என் நிபந்தனை'' என்று அவன் சிரிக்காமல் சொன்னான்.

சாந்தினி அலுப்புடன் மாங்காயை வாங்கினாள், ''இதற் கெல்லாம் நிபந்தனையா? வெறும் கேலிக்கூத்தாகத்தான் இருக்கிறது'' என்றபடி அதை வாயில் போட்டுக் கொண்டாள்.

உடனே முகத்தில் வியப்பு பரவியது. மாங்காயை வாயில் இருந்து எடுத்துப் பார்த்தாள் ''இனிக்கிறதே!'' என்றாள்.

''அதுதான் தின்றுபார் என்றேன். நம் தோட்டத்து ''ஸ் பெஷல்'' இது. நீ புளிக்கும் என்று நினைத்தாய் அல்லவா? என் சொல்லைக் கேட்டதில் இனிப்புதானே கிட்டியது''

என்று செந்தில் குறிப்புக் கொடுத்துக் கூறினான். பிறகு ''இங்கே உன் குடித்தனம் எல்லாம் எப்படி இருக்கிறது'' என்று விசாரித்தான்.

''என்னை மன்னித்து விடுங்கள்'' என்றாள் சாந்தினி.

''இது என்ன திடீர் என்று?'' என்று அவன் ஆச்சரியத் தோடு கேட்டான்.

''உங்களை முன்பு மிகவும் தப்பாக நினைத்து விட்டேன். இப்போது''

''இப்போதும் ஒரேயடியாக மாற்றிவிடாதே. வெள்ளைக்கும் கறுப்புக்கும் இடையில் எத்தனையோ நிறங்கள் சிலதில் கறுப்பு அதிகம் கலந்திருக்கும்! சிலதில் வெண்மை மிகுந்து இருக்கும். வெள்ளை இல்லாவிட்டால் கறுப்பு தான் என்று முடித்துவிடக் கூடாது; கறுப்பு இல்லையென்றால் வெள்ளைதான் என்றும் எண்ணிவிடக் கூடாது'' என்று அறிவுறுத்தினான்.

சாந்தினி இன்னமும் அதிக ஆச்சர்யத்துடன் அவனைப் பார்த்தாள். ''உங்களை புரிந்து கொள்ளவே முடியவில்லையே!''

''அதுதான் நல்லது சாந்தி. இல்லாவிட்டால் உனக்கு ''பயம்'' போய்விடும் பார். வா திரும்பலாம்'' என்று அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

அன்று இரவே செந்தில் சென்னைக்கு திரும்பிச் சென்று விட்டான்.

அவனோடு சாந்தினியின் ஏதோ ஒன்றும் சேர்ந்து சென்று விட்டது. அந்த ''ஏதோ ஒன்று'' வேறு எதுவும் இல்லை. அவனுடைய இதயம் தான்.

''இது என்ன பைத்தியக்காரத்தனம்'' என்று அவளது அறிவு அதட்டிக் கேட்டது! இலட்சாதிபதியான அவன் எங்கே? அவன் போட்ட பிச்சையில் சிறைவாசத்துக்குத் தப்பிய ஒருவரின் மகள் எங்கே?'' கேட்கவே சகிக்கவில்லையே அது மட்டுமா? அங்கே அவனுக்கு என்று ஒரு நளினி இருக்கிறாள். அவளை மணக்க அவன் சம்மதித்து விட்டதாகச் சிவகாமி அம்மாள் கூறியும் இருக்கிறார்.



அதோடு முடிகிறதா? சாந்தினியின் வரவுக்காகவும் ஒரு சங்கர் காத்து இருக்கிறானே.

''இன்னும் ஒன்று இருவரும் ஒரே இதயம் எய்த வேண்டும். இவள் ஒருத்தி மட்டும் இதயத்தைப் பறிகொடுத்து பயன் இல்லை. அது படுமுட்டாள்தனம்?'' என்று எடுத்துச் சொன்னது மூளை.

மூளையும் இதயமும் ஒரே உடலில்தானே இருக்கின்றன? ஆனால் ஒன்றுக்கு ஒன்று ஒன்றரைக்காத தூரத்தில் இருப்பதுபோல் சாந்தினிக்குத் தோன்றியது.

# 17

## விசித்திர மனம்

அடுத்து இரு வாரங்கள் செந்தில் ''பசுஞ்சோலை''க்கு வரவில்லை. தினமும் வழக்கம் போல டெலிபோன் மட்டும் செய்தான். அந்த நேரங்களில் சிவகாமி அம்மாள் கைவேலையாக இருந்தால் சாந்தினியைப் போனில் பேசச் சொல்லுவாள்.

சனிக்கிழமை மாலையும் சாந்தினியே டெலிபோனில் பேசும்படி ஆயிற்று.

''ஒரே வேலை, வர இயலாது'' என்று அவன் சொன்னதும், சாந்தினிக்கு ''சொத்'' என்று ஆகிவிட்டது.

அவன் சொல்லிக் கொண்டு இருந்தபோதே நளினியின் சிரிப்பொலியும் கேட்டது.

சாந்தினி கீழ் உதட்டை அரிசிப் பற்களால் அழுத்திக் கொண்டாள். ''இவள்தான் அந்த ஒரே வேலையா?''

''அத்தையிடம் கொடுக்கிறேன்'' என்று சிவகாமியிடம் கொடுத்தாள்.

மேலே நில்லாமல் தன் அறைக்குள் ஓடினாள். பொத் தென்று சோபாவில் விழுந்தாள்.

வந்த மறுநாளே சாந்தினிக்கு ஒரு பெரிய அறை கொடுக் கப்பட்டு விட்டது. மெத்தையிட்ட படுக்கை, குஷன் போட்ட சோபா செட், டிரஸ்சிங் டேபிள், பீரோ தரையில் கார்பெட், கூடவே இணைந்த பளபளவென்ற குளியலறை. அந்த அறைக்குள் புகும்போதே மனத்திற்கு இதமாக இருக்கும்.

அந்த இதம் சாந்தினிக்கு இன்று உண்டாகவில்லை. இங்கே வரக்கூட முடியாமல் என்ன வேலை? அதுவும் ஞாயிற்றுக் கிழமையில்? அலுவலகம், தொழிற்சாலை இரண் டுக்குமே விடுமுறைதானே.

நளினியின் சிரிப்புக் கேட்டதே. அவளுடன் எங்காவது சுற்றிவரத் திட்டம் இருக்குமோ? அன்றே நீச்சலுக்கு அழைத்' தாளே.

செந்திலும் நளினியும் ஒன்றாக நீந்தி விளையாடுவது போலக் கற்பனைத் தோன்றியது. அவள் தண்ணீரை வாரி அவன் முகத்தில் இறைக்கிறாள். ''இரு உன்னை'' என்றபடி அவன் அவளை நோக்கிப் பாய்கிறான்.

சாந்தினி ஒரு விம்மலுடன் விழிகளை இறுக மூடிக் கொண்டாள். ''சி, இது என்ன அசட்டுத்தனம்'' என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

குளிர்ந்த நீரில் முகத்தை நன்கு கழுவினாள். பவுடர் போட்டுப் பொட்டும் இட்டாள். கண்ணின் சிவப்பு தளர முகம் சரியாகிவிட்டது. அறையை விட்டு வெளியே வந்தாள்.



அதற்குள் சிவகாமியும் அவளைத் தேடி வந்தார். ''சாந்தி யம்மா, செந்தில் இந்த வாரம் வரவில்லையாம்'' என்றார்.

''சொன்னார்'' என்றாள். சாந்தினி, ஒரே வார்த்தையில்.

சிவகாமி சாந்தினியை ஏறிட்டுப் பார்த்தார். ''சொன் னானா? சரி அவன் வராவிட்டால் போகிறான். நாம் இருவரு மாக பக்கத்து ஊர் டூரிங் டாக்சியில் ஒரு சினிமா பார்த்துட்டு வரலாம். வருகிறாயா?'' என்று கேட்டார்.

எங்காவது போனால் மனம் உற்சாகம் பெறக்கூடும் என்று சாந்தினிக்குத் தோன்றியது. 'சரி' என்று ஒப்புக் கொண்டாள்.

கருணாகரனும் ''நல்ல ஐடியா'' என்றார். அவருக்குத் தேவையானது எல்லாம் இருவருமாக அவர் அருகில் எடுத்து வைத்தனர். நம்பகமான பண்ணை ஆள் முத்துப் பொன்ன னையும் துணையாக அழைத்துக் கொண்டனர். பண்ணை காரில் கிளம்பி விட்டனர்.

ராமேசுவரம் போனாலும் சனீசுவரன் விடாதாம். உற்சா கம் வேண்டி சாந்தினிக்கு சினிமாவுக்கு வந்தாள். அந்தப் படத்தில் ஒரு நீச்சல் காட்சி இடம் பெற்றுத் தொலைத்தது.

வருலைக் கருத்தில் கொண்டு இணைக்கப்பட்ட காட்சி போலும் கதாநாயகனும் கதாநாயகியும் ''ஜலக்கிரீடை'' நடத் திக் காட்டினர்.

செந்திலும் நளினியும் விளையாடுவது போல சாந்தினிக் குத் தோன்றியது. இருக்க முடியாமல் நெளிந்தாள்.

''கொஞ்சம் ''ஓவர்'' தான் இல்லையா?'' என்றார் சிவகாமி.

''சகிக்க முடியவில்லை. எனக்குத் தலையை வலிக்கி றது. நாம் போவோமே, அத்தை'' என்றாள் கெஞ்சலாக.

சிவகாமியும் சம்மதிக்கவே இருவரும் வீடு வந்து சேர்ந்த னர்.

மறுவாரமும் செந்தில் வரவில்லை.

''போன வாரத்து சுவை விட்டிராது'' என்று எண்ணிக் கொண்டாள் சாந்தினி.

இந்தத் தடவை வெளிப்படையாகக் காரணத்தையும் சொன்னான். ''நளினியின் பிறந்தநாளாம்'' என்றான்.

''ஆமாம். அது நிரம்ப முக்கியம் பாருங்கள், அங்கே தானே போங்கள்'' என்று குமுறினாள் சாந்தினி.

மறுமுனையில் செந்திலின் சிரிப்புக் கேட்டது.

''உங்கள் அம்மாவைக் கூப்பிடட்டுமா?'' என்றாள்.

''கொஞ்சம் பொறு சாந்தி. நம் கொடி வீட்டில் சிவப்புப் பைல் ஒன்று இருக்கிறது. அதில் அடுத்த வாரத் தேவைக்கு ஒரு பட்டியல் இருக்கும். குறித்து முத்துப் பொன்னனிடம் கொடு. மற்றதை அவன் பார்த்துக் கொள்வான். இன்னொரு விஷயம் தெரியுமா? என் ஆபீஸ் பையனுக்கு லஞ்சம் கொடுக்க யாரோ முயல்கிறார்களாம்'' என்று நகைத்தான்.

செந்திலின் குரலில் இருந்தே சாந்தினி கண்டுகொண் டாள். சங்கர் கூறிய ''ஏற்பாடு'' நடக்கிறது போலும்.

தன்னையும் அறியாமல், ''தெரியும்'' என்றாள்.

செந்திலின் சிரிப்பு பாதியில் நின்றது. ''தெரியுமா? உனக்குத் தெரியுமா? அப்படியானால் நீயும் ஒப்பித்தான் இதெல்லாம் நடக்கிறதா?''

''இல்லை இல்லை'' என்று இடைமறித்தாள், சாந்தினி. ''இப்படி முயற்சி செய்யப் போவதாக சங்கர் சொன்னார். என் அபிப்பிராயத்துக்கு அங்கே மதிப்பு இருக்கவில்லை''

''எப்போது திட்டமிட்டீர்கள்?''

''மறுபடியும் என்னைச் சேர்க்கிறீர்களே'' என்றாள் சாந் தினி குரல் கம்ம.



''எப்போது?'' அவன் குரல் மேலும் இறுகி விட்டிருந் தது.

''நான் சென்னை வீட்டுக்கு வந்தேனே, அன்று தான்.''

''நீ ஏன் என்னிடம் இதுவரை சொல்லவில்லை?''

சாந்தினி சும்மா நின்றாள்.

''இன்னும் நீ எனக்கு பதில் சொல்லவில்லை'' என்று அதே குரலில் கூறினான், செந்தில்.

அதற்குமேல் சாந்தினியால் பொறுக்க முடியவில்லை. ''நான் யாருக்கு உண்மையாக இருப்பது? யாருக்குத் துரோ கம் செய்வது?'' என்று கதறினாள்.

சற்று நேரம் செந்திலும் பேசவில்லை. பிறகு சொன் னான்: ''சாந்தினி, என்னை ஏமாற்றினால் லகுவில் விடமாட் டேன், பழிவாங்குவேன் என்று சொன்னேனே. நினைவு இருக்கிறதா? கொஞ்சம் மறப்பது போல இருந்தால், மீண் டும் நினைவுபடுத்திக் கொள். இன்னும் ஒன்று நீ சங்கரை ஒரு நாளும் மணந்து கொள்ளப் போவது இல்லை. அதையும் மனதில் உறுதிப்படுத்திக் கொள்.''

அதற்குமேல் பேச்சுக்கு இடம் வைக்காமல் பட்டென்று போனை வைத்துவிட்டான் செந்தில்.

சாந்தினியும் ரிசீவரை வைத்துவிட்டு நகர்ந்தாள்.

''சங்கரை மறக்க வேண்டுமாமே'' நினைத்தால் அவளுக் குச் சிரிப்புக்கூட வந்தது. அவனை நினைத்தால் அல்லவா மறப்பதற்கு.

ஆனால், இந்த மனம் ஏன் இப்படி மடத்தனம் செய்ய வேண்டும்? அப்பா நிச்சயித்த மாப்பிள்ளை அவன். அவனை நினைக்கவே தோன்றுவது இல்லை. இன்னொருத்தியின் பிறந்த நாளுக்காகப் பெற்றோரைக் கூடப் பார்க்க வர வில்லை. அப்படிப்பட்ட ஒருவனுக்காக ஏங்குகிறது.

கூடத்தில் சிவகாமி பூத்தொடுத்துக் கொண்டு இருந்தார். இவளைப் பார்த்ததும் ''என்னம்மா?'' என்று பரிவுடன் வினவினார்.

''ஒ... ஒன்றும் இல்லை அத்தை. அவர்... அதுதான் உங்கள் மகன் — இந்த வாரமும் வரவில்லையாம்... அங்கே, அங்கே... அந்த நளினியின் பிறந்தநாளாம்...'' என்று தடுமாறினாள்.

சிவகாமி உச்சுக் கொட்டினார் ''இந்த செந்திலுக்கு ஒன்றுமே தெரியவில்லை பார், இங்கே நாம் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அவன் புரியாமல் நடக்கிறானே, போகிறது அடுத்த வாரம் கட்டாயம் வருவான் பாரேன்'' என்று ஆறுதலாகப் பேசினார்.

சாந்தினி இதழ்களை இறுக மூடிக்கொண்டு காமா சோமா என்று கைபோன போக்கிலே மலர்களைத் தொடுக்கத் தொடங்கினாள்.

அடுத்த வாரம் முழுவதும் சாந்தினிக்கு உப்புசப்பற்றுக் கழிந்தது, அமைதியின்றி சுற்றித் திரிந்தாள். அதைக் கண்டு தானோ என்னவோ — சிவகாமி சிறுசிறு வேலைகளை அவளுக்குக் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

வேலை முடியுமட்டும் கவனம் அதில் செல்ல நன்றாக இருக்கும். வேலை முடிந்ததும், உடனேயே பழைய பரபரப்பு வந்துவிடும், மீண்டும் மீண்டும் நளினி — செந்தில் என்று எதை எதையோ எண்ணி மனம் புண்ணானாள் சாந்தினி. இங்கு இருக்கும்போதே அவர்களின் திருமணம் நடக்குமோ? சாந்தினியும் அதில் கலந்து கொள்ள நேருமோ?

இவ்வாறு எல்லாம் சிந்தித்தவளுக்கு இன்னும் ஓர் எண்ணம் தோன்றியது. ''அங்கே ஓர் இளம்பெண் இருப்பதால் உங்கள் அம்மா வீட்டுப்பக்கம் போக வேண்டாம் என்று நளினி செந்திலுக்கு உத்தரவு இட்டிருப்பாளோ'' என்ற ஐயம் உண்டாயிற்று; அதோடு அடிக்கடி வந்தால் சாந்தினி தன்னிடம் மையல் கொண்டு விடுவாளோ என்ற பயம் செந்திலுக்கே தோன்றியிருக்குமோ? நினைக்க நினைக்க அப்படித்தான் இருக்கும் என்று சாந்தினிக்கு உறுதியே ஏற்பட்டுவிட்டது. அதன் பிறகு நிலைமை மேலும் சகிக்க முடியாமல் போயிற்று.



சிவகாமி இப்போது சாந்தினிக்கு நீச்சல் பயிற்சி அளிப்பதில் மும்முரமாக இருந்தார். காலை மாலை இரு வேளைகளிலும் கற்றுக் கொடுத்தார். அடிப்படை புரிந்தபின் இரு வேளைகளிலும் வெகுநேரம் பயிற்சி பெறச் செய்தார். உடல் களைத்துப் போகவே இரவில் சாந்தினி நன்கு தூங்கினாள்.

அந்த சனிக்கிழமை சிவகாமி டெலிபோனில் வெகு நேரம் பேசினார். பிறகு முகத்தில் நகையுடன் சாந்தினியிடம் வந்தார். ''இந்த வாரம் செந்தில் வருகிறானாம். வேலை எல்லாம் இரவே முடித்துவிட்டு நாளைக் காலையில் வருவதாகச் சொன்னான்'' என்றார் மகிழ்ச்சியோடு.

மகனை வரச் சொல்லித்தான் இவ்வளவு நேரம் மன்றாடினார் போலிருக்கிறது. அப்படிக் கெஞ்சிக் கதறினால்தான் தவப்புதல்வனாரின் திருவுள்ளம் இரங்குமோ, பாசத்தின் வலிமை சுயமரியாதையை விட்டுப் பிள்ளையிடம் கெஞ்சச் சொல்கிறது.

இரண்டு வாரம் வரவில்லையே என்று சாந்தினிக்கு வருத்தம். அந்த வருத்தம் கோபமாக மாறியிருந்தது. சிவகாமியின் மகிழ்ச்சி எரிகிற தீக்கு எண்ணெய் ஆயிற்று. மதிக்காத பிள்ளையிடம் இவ்வளவு பாசம் காட்ட வேண்டுமா?

''ஏன், ஞாயிற்றுக் கிழமைக்கு என்று கொஞ்சம் கூட வேலை இல்லையாமோ? என்று குத்தலாகக் கேட்டாள்.

''இல்லவே இல்லையாம்'' என்று கையை விரித்தாள் செந்திலின் தாய்.

''அதுதானே பார்த்தேன். சப்பு சவறு எல்லாம் முடித்து விட்டுக் கடைசியாகத்தானே பெற்றவர்களைப் பார்க்க வேண்டும்'' என்று ஆத்திரத்துடன் சொன்னாள், சாந்தினி.

சிவகாமி மெல்ல நகைத்தார்.

''செந்தில் வருகிறானா? பலே இனி சாந்தினிக்குப் பொழுதுபோகும், இரண்டு சண்டை போடலாம். அதற்கு ஆளில்லாமல் தானே சாந்திம்மா நீ போரடித்துப் போயிருந் தாய்?'' செந்தில் வருவது பற்றி அறிந்ததும் கருணாகரன் இப்படிக் கேலி செய்தார்.

''நானாக யாரையும் சண்டைக்கு இழுக்கவில்லை'' என்றாள் சாந்தினி, ரோசத்துடன்.

''வருகிறதை விடமாட்டாய்?'' என்று சிரித்தார் கருணா கரன்.

''போங்கள் மாமா'' என்று சாந்தினி கீழே ஓடிவிட்டாள்.

கோபம் மறைந்ததும் சாந்தினிக்கு மனதில் உல்லாசம் பிறந்தது. சூரியன் தோன்றியதும் பனி மூட்டம் மறையும். செந்தில் வருகிறான் என்றதில் மற்றைய குழப்பம் எல்லாம் மறைந்து மகிழ்ச்சியுடன் படுக்கப் போனாள்.

கிட்டத்தட்ட அதேநேரத்தில் இரண்டு தலைகள் சென் னையில் வெகு மும்முரமாக ஆலோசனையில் ஈடுபட்டிருந் தன.

அதில் ஆணுடைய தலை உரியவன் சங்கர்!

பெண்ணுடைய தலைக்கு உரியவள், நளினி!

# 18

## சங்கர் விரித்த வலை!

சங்கரின் திட்டங்கள் தொடர்ந்து தோல்வி மேல் தோல்வி அடைந்து வந்தன.

செந்திலை மயக்க சாந்தினியை அனுப்பி வைத்தான். இப்போது அவள் இருக்கும் இடமே தெரியவில்லை.

''இனி அவளை மட்டும் நம்பிப் பயனில்லை'' என்று நினைத்து அலுவலகப் பையன்களைப் பிடித்து, கணக்கு நோட்டுக்களை திருடி எரித்துவிட முயற்சி செய்தான். ஆனால் செந்திலோ வல்லவனுக்கு வல்லவனாக இருந்தான்; அந்த முயற்சியை முறியடித்தான்.

சாந்தினியின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க, செந்தி லின் கார் பின்னாலேயே ''நாய் போல'' அலைந்தான். ஆனால் அவனோ சரியான ''கடுக்காய்'' பேர்வழியாக இருந்தான்! தண்ணீருக்குள் மூழ்கும் மீன் போல ''சட்'' டென்று சங்கர் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு மறைந்து விடுவான்!

அவன்தான் அப்படி; அந்த சாந்தினியாவது இவனுடன் தொடர்பு கொள்ள முயற்சித்தாளா? ஒரு ''போன்'' செய்தி ருக்கலாம்; இருக்கும் இடத்தில் யாரையாவது பிடித்து ஒரு கடிதம் அனுப்பியிருக்கலாம். ஒன்றையும் காணோமே. கிணற்றுக்குள் போட்ட கல்லைப் போல இருக்கிறாளே?

இதை நினைக்கும் பொழுது சங்கருக்கு ஆத்திரம் வந்தது.

''அவள் என்னப்பா செய்வாள்? பாவம், பெண் பிள்ளை '' என்று சோமநாதன் மகளுக்குப் பரிந்து கொண்டு வருவார்.

''பெண் பிள்ளை என்பதால் தானே அவனிடம் அனுப்பி னோம்!'' என்று சங்கர் சீறிப் பாய்வான்! ''பெண் பிள்ளை நினைத்தால் ஊரையே விற்று மடியில் சொருகிக் கொள்ள முடியும்''

''என் பெண்ணுக்கு அதெல்லாம் தெரியாதப்பா'' என்று சோமநாதன் துயரத்துடன் சொல்லுவார். பாவம் மகளைக் காணாமல் அவர் பாதி ஆளாக இளைத்து விட்டார். இரவில் இமைகளை மூடினாலும் தூக்கம் வருவதில்லை.

''அறியாப் பொண்ணுதான் அவனுடன் போய் ஆனந்த மாய் இருக்கிறாளோ'' என்று சங்கர் குத்தலாகக் கூறினான்.

''அநியாயமாக என் மீது பழி போடாதே'' என்றார் சோமநாதன். உன் மீது தப்பில்லை. உலகம் அப்படி. அசோக வனத்தில் சிறை இருந்ததற்காக சீதை மீது கூட பழிபோட்டார் களே'' என்று பெருமூச்சு விட்டார்.

அப்பொழுதுதான் சங்கர் மனதில் புதிய எண்ணம் தோன்றியது. செந்திலின் பணத்தில் — படாடோபத்தில் சாந்தி மயங்கி விட்டாளோ?

சாந்தினியை செந்தில் எங்கோ கொண்டு போய் மறைத்து வைத்திருக்கின்றான்.

அவளும் தனது இருப்பிடம் பற்றி தந்தைக்குக்கூட தகவல் அனுப்பவில்லை.

இந்த இரண்டையும் இணைத்துப் பார்த்த பொழுது அந்த சந்தேகம் சங்கருக்கு உறுதிப்பட்டது.

செந்தில் அழகன்; இளைஞன்; பணக்காரன்.

சாந்தினி அழகி; கன்னி; ஏழை.

இரண்டையும் இணைத்துப் பார்த்தான் சங்கர்.



அவன் இதயம் எரிமலையாய்க் குமுறியது.

'இதில் சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை, அப்படித் தான் இருக்கும்' என்று உறுதிப்படுத்திக் கொண்டான்.

சாந்தினி மீது அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

''ஏமாற்றி விட்டாள், மோசக்காரி!'' என்று கொதித்தான்.

''விடமாட்டேன்'' என்று குதித்தான்.

இந்த நிலையில்தான் நளினியை சந்திக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது.

ஒருநாள் செந்திலைத் தொடர்ந்து சங்கரும் அலுவலகத் துக்குச் சென்றான். சற்று தூரத்தில் நின்று கொண்டு இருந்தான்.

அப்பொழுது நளினி அலுவலகத்துக்குள் இருந்து வெளி யில் வந்தாள்.

அவளை சங்கர் அறிவான். அவள் செந்திலுக்கு முறைப் பெண் என்பதும், அவனுக்கு அவள் வலைவீசிக் கொண்டு இருக்கிறாள் என்பதும் அவனுக்குத் தெரியும்.

அவளைப் பார்த்ததும், சங்கர் மூளையில் ''சட்''டென்று ஒரு தீப்பொறி வந்தது; திருடர்களுக்கே புத்தி அதிகம்தான்!

''ஹலோ மிஸ்'' என்று புன்னகையுடன் அவளை நெருங்கினான்.

''நீங்கள் யார்?'' என்று அவள் அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''என்னை நினைவு இல்லையா? `இங்கேதான் வேலை பார்க்கிறேன்'' என்று கம்பெனியைச் சுட்டிக்காட்டிய அவன், ''என் பெயர் சங்கர்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''உங்களைத் தனியாக சந்தித்து ஒரு விஷயம் பேச வேண்டும் என்று காத்துக் கொண்டு இருந்தேன், இன்று தான் அதற்கு வாய்ப்புக் கிடைத்தது'' என்று பேச்சைத் தொடங்கினான்.

''என்னிடம் பேச உங்களுக்கு என்ன விஷயம்?'' என்று அவள் அலட்சியமாகக் கேட்டாள். அவளுக்கு எப்பொழுதுமே ஆணவம் அதிகம்.

''நீங்கள் என்னுடைய எதிர்கால முதலாளி அம்மா. சின்ன முதலாளியை நீங்கள்தான் மணந்துகொள்ளப் போகிறீர்கள். ஆகவே உங்கள் நலத்தில் உங்கள் ஊழியனான எனக்கு நிச்சயம் அக்கரை இருக்கும் என்று நம்புவீர்கள் என்று நினைக்கிறேன்'' என்று அவன் குழைந்தான்.

நளினிக்கு தலையும் புரியவில்லை! வாலும் தெரியவில்லை! ''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்'' என்று அவனை நோக்கினாள்.

''செந்தில்... மன்னிக்க வேண்டும்... சின்ன முதலாளி உங்களை மணந்து கொள்ள மறுக்கிறார், என்று கேள்விப்பட்டேன்...''

பாதியில் நிறுத்தி அவன் அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் முகத்தில் சற்றே சலனம்.

அவன் முகத்தில் மலர்ச்சி. அவன் அதைத் தொடர்ந்து சொன்னான். ''அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியும். அவருக்கு வேறு ஒரு பெண் மீது ஆசை சாந்தினி என்று அவள் பெயர். அவளுடன் இப்பொழுது குடித்தனம் நடத்துகிறார் என்று கூடக் கேள்வி.''

அவன் பக்குவமாகச் சொன்னான்; அவளோ அதைக் கேட்டுச் சிரித்தாள்.

அவனுக்குத் திகைப்பு. ''ஏன் இப்படி சிரிக்கிறீர்கள்?''



''சாந்தினி அவருடைய காரியதரிசி'' அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''ஒரு பணக்காரனுக்குக் காரியதரிசியாக வரும் ஓர் அழகான பெண். விரைவிலேயே அவனுக்கு ஆசை நாயகி ஆகிவிடுவாள் என்பது நீங்கள் அறியாதது அல்ல.''

வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல அவன் சொன்னான்.

நளினிக்கு மெய் சிலிர்த்தது.

அவன் பலமாகப் பிடித்து உலுக்கினான். ''காரியதரிசி என்றால், இப்பொழுது சாந்தினி எங்கே? அலுவலகத்தில் அவருடன் இல்லையே? ஏன்! எங்கோ கொண்டு போய் வைத்து, அவளுடன் தனிக் குடித்தனம் நடத்துகிறார்.''

''அப்படியும் இருக்குமோ?'' என்று நளினி இப்பொழுதுதான் நினைக்கத் தொடங்கினாள்.

சாந்தினியை தோட்ட வீட்டுக்கு செந்தில் அழைத்துக் கொண்டு போனபோதுதான் அவளை நளினி கடைசியாகப் பார்த்தாள். அதன் பின் பார்க்கவே இல்லை, அவள் எங்கே?

அந்தக் கேள்விக்கு உடனடியாக விடை கிடைக்கவில்லை. ஆகவே, சங்கர் சொல்வதை அவள் நம்ப வேண்டிய நிலையில் இருந்தாள்.

''கடைசியாக நான் சாந்தினியைப் பார்த்த பொழுது அவளைத் தோட்ட வீட்டுக்கு அழைத்துப் போவதாகச் சொன்னார்...'' என்று குழப்பத்துடன் கூறினாள்.

''உங்களைப் பார்த்தார். சொன்னார், இல்லாவிட்டால் சொல்லுவாரா?'' என்றான் சங்கர்.

''அப்படியா நினைக்கிறீர்கள்? உம்...ஊகூம் இராது. அவளைக் கைக்குள் வைத்துக் கொள்ள ஆசை என்றால், பெற்றோர் இருக்கிற இடத்துக்கா அழைத்துப் போவார்'' என்று நளினி நம்பாமல் கேட்டாள்.

''அங்கே அழைத்துப் போயிருந்தால்தானே? உங்களுக்கு போக்குக் காட்ட அப்படிச் சொல்லிவிட்டு வேறு எங்கேனும் ஒளிவாக இருக்க வைத்திருக்கலாம் அல்லவா?'' என்று சங்கர் அவளைக் கூர்ந்து நோக்கினான்.

நளினிக்கு உடம்பு எரியத் தொடங்கியது. செந்தில் வெளிநாட்டில் இருந்து வந்த நாள் தொட்டு அவளும் எப்படி எப்படியோ முயன்றுதான் பார்க்கிறாள். செந்தில் கேலிப்பேச் சுடன் சரி. கொஞ்சம்கூட நெருக்கம் காட்டுவதே இல்லை.

இதற்கு சாந்தினிதான் காரணம்?

அவள் முகத்தில் முத்து முத்தாக வியர்த்தது. டம்பப் பையில் இருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தில் ஒத்திக் கொண்டாள்.

அவள் குழம்பி விட்டது சங்கருக்கு நன்றாகத் தெரிந்தது. ''இந்த முயற்சியில் நிச்சயம் வெற்றி'' என்று முடிவு செய்து கொண்டான்.

செந்திலிடம் இருந்து சாந்தினியை எப்படியும் நளினி பிரித்துவிடுவாள்; அவனை மணந்து கொள்ளவும் செய்வாள். தான் செய்த உதவிக்காக தன்னை சிக்கலில் இருந்து விடுவிக் கும்படி நளினியிடம் கேட்க முடியும்; அவளும் அப்படியே செய்வாள் என்று மனக்கோட்டை கட்டினான்.

''செந்திலிடம் இருந்து பிரிக்கப்பட்ட சாந்தினி என் காலில் வந்துதான் விழுவாள். அப்பொழுது அவளை சரியா கப் பழிதீர்த்துக் கொள்ளலாம்'' என்றும் வெற்றிப் புன்ன கைப் பூத்தான்.

நளினி ''சட்''டென்று ''இதெல்லாம் உங்களுக்கு எப்ப டித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''சாந்தினி என் காதலி. எனக்காக நிச்சயிக்கப்பட்ட பெண், இந்தத் துயரத்தை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை' என்று சங்கர் கூறினான்.



''சாந்தினி உங்கள் காதலி என்றால்... அவருடன்...'' அவள், அவன் பேச்சில் சந்தேகப்பட்டாள்.

''செந்திலை நீங்கள் காதலிக்கிறீர்கள். ஆனால் அவர்...'' என்று அவன் அவளை மடக்கினான்.

''ஓ... அப்படியா!'' என்று அவள் லேசாக சிரித்தாள்.

''உங்களுக்கு உங்கள் காதலி வேண்டும். எனக்கு என் காதலர் வேண்டும், சரிதானா?''

''சரிதான்.''

சங்கர் பலமாகத் தலையை ஆட்டினான்.

அன்று முதல் இருவரும் கூட்டாளிகள் ஆனார்கள்.

செந்திலிடம் இருந்து சாந்தினியைப் பிரிக்க இருவரும் சேர்ந்தே திட்டம் போட்டார்கள்.

''எனக்கு என்னவோ சாந்தினி தோட்டத்தில் தான் இருப்பாள் என்று தோன்றுகிறது'' என்றாள், நளினி.

''தோட்டத்தில் அவருடைய பெற்றோர்கள் இருக்கிறார் கள். எனவே, அருகே அழைத்துப் போயிருக்க மாட்டார். தோட்டத்துக்குப் போகும் வழியில் எங்காவது வீடு எடுத்து சாந்தினியை வைத்திருக்கக் கூடும்'' என்றான் சங்கர்.

உண்மை அறிய, இருவரும் செந்திலை நிழல்போலத் தொடர்ந்தார்கள்.

சனிக்கிழமை மாலையில் செந்தில் தோட்டத்துக்குப் போவதாகப் புறப்பட்டான். நளினி ''நானும் வருவேன்'' என்று அடம் பிடித்தாள். அதனால் செந்தில் அந்தப் பயணத் தையே நிறுத்திவிட்டான். அடுத்த வாரமும் அப்படியே நடந்தது.

''நளினி! நீங்கள் மட்டும் நேரடியாகத் தோட்டத்துக்குப் போய் பார்த்துவிட்டு வந்தால் என்ன?'' என்று சங்கர் கேட்டான்.

''அது எங்கோ காட்டுக்குள் இருக்கிறது. எனக்கு சரியா கப் பாதை தெரியாது'' என்றாள், நளினி.

மீண்டும் ஒரு சனிக்கிழமை. இரவுவரை செந்தில் கிளம்பவில்லை. மறுநாள் அதிகாலையில் சங்கரும் நளினி யும் சந்தித்து திட்டம் தீட்டினர்.

''நளினி! இன்று செந்திலை எப்படியும் நழுவவிடக் கூடாது'' என்று சங்கர் திட்டவட்டமாகச் சொன்னான்.

''அவரது காரை விடாமல் தொடர்ந்து போக வேண்டும்'' என்றாள், நளினி.

''அதில் பயன் இல்லையே'' என்றான் சங்கர்.

''வேறு என்ன செய்வது?'' என்று நளினி யோசித்தாள்.

''இப்படி செய்தால் என்ன?''

''எப்படி?''

''நாம் இருவரும் இப்பொழுதே காரில் புறப்படுவோம். பசுஞ்சோலைக்குச் செல்லும் வழியில் நான் நின்று கொள்ளு கிறேன். செந்தில் வருவார், நான் திடீரென்று அவர் முன் தோன்றி காரில் தொத்திக் கொள்ளுகிறேன், பிறகு அவர் நழுவ முடியாதே!''

''சபாஷ்!'' என்று சங்கர் பாராட்டினான்.

அப்படியே செயல்படுவது என்று இருவரும் தீர்மானித் தார்கள்.

உடனே ஒரு காரில் பசுஞ்சோலையை நோக்கிப் புறப் பட்டார்கள்.

# 19

## கிள்ளை கொஞ்சியது!

செந்தில் அவசர அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டு இருந்தான்.

இரண்டு வாரமாக அவனுடன் அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருந்த நளினியை இன்று காணோம்! அது செந்தி லுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும், ''அவள் எங்கே போனாள்?'' என்ற ஆராய்ச்சியில் அவன் ஈடுபடவில்லை. அவள் வருமுன் ஓடிவிட வேண்டும் என்று துரிதமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

அவன் சாந்தினியைப் பார்த்து மூன்று வாரம் ஆகிவிட் டது. இனியும் அவளைப் பார்க்காமல் அவனால் இருக்க முடியாது போலிருந்தது. அவன் வேகமாகப் புறப்பட்டதற்கு அதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

இரண்டு வாரமாக செல்லாததற்கு இல்லாத பொல்லாத காரணங்களை வேறு சொல்லியிருந்தான். அதைக் கேட்டு சாந்தினி எவ்வளவு ஆத்திரப்பட்டு இருப்பாள் — அவள் முகம் எப்படிச் சிவந்து இருக்கும் — இப்பொழுது இவன் போனதும் எப்படியெல்லாம் சீறுவாள் என்பதைப் பார்க்க வும் அவனுக்கு ஆசையாக இருந்தது. ''அவள் கோபத்திலும் அழகாகத்தான் இருக்கிறாள்'' என்று நினைத்துப் புன்னகைத் தான்.

அப்பொழுது அலுவலகப் பையன் வந்து ''அய்யா சோமநாதன் வந்திருக்கிறார், உங்களைப் பார்க்க வேண்டு மாம்'' என்று சொன்னான்.

சோமநாதன் பெயரைக் கேட்டதும் அவன் முகத்தில் புன்னகை மறைந்தது; கடுமை பரவியது.

''இப்பொழுது பார்க்க முடியாது'' என்று சொல்லி விடலாம் என்று முதலில் நினைத்தான். பிறகு ஏதோ எண்ணிக் கொண்டு ''வரச்சொல்'' என்று கடுகடுப்பாகக் கூறினான்.

பையன் சென்று சோமநாதனை அனுப்பினான்.

அவர் வந்த பொழுது, தமது இருக்கையில் செந்தில் அமர்ந்து இருந்தான். அவன் முகம் கடுகடு என்று இருந்தது.

''எங்கே வந்தீர்கள்?''

''தம்பி! என் மகள் எங்கே இருக்கிறாள்? இனிமேலும் அவளைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது.''

சோமநாதன் உடலும் மனமும் குலுங்கி சொன்னார். பிரிவுத் துயரும் பெற்ற பாசமும் கண்ணீராகக் கசிந்தன.

''நீங்கள் ஒப்புக் கொண்ட ஆறுமாதக் கெடு இன்னமும் முடியவில்லையே'' செந்திலின் குரலில் அலட்சியம் தொனித்தது.

''தம்பி, நீங்கள் பெரிய மனது பண்ணி...''

''ஏன் பெரிய மனது பண்ண வேண்டும்? நீங்கள் எனக்குச் செய்த துரோகத்துக்கு நன்றி காட்டவா?''

சோமநாதன் கூனிக்குறுகி விட்டார். பேச்சு எழும்பாமல் தவித்தார். ஏக்கத்துடன் செந்திலைப் பார்த்தார். ஆனால் அவன் சற்றேனும் இளக வேண்டுமே!

''அப்புறம்...?'' என்றபடி எழ முயன்றான் செந்தில்.

''தயவு செய்து சாந்தினி எப்படி இருக்கிறாள், என்பதை யாவது சொல்லுங்கள்'' என்று கெஞ்சினார் சோமநாதன்.

''ஆறுமாத காலம் அவளைப் பற்றி ஒரு வார்த்தை பேசக்கூட உங்களுக்கு உரிமை இல்லை. இந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டுதான் அவளை என்னிடம் அனுப்பினீர்கள்.



நினைவு இருக்கட்டும்'' என்று செந்தில் கண்டிப்பாகச் சொன்னான்.

''அது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று உணருகிறேன் தம்பி; உணர்ந்து ஒவ்வொரு கணமும் துடிக்கிறேன்; வேதனைப்படுகிறேன்'' என்று சோமநாதன் துயரத்துடன் கூறினார்.

''அதை எல்லாம் அன்றே சிந்தித்திருக்க வேண்டும்'' என்று இரக்கமின்றிச் சொன்னான் செந்தில்.

''சிந்திக்கத் தவறிவிட்டேன். என் சாந்தினி எவ்வளவோ மறுத்தாளே, பாவி நான் அவளது பேச்சை செவி கொடுத்துக் கேட்கவில்லையே. கதறக் கதற அவளைப் பலியாடுபோல அனுப்பினேனே'' என்று வேதனை தாளாமல் சோமநாதன் புலம்பினார்.

செந்திலின் உதடுகள் லேசாக வளைந்தன. ''அவள் கதறினாளோ என்னவோ. இப்போது நீங்கள் கதறுகிறீர்கள் என்று தெரிகிறது'' என்றான் சற்று ஏளனமாக.

''ஆமாம் தம்பி, கதறத்தான் செய்கிறேன் கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்த கதையாகக் கண்ணீர் வடிக்கிறேன். அன்று அறிவுக்கெட்டு எடுப்பார் கைப்பிள்ளையாக ஒரு ''அயோக்...'' சோமநாதன் உதட்டைக் கடித்துக் கொண்டு பேச்சை அடக்கினார்.

அதற்குள் செந்திலின் செவியும் மனமும் எதையோ கண்டு கொண்டனவோ ''ஏன்! அருமை பெருமையாக மகளுக்கு என்று தேர்ந்து எடுத்து நிச்சயித்து இருக்கிறீர்களே ஒரு மாப்பிள்ளையை. அவன் என்ன செய்கிறான்? அந்த அசகாயசூரன் தன் வருங்கால மனைவியைக் காப்பாற்ற எந்த முயற்சியும் செய்யவில்லையா?''

சோமநாதனின் முகத்தில் லேசான வெறுப்பு பரவியது, ''முயற்சி செய்வதாகத்தான் சொல்லுகிறார். உங்களுடைய

முறைப்பெண் நளினி மூலமாக ஏதோ ஏற்பாடு செய்யப் போகிறாராம். எனக்குத்தான் அதில் நம்பிக்கை இல்லை'' என்று அசட்டையாகக் கூறினார் சோமநாதன்.

செந்தில் சிரித்தான். ''கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கப் போகிறார்களாமோ.''

ஏதோ? அவரது பேச்சும் போக்கும் ஒன்றும் சரியில்லை'' என்று வேதனையும் வெறுப்புமாகக் கூறினார் சோமநாதன்.

செந்தில் ஒருகணம் வேகமாகச் சிரித்தான். ''இவரிடம் கேட்டு விடலாமா? கேட்பதற்கு தக்க தருணம் தான். ஆனால் சாந்தினி... அவளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண் டுமே! அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று நினைத் தான்.

''நான் இப்போது அவசரமாக வெளியே போக வேண்டி யது இருக்கிறது'' என்று எழுந்தான் செந்தில்.

சோமநாதன் பதட்டத்துடன் அவனை வழிமறித்தார். ''தம்பி முப்பது ஆண்டுகளாக உங்களுக்கு உண்மையாக உழைத்து இருக்கிறேன். இன்று ஏதோ என் போதாத வேளை சகவாசத்தால் கெட்டேன். ஆனால் எனது அன்றைய உழைப் பின் பேரால் கேட்கிறேன். என் மகளை... என் மகளுக்கு ஏதும் ஊறு செய்து விடாதீர்கள். எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். என் சாந்தினியை மட்டும் திருப்பி அனுப்பி விடுங்கள். தம்பி... தம்பி... என்று கெஞ்சி னார்.

செந்தில் ஒருகணம் தயங்கி நின்றான்.

மறுகணம், ''உங்களுக்கு நான் யோசித்து பதில் சொல்லு கிறேன்'' என்று கூறிக் கொண்டே நடந்தான்.

சோமநாதன் ஏமாற்றத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

கார் விரைந்து சென்று கொண்டிருந்தது.



செந்திலே காரை ஓட்டிச் சென்றான்.

தன்னைப் பின் தொடர்ந்து நளினி வருகிறாளா — ஏதாவது கார் வருகிறதா என்று அடிக்கடி முன்னால் இருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டான்.

அந்தக் கண்ணாடி மீது நம்பிக்கையில்லாதவன் போல அடிக்கடி பின்னேயும் திரும்பிப் பார்த்துக் கொண்டான்.

அவனைப் பின் தொடர்ந்து கார் எதுவும் வரவில்லை. ஆகவே, நகரத்து சாலையைத் தாண்டி, தனது தோட்டத்துக் குச் செல்லும் சாலையில் காரைத் திருப்பினான்.

அடுத்த சில நிமிடத்தில் அந்த சாலை முடிந்தது. காட்டுப் பாதை வந்தது.

உல்லாசமாக சீட்டி அடித்துக் கொண்டு வந்த செந்தில் காட்டுப் பாதைக்குள் கார் புகுந்ததும், அங்கே நளினி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்!

நளினியும் சங்கரும் அப்பொழுதே அங்கு வந்துவிட்டார் கள். செந்திலை எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருந்தார்கள். அவனது காரைப் பார்த்ததும் சங்கர் மறைந்து நின்று கொண் டான். நளினியும் ஓர் ஓரமாக ஒளிந்து நின்றாள். கார் அருகில் வந்ததும் நடுப்பாதைக்கு வந்தாள்.

நளனி இரண்டு கைகளையும் தூக்கி அசைத்து காரை நிறுத்தச் சொன்னாள்.

அவளது அருகில் வந்ததும் செந்தில் காரை நிறுத்தினான்.

அந்த சிறிது நேரத்துக்குள் அவனது அதிர்ச்சி மாறிவிட் டது. நளினியின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டான். ''ஏ மாந்து விட்டோமே'' என்று எண்ணினான். ஆனால், அந்த ஏமாற்றத்தையும் முகத்தில் இருந்து மறைத்தான்.

''அலோ நளினி!'' என்று புன்னகைத்தான்.

''இந்நேரம் எங்கே இந்தப் பக்கம்?'' என்றும் ஏதும் அறியாதவன் போலக் கேட்டான்.

''அத்தையைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது வந்தேன். இங்கே வந்ததும் கார் படுத்துக் கொண்டது. என்ன செய்வது, திகைத்துக் கொண்டு இருந்தேன். கை கொடுத்த தெய்வமாக நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்'' என்று அவள் கதை சொன்னாள்.

''நீங்கள் வீட்டுக்குத்தானே போகிறீர்கள்? மாமாவுக்கு இப்பொழுது எப்படியிருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே, அவளே காரில் ஏறி, அவனுக்கு அருகில் அமர்ந்து கொண்டாள்.

அவன் ஒரு புன்னகையுடன் காரைக் கிளப்பினான்.

கார் சற்று தூரம் சென்றதும், சங்கர் மரத்தின் பின்னேயிருந்து பாதைக்கு வந்தான்.

''எனக்கு வெற்றி தொடங்கி விட்டது'' என்று முணுமுணுத்தான்.

காலையில் கண்விழித்ததில் இருந்து சாந்தினிக்கு ஒரே பரபரப்பு. எதைக் கட்டுவது? ''பளிச்''சென்று அவனுக்காக அலங்காரம் செய்வது போலவும் சேலை இருக்கக் கூடாது. அதற்காக பழைய துணிபோல ''வெளிச்''சென்றும் போய்விடக் கூடாது.

அவள் முடிவு எடுக்குமுன் ''இன்னமும் குளிக்கவில்லையா சாந்திம்மா? காபி ஆறுகிறதே'' என்று சிவகாமி உள்ளே வந்தாள்.

ஏழெட்டு சேலைகள் புடைசூழ சாந்தினி வீற்றிருப்பதைக் கண்டார். பீறிவந்த சிரிப்பை அடக்கிக் கொண்டார் எதையும் கவனியாதவர் போல ''சீக்கிரம் வாம்மா. பூச்சாடியில் பூக்களை ஒழுங்குபடுத்த வேண்டும்'' என்று போய்விட்டார்.



கடைசியாக ஒரு ரோஜா வண்ணச் சேலையை சாந்தினி தேர்ந்தெடுத்தாள். அங்கங்கே அடர் சிவப்பில் பெரிய ரோஜாப் பூக்கள் போல பிரிண்ட். அவசரமாகக் குளித்து விட்டு சேலையை உடுத்தினாள். உடலோடு ஒட்டிக் குழைந்து இணைந்து நின்றது, சேலை. கூந்தலை இரண்டாகப் பிரித்து இடையில் ''கிளிப்'' மாட்டினாள். ஒற்றையாக ஒரு பெரிய சிவப்பு ரோஜாவை காதோரமாகச் சொருகினாள். லேசாக பவுடர்... கண் மை, அழகு ராணி தயார்.

தன் அழகு தந்த மகிழ்வுடன் கூடத்துக்குப் போனாள். பூச்சாடிகளில் சிவப்பு ரோஜாக்களும் வெள்ளை ரோஜாக்களும் இலைகளுடன் சாந்தினியின் கை வண்ணத்தில் மிளிர்ந்தன.

''காபியை மறந்தே போனாயா?'' என்று காபியோடு வந்தார் சிவகாமி.

சாந்தினியின் அலங்காரத்தைக் கவனித்தார். ''இரம்மா'' என்று உள்ளே போனார் கையில் ஒரு பொன் மாலையுடன் வந்தார். அந்த சங்கிலியின் நடுவே ஒரு பெரிய பதக்கம். சிவப்புக் கற்கள் ரோஜா வடிவத்தில் அமைந்து இருந்தன. இடையிடையே ஓரிரு வெள்ளைக் கற்கள், சங்கிலியின் இடையிடையே பெரிய இரத்தினக் கற்கள், கொம்பும் வைரமும் கண்ணைப் பறித்தன.

''இதை அணிந்துகொள். உன் சேலைக்குப் பொருத்தமாக இருக்கும்'' என்று அவரே அணிவிக்கப் போனார்.

''வேண்டாம் அத்தை, பிறகு உங்கள் மகன் ஏதாவது தப்பாக நினைப்பார்'' என்று தடுத்தாள் சாந்தினி.

''தப்பாக நினைக்க மாட்டான். நிரம்பவும் அழகாக இருக்கிறது என்றுதான் நினைப்பான். அதோடு இது என் சங்கிலி, உனக்குத் தருகிறேன். இதில் அவனுக்கு என்ன?'' என்று பிடிவாதமாக அவளுக்குச் சங்கிலியை அணிவித்தார். ''கண்ணாடியில் பார். எவ்வளவு அழகாக இருக்கிறது!'' என்றார் மகிழ்ச்சியுடன்.

''மெய்யாகவா அத்தை?'' சாந்தினி ஓடிப்போய்க் கண்ணாடியில் பார்த்தாள். பதக்கத்தின் ஒளி கன்னத்தில் ''டால்'' அடித்தது. ''செந்தில் ரசிப்பானோ'' என்று எண்ணும்போது கன்னங்களிலும் ரத்தினங்கள் பளிச்சிட்டன.

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. ''செந்திலா'' என்றபடி சிவகாமி விரைந்தார். கூடத்தில் சாந்தினி பதுமையாக நின்றாள். அவளுக்குக் கால்கள் நகர மறுத்தன.

செந்திலின் அழுத்தமான காலடி ஓசை, சிவகாமியின் மெட்டி ஒலி, கூடவே இன்னொரு ''டக் டக்'' சத்தமும் கேட்கிறதே! சாந்தினி யோசனையுடன் நிமிர்ந்தாள்.

குதிகால் உயர்ந்த செருப்பு, இன்னொரு தோல்போல ஒட்டிய கால்சராய் மேலே லேஸ் துணியில் காற்றோட்டமான சட்டை. அதற்கும் மேல் முழு மேக்கப்புடன் நளினியின் முகம். தன்னைக் கண்டதும் நளினி திடுக்கிடுவதும் அவளுக்குத் தெரிந்தது.

வினாடிக்குள் நளினி முகபாவத்தை மாற்றினாள். செல்லமாக உதட்டைச் சுளித்தாள். ''அத்தான் நீங்கள் பண்ணுகிற அழும்பு, அத்தை இப்படிச் செய்து வைக்கிறார்கள்'' என்று அலுத்துக் கொண்டாள்.

''என்ன செய்தார்கள்?'' சாந்தினியிடம் பார்வையைச் செலுத்தியபடி செந்தில் கேட்டான்.

''பாருங்களேன். மருமகளுக்கு அணிவித்து அழகு பார்க்க வேண்டிய நகை, அதைக் கண்ட பெண்களுக்கும் சூட்டிப் பார்த்து ஏக்கத்தைத் தணித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். செய்ய வேண்டியதைக் காலாகாலத்தில் செய்தால் இப்படியெல்லாம் நடந்து கொள்வார்களா?''

சாந்தினிக்குக் கழுத்தில் கிடந்த பதக்கம் நெருப்பாய்ச் சுட்டது. ''கண்டவளாமே!'' செந்திலும் அப்படித்தான் எண்ணுகிறானா?'' இல்லாவிட்டால், ஏன் அவன் அதற்கு மறுப்பு



சொல்லாமல் நிற்கிறான்? காலடியில் பூமி பிளந்து தன்னை விழுங்கி விடாதா என்று சாந்தினி ஏங்கிக் கொண்டு நின்றாள். நளினியின் வார்த்தைகளைத் தாங்கவும் முடியாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்லவும் துணிவின்றி மரமாக நின்றாள்.

''செய்ய வேண்டியதா? அது என்ன செய்ய வேண்டியது? எனக்குத் தெரியவில்லையே'' என்று கிண்டினான் செந்தில்.

''உக்கும்! போங்கள் அத்தான்; பப்பா மாதிரிப் பேசுகிறீர்களே, நீங்கள் எப்படி ஆள் என்று எனக்கு அல்லவா தெரியும்? சென்னை சென்றதும் அப்பாவிடம் உங்களைப் பார்க்க வரச்சொல்லப் போகிறேன். அப்போது பாருங்கள்.''

கொஞ்சலாகக் கிளி போல் மிழற்றினாள் நளினி.

சாந்தினிக்கு இதயம் பற்றி எரிந்தது.

# 20

## ஒட்டிக் கொண்ட அட்டை!

செந்தில் வருகிறான் என்றதும் சாந்தினி எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருந்தாள்! ஆனால், அவனுடைய நளினி என்ற கரடியும் வரும் என்று அவள் அப்பொழுது நினைத்துப் பார்த்தாளா?

வந்ததும் வராததுமாக, நளினி கொஞ்சுகிறாள்; குழைகிறாள்!

அதையெல்லாம் பார்க்க சாந்தினிக்குப் பொறுக்கவில்லை பொங்கினாள்; பொருமினாள். அவள் இதயமே வெடித்துவிடும் போல இருந்தது.

ஆனால் உரிமை உள்ளவள் கொஞ்சுகிறாள். இல்லாத நான் வயிறு எரியலாமா?'' என்று பல்லைக் கடித்து கொண்டு நின்றாள்.

செந்திலின் உதடுகள் புன்னகையால் மலர்ந்தன. பயப்படுவதுபோல பாவனை காட்டியபடி நளினியிடம் இருந்து சற்று விலகி பதில் உரைத்தான். ''அய்யோ வேண்டாம் தாயே வேண்டாம்? உன் அப்பாவின் மீசையைப் பார்த்தாலே எனக்கு அலர்ஜி சொல்ல வேண்டியதை டெலிபோனில் பேசச் சொல்'' என்று முன்னே ஓர் எட்டு எடுத்து வைத்தான்.

நளினியின் கை செந்திலில் கரத்தில் பதிந்தது. ''போனில் சொல்லுகிற விஷயமா, இது? பாருங்கள், அத்தை உங்கள் செல்லப்பிள்ளையை'' என்று சிணுங்கியவள், சாந்தினியைப் பார்த்து, ''ஆமாம் நீ ஏன் அப்படியே மரம் போல் நின்று கொண்டு இருக்கிறாய்? எனக்குப் பசிக்கிறது. சாப்பாடு எடுத்து வைப்பதைப் பார்'' என்றாள் உதாசினமாக.

சாந்தினியின் கண்களில் நீர் நிறைந்தது. நளினி தன்னை வேலைக்காரி போல பாவிப்பதைக் கண்டுகொண்டாள் ஒருகணம் நெஞ்சு கொதித்தது.

ஆனால் மறுகணமே கோபம் மறைந்தது. ஒப்புக்கொண்ட நிபந்தனைப்படி அவள் வீடு கூட்டவும் தயார் என்று வந்தவள்தானே? எடுபிடி வேலை அதைவிட குறைந்ததா? சிவகாமி அம்மா பெண்ணைப் போல பாசம் காட்டினார் என்றால், தன் நிலை மறந்து போவதா; சின்ன எசமானி என்ற நிலையில் நளினி உத்தரவு இட்டால் செய்ய வேண்டியதுதானே?

''இதோ போகிறேன்'' என்று திரும்பினாள்.

''நில், சாந்தி'' என்று சிவகாமியும் செந்திலும் ஒரு சேர அழைத்தது காதிலேயே விழாதவள் போலச் சாந்தினி விரைந்து மறைந்தாள்.



சமையல்காரியிடம் மேசைமேல் மூன்று பேருக்கு உணவு எடுத்து வைக்கச் சொன்னாள்.

அங்கே இருக்கப் பிடிக்காமல், கருணாகரனுக்கு உணவை எடுத்துக் கொண்டு பின்புறம் படிகட்டின் வழியாகச் சாந்தினி மாடிக்குச் சென்றாள்.

''என்னம்மா, செந்தில் வந்தாயிற்றா?'' என்று பேப்பரை மடித்தார் கருணாகரன்.

''ஆமாம்'' என்று தலையாட்டினாள், சாந்தினி.

''அடடே இந்தப் பதக்கம் உனக்கும் மிகவும் அழகாக இருக்கிறதே'' என்றார் அவர் பெருமையாக.

சாந்தினியோ அதைக் கேட்டதும் கலகலவென்று கண்ணீர் உகுத்தாள். பதக்கத்தைக் கழற்றி எடுத்தாள். ''மாமா'' இதை வைத்திருந்து பிறகு அத்தையிடம் கொடுத்துவிடுங்கள் என்று அவரிடம் நீட்டினாள்.

கருணாகரன் யோசனையோடு அவளை ஏற இறங்கப் பார்த்தார். ''ஏனம்மா என்ன விஷயம்? யார் உன்னை என்ன சொன்னார்கள்? சொல். நான் பார்க்கிறேன்'' என்றார் சிறிது கோபத்துடன்.

''ஒன்றும் ஒருவரும் சொல்லவில்லை மாமா'' என்றாள் சாந்தினி சிரமப்பட்டு.

கருணாகரனுடைய பார்வை மீண்டும் அவள் முகத்தில் படிந்தது. கீழே நளினியின் கீச்சுக் குரலும், கண்ணாடிப் பாத்திரத்தைக் கீழே போட்டாற் போல அவள் சிரிப்பதும் மேலே கேட்டன. சாந்தினி கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தியபடி நின்றாள்.

''செந்தில்கூட வேறு யாரும் வந்திருக்கிறார்களா?'' கருணாகரன் கேட்டார்.

''ஆமாம்'' என்பது போல சாந்தினி தலையாட்டினாள்.

அப்பொழுது மாடிப்படியில் செந்திலின் காலடியும் நளினியின் குரலும் கேட்டன. சாந்தினியின் கண்களில் மிரட்சித் தோன்றியது.

''நீங்கள் சாப்பிடுங்கள். மாமா, நான்... நான் காபி எடுத்து வருகிறேன்'' என்றாள் அவசரமாக.

''காபி இதோ இருக்கிறதே, சாந்தியம்மா'' என்றார் கருணாகரன் ''ஜக்''கைக் காட்டினார்.

''அது... மாமா வந்து நான் வென்னீர்... அதுவும் இருக்கிறதே மாமா நான் பிறகு வருகிறேனே. எனக்குக் காபி குடிக்க வேண்டும்'' என்று வந்த வழியே ஓடினாள்.

அவள் பின் கதவைத் தாண்டவும் முன் வழியே செந்தில் வரவும் சரியாக இருந்தது.

சாந்தினி சென்ற வழியைப் பார்த்தான் செந்தில். பிறகு தந்தையின் அருகில் அமர்ந்தான்.

எதிரே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு நளினி உட்கார்ந்தாள். ''உங்களைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது மாமா'' என்று அனுதாபப் பட்டாள்.

''ஏனோ'' என்று அவர் வியந்தார்.

''இப்படி அறையோடு சிறைப்பட்டதுபோல் கிடக்கிறீர்களே. அதை நினைத்தால்தான் எனக்கு தாங்கவே முடியவில்லை'' என்று வராத கண்ணீரை நாசூக்காக ஒற்றி எடுத்தாள்.

''அவ்வளவு மோசமில்லை, நளினி. இப்போதுகூட ''வாக்கிங்'' போய் வந்தேனே; என்னை விடு, நீ என்ன இப்படி வேடம் மாறிவிட்டாய்? முன்னெல்லாம் ஒழுங்காக உடுப்பாயே'' என்றார் கிண்டலாக.

''அப்போது அத்தான் வெளிநாடு போகவில்லையே!''



''இப்போதும் வெளிநாடு போய்விட்டு அத்தான் மட்டும்தான் வந்து இருக்கிறான். வெளிநாட்டையே தூக்கிக் கொண்டு வரவில்லை'' என்றவர், செந்திலின் பக்கம் திரும்பினார். ''உன்னிடம் நான் தனியே பேச வேண்டும்டா'' என்றார் கடுமையான குரலில்.

நளினியின் முகம் சிவந்து போயிற்று. அவளை வெளியேறு என்று குறிப்பு காட்டுகிறாரே எவ்வளவு திமிர் இருக்கட்டும் இந்த வீட்டு மருமகளான பிறகு இவரையும் இவர் பெண்டாட்டியையும் ஒருகை பார்த்துக் கொள்ளலாம் என்று கருவினாள். மனதை மறைத்து ''எனக்குத் தெரியக் கூடாத விஷயமா மாமா?'' என்று கொஞ்சுதலாக மொழிந்தாள்.

''ஆமாம்'' என்று அவர் இரக்கமின்றிச் சொன்னார்.

வேறு வழியின்றி நளினி எழுந்தாள். ''சீக்கிரம் வாருங்கள் அத்தான். நீங்கள் இல்லாவிட்டால் எனக்கு இங்கே போர் அடிக்கும்'' என்று வெளியேறினாள்.

அவள் சென்றதும் சிவகாமி வந்தார். ''நளினிக்குப் பசிபோலும். கோபமாகப் போகிறாள். செந்தில் நீ சாப்பிட வருகிறாயா?'' என்று பசியாற அழைத்தார்.

செந்தில் தந்தையின் முகத்தைப் பார்த்தான்.

''போய் சாப்பிட்டுவிட்டு வா. பிறகு பேசலாம்'' என்று அவர் மகனை அனுப்பி வைத்தார்.

உணவு மேசையில் மூன்று தட்டுகள் மட்டும் இருக்கவே செந்தில் கேள்விக்குறியுடன் தாயைப் பார்த்தான்.

சிவகாமிக்கு அது தெரியவில்லை. அதற்குள் சமையல் காரி வந்தாள். ''சின்னம்மாவுக்கு சாப்பாடு வேண்டாமாம். சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள்'' என்றாள்.

''அவள் போகிறாள். நீங்கள் வாருங்கள் அத்தான் என்று ஒருபுறம் இருந்த இரு நாற்காலிகளில் ஒன்றில் நளினி அமர்ந்தாள். செந்திலை ஒயிலாகப் பார்த்தாள்.

பாவம் செந்தில் அவளைக் கவனியாமல் எதிர்ப்புறம் இருந்த ஒற்றையில் உட்கார்ந்தான். முத்துப்பொன்னனை அழைத்தான் ''முத்து நீ போய் சாந்தினியை அழைத்து வா. கொஞ்சம் ஆபீஸ் வேலை பார்க்க வேண்டுமாம் என்று சொல்லு'' என்று அனுப்பினான்.

ஆனால் சாந்தினி வரவில்லை.

அவர்கள் மூவரும் உண்டு முடித்துக் கைகழுவும் போது தான் அவள் வந்தாள்.

''நேற்று வயிறு முட்ட விழுங்கிவிட்டாயா? அதனால் பசி மந்தித்துப் போயிருக்கும். பாவம் இந்த மாதிரிச் சாப் பாடு நீ எங்கே சாப்பிட்டு இருக்கப் போகிறாய். ஒரு வேளை பட்டினி இருந்தால்கூட வயிறு சரியாகிவிடும் பயப்படாதே'' என்று குத்தலாகப் பரிந்து வந்தாள் நளினி.

சாந்தினிக்கு அவமானத்தால் முகம் சிவந்தது. ''காணா தது கண்டமாதிரி விழுங்கினியா?'' என்று ஏளனம் செய்கி றாள். ''இல்லை...'' என்று தொடங்கியவள் நிறுத்திக் கொண் டாள். மறுப்பிலும் ஆமோதிப்பிலும் என்ன இருக்கிறது என்று தோன்றியது.

''அவள் நேற்றும் சரியாகச் சாப்பிடவில்லை'' என்று சாந்தினிக்கு ஆதரவாகப் பேசினார் சிவகாமி.

தன்னைப் பற்றிய பேச்சை விரும்பாமல் சாந்தினி செந்திலின் பக்கம் திரும்பினாள். ''வேலை இருக்கிறது என்றீர்களாமே'' என்றாள் அவள் பாதங்களைப் பார்த்தபடி.

செந்தில் கோபத்துடன் அவளை முறைத்துப் பார்த்தான். ''ஆமாம் வேலை இருக்கிறது அதைப் பட்டினியோடு செய்ய முடியாது. போய் எதையாவது சாப்பிட்டு விட்டுவா'' என் றான் அதட்டலாக. ''நான் முதலில் அப்பாவிடம் பேசிவிட்டு வருகிறேன். அதற்குள் சாப்பிட்டுவிட்டுத் தயாராக இரு'' என்று மாடிக்குப் போனான்.



சிவகாமி ஆதரவுடன் சாந்தினியை சாப்பிட அழைத்துச் சென்றார்.

தனியே நின்ற நளினியின் மனம் விரைந்து வேலை செய்தது.

இந்த சாந்தினியை செந்தில் காரியதரிசி என்றானே. நளினிக்கு இப்போது அதிகம் நம்பிக்கை இல்லை.

குடும்பத்தில் கூடச் சேர்ந்து உணவு அருந்தும் வழக்கம் இருக்கிறது. சமையல்காரிவரை ''சின்னம்மா'' என்று குறிப் பிடுகிறாள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அவள் கழுத்தில் சிவகாமி யின் நகை — அந்த விலை உயர்ந்த கெம்புக்கல் பதக்கம் — சென்ற ஆண்டு நளினியின் தந்தை நாவை அடக்கிப் பேசி இருந்தால் இன்று அவள் கழுத்தில் ஜொலிக்க வேண்டிய பதக்கம் — அது அந்த ''அன்னக்காவடியின்'' கழுத்தில்.

இதற்கெல்லாம் என்ன பொருள்?

வேலைக்காரியாக வந்து வீட்டுக்காரி ஆகப் பார்க்கி றாளா?

''இந்த நளினி ஏமாளியாக இருந்தால் அல்லவோ அது நடக்கும். அவளை வைக்கிற இடத்தில் வைக்கிறேன்'' என்று கருவினாள்.

சிறு வயதில் இருந்தே நளினிக்கு செந்திலிடம் பிரமை உண்டு. செந்தில் வெளிநாடு செல்லுமுன் அவர்கள் இருவருக் கும் ''மணம்'' என்று கிட்டத்தட்ட முடிவு செய்தார்கள் பெரியவர்கள். சிவகாமி உற்சாகம் காட்டாவிட்டாலும் எதிர்க் கவும் இல்லை. எல்லாம் ஒத்துவிட்டது என்ற எண்ணத்தில் நளினி செந்திலைத் தன் சொத்தாகவே கருதத் தொடங்கி விட்டாள். கடைசியில் செந்தில் வக்கரித்துக் கொண்டு விடவும் அது கலைந்தது.

ஆயினும், நளினி நம்பிக்கை இழக்கவில்லை. ஒருமுறை அவளை மணக்க சம்மதித்தவன்தானே? அவன் திரும்பி வந்ததில் இருந்து வகை வகையான அலங்காரங்களுடன் வண்ணத்துப் பூச்சிபோல அவனை வட்டமிட்டாள். வீட்டில் அவளை தடுப்பார் இல்லை. செந்திலின் செல்வமும் உறவு முறையும் தடுக்கும் எண்ணத்தைத்தான் தடுத்தன. அதன் காரணமாக அவளது நம்பிக்கை மீண்டும் துளிர்த்தது. ஆனால் அந்தத் தளிரைத் தின்ன சாந்தினி என்ற ஆடு வந்திருக்கிறதே!

''இத்தனை காலமாகத் தன் உரிமை என்று எண்ணி இருந்ததை இன்று விட்டுவிடுவதா? விடமாட்டேன்'' என்று நளினி முனங்கினாள்.

செந்தில் தந்தையிடம் பேசிவிட்டு வந்தபோது படியிலேயே நளினி காத்து இருந்தாள்.

அவன் சாந்தினியைத் தேடிச் சென்றபோது கூடவே ஒட்டிக் கொண்டு சென்றாள்.

''கொடி வீட்டுக்குச் செல்ல வேண்டும் கிளம்பு சாந்தி'' என்று செந்தில் அவளை அழைத்தான்.

அவள் மறு பேச்சின்றி பின்னே நடந்தாள்.

அவர்கள் வாயிலுக்கு வருமுன் காரில் இருக்கையில் இருந்தாள், நளினி! ''நானும் வருகிறேன் அத்தான்'' என்றாள் கொஞ்சலாக.

செந்திலின் முகம் கடுத்தது. ''அங்கு வேலை இருக்கிறது நளினி. என் வேலையில் யார் தலையிட்டாலும் எனக்குப் பிடிக்காது'' என்றான் பட்டென்று.

''உங்களை எனக்குத் தெரியாதா அத்தான்? நான் அங்கே ஒரு பேச்சும் பேசாமல் பதுமைபோல இருப்பேன்'' என்று நளினி குழைந்தாள்.

செந்தில் செயலற்றுத் தாயைப் பார்த்தான்.



''நளினி இங்கே வீட்டில் கொஞ்சம் அலங்கார வேலைகள் செய்யலாம் என்று நினைக்கிறேன். நீ எனக்கு யோசனை சொல்லுகிறாயா'' என்று சிவகாமி அழைத்தாள்.

''மதியம் பார்க்கலாம் அத்தை'' என்று அசையாமல் சொன்னாள், நளினி.

சிவகாமி மகனைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார்.

எதையும் பாராமல், குனிந்த தலைநிமிராமல் ஊமையோ செவிடோ என்று சாந்தினி நின்றிருந்தாள்.

''சரி... சரி... காரில் ஏறு'' என்று செந்தில் அவளைப் பார்த்து சிடுசிடுத்தான்.

அவள் மரியாதையாகப் பின் இருக்கையில் ஏறி அமர்ந்தாள்.

செந்தில் ஆத்திரத்துடன் காரை கிளப்பிச் சென்றான்.

கொடி வீட்டிலும், அடைகாக்கும் கோழிபோல் அப்படி இப்படி நகராமல் இருந்தாள் நளினி.

செந்திலும் சாந்தினியும் அலுவலக வேலைகளைக் கவனித்தார்கள். வேண்டுமென்றே மெதுவாகக் கவனித்தான்.

மெல்லச் செய்தாலும் வேலை முடிந்துதானே போகும்?

வேலை முடியவும், ''கொஞ்ச நேரம் நீந்துவோமா, அத்தான்?'' என்று கேட்டாள் நளினி.

''இல்லை நான் அப்பாவிடம் இன்னும் கொஞ்சம் பேச வேண்டும்'' என்று எழுந்து காரை நோக்கி நடந்தான் செந்தில்.

சற்றுப் பின்தங்கி சாந்தினியிடம் நளினி சொன்னாள், நீ. இருப்பதால் தயங்குகிறார். போன தடவை பாதி நேரம் தண்ணீரில்தான் கிடந்தோம்'' என்று பெருமை அடித்தாள்.

''நான் வேண்டுமானால் காரில் இருக்கிறேன், நீங்கள் குளியுங்கள்'' என்றாள் சாந்தினி.

''சகு பரவாயில்லை. இந்தக் குளமும் நாங்களும் எங்கே ஓடப்போகிறோம்? இன்னமும் வாழ்க்கை முழுவதும் இருக்கிறதே. இன்று உன்னை போரடிப்பானேன்?'' என்று பெருந்தன்மையாகச் சிரித்தாள் நளினி.

பண்ணை வீட்டுக்குத் திரும்பிய பிறகும் நளினி செந்தி லின் மீது ஒட்டிக் கொண்ட அட்டையாகவே இருந்தாள்.

மதிய உணவின் போதும் அரைகுறையாகச் சாப்பிட்டு விட்டுத் ''தலைவலி படுக்கப் போகிறேன்'' என்று எல்லோருக்கும் முன்னதாக ஓடிவிட்டாள், சாந்தினி.

''இந்தப் பெண்ணுக்கு மரியாதையே தெரியவில்லை'' என்று உரக்க விமர்சித்தாள் நளினி.

கை கழுவியதும் நளினி, சாந்தினியின் அறையை அடைந்தாள். அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு அவளை வரவேற்றாள் சாந்தினி.

நளினியின் கண்கள் அறையில் சுழன்றன. ''ஓர் அன்றாடம் காய்ச்சிக்கு இவ்வளவு வசதியா?''

சோபாவில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். ''உனக்கு இங்கே என்ன சம்பளம் தருகிறார்கள்?'' என்று அதிகாரத்துடன் கேட்டாள்.

சாந்தினி சற்று திகைத்தாள். என்ன சொல்வது?

பதிலுக்குக் காத்திராமல் நளினி கேட்டாள். ''என்னிடம் வேலைக்கு வருகிறாயா? இங்கே தருவதை விட நூறு ரூபாய் அதிகம் போட்டுத் தருகிறேன்.''

''நான் வந்து...'' சாந்தினி தடுமாறினாள். தனது ஒப்பந்தத்தைப் பற்றி இவளிடம் கூற முடியாதே.

''இதோ பார், உனக்கு ஒன்று சொல்லுகிறேன், அத்தைக்கு அவ்வளவு புத்தி கிடையாது, யாரை எங்கே வைப்பது என்று தெரியாது. மாமாவுக்கு இளகிய மனம். நோய் வந்த பிறகு அவரும் சற்று நிலைகுலைந்து கிடக்கிறார். செந்தில் ஆண்பிள்ளை, சபலம் எப்போதும் உண்டு. அது சபலம் தானே தவிர சாசுவதம் ஆகிவிடாது. எண்ணிப் பார்த்து நடந்துகொள். நெருப்பைத் தொட்டுவிட்டு சுட்டு விட்டதே என்று ஓடுவதில் அர்த்தம் இல்லை'' என்றாள் நளினி.



அதைச் சொல்லத்தான் வந்தவள் போல, சொல்லி விட்டு, விருட்டென்று எழுந்து சென்றுவிட்டாள்.

சாந்தினி விக்கித்துப் போய் நின்றாள்.

# 21

# நெருப்பு வைப்பேன்!

எவ்வளவு கேவலமாக நினைத்து விட்டாள்!

சாந்தினிக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

செந்திலை அவள் மயக்கி கைக்குள் போட்டுக் கொண்டது போல நளினி பேசிவிட்டுப் போகிறாளே!

அவனுக்கு அடிமை வேலை பார்க்கத்தான் சாந்தினி வந்தாள். அவன்தான் அவளை இங்கே அழைத்து வந்தான். அவன் தாயும், தந்தையும் அவள் மீது அன்புமாரி பொழிந்தார்கள். அதற்கு அவள் என்ன செய்வாள்?

சாந்தினிக்கு ஆத்திரம் ஒருபுறம்; அவமானம் ஒரு புறம், அழுகை வேறு குமுறிக் கொண்டு வந்தது.

ஆனால், அதற்குள் சிவகாமி அம்மா உள்ளே வந்தார்.

''என்னம்மா, அவள் என்ன சொல்லிவிட்டுப் போகிறாள்?'' என்று பரிவுடன் விளவினார்.

சாந்தினி பேசாமல் நின்றாள்.

எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது?

சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு சிவகாமியே தொடர்ந்தார். ''அவள் என்ன சொன்னாலும் அதைப் பொருட்படுத்தாதே. ஏனென்றால்...'' என்று கொஞ்சம் தயங்கினார்.

சாந்தினி ஆவலுடன் அவர் முகத்தைப் பார்த்தாள்.

''அவள் கொஞ்சம் ஒரு மாதிரி, நளினி உறவுக்கு என் அண்ணன் மகள்தான். ஆனாலும், அவளுடைய நடை, உடை, போக்கு எனக்கு அவ்வளவு பிடிப்பது இல்லை. பிறர் மனம் நோகுமே என்று எண்ணிப் பார்த்து பேசுகிற குணம் அவளுக்குக் கிடையாது. பிறரை குத்திக் காட்டியே பேசுவாள். முன்பு நிச்சயம் செய்தபோதே அவரிடம் இதை லேசாகச் சொன்னேன்; ''அதற்குள் மாமியார்த்தானமா?'' என்று கேலியில் இறங்கிவிட்டார். ''சரிதான். மணமானால் பிறகு செந்தில் சரிகட்டி விடுவான்'' என்று வாயை மூடிக் கொண்டேன். எப்படியோ நல்ல காலமாக அந்தப் பேச்சு கலைந்தது. அதைவிடு. இப்போது இவள் ஏதாவது சொல்லுகிறாள் என்று மனதை அலட்டிக் கொள்ளாதே.''

புண்ணுக்குப் புனுகு பூசியதுபோல சிவகாமியின் பேச்சு சாந்தினிக்கு இதம் தந்தது.

ஆனாலும், செந்திலிடம் நளினி காட்டும் உரிமையை அவர் மறுக்கவில்லையே. எப்படி முடியும்? அது செந்திலின் மனதைப் பொறுத்தது அல்லவா? அவனுடைய இதயத்தில் நளினி குடியேறிவிட்டால் பிறகு சிவகாமியால் என்ன செய்ய முடியும்? மகன் விருப்பத்தைத் தாயார் மறுக்க மாட்டார். சாந்தினியின் நெஞ்சில் வேதனை உண்டாயிற்று.

அவளுடைய வெளுத்த முகத்தைப் பார்த்ததும், ''உடம்பு நன்றாக இல்லையா. சாந்திம்மா? சற்றுப்படுத்து இருக்கிறாயா?'' என்று அக்கறையோடு சிவகாமி கேட்டார்.



''உடம்புக்கு ஒன்றும் இல்லை, அத்தை. நேற்று இரவு ஏதோ கனவு; சரியாகத் தூங்கவில்லை. அதுதான் இப்படி'' என்றாள் சாந்தினி.

''படு அம்மா'' என்று அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார், சிவகாமி.

''மெய்யாகவே காய்ச்சல் ஒன்றும் இல்லை அத்தை'' என்று கட்டிலில் சாய்ந்தாள், சாந்தினி.

''தூங்கிவிட்டு எழுந்ததும் என்னிடம் வாம்மா இரவு சமையலைப் பற்றிப் பார்ப்போம்'' என்று, அவளுக்கு போர்வையால் மூடி விட்டுவிட்டு வெளியே போனார், சிவகாமி.

எவ்வளவு அன்பாக இருக்கிறார்? புத்தி கிடையாது என்கிறாளே நளினி. அவள் இந்த வீட்டு மருமகளானால் என்ன நடக்கும்?

சாந்தினி வேதனைப்பட்டாள்.

பிறகு ''இதெல்லாம் ஒன்றும் நினைக்கக் கூடாது'' என்று கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

மூடிய கண்களுக்குள் நின்று செந்தில் சிரித்தான்.

அவன் உருவை அகற்ற எவ்வளவோ முயன்றாள். இதயம் எதிரியாக இருந்தால் அறிவு என்ன செய்ய முடியும்?

இன்னொன்றும் தோன்றியது. இந்த நளினி மட்டும் அல்லாமல் ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டையாக அவளுக்கு சங்கர் வேறு இருக்கிறானே... ம் சங்கரைக் கணவன் என்ற இடத்தில் வைத்து கற்பனை செய்ய முயன்றாள். ஆனால் செந்தில் மணமகனாகக் கையில் மங்கல நாணுடன் அவளை நோக்கிக் குறும்பாக நகைத்தான்.

சாந்தினிக்கு முகம் குபீர் என்று சிவந்தது. படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தாள்.

தனித்து இருந்ததால் தானே இந்தத் தொல்லை எல்லாம்? முகம் கழுவிக் கொண்டு சிவகாமியைத் தேடிச் சென்றாள்.

''இப்போது நன்றாகிவிட்டது, அத்தை'' என்று அவளிடம் வலியச் சிரித்தாள்.

இருவரும் இரவு சமையல் பற்றி ஆலோசித்தார்கள்.

செந்திலுக்குப் பிடித்தது வெண்டைக்காய் வதக்கலும் கத்திரிக்காய் எண்ணெய்க் கறியும். மற்றது வழக்கம் போல என்று முடிவு செய்தார்கள்.

''அன்று போல நீயும் இளசாக வெண்டைக்காய் பறித்து வாம்மா'' என்று சாந்தினியை அனுப்பினார், சிவகாமி.

அவள் சென்றதும் அந்த அம்மா அவசரமாக, சத்தமின்றி எங்கோ சென்றாள்.

சாந்தினி தோட்டத்துக்குள் இறங்கினாள்.

வெண்டைப் பாத்தியை அடைந்ததும், அவளுக்குப் பழைய நினைவுகள் தோன்றின. ''வெண்டை விரல்கள்'' என்று செந்தில் சொன்னானே. நளினி சொன்னது போல் அதற்கு சபலம் காரணமா?

சபலப் புத்திக்காரன் இங்கே அழைத்து வருவானேன்.

சென்னையில் அவன் கைப்பாவையாக அவள் சுழன்று ஆடவேண்டிய கட்டாயம் இருந்ததே! அந்த நிலையைப் பயன்படுத்தி இருக்கலாமே. ஒருவேளை அப்படி எண்ணித் தான் அன்று அவன் அறையினுள் வந்தானோ? இராது..!

திடீர் என்று நிரம்பவும் ஆழ்ந்த சிந்தனை போல இருக்கிறது என்ற குரல் வெகு அருகில் கேட்டது.

சாந்தினி திடுக்கிட்டுத் துள்ளித் திரும்பினாள். தடுமாறி விழப்போனாள். செந்திலின் வலிய கரங்கள் அவளைத் தாங்கின.

அவன் தொட்டதும் சாந்தினி உடல் சிலிர்த்தாள் ''விடுங் கள்'' என்று திமிறி மீண்டும் விழப் பார்த்தாள். ''மெள்ள மெள்ள...'' என்று நகைத்தபடி அவளை நேராக நிறுத்தி னான், செந்தில்.



''எதற்குச் சிரிக்க வேண்டும்?'' என்று கோபத்துடன் கேட்டாள், சாந்தினி.

''சரி, சிரிக்கவில்லை. இப்போது சொல். என்ன விஷ யம் யோசித்துக் கொண்டு இருந்தாய்!'' என்று விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தான் செந்தில்.

''ஒ....ஒ.... ஒன்றும் இல்லையே'' என்று தடுமாறினாள் சாந்தினி.

''பொய், நீ உதட்டைக் கடித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தால் விஷயம் மிக மிக முக்கியம் போல இருந்தது. ஒருவேளை என்னைப் பற்றி நினைத்தாயோ?''

அப்படிக் கேட்டுவிட்டு, அவன் அவளை ஓரக் கண் ணால் பார்த்தான்.

சாந்தினியின் முகத்தில் ரத்தம் ஏறியது.

''ஓகோகோ! என்னைப் பற்றித்தானாக்கும்'' என்றான் அவன் சிரித்துக் கொண்டே.

''அதெல்லாம் இல்லை'' என்று சாந்தினி சமாளிக்கப் பார்த்தாள்.

''பொய்! பொய்! சாந்தினி. பொய் சொன்னால் பொருந் தச் சொல்ல வேண்டும். சொல்லும் பொய்க்குச் சரியாக முகம் மாற வேண்டும். உனக்கு நேர் எதிராக அல்லவோ முகம் மாறுகிறது'' என்று மேலும் நகைத்தான், செந்தில்.

சாந்தினி திணறினாள். செந்தில் விலகிப் போகமாட் டானா என்றும் இருந்தது. போகாமல் இருக்க வேண்டும் போலவும் இருந்தது.

''எதையாவது சொல்லுங்கள். நீங்கள் நகர்ந்தால் தான் காய் பறிப்பேன்'' என்றாள் அமர்த்தலாக.

''ஆமாம், இந்த கம்பீரம் எல்லாம் இப்போது வரும். மற்றவர் என்ன சொன்னாலும் இடித்த புளி மாதிரி கேட்டுக்

கொள்வது. நளினியிடம் ஒரு தரம் எதிர்த்துப் பேசக் கூடாதா?''

''நான் எப்படி?'' என்று தொடங்கினள், சாந்தினி.

''அது கிடக்கட்டும்'' என்று குறுக்கிட்டான், செந்தில். ''நான் உன்னிடம் வேறு ஒன்று கேட்க வேண்டும். நீ ஏன் இன்று என்னைக் கண்டாலே ஓடுகிறாய்? உன்னால் இன்று அப்பாவிடம் நன்றாக ''டோஸ்'' வாங்கினேன், பாடுபடுவது யார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அம்மாவிடம் சொல்லி வைத்து, நீ தனியாகச் செல்லும் நேரம் பார்த்து அவர்கள் வந்து தகவல் சொல்லி, அதுவரைக் காத்துக் கிடந்து நான் ஓடிவர வேண்டுமா?'' என்று கொஞ்சம் அதட்டலாகக் கேட்டான்.

சாந்தினியின் கண்கள் அகன்றன. சிவகாமி உள்ளே செல்வதுபோல் இருந்ததே. இவனிடம் சொல்லவா?

''எல்லோரும் வாயைப் பிளப்பார்கள் என்றுதான் கேள் விப்பட்டு இருக்கிறேன். நீ கண்ணையே பிளக்கிறாயே'' என்று நகைத்தான் செந்தில்.

சாந்தினி வெட்கிப் போய் விழிகளைத் தாழ்த்தினாள். ''அப்படி என்னிடம் என்ன பேச வேண்டுமாம்?''

''உனக்குத் தெரியவில்லை?''

''....''

''தரை எங்கும் ஓடிவிடாது, சாந்தி நிமிர்ந்து என்னைப் பார். பார்த்து யோசித்து பதில் சொல். நீ சங்கரை இன்னும் நினைத்துக் கொண்டு இருக்கிறாயா?''

பதில் கூறாமல் இருந்துவிடத்தான் சாந்தினி நினைத் தாள். ஆனால், அவள் கண்களையே நேராகப் பார்த்தபடி செந்தில் கேட்டபோது ''இல்லை'' என்ற பதில் தானாகவே வந்துவிட்டது.

செந்திலின் முகம் ''பளீர்'' என்று மலர்ந்தது. ''சாந்தி நான்...'' என்று ஏதோ சொல்லத் தொடங்கினான்.



அந்த அயனான நேரத்தில் பாகைத் துரும்பாக முத்துப் பொன்னன் வந்து சேர்ந்தான். ''சமையல்கார அம்மா உங்க ளைக் கூப்பிட்டார்கள் சின்னம்மா, டிபன் காபி எல்லாம் தயாராம். மேசையிலா, அறையிலா யார் யாருக்கு எப்படி என்று நீங்கள் சொன்னால் அதன்படி செய்கிறார்களாம்'' என்றான்.

''இதோ வருகிறேன்'' என்று சாந்தினி கிளம்பினாள்.

''பொறு'' என்று செந்தில் சற்று யோசித்தான். ''நீ எங்கேடா போகிறாய்?'' என்று முத்துப்பொன்னிடம் கேட் டான்.

''முட்டை வாங்க. ராத்திரிக்கு வேண்டும் என்று சொன் னார்கள்'' என்றான் வேலையாள்.

''சரி நீ போ'' என்று அவனை அனுப்பினான்! செந்தில் ''சாந்தி நீ சமையல்காரியிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு, நமக்கு டிபன் எடுத்துக் கொண்டு இங்கே வந்துவிடு. நாம் பேசிக்கொண்டே உண்ணலாம் என்றான்.''

அவனது ஆர்வம் மிகுந்த பார்வை ஏதேதோ கூறியது. அதற்கு பதில்கூற சக்தியற்று சாந்தினி பறந்தாள்.

எப்படித்தான் சிந்தாமல் சிதறாமல் தட்டில் சிற்றுண்டிக ளையும் காபியையும் எடுத்து வைத்தாளோ? அவள் அறி யாள். கையில் ''ட்ரே''யோடு வந்தபோது. அந்தோ பரிதா பம், நளினி எதிரே நின்றாள்.

''யாருக்கு டிபன்? அத்தான் எங்கே?'' என்று அவள் சந்தேகத்துடன் கேட்டபோது, சாந்தினி தடுமாறிப் போனாள்.

''அ...அவர் தோ... தோட்டத்தில்..'' என்று உளறினாள்.

நளினியின் முகம் சிவந்தது. தோட்டத்தில் செந்திலா! அவனிடம் இந்தத் திருட்டுக் கழுதைத் தனியாகக் காபியோடு போகிறாள். தட்டில் இரண்டு கோப்பைகள் வேறு இவ்வள வுக்கு வந்துவிட்டதா!

''அதை இப்படிக் கொடு நானே கொண்டு போய்க் கொடுக்கிறேன், அத்தானுக்கு என்னைத்தான் பிடிக்கும். நான் வந்தால் அதுதான் வழக்கமும்கூட'' என்று தட்டைப் பிடுங் காத குறையாக நளினி வாங்கிக் கொண்டு போனாள்.

சாந்தினி அயர்ந்து விட்டாள். வழக்கமாமே!

இதை கவனித்தபடி சிவகாமி அருகில் வந்தார். ''இவள் என்றைக்கு செந்திலுக்குக் காப்பிக் கொண்டு போனாளாம்? கதை விடுவதைப் பாரேன்'' என்று வியந்தார்.

சாந்தினியின் முகம் தெளிந்தது.

''அஞ்சாமல் புளுகுகிறாளே என்ன நடிப்பு! அவளைப் பார்த்தால் எனக்கு என்ன நினைப்பு வருகிறது தெரியுமா?'' என்றார் சிவகாமி, சினம் தணியாமல்.

''பூனை'' என்று புன்னகை செய்தாள் சாந்தினி.

''பூனையா? ஆமாம். திருட்டுப் பூனை'' என்றுகூடச் சேர்ந்து சிரித்தார் சிவகாமி.

''என்ன சிரிப்பு?'' என்று முகத்தில் கடுப்புடன் செந்தில் வந்தான். பின்னோடு எரிச்சலுடன் நளினியும் வந்தாள்.

''டிபன் தட்டுத் தோட்டத்தில் கிடக்கிறது. யாரையாவது விட்டு எடுத்துவரச் சொல்லுங்கள். எனக்குத் திடீர் வயிற்று வலி வந்துவிட்டது அதனால்...''

அவன் சொல்லி முடிக்குமுன் சாந்தினி சிரிப்பை அடக்க முயல்வதைக் கண்டான். என்ன சிரிப்பு என்றேன்'' என்றான் எரிச்சலுடன்.

சிவகாமியும் சாந்தினியும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். மீண்டும் சிரிப்பு பீறிட வாயைப் பொத்திக் கொண்டு சாந்தினி ஓட்டம் பிடித்தாள்.

செந்தில் சனிக்கிழமை மாலையில் வந்தால், திங்கட்கிழமை காலையில்தான் திரும்பிச் செல்லுவான்.



ஆனால், இப்பொழுதோ அவனுக்கு நளினி மூட்டைப் பூச்சியாக இருந்தாள். அங்கே வந்ததன் மகிழ்ச்சியே அவனுக் குப் போய்விட்டது. ஆகவே, இரவு சாப்பாட்டுக்குப் பிறகு, சென்னைக்குப் புறப்பட்டு விட்டான். சிவகாமியும் அதைப் புரிந்துகொண்டு அவனைத் தடுக்கவில்லை.

தந்தையிடம் விடைபெறுவதற்காக செந்தில் மாடிக்குப் போனான்.

''வீட்டுக்குப் பழங்கள் போதுமா, பார் நளினி'' என்று சிவகாமி நளினியை அழைத்துச் சென்றார், அவளுக்குக் கொடுத்து அனுப்ப சிவகாமி தோட்டத்தில் மாம்பழம் பறித்துவரச் சொல்லியிருந்தார்.

மாடியிலிருந்து வந்த செந்தில் கூடத்தில் சாந்தினி தனியே நிற்பதைக் கண்டான், வேகமாக இறங்கி அவளிடம் வந்தான்.

''உன்னை நன்றாக உதைக்க வேண்டும்! நான் அவளி டமா டிபன் அனுப்ப சொன்னேன்? செய்வதையும் செய்து விட்டு சிரிப்பு வேறேயா?... நான் எவ்வளவு ஆவலோடு உன்னை...'' என்பதற்குள் நளினி வந்துவிட்டாள்.

''போகலாமா, அத்தான்? இங்கே ஒரே கூட்டம் உங்களி டம் இரண்டு வார்த்தை தனியாகப் பேச முடியவில்லை. காரிலாவது நிம்மதியாக...'' என்று கொஞ்சலாக அழைத்தாள்.

காது கேளாதவன் போல செந்தில் முத்துப்பொன்னனை அழைத்தான். நீயும் காரில் ஏறு. அம்மா, நீங்கள் சொன்ன சாமானை அவனிடம் கொடுத்து அனுப்புகிறேன்'' என்றான்.

அவன் முகத்தைப் பார்த்து சாந்தினி நகைத்தாள். வெள்ளி சதங்கை ஒலிபோலச் சிரித்தாள்.

''சிரிப்பா சிரிக்கிறாய்? நான் நெருப்பு வைக்கிறேன், பார்!'' என்று கறுவினாள், நளினி!

# 22

## சிங்கத்தின் குகை!

செந்தில் திங்கட்கிழமை தான் சென்னைக்குத் திரும்பு வான் என்பது சங்கருக்குத் தெரியும். எனவே, திங்கட்கிழமை காலையில்தான் நளினியை சந்திக்க அவளது வீட்டுக்கு அவன் சென்றான்.

நளினி முன் தினமே திரும்பிவிட்டது தெரிந்தது. அவள் நல்ல செய்தி சொல்லுவாள் என்று அவன் முகமலர்ச்சியுடன் இருந்தான்.

அவளோ அவனைக் கண்டதும் சீறினாள்.

''என்னவோ செந்தில் உங்கள் சாந்தினியை கட்டாயப்ப டுத்தி அழைத்துப் போனார் என்கிறீர்கள். அப்படி ஒன்றும் தெரியவில்லையே. வினாடிக்கு ஒரு தடவை இளித்துக் கொண்டு அல்லவா அவர் பின்னே அவள் சுற்றுகிறாள்?'' என்று வயிற்றெரிச்சலைக் கொட்டினாள்.

சங்கர் திகைத்தான். ''தன் விருப்பத்துக்கு விரோதமாகத் தான் அவள் சென்றாள்'' என்று அசடு வழிய சமாளித்தான்.

''பிறகு மனம் மாறியிருக்கும்; செந்தில் பணக்காரர் ஆயிற்றே. மயக்கி மடியில் போட்டுக் கொண்டால் மூன்று தலைமுறைக்குத் தாங்குமே'' என்று நளினி கரித்துக் கொட்டி னாள்.

சாந்தினி இருக்கும் இடம் சங்கருக்குத் தெரிந்து விட் டது. மேற்கொண்டு விவரம் தெரிவதற்காக, ''என்னால் நம்ப முடியவில்லை'' என்றான்.

''நம்பமுடியவில்லையா?'' நான்தான் கண்ணாலேயே பார்த்தேனே — இருவரும் விழியாலேயே பேசுவதும் அத்தை அதுதான், செந்திலின் அம்மா, அதற்கு ஒத்து ஊதுவ



தையும், பண்ணைத் தோட்டம் முழுவதும் இவர்களின் காதல் காட்சிகளின் ஒத்திகைதானே?'' என்று குமுறினாள் நளினி.

''ஆனால், அங்கேயே அவளை அழைத்துச் சென்று இருக்கிறாரே! அதுதான் ஆச்சரியம். பெற்றோரிடம் என்ன விதமாகச் சொல்லி இருக்கிறார்?'' என்று சங்கர் மேலும் கிளறினான்.

''என்ன இழவைச் சொன்னாரோ! இளவரசி என்று முடிசூட்டவில்லை. மற்றபடி வருங்கால மகாராணிக்கு உரிய அத்தனை மரியாதையும் அவளுக்கு நடக்கிறது'' என்று நளினி எரிச்சலோடு சொன்னாள்.

''செந்திலுக்கும் உங்களுக்கும்...'' என்று சங்கர் அவளது எரிச்சலை ஊதிவிட்டான்.

''அதற்குள் தான் அந்த சாந்தினி சனியன் இடறி விழுந்து விட்டதே. இதற்கு அத்தையின் ஆதரவு வேறு. சும்மாவே அவர்களுக்கு என்னைப் பிடிக்காது. இப்போது வாய்த்தது தருணம் என்பது போல நடந்து கொள்கிறார்கள்'' என்று பொருமினாள், நளினி.

சங்கர் ஆழ்ந்து சிந்தித்தான். சாந்தினியின் அழகு முகம் அவன் மனக்கண்முன் தோன்றிற்று. ''கிணற்று நீர்'' என்று எண்ணி இருந்தானே. ''காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்த செந்தில் கொண்டு போவதா? இலவு காத்த கிளிபோல சங்கர் வேதனைப்பட, சாந்தினி மட்டும் சுகம் அடைவதா?'' சங்கருக்கு மனம் கொதித்தது. நளினியிடம் திரும்பினான்.

''நளினி, நம் இருவர் நிலையும் ஒருவகையில் ஒன்று தான். நீங்கள் எனக்கு உதவினீர்கள் என்றால்...''

''உங்களுக்கு நான் என்ன உதவுவது?'' என்று அவன் மீது எரிந்து விழுந்தாள், நளினி.

''எனக்கு உதவினால் அது உங்களுக்கே உதவுவது போலத்தானே, சாந்தினியை செந்திலிடமிருந்து பிரித்துவிட் டால் உங்கள் வழியில் தடங்கல் விலகிவிடும் அல்லவா?''

''நளினிக்கு வேண்டியது அதுதான். ஆகவே, ''அது எப்படி முடியும்?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

''சாந்தினியை நான் ஒரே ஒருமுறை பார்க்க முடிந்தால் போதும். எப்படியும் அவளைப் பிரித்துக் கொண்டு வந்துவிடுவேன்'' என்று சங்கர் அழுத்தமாகச் சொன்னான்.

''சாந்தினிக்கு அங்கே நல்ல துணை இருக்கிறது. நீங்கள் நினைப்பதுபோல் தலைமுடியை பிடித்துத் தர தரவென்று இழுத்து வரமுடியாது'' என்று எடுத்துரைத்தாள், நளினி.

''அதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் உங்கள் காரை என்னிடம் தரமுடியுமா?'' என்று சங்கர் கேட்டான்.

அவனுக்குச் செலவுக்குப் பணம் கொடுத்துக் கொடுத்து சோமநாதன் அலுத்துவிட்டார். அவரிடம் பணம் இல்லை. அதோடு, அவன்மீது அவருக்கு வெறுப்பும் வளர்ந்தது. ''இனி என் வீட்டுப் பக்கமே வராதே'' என்று விரட்டினார். அவனுக்கோ நாலு இடம் போக வாடகைக் கார் வேண்டும். அதற்கு வாடகை கொடுக்க அவன் கையில் காசு இல்லை. மேலும், சாந்தினியைக் கடத்திவர, டாக்சியைப் பயன்படுத்துவது சரியில்லை. சொந்தக்கார் என்றால்தான், காதும் காதும் வைத்தது போலக் காரியம் முடியும். அதனால்தான் நளினியிடம் கார் கேட்டேன்.

''நான் பயன்படுத்துவதைத் தர இயலாது. ஒரு பழைய வண்டி ஷெட்டில் இருக்கிறது. அதைச் சரிசெய்து விரைவில் தரச் சொல்லுகிறேன். பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றாள், நளினி. ''ஆனால், என்னை யாரிடமும் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது.''

இந்த ''சதி''யில் தான் சம்பந்தப்பட்டதாகத் தெரியக்கூடாது என்பதற்காகத்தான், அவள் தனது காரைக் கொடுக்கவில்லை.



''எந்தக் காராக இருந்தாலும் எனக்குப் போதும்'' என்ற சங்கர், ''உங்களை ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டேன்'' என்றான்.

உடனேயே கார் ''மெக்கானிக்'' ஒருவரை அழைத்து வர சங்கர் சென்றான்.

''அந்த சாந்தினி சனி எப்படியாவது ஒழிந்தால் சரி'' என்று நளினி முனங்கினாள்.

**சா**ந்தினி வழக்கத்தைவிட உற்சாகமாகக் காணப்பட்டாள்.

பல நாட்களுக்குப் பிறகு அவள் முகத்தில் இயல்பான புன்னகை தவழ்ந்தது.

செந்திலின் இதயத்தில் தன் இதயத்தின் எதிரொலி இருப்பதைக் கண்டு கொண்டாள் அல்லவா?

கூடவே தந்தை என்ன சொல்லுவாரோ, என்ற சிறு பயம் தலைதூக்கும்.

சங்கர் வேறு இருக்கிறாரே. அது வேறு அவளுக்கு பயம். அவனை அடியோடு மறந்துவிட முயற்சி செய்தாள். ஆனால் அவள் மறந்தாலும், அவன் மறப்பானா? அவனும் தந்தையும் சேர்த்து தகராறு செய்தால்...?

செந்தில் எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்வான் என்ற தைரியமும் இருந்தது.

சிவகாமி முன்னிலும் அதிகமான அன்பை அவளிடம் வெளிப்படையாகவே காட்டினார், வரப்போகும் மருமகளுக்கு என்று சேகரித்த நகைகளைச் சாந்தினிக்கு அணிவித்து அழகு பார்த்தார். வெட்கமும் மகிழ்ச்சியுமாக சாந்தினி திக்குமுக்காடினாள்.

சென்னைக்குச் சென்ற மறுநாளே செந்தில் டெலிபோன் செய்தான். ''ஒரு முக்கிய வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறேன் சாந்தி. அது முடிந்ததும் வருவேன்'' என்றான்.

''என்றைக்கு வருவீர்கள்?'' என்று கேட்டாள் சாந்தினி.

''ஏன்? என்னைப் பாராமல் இருக்க முடியவில்லையோ?'' என்று கேட்டு அவள் முகத்தைச் சிவக்க வைத்தான், அவன்.

டெலிபோனை சிவகாமியிடம் கொடுத்துவிட்டு சாந்தினி ஓடிவிட்டாள்.

தொடக்கத்தில் அவளிடம் அவன் எப்படி நடந்து கொண்டான்? அந்தக் கடுவன் பூனையா இப்பொழுது கன்றுக்குட்டி போல ஆகிவிட்டது! சாந்தினிக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவன் முதலில் ஏன் அப்படி நடந்து கொண்டான். இப்பொழுது எப்படி இப்படி மாறினான், சாந்தினிக்குப் புரியாத புதிராகவே அது இருந்தது!

டெலிபோன் அறைக்கு வெளியே நின்றபடி சாந்தினி சிந்தித்தாள்; ஒரு காது டெலிபோன் பேச்சை கவனித்தது.

''அனேகமாக புதன் அல்லது வியாழனன்று வருவேன், அம்மா'' என்று தாயிடம் கூறினான் செந்தில்.

''முடிந்த அளவு புதன்கிழமையே வந்துவிடு'' என்று முடித்தார் சிவகாமி.

புதன்கிழமை.

சாந்தினி வெகு கவனமாகத் தன்னை அலங்காரம் செய்து கொண்டாள்.

பச்சையில் பெரிய வெண்ணிறப் பூக்கள் உள்ள சேலை. பச்சை நிற ஜாக்கெட்டு அவள் நிறத்துக்குப் பச்சை மிகவும் எடுப்பாக இருந்தது. அதற்குப் பொருத்தமாக ஒற்றை வரிசையாகப் பச்சைக்கல் மாலையை சிவகாமி அவளுக்கு அணிவித்தார். பெருமிதத்துடன் விரல்களால் அவள் முகத்தைத் தடவி நெட்டி முறித்தார் ''அவன் இன்றே வந்தால் நன்றாக இருக்கும்'' என்றார். சாந்தினி வெட்கத்துடன் சிரித்தாள்.

வாயிலில் கார் நிற்கும் சத்தம் கேட்டது.



''இப்போதே வந்துவிட்டானே'' என்று ஆச்சரியத்துடன் சிவகாமி வாயிலை நோக்கி விரைந்தார்.

சாந்தினியும் கூடவே சென்றாள்.

காரில் இருந்து இறங்கியவனைப் பார்த்ததும் சாந்தினி திடுக்கிட்டாள்! காலின் கீழ் பூமி நழுவியது.

ஏனெனில் வந்தவன் சங்கர்!

நளினியின் கார் சரியாக இரண்டு பொன்னான நாட்களை வீணடித்து விட்டது. காரைச் சரிசெய்து நளினி ஒப்படைத்ததும் சங்கர் காரை எடுத்துக் கொண்டு பறந்தோடிப் பசுஞ்சோலைக்கு வந்தான்.

அவன் மனதில் திட்டம் எல்லாம் தயார், ஏதேனும் சொல்லி சாந்தினியைப் பண்ணையை விட்டுக் கிளப்பி வரவேண்டியது. அவள் மீது செந்தில் காதல் கொண்டு விட்டான் என்று நளினி சொன்னாளே? காதலியைத் தேடி செந்தில் ஓடி வருவான். அப்பொழுது அவனிடம் பேசலாம்! தனது கணக்கு வழக்குகளை முடித்துக் கொள்ளலாம்! பெரிய தொகையாக ரொக்கப் பணம் கூடக் கேட்கலாம்! இந்தப் போரத்துக்கு செந்தில் மறுத்தால், சாந்தினியை தானே சாப்பிட்டு விடலாம். இதுதான் அவன் திட்டம்.

அதற்கு வசதியாக சென்னையை அடுத்துப் புதிதாக எழுந்துகொண்டு இருந்த ஒரு கட்டிடத்தின் காவல் காரரைச் சரிப்படுத்தி இருந்தான்.

சங்கர் கவனமாகச் சோமநாதனை இந்தத் திட்டத்தில் இருந்து விலக்கி வைத்திருந்தான். தற்போதைய சோமநாதனை அவனால் நம்ப முடியவில்லை. ''சாந்தினி சாந்தினி'' என்று அவர் பித்துப் பிடிப்பவர் போல் இருந்தார். இப்போது கூட ''கடவுள்தான் என் பெண்ணைக் காக்க முடியும்'' என்று திருப்பதிக்குப் போயிருந்தார். அவர் வருமுன் எல்லாம் நடந்தேறிவிட்டால் நல்லது என்று சங்கர் நினைத்தான். காரை எடுத்துக் கொண்டு கணமும் தாமதிக்காமல் பசுஞ்சோலையை அடைந்தான்.

திகைத்து நின்ற சாந்தினியை ஏற இறங்கப் பார்த்தான். அவள் உடலும் முகமும் செழித்து இருப்பதைக் கண்டான். அவள் தன்னைக் கண்டதும் திடுக்கிடுவதைக் கவனித்தான். நளினியின் வார்த்தைகளில் இருந்த உண்மையை உணர்ந்தான்.

பட்டத்து இளவரசியா? அப்படியாக விட்டுவிடுவேனா! என்று மனதோடு சொல்லிக் கொண்டான்.

எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''சவுக்கியமா, சாந்தினி! வணக்கம் அம்மா'' என்று முகமலர்ச்சியுடன் அவர்களை நெருங்கினான்.

சிவகாமி தன் இயல்பான கருணையுடன் ''வாருங்கள். உனக்குத் தெரிந்தவரா, சாந்தியம்மா?'' என்று வினவினார்.

நடந்த விஷயங்களைச் சாந்தினி சிவகாமியிடம் ஓரளவுக் குச் சொல்லியிருந்தாள். மறைக்கும் எண்ணம் இல்லை என்றாலும், சங்கரைப் பற்றி அவள் அதிகம் சொன்னது இல்லை. ஏதோ அவனைப் பற்றி எண்ணவோ பேசவோ விரும்பாத தன்மை — ஒரு வெறுப்பு அவள் நாவைக் கட்டியிருந்தது. இப்போது அவனே வந்து நிற்கவும் ஒன்றும் ஓடாமல் நின்றாள்.

''ஆமாம் அத்தை. அப்பாவுக்கு வேண்டியவர். சங்கர் என்று பெயர்'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

''ஆமாம் அம்மா. அவள் அப்பாவுக்கு ரொம்ப சிநேகிதம். அதுதான் மகளிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்லி வரும்படி என்னை அனுப்பி வைத்தார்...'' என்று சங்கர் இழுத்தான்.

''உள்ளே வந்து பேசுங்கள்'' என்று சிவகாமி இருவரையும் உள்ளே கூடத்தை ஒட்டிய முன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

''உட்காருங்கள். அவரோடு பேசிக் கொண்டு இரு சாந்தியம்மா! நான் ஏதாவது சிற்றுண்டி அனுப்புகிறேன்'' என்று திரும்பிப் போனார்.



சங்கர் — சாந்தினி இருவர் மட்டும் அந்த அறையில் இருந்தார்கள்.

சிங்கத்தின் குகைக்குள் தன்னையும் சேர்த்து அடைத்து விட்டதுபோல சாந்தினிக்கு இருந்தது.

# 23

## திக்குத் தெரியாத காட்டில்!

ஏதுவும் பேசத் தோன்றாதவளாக சாந்தினி தலைகுனிந்த படி மரம்போல் நின்றாள்.

அவள் ஆவலுடன் எதிர்பார்த்தது செந்திலை. வந்திருப்பவனோ, அவள் கொஞ்சங்கூட எதிர்பாராத சங்கர். அந்த அதிர்ச்சியில் என்ன பேசுவது என்றே அவளுக்குத் தோன்றவில்லை.

அறையை நோட்டமிட்ட சங்கர், அங்கேயிருந்த டெலிபோனை கவனித்தான்.

அதைச் சுட்டிக்காட்டி, ''இங்கே போன்கூட இருக்கிறது. நீ ஏன் எங்களுக்கு எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை?'' என்று எடுத்த எடுப்பிலேயே குற்றம் சாட்டிக் கேட்டான்.

''நாம் ஒப்புக் கொண்ட நிபந்தனை'' என்றாள் சாந்தினி சுருக்கமாக.

''நிபந்தனை... மண்ணாங்கட்டி'' என்று எரிந்து விழுந்த சங்கர், ''இங்கே சுகவாசம் கண்ணை மறைத்து விட்டது என்று சொல்லேன்'' என்றான் இகழ்ச்சியாக.

சிவகாமியின் தலை மறைந்ததும் சங்கர் நிறம் மாறியது சாந்தினிக்கு சினத்தை உண்டு பண்ணிற்று. ''அப்படியே போன் செய்வதானாலும் எங்கள் வீட்டில் டெலிபோன் இல்லை. உங்களுக்கோ வீடே இல்லையே'' என்றாள் அசட்டையாக.

''நான் தங்கியிருக்கும் ஓட்டலில் டெலிபோன் இருக்கிறதே'' என்றான் சங்கர்.

''அலுவலகத்தில்போல ஓட்டலிலும் ஏதாவது தில்லுமுல்லு செய்துவிட்டு இடம் மாறியிருப்பீர்கள் என்று நினைத்தேன்'' என்றாள் அவள் குத்தலாக.

சங்கரின் முகம் கறுத்தது. சிரமப்பட்டு நாவை அடக்கினான். ''இது சினம் காட்டும் நேரமல்ல. எங்கே போய் விடுவாள்? பிறகு அவள் குடுமி நம் கையில்தானே ஆடப் போகிறது!'' என்று நினைத்தான்.

இப்போதைய வேலையே வேறு.

பச்சோந்தி போலச் சட்டென முகபாவத்தை மாற்றினான். ''சாந்தினி உன்னை அனுப்பிவிட்டு நான்கூட எவ்வளவு வேதனைப்பட்டேன் தெரியுமா? சிறைவாசம் அவ்வளவு துன்பம் தந்திராது. மாமாவை உத்தேசித்து செந்திலின் நிபந்தனையை ஏற்றேன். எவ்வளவு பெரிய பிசகு அது என்று எத்தனை ஆயிரம் முறை தனிமையில் கதறினேன் தெரியுமா?'' என்று குரல் தழுதழுக்கக் கூறினான்.

''பிசகு அல்ல அது. அதில் இருந்துதான் என் ஆனந்தம் மலர்ந்தது'' என்று நினைத்தாள் சாந்தினி... அதை வாய்விட்டுக் கூறுவது எவ்வளவு பெரிய அநியாயம் என்று உணர்ந்து பேசாமல் நின்றாள்.

அவன் சினம் காட்டியதுபோல அவளாலும் பதில் கொடுக்க முடிந்தது. இந்த தழுதழுத்த குரல் அவளை ஊமையாக்கி தவறு செய்தவளாக உணர வைத்தது.

குற்றவாளியைப் போல, தலையைக் குனிந்து தரும சங்கடப்பட்டுக் கொண்டு நின்றாள்.

அவள் பேச்சிழந்து நின்றதை சங்கர் பயன்படுத்திக் கொண்டான். ''உம் என்னவோ நடந்தது நடந்து போயிற்று. எத்தனை சோதனை வேதனை வந்தாலும் நாம் ஒருவருக்கு ஒருவர் துணை இருப்பதே போதும்'' என்று நயமாக உறவு கொண்டாடினான்.



''வந்து... நான்...''

சாந்தினி தன் மனதை சங்கரிடம் தெரிவித்துவிட முயன்றாள். அவனுக்கு வேதனை ஏற்படாமல் துன்பம் நேராமல் எப்படிச் சொல்வது என்று வார்த்தைகளைத் தேடினாள்.

அதற்குள் வேலைக்காரன் சிற்றுண்டியோடு வந்தான். அவன் செல்லும்வரை அமைதி நிலவியது. அவன் போனதும் சாந்தனி பேச இடம் தராமல் சங்கரே தொடர்ந்தான்.

''சாந்தினி அந்தக் கடிதங்களும் லெட்ஜர்களும் சென்னையில் இல்லைபோல் தெரிகிறது...''

சாந்தினியின் முகம் சிவந்தது. அந்தப் பையை உள்ளே வைத்துப் பூட்டிவிட்டு செந்தில் சிரித்தது மறக்குமா?

அவளுக்குத் தெரியும் என்பதை சங்கர் அவள் முகத்திலிருந்து கண்டுகொண்டான். ''அவை எங்கே இருக்கின்றன? சொல் என்று வெகுவாகத் தணிந்த குரலில் கேட்டான்.

சாந்தினி திடுக்கிட்டாள். ''அது... அது... அது பற்றி இப்போது உங்களுக்கு என்ன?

சங்கருக்கு வயிறு எரிந்தது. செந்திலை வஞ்சித்து, லாக்குறூலங்களோடு வஞ்சியையும் தனதாக்க எண்ணி இருந்தான். இப்போது இரண்டையும் இழந்து ஏமாளியாவதா?

''சாந்தினி, எனக்கு ஒன்றும் இல்லை. எல்லாம் உன் அப்பாவுக்காகக் கேட்கிறேன். அதையும் உன்னையும் சேர்த்துப் பார்த்தால் அவர் நிம்மதியோடு கண்ணை மூடுவார்!'' என்று வருத்தத்தோடு கூறினான்.

சாந்தினி பதறிப் போனாள். அப்பாவுக்கு என்ன? நீங்கள் இதுவரை ஒன்றும் சொல்லவில்லையே''

''நீ கேட்டால் அல்லவா சொல்லலாம்? நீதான் மூன்றாம் மனுசியாக நிற்கிறாயே'' என்று குறைகூறினான், சங்கர்.

''அய்யய்யோ, இப்போதுதான் கேட்கிறேனே. சொல்லுங்களேன்'' என்று கெஞ்சினாள், சாந்தினி.

''என்னவோ தெரியவில்லை. உன்னை அனுப்பிய பிறகு சும்மாவே ஆள் ''டல்''லாகி இருந்தார். அக்கம் பக்கத்தில் ''சாந்தினி எங்கே? ஓடிப்போய் விட்டாளா?'' என்று ஒரு மாதிரி (சாந்தினி இதைக் கேட்கையில் வேதனையில் துடித்து விட்டாள்) பேசத் தொடங்கி விட்டார்கள். ''இவர்கள் வாய் மூடும்படி என் கண்மணியைக் காட்ட முடியவில்லையே என்று அடிக்கடி புலம்புவார். இரண்டு நாட்களுக்கு முன் ஒரு பெண் வீட்டுக்கு வந்தாள் — அவளால் வந்த வினைதான் இது எல்லாம்...''

''யார் அது'' என்று ஈன சுரத்தில் சாந்தினி வினவினாள்.

''யாரோ தெரியாது. பெயர் நளினியாம்'' என்று அவன் ஓரக்கண்ணால் சாந்தினியைப் பார்த்தான்.

அவள் முகம் வெளுப்பதைத் திருப்தியுடன் கண்டான். தொடர்ந்தான்.

''அவள் வந்து, செய்கிற தப்பையும் செய்துவிட்டு அதை மறைக்கப் பெண்ணை விற்கிறாயா? தாசி வேசி...!'' என்று என்னென்னவோ சொல்லத் தகாத பேச்செல்லாம் பேசிவிட்டாள், ''செந்தில் உன் மகள் தளுக்கில் ஒன்றிரண்டு நாள் மயங்கினாலும் நான் விடமாட்டேன். அந்த வாக்குமூலத்தை வைத்துக் கொண்டு உன்னை ஜெயிலுக்கு அனுப்புவேன். உன் மகள் நடுத்தெரு நாயகியாக நாலுபேருக்கு உடலை விற்றுப் பிழைக்கட்டும்'' என்று நாக்கில் நரம்பு இல்லாமல் பேசிவிட்டாள். சாந்தினி அதைக் கேட்டு உன் அப்பா ''அய்யோ!'' என்று மயக்கம் போட்டு விழுந்தவர்தான். அது முதல் ஒரே பிதற்றல்தான்'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

''இந்த விஷயமெல்லாம் அவளுக்கு எப்படித் தெரியும்?'' என்று அழுது கொண்டே சாந்தினி கேட்டாள்.

சங்கர் ஒருகணம் விழித்தான். ''என்னைக் கேட்டால் எனக்கு எப்படித் தெரியும்? ஆபீசில் கசமுசா ஆகி அவளுக்கு



எட்டியிருக்கும். இப்போது அதுவா முக்கியம்? அப்பா பிழைக்க வேண்டுமானால் நீயும் அந்தத் தடயங்களும் வந்தாக வேண்டும் என்கிறார், டாக்டர். அதுதான் பதறிப் போய் ஓடிவந்தேன். நீயானால் இரண்டு பேச்சுப் பேசக்கூட அஷ்டமி நவமி பார்க்கிறாய்'' என்று வருத்தப்பட்டான்.

''கொஞ்சம் பொறுங்கள். நான் அத்தையிடம் கேட்கிறேன்'' என்று சாந்தினி உள்ளே போனாள்.

''அத்தையா? இன்னும் எத்தனை நாளைக்கடி?'' என்று ஆத்திரத்துடன் நினைத்தான் சங்கர்.

சில வினாடிகளுக்குள் சிவகாமியுடன் சாந்தினி திரும்பி வந்தாள்.

''சாந்தினியின் அப்பாவுக்கு உடம்பு நன்றாக இல்லையாமே இவளை அழைத்துப் போக வந்தீர்களாமே'' என்று வந்தார்.

''ஆமாம் அம்மா'' என்று சங்கர் பணிவாக எழுந்து நின்று விடையளித்தான். அவளை அழைத்துவர மட்டும் என்று இல்லை, ஏதோ சில பேப்பர்களாம். உங்கள் மகனிடம் இருக்கிறதாம். அதுவும் வேண்டும் என்றார்...''

''அந்த ஒப்புதல் வாக்குமூலங்களோ?''

''இருக்கும் அம்மா. அது வராவிட்டால் நெஞ்சு வேகாது என்று புலம்புகிறார். டாக்டரும் நம்பிக்கையாகச் சொல்லவில்லை'' என்று சங்கர் கண்கலங்கினான்.

சிவகாமி விரைந்து இயங்கினாள், ''கொடி வீட்டில் இருக்கிறது என்றாயே, அதுதானே சாந்திம்மா? போய் எடுத்து வா. அல்லது நீங்கள் போகிறபோது வழியில் அதையும் எடுத்துப் போங்கள்... இந்தச் சமயம் பார்த்து முத்துப்பொன்னன் இல்லை. பார். இந்த செந்தில் அவனை இன்னமும் அனுப்பாமலிருந்து விட்டானே. உனக்குத் துணையாக ஆள் அனுப்ப வழி இல்லையே.''

''துணைதான் நான் இருக்கிறேனே அம்மா'' என்றான் சங்கர்.

சாந்தினி தயங்கினாள்.

''என்னம்மா? அவர் அவசரம் என்கிறார் பார்'' என்றார் சிவகாமி.

''அதற்கு இல்லை, அத்தை. கடிதங்களை எடுத்துப் போனால் அவர் தப்பாக நினைத்து விட்டால்? நான் நேரில் போய்ச் சொல்லிக் கொள்ளுகிறேன்'' என்றாள், சாந்தினி.

''சொல்வது புரிகிற நிலையில் இருந்தால் சொல்ல லாம்...'' என்று சங்கர் இழுத்தான்.

''சும்மா எடுத்துப் போம்மா நான் அவனுக்கு ''போன்'' பண்ணி வேண்டுமானால் சொல்லுகிறேன்'' என்று சிவகாமி வற்புறுத்தினார்.

சங்கரும் அவசரப்படவே, சாந்தினி நகர்ந்தாள்.

இருவரும் வெளியில் நின்ற காரில் ஏறினார்கள்.

''சாவியை நீயே வைத்துக் கொள். இங்கே செந்திலிடம் இன்னொரு செட் சாவி இருக்கும். பத்திரமாகப் போய் வாம்மா. வீணாக பயப்படாதே'' என்று கார் கிளம்பும் போது சிவகாமி கூறி அனுப்பினார்.

கொடி விட்டில் தோல் பையை எடுத்தாள், சாந்தினி.

அப்பாவின் கடிதத்தை மட்டும் எடுத்துப் போகலாமா என்று முதலில் நினைத்தாள்.. சே! அது சங்கரைப் பிரித்துக் காட்டுவதாக இருக்கும். அவன் இவ்வளவு அக்கறையோடு அழைத்துச் செல்ல வந்து இருக்கும்போது நன்றிகெட்ட தன்மையும் ஆகும் என்று பையோடு எடுத்துக் கொண்டாள்.

இருவருமாகக் கார் பயணம் தொடர்ந்தது.

''செந்தில் இன்று வருவதாகச் சொன்னார்'' என்றாள் சாந்தினி திடீர் என்று. ''எதிரில் வந்தாலும் வருவார். நிறுத்தி



அவரை அழைத்துக் கொண்டு போனால் அப்பாவை நல்ல டாக்டரிடம் காட்டலாம்..'' தன் போக்கில் யோசித்துக் கொண்டு சாந்தினி பேசினாள். ''அல்லது அங்கே போய் அவரோடு தொடர்பு கொண்டு...''

''இப்போதே நல்ல டாக்டர்தான் பார்க்கிறார்'' என் றான், சங்கர், சினத்தை அடக்கி, அவன் பார்வை சாலையை ஆராய்ந்தது.

சற்று நேரத்தில், காரின் வேகம் குறைந்தது.

''என்ன?'' என்று கேட்டாள், சாந்தினி.

''தெரியவில்லை கார் வேகம் எடுக்க மாட்டேன் என்கிறது'' என்று எதையோ அழுத்தினான், இழுத்தான்.

இருமிச் செருமிய கார் நின்றே விட்டது.

''என்ன? என்ன ஆயிற்று சங்கர்?'' என்று பதறினாள். சாந்தினி, ''அங்கே அப்பா எப்படி இருக்கிறாரோ?''

''தெரியவில்லை'' என்று இரண்டு கேள்விகளுக்கும் சேர்த்து ஒரு பதிலை சங்கர் அளித்தான்.

கீழே இறங்கி ''பானெட்''டைத் திறந்து பார்த்தான் மூடினான்; ''இனி கார் ஓடாது சாந்தினி'' என்று உதட்டை பிதுக்கினான்.

''சங்கர்!'' காரில் இருந்து அவசரமாக இறங்கி அவனி டம் ஓடிவந்தாள், சாந்தினி. ஏதாவது செய்யுங்கள் சங்கர்; அங்கே அப்பா எப்படி இருக்கிறாரோ எனக்குப் பயமாக இருக்கிறதே.''

''நான் செய்வதற்கும் ஏதும் இல்லை'' என்றான், சங்கர் சுருக்கமாக.

சாந்தினி சாலையைப் பார்த்தாள். ''இது பஸ் வரும் வழியாகவும் தெரியவில்லையே.''

''ஆமாம் ஏழெட்டு மைல் தாண்டினால் தான் மனித நடமாட்டமே உண்டு. அவ்வளவு தூரம் இந்த இருட்டில் நடப்பது முடியாது'' சங்கர் நிதானமாகச் சொன்னான்.

சாந்தினி சுற்றிலும் பார்த்தாள். வெளிச்சம் அடியோடு மறைந்து இருள் மாயை வேகமாகப் படர்ந்து கொண்டு இருந்தது. அந்த இடம் சற்று மரங்கள் அடர்ந்த பகுதி. அது வேறு இருளை எடுத்துக் காண்பித்தது. நிலவு வந்தால்... ஓ இது பின் நிலாக்காலம் வேறு.

''சாந்தினி நம்பிக்கை இழக்காமல் சொன்னாள். ''சாலையிலேயே நிற்கலாம் சங்கர். செந்தில் வரும் போது நிறுத்தலாம். கொஞ்சம் தாமதம் ஆனாலும் ஆகும். என்ன செய்வது?''

சங்கர் தன் மண்டையில் ஓங்கி ஒன்று போட்டுக் கொண்டான்.

''அதற்கும் வழி இல்லையே, சாந்தினி. குறுக்கு வழியில் விரைவில் போகலாம் என்று நான் வேறு வழியில் அல்லவா வந்தேன்'' என்று வருத்தப்பட்டான்.

சாந்தினி அயர்ந்து போனாள்.

''சாந்தினி இந்தக் காரை சாலையில் இருந்து சற்று உள்ளே தள்ளி நிறுத்தலாம். ஏதாவது லாரி வந்து மோதிவிட்டால், காரை இரவல் கொடுத்த என் நண்பனுக்கு பதில் சொல்ல முடியாது.

''அப்படியானால் இது லாரி வழியா?'' என்று மீண்டும் நம்பிக்கை எழக் கேட்டாள், சாந்தினி.

''தெரியாது. ஆனால் லாரிகள்தான் எங்கும் போகிறதே.''

''சங்கர், கார் விளக்கைப் போட்டுக் கொண்டு இங்கேயே இருக்கலாம் ஏதாவது லாரி வந்தால் நிறுத்தி ஏறிக் கொள்ளலாம்.''



''லாரிக்காரன் நிறுத்தினால் தானே? இந்த நேரத்தில் எவனும் நிறுத்துவானா? அவன் வருகிற வேகத்தில் நிறுத்த நினைத்தால்கூட முடியாதே அதோடு, சாந்தினி இந்த நேரத்தில் அவர்களை நம்ப முடியாது. யாரேனும் குடித்துவிட்டு ஓட்டுகிறவனாக இருந்தால் மோசம் போவோம். நான் ஆண்பிள்ளை மிஞ்சி மிஞ்சி இந்தக் கைக்கடிகாரம் மட்டும் போகும். நீ பெண். அவர்கள் வீட்டு நகை வேறு. நகை போனாலும் பரவாயில்லை... என்று முடிக்காமல் ஊகத்திற்கு விட்டான் சங்கர்.

சாந்தினியின் இதயம் கனத்தது. ''அப்பா!'' என்று மனதோடு புலம்பினாள்.

சங்கர் காரை ஒரு புறமாகத் தள்ளிக் கொண்டு போனான். சாலையில் இருந்து சற்று தூரத்தில் ஒரு மரத்தடியில் நிறுத்தினான்.

'இரவு முழுமைக்கும் இந்தக் கார்தான் நமக்குக் கூரை போல் தெரிகிறது. என்ன செய்வது? 'வேறு வழி இல்லையே'' என்று பெரிய மூச்சுவிட்டான் சங்கர்.

''அங்கே அப்பா எப்படி இருக்கிறாரோ? இங்கே வந்து மாட்டிக் கொண்டோமே'' என்று ஆற்றாமையுடன் கூறினாள் சாந்தினி.

சங்கர் ஒன்றும் சொல்லவில்லை. கன்னத்தில் கை வைத்து செதுக்கிய சிற்பமாக இருந்த சாந்தினியைப் பார்த்தான். ஏதேதோ தோன்றியது. சிரமப்பட்டுப் பொறுமையைக் கைக்கொண்டான். மனதை வேறு திசையில் திருப்பினான்.

''ஏதாவது சாப்பிடலாமா சாந்தினி?''

''எதைச் சாப்பிடுவது!''

''இப்படி ஏதாவது நேர்ந்தால் என்ன செய்வது என்று நான் தயாராகத்தான் வந்தேன்.''

''டிக்கி''யைத் திறந்து ஒரு ''டிபன் கேரியரை''யும் தண்ணீர்க் கூஜாவையும் எடுத்து வந்தான். ''முன்னேற்பா

டாக எடுத்து வந்தேன்'' என்று காரின் பின் கதவைத் திறந்து அவள் அருகில் அமர்ந்தான்.

சாப்பாடு! முன்னேற்பாடாக!

சாந்தினி திகைப்புடன் சங்கருடைய முகத்தைப் பார்த்தாள்.

காரின் உள் விளக்கின் மெல்லிய ஒளியே அவன் முகத்தைத் தெளிவாகக் காட்டியது. முகத்தை என்பதைவிட அகத்தை என்று சொல்லலாம்.

அதைப் பார்த்த அளவில் சாந்தினியின் நெஞ்சு ''பகீர்'' என்றது!

# 24

## செந்திலின் சீற்றம்!

கண் சிமிட்டும் நேரத்தில் சாந்தினிக்கு எல்லாம் புரிந்து விட்டது.

எவ்வளவு ''ஜாலக்''காகப் பேசினான். அப்பா பெயரை எவ்வளவு திறமையாகப் பயன்படுத்திக் கொண்டான். எந்த வாக்குமூலங்களும் லெட்ஜரும்...

நிச்சயமாக அப்பாவுக்கு ஆபத்து இராது. நளினி வந்து கத்தியதாகச் சொன்னதுகூடப் பொய்யாகத்தான் இருக்கும். அவளுக்கு இந்த விஷயம் தெரிய வாய்ப்பே இல்லை, செந்தில் அவளிடம் நிச்சயமாகச் சொல்லியிருக்க மாட்டான். எல்லாமே சங்கரின் கற்பனைதான் என்பதை கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்தாள்.

''இப்படி ஏமாந்து விட்டோமே'' என்று வருந்தினாள். செந்தில் அன்றொரு நாள் ''மக்கு'' என்ற போது ஆத்திரப்பட்டாளே, அவள் முட்டாள் இல்லாமல் வேறு யாராம்? செந்திலிடம் இல்லாத சந்தேகம் எல்லாம் கொண்டாளே, இந்த சங்கரிடம் கொஞ்சம் ஐயப்பட்டிருக்கக் கூடாதா?



இந்த ஆளில்லாக் காட்டுக்குள் தனியே அவனிடம் அகப்பட்டுக் கொண்டாளே!

பிரமை பிடித்தவள் போல சாந்தினி தன் முகத்தைப் பார்ப்பதை சங்கர் கண்டான். ''என்ன சாந்தினி?'' என்று குழைந்தான்.

ஏமாற்றுக்காரன்! அடுக்கடுக்காகப் பொய் சொன்ன பித்தலாட்டக்காரன்! அச்சத்தை மிஞ்சிக் கொண்டு சாந்தினிக்கு ஆத்திரம் எழுந்தது. சட்டெனக் காரின் கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள்.

''ஏய் சாந்தினி என்ன இது'' என்று அதட்டினான் சங்கர்.

''சாலை செல்லும் வழியே நடக்கப் போகிறேன்'' என்று கூறிவிட்டு, திரும்பிப் பாராமல் சாந்தினி நடக்கத் தொடங்கினாள்.

சங்கர் வேகமாக அவளைப் பின்தொடர்ந்தான்.

''அப்படியானால், நீ தனியாகத்தான் போக வேண்டும்'' என்றான் மிரட்டலாக.

''பரவாயில்லை'' என்று சாந்தினி நில்லாமல் நடந்தாள்.

''சாந்தினி நில் இது என்ன முட்டாள்தனம்?''

பதில் சொல்லாமல் துரிதமாக நடந்தாள் சாந்தினி.

அவள் செவிப்புலன்கள் திடீர் என்று கூர்மையாயின. என்ன சத்தம்?... கார் காரேதான். செந்திலின் காரோ? பரபரப்புடன் சாலையை நோக்கி ஓடத் தொடங்கினாள்.

அதுவரை காட்டிவந்த நிதானத்தை சங்கர் விட்டொழித்தான். இரண்டு எட்டில் அவளை நெருங்கிப் பின்புறமாகப் பிடித்தான்.

அவள் தடுமாறி பிறகு விடுபட முயன்றாள்.

அவன் ஒரு கையால் அவளை அசையவிடாமல் பிடித்துக் கொண்டு, மறு கையால் அவள் வாயை இறுகப் பொத்தினான்.

பக்கத்துப் புதரின் பின்னே அவளை இழுத்துச் சென்றான். இவன் பிடியை உதற சாந்தினி எவ்வளவோ போராடியும் பயன் இல்லை.

சாலையில் வந்த கார் அவர்கள் இருந்த இடத்தை நெருங்கியது, சட்டென வேகம் குறைந்தது.

ஒருகணம் சாந்தினி நம்பிக்கையுடன் பார்த்தாள். ஆனால், மறுகணமே கார் மீண்டும் மின்னலைப்போல் ஓடி மறைந்துவிட்டது.

கார் கண்ணுக்கு மறைந்த பிறகுதான் சங்கர் தன் கரடிப் பிடியை விட்டான்.

திமிறிக் கொண்டு இருந்த சாந்தினி தொப்பென்று விழுந்தாள். உடனே சமாளித்துக் கொண்டு எழுந்தாள். "நீ மனிதரா நீங்கள்?" என்ற வெறுப்புடன் பார்த்தாள். இருளிலும் அவள் கண்கள் பளபளத்தன.

அவள் பார்வையிலேயே அவளுக்கு எல்லாம் தெரிந்து விட்டது என்பதை சங்கர் அறிந்து கொண்டான். அவனுக்கும் அது வசதிதான். இனி நடிக்கத் தேவையில்லையே! அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

"ஏன் மிருகம் என்றுதான் வைத்துக் கொள்ளேன். அதுதான் நாள் நட்சத்திரம், சத்திரம், சம்பிரதாயம் என்றெல்லாம் பார்ப்பது இல்லை. இடம் பொருளும் அவசியம் இல்லை என்று அவளை நெருங்கினான்.

அவள் விலகுமுன் எட்டி அவள் கையைப் பிடித்தான்.

கையை உதறிவிட்டு சாந்தினி மான் எனத் துள்ளிப் பாய்ந்தாள்.

அவன் வெறிநாய் போல விரட்டினான்.

கடைசியாக அவன் அவளை நெருங்கிப் பிடித்த போது அவள் சட்டெனக் குனிந்தாள். ஒரு கை நிறைய மண்ணை எடுத்து அவன் முகத்தில் விசிறி அடித்தாள்.



கண் நிறைய மண்ணுடன் அவன் தடுமாறினான்.

அவள் மீண்டும் வெகுதூரம் ஓடினாள்.

எவ்வளவு ஓடியும் பயன் இல்லையே. கண்ணைத் துடைத்துக் கொண்டு அவன் மீண்டும் அவளைத் துரத்தினான். கிட்டே நெருங்கி அவளைப் பிடித்தும் விட்டான். பழைய தந்திரம் பயன்படாதபடி அவள் கைகள் இரண்டையுமே இறுகப் பிடித்துக் கொண்டான். தரதரவென்று காரை நோக்கி இழுத்து வந்தான்.

சாந்தினி முன்னே குனிந்து அவன் கையைக் கடித்தாள். அவ்வளவுதான் அவனுக்கு வெறி மிகுந்து விட்டது. "என்னையா கடித்தாய்? என்னிடமா ஆட்டம் காட்டுகிறாய்?" என்று அவள் தோள்களைப் பிடித்து உலுக்கி எடுத்தான். "ஓடவா செய்கிறாய்?" என்று அவளது கையைப் பிடித்து, கண்டி இழுத்தான் "கண்ணில் மண்ணையா தூவினாய்?" என்று மறுபடியும் பேய் போல் உலுக்கினான்.

அவன் அட்டகாசமாக கெக்கலி கொட்டிச் சிரித்தான். தான் அடித்த மிருகத்தைப் புலிகொண்டு செல்லுவது போல அவளைத் தூக்கிக் கொண்டு காரை நோக்கி நடந்தான்.

காரை அடைந்ததும் கீழே இறக்கினான். காரின் கதவைத் திறந்தான்.

இருந்த அரை உணர்வில் "வேண்டாம், சங்கர் வேண்டாம் சங்கர்" என்று சாந்தினி உருப்போடுவது போலக் கெஞ்சினாள்.

அப்போது...

சங்கரின் தோளில் ஒரு கை அழுத்தமாக விழுந்தது.

சங்கர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கைக்கு உரியவன் செந்தில்!

சங்கர் திகைப்புடன் திரும்பவும் சாந்தினியும் மெல்ல திமிர்ந்து பார்த்தாள்.

செந்தில்தானா? அவன் முகம்கூட இப்படிக் கொலைகாரன் போலக் கொடூரமே உருவாக மாறுமா?

அதற்கு மேல் சாந்தினி நினைவு இழந்து சாய்ந்தாள்.

ஐந்து நிமிடமோ பத்து நிமிடமோ கழித்து சாந்தினி தானாகவே சுயநினைவ அடைந்தபோது, வெளியே இருவர் சண்டையிடுவது தெரிந்தது. ''பேசாமல் படுத்து இரு'' என்று கெஞ்சிய உடலை சமாளித்துக் கொண்டு, காரைவிட்டு இறங்கி வந்தாள்.

சண்டை போடுவது செந்திலும் சங்கரும்தான்.

செந்திலைவிட உருவத்தில் சற்றுச் சிறியவன் என்றாலும், அவன் குள்ளநரித்தனமாகப் போரிட்டான். செந்திலும் விடவில்லை. சரமாரியமாகப் பதிலுக்குக் கொடுத்தான்.

மெல்ல மெல்ல செந்திலின் கை வலுத்தது. சங்கர் சமாளிக்க முடியாமல் தடுமாறினான்.

செந்தில் கொலையே பண்ணிவிடுவானோ என்ற பயம் இப்போது சாந்தினிக்கு வந்துவிட்டது. முடிந்த அளவு ஓடிப் போய் செந்திலின் கையைப் பிடித்துக் கொண்டு ''வேண்டாம் செந்தில்'' என்றாள், கொஞ்சலாக.

கடைசியாகச் சங்கரின் தாடையில் ஒரு பலத்த குத்து விழுந்தது. வேர் அறுந்த மரம் போல அவன் அப்படியே மல்லாந்து விழுந்தான். விழுந்தவன் அசையவில்லை. செத்து விட்டானோ என்ற அச்சத்துடன் சாந்தினி அவனிடம் ஓடிப் போனாள்.

செந்திலின் கை இரும்பாய் இடைமறித்தது.

''செந்தில்...நான்'' என்று சாந்தினி தொடங்கினாள்.

''ஏய்...''

செந்தில் ஓர் உறுமல் உறுமினான்.

சாந்தினி அரண்டு போனாள். ஒன்றும் புரியாமல் பயத்துடன் அவனைப் பார்த்தாள்.



''ஒரு வார்த்தை பேசினாயானால் இங்கே கொலையே விழுந்துவிடும். போய்க் காரில் — என் காரில் ஏறு'' என்றான் அதே உறுமல் குரலில்.

வாய் திறக்கப் பயந்து சாந்தினி அவன் சொன்னபடி செய்தாள். அவனும் கூடவே வந்து காரைக் கிளப்பினான்.

கார் சற்று தூரம் ஓடிய பிறகுதான் சாந்தினிக்கு மூச்சு சற்று ஒழுங்காக வந்தது. ''வந்து... நான்'' என்று மீண்டும் தொடங்கினாள்.

''பேசாதே'' என்றான் செந்தில் அடித்து விடுகிறவன் போல.

சாந்தினி பயந்து விட்டாள். பிறகு மனதை சமாதானம் செய்து கொண்டாள். ''கார் பசுஞ்சோலைக்குத் தானே போகிறது. அங்கே அத்தையிடம் சொல்லி செந்திலை சமாதானம் செய்யலாம்'' என்று நினைத்தாள். ஆனால் செந்திலுக்கு என்ன கோபம் என்பது அவளுக்கு இன்னமும் விளங்கவில்லை. பேசாமல் பதுமை போல இருக்கலானாள்.

அன்று மாலை சென்னையில் இருந்து கிளம்பும் பொழுது எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தான்; எதிரில் பார்க்கிறவர்கள் பைத்தியம் என்று நினைப்பார்களே என்று வெகு சிரமத்துடன் அல்லவா புன்னகையை அடக்கிக் கொண்டான். பசுஞ்சோலையில் சாந்தினியிடம் விஷயத்தைச் சொல்லும்போது அவள் முகம் எப்படிச் சிவக்கும் என்று ஆயிரம் முறை கற்பனை செய்து மகிழ்ந்தானே!

காரை இடையில் நிறுத்த மனம் இல்லாமல் ஒரே வேகமாகப் பண்ணை வீட்டை அடைந்தான். ஆர்ன் அடித்தான். கூட வந்த முத்துப்பொன்னன் இறங்கிச் செல்லவும் சிவகாமி மட்டும் காரை நோக்கி வந்தார். அவர் பின்னே சாந்தினி வரவில்லை.

''சாந்தினி எங்கே அம்மா?'' என்று சிறு கோபத்துடன் கேட்டான். அவன் எவ்வளவு ஆவலுடன் வந்து இருக்கிறான். அவள் வரவேற்க வராமல் உள்ளே இருக்கிறாளே!

''அவள் இங்கே இல்லையடா!''

செந்தில் சட்டெனக் காரில் இருந்து இறங்கினான். ''இங்கே இல்லையா? பின் எங்கே போனாள்!''

''அவள் வீட்டுக்கு, சற்றுமுன்தான் போகிறாள். யாரோ குடும்ப சினேகிதராம், சங்கர் என்று ஒருவர் வந்தார், அவள் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று அழைத்தார். நான் தான் —''

''அப்பாவுக்கு... உடம்பு... சரியில்லையாமா?'' நிதான மாக இழுத்துக் கேட்டான் செந்தில். ஒரு வினாடி சிந்தித்தான். ''ஏன் அம்மா, வந்தவன் சாந்தினியை மட்டும்தான் அழைத் துப் போனானா? ஏதாவது சில பேப்பர்கள் வேண்டும் என்று...''

''ஆமாடா அவள் அப்பா கேட்டார் என்று அந்த ஒப்புதல்.''

''எப்படி? எப்படிப் போகிறார்கள்? காரா டாக்சியா? எப்படிப் போகிறார்கள்?

தாய் குழப்பத்துடன் மகனைப் பார்த்தார். இவனுடைய ஆத்திரமும் அவசரமும் ஒரு மாதிரி இருக்கின்றனவே. ''கார் தான் பச்சை நிறம். நம் நளினி வீட்டில் முன்பு இருந்ததே அது மாதிரி...''

மேலே அன்னை சொன்னதைக் கேட்கப் பிள்ளை அங்கே இல்லை. செந்திலின் கார் மின்னலாய்ச் சீறிப் பாய்ந்தது. மனம் அதைவிட வேகமாய்ப் பாய்ந்தது.

வரும் வழியில் சாலையில் இருந்து விலகிச் சற்று தூரத்தில் பார்த்த காரின் பகுதி நினைவு வந்தது. அவன் வரும்போது காரின் விளக்கொளியில் ஏதோ பளபளப்பதைக் கண்டான். பிறகு அது மரங்களின் ஊடே தெரிந்த ஒரு காரின் மேல்பகுதி என ஊகித்தான். யாரோ வழிதவறி இருக்கிறார் கள் என்று நினைத்தானே. சாந்தினியைப் பார்க்கும் ஆவலில் சாலையில் நின்று உதவும் பண்பைக்கூட மறந்து சென்றானே. அவனுக்கு நன்றாக வேண்டும்.



நடந்தது எல்லாம் புரிந்து விட்டதாக அவன் நினைத் தான். இத்தனை நாளும் சாந்தினி நடித்தாளோ அல்லது — பழைய காதலனைக் கண்டதும் அவள் புத்தி பேதளித்ததோ — நம்பியவர்களை ஏமாற்றி விட்டுத் தோல் பையுடன் கிளம்பி விட்டாள். பாதி வழியில்தான் ''செந்தில் எதிரே வந்தால் என்ன செய்வது?'' என்று சிந்தித்தார்கள் போலும் அல்லது ஏதாவது சிறு ரிப்பேராக இருக்கும், வழியில் நின்றால் செந்தில் பார்த்து விடுவானா என்று ஒதுக்கி நிறுத்தி இருக்கிறார்கள். இப்போது ''ரிப்பேர்'' பார்த்துக் கொண்டு இருப்பார்கள். அல்லது கிளம்பிச் சென்று கொண்டு இருப் பார்கள். எப்படி இருந்தால் என்ன? ''சாந்தினி சாந்தினி இந்த செந்திலை நீ அறியவில்லையடி. அவன் ஓட்டுகிற காரின் வேகத்தையும் நீ தெரிந்து கொள்ளவில்லை. உன்னை... உன்னை''

செந்திலின் நினைவோட்டத்துக்குச் சரியாகக் காரும் சென்றது? முன்பே பச்சை நிறக்காரைப் பார்த்த இடத்தில் தான் நின்றது. சாந்தினி காரில் ஏற, சங்கர் உதவிக் கொண்டு இருந்தான். அவளைத் தொட்டு!

மடமடவென்று இறங்கி ஓடினான் சங்கரைப் பிடித் தான். பலங்கொண்ட மட்டும் அவனை உதைத்துத் தள்ளி னான். இந்தப் பிறவி உள்ளவரை சங்கருக்கு இது நினைவு இருக்கும். போதும் பாடம்.

பாடம் அவனுக்கு மட்டுமா?

சாந்தினிக்கு வேண்டாமா?

அதற்குத் தானே அவளைக் காரில் போட்டுக் கொண்டு திரும்புகிறான்.

எதிரே பண்ணைக் கார் வந்தது. கவனியாதவன் போல ஒதுக்கிக் கொண்டு சென்றான்.

கொடி வீட்டுக்குள் கார் நுழைந்தது.

''இங்கே ஏன்?'' என்று சாந்தினி விழித்தாள்.

அவன் அவளை லட்சியம் செய்யவில்லை. காரை வீட்டின் முன் நிறுத்தினான்.

வீட்டைத் திறந்தான்.

பொம்மையாய் அசையாது காரில் வீற்றிருந்த சாந்தினியை வெளியே இழுத்தான்.

மடமடவென்று அவளைக் கொடி வீட்டுக்குள் தள்ளிச் சென்றான்.

வயிற்றில் ஏதோ பிசைய அச்சத்துடன், ''செந்தில், நான்...'' என்று தொடங்கினாள் சாந்தினி,

அதற்குள் அவள் கன்னத்தில் இடி இறங்கியது. காது ''நொய்'' என்றது, சருமம் எரிந்தது.

செந்திலா அவளை அடித்தான்!

''பேசாதே என்றேன் அல்லவா?''

கடித்த பற்களின் இடையே வார்த்தைகள் நசுங்கின.

''சாந்தினி, முட்டாள் தனமாக உன்னை — ஒரு பெண்ணை நம்பி அந்த வாக்கு மூலங்களைக் கோட்டை விட்டேனடி. ஆனால் இன்னமும் உன் பேச்சைக் கேட்டு உன்னையும் நான் கோட்டை விடுவதாக இல்லையடி.''

செந்தில் சட்டென முன்னே தாவி அவளைப் பற்றி அணைத்தான்!

# 25

## ராமர் இருக்கும் இடம்!

செந்திலின் முரட்டு அணைப்பில் சாந்தினி மழையில் நனைந்த கோழிகுஞ்சுபோல வெடவெடத்தாள், உடல் வெளிப்படையாக நடுங்கியது.

அவளது நடுக்கத்தை உணர்ந்த செந்தில் ஏளனமாகச் சிரித்தான். ''சாந்தினி உன் தந்தையும், அந்த அருமை சங்கரும் எந்த எண்ணத்துடன் உன்னை என்னிடம் அனுப்பினார்கள்? ''எதற்கும் தயார்'' அல்லவா? நினைவு இருக்கிறதா?'' என்று சிரிப்பில் குலுங்கினான். ஒரு கையால் அவள் முகத்தை நிமிர்த்தினான்.



''செந்தில், வேண்டாம், வேண்டாம். செந்தில் நான் சொல்வதை முதலில் கேளுங்கள். இல்லாவிட்டால் பிறகு நீங்களே வருத்தப்படுவீர்கள். செந்தில்... செந்தில்...''

அவள் கெஞ்சினாள்.

அவனோ காது என்ற உறுப்பே இல்லாதவன் போலக் கருணையற்று அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான்.

அப்போது டெலிபோன் மணி அடித்தது.

செந்தில் பல்லைக் கடித்துக் கொண்டு அசையாமல் நின்றான். ஒரு தரம்; இரண்டு தரம்; மூன்று தரம்.

செந்தில், கண்களை இறுக மூடித் திறந்தான், கையில் இருந்த சாந்தினியைத் தள்ளிவிட்டு டெலிபோன் ரிசீவரை எடுத்தான்.

பேசியது சிவகாமி அம்மாள்.

''செந்தில் நீ தானா?''

''ம்...''

''பண்ணை எல்லையில் உன்னைப் பார்த்ததாக முத்தப் பொன்னன் சொன்னான். இன்னமும் நீ வரவில்லையே, ஒருவேளை கொடி வீட்டில் இருக்கிறாயோ என்று போன் செய்தேன்.''

உண்மையில் நடந்தது வேறு. செந்தில் கொதித்துப் போய் செல்வதைக் கண்டதும் சிவகாமி பயந்து விட்டார். அவன் கார் சென்ற வேகத்தைக் கண்டதும் கதி கலங்கியது. பண்ணை வீட்டு டிரைவரை அழைத்து, பண்ணைக் காரை எடுத்துப் போகச் சொன்னார். முத்துப் பொன்னனையும் உடன் அனுப்பி வைத்தார். இடம் கண்டு பக்குவமாக நடந்து கொள்ளுமாறு பணித்தார்.

செல்லும்போது இடைவழியில் செந்தில் வருவதை அவர்கள் கண்டனர். கூடவே சாந்தினி இருப்பதும் தெரிந்தது. காரைத் திருப்பிப் பின் தொடர்ந்தனர். செந்தில் கொடி வீடு நோக்கி செல்வது தெரிந்தது. திரும்பி சிவகாமி அம்மாளிடம் வந்து நடந்ததைக் கூறினர்.

செந்திலின் முகபாவம், கார் ஓட்டிய விதம், எல்லாம் பற்றி அந்த அம்மாள் பல கேள்விகள் கேட்டார். ஏதோ விபரீதம் என்று மனதில் பட்டது தலையிட முடிவு செய்து ''போன்'' செய்தார். செந்திலின் குரலே அவரது முடிவு சரி என்பதைக் காட்டியது.

''செந்தில், நீ இங்கே உடனே வருகிறாயா?' என்று கேட்டார்.

''ம்''

''என்ன செந்தில், வருகிறாய் அல்லவா?'' என்றார் சிவகாமி சற்று பதட்டமாக.

''உம்'' என்று சற்று அழுத்தம் கொடுத்துக் கூறினான் செந்தில்.

அதோடு போனைக் கீழே வைத்தான். அதையே சற்று நேரம் வெறித்துப் பார்த்தான் ஒரு பெருமூச்சு.

பிறகும் டெலிபோனில் இருந்து கண்ணை எடுக்காமல் சாந்தினியிடம் சொன்னான். ''போய்க் காரில் ஏறு.''

சில வினாடிகளில் கார் பண்ணை வீட்டை அடைந்தது.

சிவகாமி வாயிலிலேயே காத்து நின்றார். காரைக் கண்டதும் விரைந்து அருகில் வந்தார்.

காரில் இருந்து இறங்கி அவரிடம் ஓடினாள் சாந்தினி. ''அத்தை'' என்று விம்மியபடி அவர் தோளில் முகம் புதைத்தாள்.

''அம்மா'' செந்தில் தாயை அழைத்துப் பேசினான்.

''இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் இவள் இந்த வீட்டை விட்டு வெளியேறி ஆகவேண்டும். பண்ணை காரில் அவளது வீட்டுக்கு அனுப்பி வையுங்கள். இவள் இந்த வீட்டை விட்டுப் போன பிறகு கொடி வீட்டுக்கு போன் செய்யுங்கள். அதன் பிறகு நான் இங்கே வருகிறேன்.''

சுற்றி நின்ற வேலையாட்களுக்குக் கேட்க வேண்டாம் என்றுதானோ செந்தில் தணிந்த குரலில் கூறினான். ஆனால் எவ்வளவு உறுதி அதில்! சாந்தினிக்கு மீண்டும் உடல் நடுங்கியது.



அவன் கொஞ்சம் தாமதிக்காமல் வெளியே சென்றான். காரைத் திருப்பிக் கொண்டு மீண்டும் கொடி வீட்டுக்குப் போய்விட்டான்.

சிவகாமி சாந்தினியைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார். அவள் கன்னத்தில் கைவிரல் தடயத்தைப் பார்த்தார். ''என்னம்மா?'' என்று பரிவாகக் கேட்டார்.

அவ்வளவுதான். சாந்தினி விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டாள். கண்ணீருக்கு இடையே நடந்ததைக் கூறலானாள்.

சங்கரைக் கண்டுகொண்டது முதல் செந்தில் அடித்தது வரையில் எதையும் விடவில்லை. கடைசியில் செந்தில் நடந்து கொண்ட விதத்தைக் கூறமட்டும் வாய்வரவில்லை. மற்றபடி எல்லாம் — அவன் சொன்னதைக் கூட விடாமல் சொல்லி விட்டாள்.

பிறகுதான் சிவகாமிக்கு செந்திலின் மனநிலை புரிந்தது.

''இதற்குமேல் இதில் நான் தலையிடுவதற்கு இல்லை. சாந்தி நீதான் துணிந்து செயல்பட வேண்டும்'' என்றார்.

''எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லையே'' என்றாள், சாந்தினி.

''வாக்குமூலங்களோடு தோல் பையை எடுத்துச் சென்றேன் என்றாயே. அந்தப் பை எங்கே? என்று கேட்டார், சிவகாமி.

''அந்தக் காரில் சீட்டுக்குப் பின்னால் வைத்தேன்'' அத்தை...''

''அதைப் போய் எடுத்து வா.''

''நானா? அங்கே சங்கர்...''

''தனியாகப் போக வேண்டாம்'' பண்ணை காரில் முத்துப்பொன்னனையும் அழைத்துப் போ. அந்த சங்கரையும் பார்க்க வேண்டும் அல்லவா? அடிபட்டு விழுந்தவனை எக்கேடும் கெட்டட்டும் என்று விடுவது சரியல்ல. நீ தோல் பையை எடுத்துக் கொண்டு திரும்பிவிடு முத்துபொன்னன் அவனைப் பார்த்துக் கொள்ளட்டும்.

''பிறகு...''

''பையை எடுத்துக் கொண்டு செந்திலிடம் போ சாந்திம்மா. நான் ஒன்று சொல்லுகிறேன். கேட்டுக் கொள். என்ன படவேண்டுமோ பட்டுத்தான் தீர வேண்டும். சங்கரிடம் உனக்குக் கொஞ்சங்கூட ஆசை கிடையாது என்பதை எடுத்துச் சொல். பிறகு கடவுள் விட்ட வழி'' என்றார், அந்தப் பெண்மணி.

''சரியத்தை'' என்று சாந்தினி எழுந்தாள்.

''சற்றுப் பொறு'' என்று சிவகாமி உள்ளே சென்றார்.

ஒரு கோப்பை ஓவலுடன் திரும்பி வந்தார். ''துவண்டு போய் இருக்கிறாயே அம்மா, இதைக்குடி'' என்று பருகச் செய்தார். அவளது கலைந்த கூந்தலை ஒதுக்கிவிட்டார். கன்றிச் சிவந்த கன்னத்தை விரல்கள் அனுதாபத்துடன் வருடின.

''உன்னை முதலில் அழைத்து வரும்போது செந்தில் போனில் சொன்னான். ''அம்மா, என் மனம் விரும்பி உங்களுக்கு ஒரு மருமகள் வருவதானால் அது இவள்தான் என்றான்.''

''அப்போதேயா?'' என்று வியப்புடன் கேட்டாள், சாந்தினி.

''ஆமாம் அன்றைக்கேதான். நீங்கள் அவசரப்படக் கூடாது அம்மா, அவள் என்னைத் தப்பாக எண்ணிக் கொண்டு இருக்கிறாள். அது தானாகத்தான் சரியாக வேண்டும் என்றான் அப்படியே அந்த முருகன் அருளால் எல்லாம் நேராகி விட்டது என்று நினைத்தேன்.''

சிவகாமி, செந்திலைப் பற்றி, அவன் குணத்தைப் பற்றி என்று அடிக்கடி பேசியது சாந்தினிக்கு நினைவு வந்தது காரணம் இதுவா?

சிவகாமி தொடர்ந்து பேசினார்! ''அப்போது இன்னொரு புறம் புரண்டுவிட்டதே உன்னைச் சொல்லி இப்போது அவனே தப்பாக எண்ணிவிட்டானே'' என்று வருந்தினார்.

''செந்திலுக்கு முன் கோபம் அதிகம் சாந்திம்மா. கோபம் ஆறிவிட்டாலோ பார்த்துப் பார்த்து ஒருவருக்குச் செய்வதில் யாராலும் அவனை மிஞ்ச முடியாது. கோபம் உள்ள இடத்தில் குணமும் இருக்கும் அல்லவா?''



''அந்தக் கோபம் என்மீது ஏன் வந்தது என்று எனக்குப் புரியவில்லையே, அத்தை'' என்று வருந்தினாள் சாந்தினி.

''எனக்குப் புரிகிறது சாந்தி. நீ அவனை ஏமாற்றி விட்டதாகச் செந்தில் எண்ணிவிட்டான். ''அவன் அறியாமல் தோல் பையை அபகரித்துக் கொண்டு சங்கருடன் போகிறாய் '' என்று நினைத்துவிட்டான்'' என்று விளக்கினார், சிவகாமி.

இப்போது சாந்தினிக்கு எல்லாம் புரிந்து விட்டது. ''யாரும் ஏமாற்றினால் பொறுக்க மாட்டேன்'' என்று செந்தில் எச்சரித்தது நினைவு வந்தது. ஏமாற்றாமலே ''ஏமாற்றுக் காரி'' என்ற பட்டமா? கண் கலங்கியது.

சிவகாமி சாந்தினியின் கண்களைத் துடைத்தார்.

பிறகு ''முருகனை வேண்டிக் கொண்டு தைரியமாகப் போய் வாம்மா'' என்று சாந்தினியை அனுப்பி வைத்தார்.

அவள் போனதும் சிவகாமி கவலையுடன் கணவனின் அறையில் போய் உட்கார்ந்தார். அவர் அருகில் சென்றாலே சிவகாமிக்குப் பாதிக் கவலை தீர்வது வழக்கம்.

சாந்தினி சென்றபோது, நளினியின் கார் அங்கேயே நின்றது.

சங்கருக்கு அப்போதுதான் நினைவு திரும்பியது போலும் உடலை லேசாக அசைத்தான்.

அவனை கவனிக்கும்படி முத்துப்பொன்னனிடம் கூறி விட்டு, சாந்தினி காரை அடைந்தாள். தோல் பை வைத்த இடத்தில் அப்படியே இருந்தது. எடுத்துக் கொண்டு பண்ணைக் காரில் ஏறினாள்.

நேரே கொடி வீட்டுக்குப் போனாள். அங்கே இறங்கிக் கொண்டு காரை அனுப்பி விட்டாள்.

தடதடக்கும் நெஞ்சோடு மெல்ல உள்ளே சென்றாள்.

ஒரு பெரிய சோபாவில் விட்டத்தைப் பார்த்தபடி செந்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். கல்லில் செதுக்கியது போல் முகம் அசைவையே காணோம்.

சாந்தினி சற்று நின்று பார்த்தாள், மனதை திடப்படுத்திக் கொண்டு அவன் அருகில் சென்றாள். சோபாவில் அவன்

அருகில் தோல் பையை வைத்தாள். பூமாலை போல் அவன் காலடியில் சரிந்தாள்.

சாந்தினி தொட்ட பிறகுதான் செந்தில் சிலைக்கு உயிர் வந்தது போலும் குனிந்து பார்த்தான். கனவு கண்டவன் போலக் கண்ணைக் கசக்கிவிட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். மீண்டும் பார்த்தான்.

''நீயேதானா; பண்ணைக்கார் சென்றதைப் பார்த்தேன். நீ போய் விட்டாய் என்று நினைத்தேனே'' என்றான் ஒரு மாதிரியாக. ''இன்னும் போகவில்லையா'' என்ற கோபமும், ''வந்து விட்டாயா, அப்பாடி!'' என்ற நிம்மதியும் கலந்த மாதிரி இருந்தது அவன் பாவனை.

ஒன்று சொன்னால் அதிலேயே பிடிவாதமாய் நிற்பவன் ஆயிற்றே என்று பயந்து கொண்டேதான் சாந்தினி வந்தாள். இப்போது கொஞ்சம் நம்பிக்கை உண்டாயிற்று.

ஆனால், அவன் உடனேயே அதட்டினான். ''நான் உன்னை உன் வீட்டுக்கு அல்லவா போகச் சொன்னேன் ஏன் போகவில்லை? இங்கே ஏன் வந்தாய்?''

சாந்தினி துணிவைத் திரட்டிக் கொண்டாள், ''நான் என் வீட்டிற்குத்தான் வந்து இருக்கிறேன்'' என்று மென்மையாகச் சொன்னாள்.

''இதுவா உன் வீடு?'' ஓர் ஏளனச் சிரிப்பு செந்திலின் கேள்வியைத் தொடர்ந்தது.

''ஆமாம்! இதுதான் என் வீடு, ராமர் இருக்கும் இடம் சீதைக்கு அயோத்தி'' என்று சாந்தினி தெளிவாகச் சொன்னாள்.

''அடேயப்பா! திருமணம் எல்லாம் முடிந்துவிட்ட மாதிரி மகா அழுத்தமாகப் பேசுகிறாயே.''

அவன் வேண்டும் என்றே மட்டம் தட்டிப் பேசுவது சாந்தினிக்கு புரிந்தது. எதற்கும் தயாராகவே அவள் வந்தபோதும் கண்களில் நீர் திரையிட்டது.

சமாளித்துக் கொண்டு ''ஆமாம் மனத்தளவில் எப்போதோ முடிந்துவிட்டது. சீதனம்கூட கொண்டு வந்து இருக்கிறேன். இந்தாருங்கள்'' என்று தோல் பையை எடுத்து நீட்டினாள்.

# 26

## அன்புக்கு உண்டோ அடைக்கும் தாள்!

அருகில் இருந்த தோல் பையைச் செந்தில் இதுவரை பார்க்கவில்லை. இப்போது சாந்தினி அதை எடுத்துக் காட்டவும் திகைத்தான் 'சாந்தி!'' என்றான்.

அந்த மட்டும் பழையபடி ''சாந்தி'' என்றதே சாந்தினிக்குத் திருப்தி.

''உங்களுக்குச் சேர வேண்டியது எல்லாம் பத்திரமாக இருக்கிறதா என்று பாருங்கள்'' என்று பிரித்துக் காட்டினாள்.

செந்தில் உதட்டைக் கடித்துக் கொண்டு அசையாமல் இருந்தான்.

''இதை எடுத்து வரத்தான் போனேன்'' என்று சாந்தினி சற்று மிடுக்காக எழுந்து நின்றாள்.

''ஏன் கொண்டு செல்ல வேண்டும்? பிறகு ஏன் எடுத்து வரவேண்டும்?'' என்று முணுமுணுத்தான் செந்தில்.

இந்த கேள்விக்காகத்தானே சாந்தினியும் காத்திருந்தாள்.

''அப்படிக் கேட்டால்தானே சொல்லலாம்'' என்று தொடங்கி எல்லாவற்றையும் மடமடவென்று ஒப்பித்தாள். சங்கர் அவளைக் காருக்குள் தள்ளியபோது செந்தில் வந்ததோடு நிறுத்தினாள்.

அதைக் கேட்டு, செந்திலின் நெஞ்சு உருகியது. ''அட என் சாந்தி'' என்று அவளை அள்ளி அணைத்தான்.

கையால் தாபத்துடன் அவளுடைய கன்னத்தை வருடினான், ''ஆத்திரத்தில் அறிவிழந்து போனேன் சாந்தி. என்னை ஏமாற்றிவிட்டாய் என்று எண்ணிவிட்டேன். நீ ஏமாற்றுவாயா என்று எண்ணிப் பாராமல் மிருகமாக நடந்து கொண்டேனே. என்னை மன்னிப்பாயா, சாந்தி?'' என்று உணர்ச்சியோடு கேட்டான்.

சாந்தி அவனது அணைப்பிலேயே உருகி நின்றாள் இவ்வளவு இறங்கிப் பேசுகிறானே.

நீங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமா?'' என்று புன்னகையுடன் கேட்டாள் விழிகளில் நீர் கசிந்தது.

அதன் பதிலாகச் செந்தில் அவளை மேலும் இறுக அணைத்துக் கொண்டான்.

சாந்தினி வியப்புடன் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். ''உங்களுக்கு அலுவலகத்தில் எத்தனையோ...''

''ஊகூம். இது சொந்தக் காரியம். நீ கேட்டால் தான் நான் சொல்லுவேன்'' என்றான் செல்லமாக.

''இதோ கேட்கிறேன். சொல்லுங்களேன்.''

''சாந்தினி சாந்தினி என்று ஒரு பெண். அவள் என் மனதை திருடிக் கொண்டாள். அதற்குத் தண்டனையாக அவளை எனக்குத் திருமணம் செய்து கொடுங்கள்! என்று அவளுடைய அப்பாவிடம் அனுமதி கேட்டேன்'' அவள் கண்களையே பார்த்துக் கொண்டு அவன் சொன்னான்.

ஓ... முகம் சிவக்க சாந்தினி கேட்டாள். ''அப்பா இப்போது எப்படியிருக்கிறார்?''

''முதலில் சற்று ஓய்ந்துதான் இருந்தார். என்னிடம் பேசி முடிந்தபின் மாறிவிட்டார். முன்புகூட ஒரு சிறு கூன் போடுவாரே. இப்போது ''ஜம்'' என்று என்னைப் போல நடக்கிறாராக்கும்''

''நீங்கள் ''ஜம்''மென்று நடப்பதாக யார் சொன்னார்கள்?'' என்று சீண்டினாள் சாந்தினி.

''வேறு ஒருவர் சொல்ல வேண்டுமா! உன் கண் சொல்லும் மொழி போதுமே கண்ணே!'' என்று அவள் கன்னத்தில் நிமிண்டி வசனம் பேசினான் அவன்.

சாந்தினியின் முகத்தில் சற்று நிழல் படிந்தது. ''செந்தில் உங்களுக்கு அப்பாவைப் பிடிக்காதே'' என்றாள், லேசாகத் தயங்கி.

செந்தில் சிரித்தான். ''அதெல்லாம் முன்னே அவரிடம் பேசிய பிறகு என் **எண்ணம்** மாறிவிட்டது சாந்தி! உன் திருமணத்தைச் சிறப்பாக நடத்த நினைத்து அதற்குப் பணம் சம்பாதிக்கத்தான் இப்படியெல்லாம் செய்துவிட்டேன் என்றார். அப்போது எனக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. ''உங்க



ளுக்கு அந்தக் கவலையே வேண்டாம் என்றேன். அப்படியே பூரித்துப் போனார்'' என்றான் புன்னகையோடு.

சாந்தினியும் முகம் மலர்ந்தாள்.

''இப்போதுகூட அவரால் தான் தாமதம் சாந்தி. நான் திங்கட்கிழமையே அவரைப் பார்க்க முயற்சித்தேன். அவரானால் மகளுக்குப் பிரார்த்தனை செய்யத் திருப்பதி போய்விட்டார். இன்றுதான் வந்தார். நான் கேட்டதும் சரி என்றாரே. அதற்கு மேல் அவரிடம் எனக்கு கோபம் இருக்குமா? அதோடு இப்படி ஓர் அழகுப் பெண்ணைப் பெற்று எனக்காக வளர்த்து வைத்து இருக்கிறாரே. அதற்காவாவது அவரைப் பிடித்துத் தானே ஆகவேண்டும்'' என்று நகைத்தான்.

அவனது சட்டைப் பித்தானைத் திருகியபடி சாந்தினி கேட்டாள். ''நீங்கள் முதலிலேயே அத்தையிடம் 'மணக்கப் போகும் பெண் என்கிறீர்களாமே, எப்படி? அப்போது என்னிடம் உங்களுக்கு நல்ல எண்ணமே கிடையாதே ''கடுகடு'' என்று இருந்தீர்களே.''

''அம்மாவிடம் சொன்னபோது நல்ல எண்ணம் வந்துவிட்டதே. முதலில் தான் உன்னை ஒரு மாதிரி நினைத்தேன். அதோடு உன் அப்பா மேல் கோபம் வேறு. ஆனாலும் உன்னிடம் — அழகோ தாய்மையோ ஒன்று என்னைத் தாக்கியது. லெட்ஜர்களை நீ பார்த்தபோதே மற்றவர் குற்றம் உனக்குத் தெரியாது என்று கண்டுகொண்டேன். எவ்வளவுக்கு இடம் கொடுப்பாய் என்பதைத்தான் இரவே சோதித்தேனே''

''ஓ அதுதானா?''

''எது தானா?''

''அன்று உங்கள் அப்பாவிடம் சோதனை என்கிறீர்களே''

''அதுவேதான், அன்றே நான் மனதில் உறுதி கொண்டுவிட்டேன். அம்மாவிடமும் சொன்னேன்.

''அடடா'' என்று சாந்தினி துள்ளினாள்.

''என்ன? என்ன?''

''அங்கே அத்தை கவலையுடன் காத்து இருப்பார்கள் பாவம்! சீக்கிரமாக அவர்களிடம் செல்ல வேண்டும்'' என்று அவன் பிடியில் இருந்து விலகினாள்.

''ஆமாம் போகலாம்'' என்று செந்திலும் கிளம்பினான்.

சற்று நின்று அவளையும் நிறுத்தினான். ''சாந்தி மெய்யாகவே என் மீது உனக்குக் கோபம் இல்லையே. முரட்டுத்தனமாக அறைந்துவிட்டேன்'' என்றான் தயக்கத்துடன்.

கோபம் இருக்கும் இடத்தில்தான் குணம் இருக்கும் என்பதை சாந்தினி கண் எதிரே கண்டாள், அவன் கையைப் பற்றினாள். உள்ளங் கையைத் திருப்பினாள். சட்டெனக் குனிந்து அதில் செவ்விதழ் பதித்தாள். முகம் சிவக்க அவனை நிமிர்ந்து பாராமல் காரை நோக்கி ஓட்டம் பிடித்தாள்!

செந்திலும் சிரித்துக் கொண்டே அவளைப் பின்தொடர்ந்தான்!

அடுத்த முகூர்த்தத்திலேயே செந்தில் — சாந்தினி திருமணம் நடந்தது.

சங்கரும் வந்து மணமக்களை வாழ்த்தினான். அடிபட்டுக் கிடந்த தனக்கு சிவகாமி அம்மா ஆள் அனுப்பி உதவி செய்ததை அறிந்ததும், அவன் மனம் மாறிவிட்டது. செய்த தவறுகளுக்கு வருந்தி செந்திலிடம் மன்னிப்புக் கேட்டான். திருமண மகிழ்ச்சியில் இருந்த அவனும் ''போனால் போகட்டும்'' என்று சங்கரை மன்னித்து விட்டான்.

நளினி மட்டும் திருமணத்துக்கு வரவில்லை. இதெல்லாம் நான் போவதற்கே தகுதி இல்லாத திருமணம் என்று சொல்லிக் கொண்டாளாம்.

அவள் வராததைப் பற்றி மணக்கள் கவலைப்படவும் இல்லை. அவர்கள் இப்பொழுது எதைப்பற்றியுமே கவலைப் படுவது இல்லை. அவர்கள் இந்த உலகத்தில் இருந்தால் தானே கவலைப்பட?

அவர்கள் நிலவுக்கும் போய்விட்டார்கள்.

தேனிலவுக்கு!!

★ ★ ★